# விவேக்

# ஸ்ரீநிவாசன்

**வத்ஸலா ராகவன்**

# அத்தியாயம் 1

**வே**கம்!!!

யாருக்கும், எதற்கும் கட்டுப்படாத ஒரு வேகத்தில் கிழக்கு கடற்கரை சாலையில் பறந்துக்கொண்டிருந்தது அந்த ஹோண்டா சிட்டி!!! நேரம் இரவு ஒன்றை தாண்டிக்கொண்டிருக்க, சென்னையை நோக்கி சென்றுக்கொண்டிருந்தது அந்த கார்.

நிறம் மங்கிப்போயிருந்த வெள்ளை பைஜாமாவும் ஜிப்பாவும், நான்கைந்து நாள் ஷேவ் செய்யபடாத தாடியும், அதிக கவனம் எடுத்துக்கொள்ளாமல் வாரப்பட்ட கேசமுமும், இவை எல்லாவற்றையும் தாண்டி முகத்தில் எதை பற்றியுமே கவலை படாத ஒரு பாவமுமாக, அந்த காரை செலுத்திக்கொண்டிருந்தான் அவன்!!!!

சட்டென அவனது கைப்பேசி ஒலிக்க, ஒரு முறை அதை எடுத்து பார்த்தவன் காரின் வேகத்தை குறைத்து, அதை ஓரமாக நிறுத்தி விட்டு அழைப்பை ஏற்றான். அவனது அலுவலகத்திலிருந்து வந்த அழைப்பு.

'ம்...'

.........

'யா....'

..........

'ஷூர்...'

பேசி முடித்தவன், மொபைலை காரின் பக்கத்து சீட்டில் போட்டு விட்டு கதவை திறந்துக்கொண்டு இறங்கினான். காருக்குள்ளிருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து வாயில் கவிழ்த்துக்கொண்டான். பின்னர் மெல்ல விழிகளை சுழற்றினான். சுற்றும் முற்றும் சூழ்ந்திருந்த இருள் அவன் நினைவுகளை சுழற்றியது.

'அப்பா... வேண்டாம்பா... எனக்கு ரொம்ப பயமா இருக்குப்பா... ரொம்ப இருட்டா இருக்கு பா... ப்ளீஸ் பா .... தனியா போக மாட்டேன் பா....'

'பயமா??? அறைஞ்சு பல்லை உடைச்சிடுவேன்... 'பயம்'ங்கிற வார்த்தையே என் பையன் வாயிலிருந்து வரக்கூடாது... போடா... போய் பத்து நிமிஷமாவது ரோட்டிலே தனியா நடந்திட்டு வா போ...' அவனது ஒன்பதாவது வயதில், அவனுக்கு அப்போதிருந்த பயங்களை ஒன்றொன்றாக தெளிவிக்க அவன் அப்பா கற்றுக்கொடுத்த முதல் பாடம் இது.

இப்போது அவனுக்கு வயது 32!!! இப்போது பயமே அவனை பார்த்து பயப்படும்!!!! தனக்குள்ளே சிரித்துக்கொண்டான் அவன்!!!

'அப்பா!!! அவன் அப்பா!!!' அவனுக்கு எல்லாமே அவர்தானே!!! ஏதேதோ நினைவுகள்!!!'

ஏனோ ஒரு முறை ரோட்டில் தனியே நடந்து விட்டு வர வேண்டும் போல் இருந்தது. காரை பூட்டி சாவியை பைஜாமாவின் பாக்கெட்டுக்குள் திணித்துக்கொண்டு நடந்தான் அவன்.

கிட்டதட்ட பதினைந்து நிமிடங்கள் நடந்து விட்டு காருக்கு திரும்பி, காரை திறக்க நினைத்தவனுக்கு கையில் தட்டு படவில்லை கார் சாவி.

பதற்றம், அவசரம், பரபரப்பு எதுவுமே இல்லை அவனிடம். இவை எல்லாம் அவனை விட்டு போய் பல வருடங்கள் ஆகின்றன.

'எங்கே விழுந்திருக்கும் அது???.' அவனது கண்கள் சுழன்றன. மொபைலும் காருக்குள் இருக்க, நிலவின் ஒளி மட்டுமே அவனுக்கு உதவியது. பல நேரங்களில் இருளை ஊடுருவி பழக்கபட்டவை தானே அவனது விழிகள்!!!

சாவியை தேடி எடுத்துக்கொண்டு அவன் காருக்கு அருகில் வந்து காரின் மீது கை வைத்த போது அவனது தோளில் விழுந்தது ஒரு கை. அவன் சட்டென திரும்ப அங்கே நின்றிருந்தனர் இரு போலீஸ்காரர்கள்.

'அப்போலேர்ந்து பாக்குறேன் இந்த காரையே சுத்தி சுத்தி வரே??? என்ன காரை தள்ளிட்டு போலாம்னு பாக்குறியா??? அவர்கள் கேட்க கண்கள் விரிய கேள்வியான பார்வையுடன் திரும்பினான் அவன்.

இருவரையும் ஏற இறங்க பார்த்தவன் 'என்னது???' என்றான் நிதானமாக 'காரை தள்ளிட்டு போறேனா???'

பின்ன.... இந்த காருக்கு சொந்தகாரனா நீ??? ஆளையும், டிரஸ்சையும் பாரு.... மூஞ்சியிலேயே திருடன்னு எழுதி ஒட்டி இருக்கு....' அதில் ஒரு போலீஸ்காரர் சொல்ல ஒரு முறை தன்னை பார்த்துக்கொண்டான் அவன்.

இதழ்களில் சின்னதாக ஒரு புன்னகை ஓட்டம். கைகளை மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டு காரில் சாய்ந்து நின்று கொண்டான். அந்த காட்சியை சுவாரஸ்யமாக ரசிக்கும் பாவத்துடன் அவர்களை பார்த்தபடியே தனது பாக்கெட்டில் இருந்த சியூங் கம்மை எடுத்து வாயில் போட்டு சுவைக்க ஆரம்பித்தான்.

'என்னடா ஸ்டைலா லுக் விடறே... நடடா ஸ்டேஷனுக்கு...' போலீஸ்கராரின் குரலில் மரியாதை குறைய, இவன் முகத்திலும் கொஞ்சம் கோப ரேகைகள். எப்போதுமே தனது கோபத்தை படாரென வெளிப்படுத்தி பழக்கம் இல்லை அவனுக்கு. அசையவில்லை அவன்.

'நீயா வரியா... இல்லை அடிச்சு இழுத்திட்டு போகவா...' அவர் சொல்ல சுறுசுறுவென ஏறியது இவன் கோபம். அவன் முகமும் கண்களும் அதை பிரதிபலித்த விதத்தில் கொஞ்சம் திகைத்துதான் போயினர் அந்த போலீஸ்காரர்கள். அவர்கள் கால்கள் தன்னாலே இரண்டடி பின்னால் நகர்ந்தன.

'ஏன் பின்னாடி போறீங்க??? என் மேலே கைவெச்சு தான் பாருங்களேன்....' என்றான் சூடான குரலில். அவர்கள் கொஞ்சம் தடுமாறி நிற், அப்போது அங்கே வந்து நின்றது போலீஸ் ஜீப். அதிலிருந்து இறங்கினார் இன்ஸ்பெக்டர். அவரிடம் ஓடி சென்றனர் இருவரும்.

'சார்... இந்த ஆளை பார்த்தா சந்தேகமா இருக்கு... இந்த கார் யாருதுன்னு தெரியலை... இதையே சுத்தி சுத்தி வந்திட்டு இருந்தான். கேட்டா முறைக்கிறான்...' அவர்கள் சொல்லிக்கொண்டிருக்க அலட்சியமான பார்வையுடன் கார் மீது சாய்ந்து நின்றிருந்தான் அவன்.

'யோவ்... யாருய்யா... நீ இங்கே என்ன பண்றே???' என்றபடியே அவன் அருகில் வந்தார் இன்ஸ்பெக்டர். வாயிலிருந்த சூயிங் கம்மை மென்றபடியே நின்றவனின் பார்வை அவரை ஊடுருவ, இன்ஸ்பெக்டரின் தொனியில் ஏனோ சட்டென ஒரு மாற்றம்.

'வண்டி உங்களோடதா சார்... ஆர்.சி புக், லைசென்ஸ் எல்லாம் கொஞ்சம் பார்க்கலாமா???'

சில நொடிகள் அவரை மௌனமாக பார்த்தவன் 'எந்த லைசென்ஸ் வேணும்...' என்றான் நிதானமாக.

அவர் கொஞ்சம் புரியாமல் பார்க்க அவனது தனது உரிமங்களையும், அடையாள அட்டையையும் எடுத்து நீட்டினான்.

அடுத்த நிமிடம்... 'சார்... 'அவர் குரலில் தொற்றிக்கொண்டது மரியாதை.

அந்த கார்டுகளை அவனிடம் நீட்டியபடியே 'சார்... ரொம்ப சாரி சார்... தெரியலை எங்களுக்கு... மன்னிச்சுக்கங்க.. '

ஏய்.. அறிவிருக்காயா உங்களுக்கு... சார போய் நிறுத்தி வெச்சு கேள்வி கேக்கறீங்க... நீங்க... நீங்க... சார்... கிளம்புங்க சார்... நீங்க ...கிளம்புங்க...' வார்த்தைக்கு வார்த்தை 'சார்..' இணைத்துக்கொண்டு அவர் பேச...

'தேங்க்யூ...' என்றபடி காரில் ஏறி அமர்ந்தவன் 'இனிமேலாவது ட்ரெஸ்சை வெச்சு ஆளை எடை போடாதீங்க...' சொல்லிவிட்டு காரை கிளப்பிக்கொண்டு பறந்தான் அவன்.

சென்னை பெசன்ட் நகரில் இருந்தது அவனது வீடு!!!

வீடு வந்து சேரும் போது நேரம் இரண்டை நெருங்கிக்கொண்டிருந்தது. எல்லாரும் உறங்கிக்கொண்டிருந்தனர்.

தன்னிடம் இருக்கும் சாவியால் கதவை திறந்துக்கொண்டு உள்ளே வந்தான் அவன்.

அவனது அறை மாடியில். அவன் எப்போது வருகிறான். எப்போது போகிறான் என்பது வீட்டில் இருப்பவர்களுக்கு பல நேரம் தெரியாது. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதிலும் இவன் அதிக கவனம் எடுத்துக்கொள்வதில்லை. இவனது உலகம் தனி உலகம்.

நேரம் காலை ஒன்பதரை!!!!

'அம்மா...' என்றபடியே வந்தான் அவன்!!! அவன் ஷிவா!!! மேல் அறையில் இருப்பவனின் தம்பி.

'அண்ணா வந்திருக்காரா என்ன???'

'அப்படிதான் நினைக்கிறேன்டா. அவன் ரூம்லே லைட் எரிஞ்சது. அப்படியே மறுபடியும் கிளம்பிட போறான். கீழே வந்தா ஒரு வாய் சாப்பிட்டு போக சொல்லுடா...' என்றார் சுமித்ரா.

'நானும் ஆபீஸ் கிளம்பலை. அண்ணனை பார்த்திட்டு போறேன். பார்த்தே கிட்டதட்ட பத்து நாள் ஆச்சு...'

'அவன் வந்திருக்கானா??? எப்போ வந்தான்???' கேட்டபடியே வந்தார் அப்பா!!!

இவர்கள் பேசிக்கொண்டிருக்க அங்கே இருந்த ஒரு பூ ஜாடியில் ரோஜாப்பூக்களை முனைப்புடன்

அடுக்கிக்கொண்டிருந்தாள் அவள்!!! ரஞ்சனி!!!! அவள் ஷிவாவின் மனைவி.

அதை அவள் ஹாலிலே கூட வைத்திருந்திருக்கலாம்!!! செய்யவில்லை!!! அதை எடுத்து சென்று சாப்பாட்டு மேஜையின் நடுவில் வைத்தாள்.

'ஹேய்.... ஹேய்... ' ஓடி வந்தான் ஷிவா. 'என்ன பண்றே நீ... அண்ணனுக்கு ரோஜாப்பூ பிடிக்காதுன்னு உனக்கு தெரியுமில்ல. இதை ஏன் இங்கே கொண்டு வந்து வைக்கிறே??? எடுத்திட்டு..போ...' பேசாமல் நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள் ரஞ்சனி.

அவள் இந்த வீட்டுக்கு மருமகளாக வந்து சில மாதங்கள் ஆகின்றன. வந்த புதிதில் கணவனிடம் கேட்டாள் அவள்.

'நிஜமாவே உங்க அண்ணனுக்கு என்னதான் ப்ராப்ளம்??? ஏதாவது லவ் ஃபெய்லியரா???'

சிரித்தான் ஷிவா 'நீ வேறே... எங்க அண்ணனாவது லவ் பண்றதாவது. வாய்ப்பே இல்லை. இது வேறே கதை...'

'என்ன கதை???' அவள் கேட்க அப்போது எல்லாவற்றையும் அவளுக்கு விளக்கி இருக்கிறான் ஷிவா..'

இன்று வேண்டுமென்றே அவள் இதை இங்கே கொண்டு வைத்திருக்கிறாள் என்று தான் தோன்றியது ஷிவாவுக்கு.

'உன்னைத்தான் சொல்றேன்...... எடு...' ஷிவாவின் குரலில் கொதிப்பேற...

'இந்த வீட்டிலே நான் நினைச்ச இடத்திலே ஒரு பூவை கூட வைக்க முடியாது...' அவள் சொல்லிக்கொண்டிருந்த அந்த நொடியில் விறுவிறுவென படி இறங்கி வந்தான் அவன்.

நேற்றிரவு ஈ.சி.ஆர் ரோட்டில் அலைந்துக்கொண்டிருந்தவனாக இல்லை அவன்!!! திடீரென அவனது தோற்றத்தில் எங்கிருந்து வந்து ஒட்டிக்கொண்டதாம் அப்படி ஒரு கம்பீரம்???

பளிசென்ற அந்த யூனிஃபார்ம், நன்றாக ஷேவ் செய்யப்பட்ட முகத்தில் நேர்த்தியாக இருந்த அந்த மீசை, காற்றில் ஆடிக்கொண்டிருந்த கேசம், பளபளக்கும் ஷூக்கள் என எல்லாமே அவனது கம்பீரத்தை இன்னமும் கூட்டுவதை போலவே தோன்றியது ஷிவாவுக்கு.

அவன் வந்து நின்றதும் எல்லார் பேச்சும் சட்டென நின்று போனது. அவனது பார்வை எல்லாரையும் ஒரு முறை உரசி செல்ல, ஒரு அன்பான புன்னகையுடன் பொதுவாக எல்லாருக்குமாக ஒரு முறை தலை அசைத்து வீட்டு அவன் அங்கிருந்து நகர எத்தனிக்க...

'சாப்பிட்டு போ பா...' அப்பாவின் குரல் அவனை தடுத்தது.

'இல்லப்பா டைம் ஆச்சு. நான் கிளம்பறேன்..' அவன் நகரப்போக..

'டேய்... சாப்பிட்டுட்டு போடா ...' ஒரு ஆணையாகவே வந்தது சுமித்ராவின் குரல்.

பதில் பேசாமல் அந்த குரலுக்கு கட்டுப்பட்டு சாப்பாட்டு மேஜையில் வந்து அமர்ந்தான். கண்களை மூடி ஒரு ஆழமான சுவாசம் எடுத்துக்கொண்டவனுக்குள் சட்டென ஏதோ நிகழ்வது போல் இருந்தது. அந்த மேஜை மேலிருந்த ரோஜாப்பூக்களின் வாசம் அவனது சுவாசத்தில் உள்ளுக்குள் இறங்க திடுக்கென கண் திறந்தான். அவனது பார்வை அந்த பூக்களின் மேல் விழ...

'சாரி... சாரிண்ணா... நான் எடுத்திடறேன் அதை...' என்றபடி ஷிவா அவன் அருகில் ஓடி வர...

மேஜையில் அமர்ந்திருந்தவனின் பார்வை நேராக ரஞ்சனியை அடைந்தது. மெல்ல பார்வையை திருப்பிக்கொண்டாள் அவள். ஏதோ புரிந்தது போலே இருந்தது அவனுக்கு.

ஷிவா அருகே வந்து அந்த பூக்களை எடுக்க முயல ,அதற்குள் அவற்றை கொத்தாக கையில் எடுத்தான் இவன். சில நிமிடங்கள் அவற்றையே பார்த்திருந்தான். வார்த்தையில் விவரிக்க முடியாத ஏதேதோ உணர்வு போராட்டங்கள்

அவனுக்குள்ளே. மறுபடியும் அந்த பூக்களை இருந்த இடத்திலேயே வைத்து விட்டு எழுந்து விட்டான்

'நான் கிளம்பறேன்மா...' சுமித்ராவை பார்த்து சொல்லி விட்டு அவன் நகர

'டேய்.. சின்ன குழந்தையா நீ... இதுக்கெல்லாம் போய்... அம்மா சொல்றேன்ல சாப்பிட்டு போ...' அவனை தடுக்க முயன்றார் சுமித்ரா.

'மா... இப்போ இருக்கிற மனநிலையிலே என்னாலே சாப்பிட முடியும்னு நீங்க நிஜமாவே நினைக்கறீங்களா???' சுமித்ராவின் கண்களை நேராக பார்த்து அவன் கேட்க... பதிலில்லை அவரிடம்.

கொஞ்சம் தடுமாறி சுதாரித்து 'டேய்... எனக்காக சாப்பிட்டு போடா.. மறுபடியும் நீ திரும்ப வர எத்தனை நாள் ஆகுமோ. நீ எங்கே இருக்கியோ எப்படி இருக்கியோ தினமும் பயமா இருக்குடா.. இந்த வேலையை விடுன்னாலும் நீ கேட்க மாட்டேங்கறே..' என்றார் அவர்.

சின்ன சிரிப்புடன் இடம் வலமாக தலை அசைத்தான். 'என் வேலைதான் இப்போ எனக்கு எல்லாம். அதை விட முடியாது. கருங்கல்மா நான். எனக்கு ஒண்ணும் ஆகாது. நீங்க கவலை படாதீங்க. அடுத்த தடவை வரும்போது கண்டிப்பா உங்க கையாலே சாப்பிடறேன். வரட்டுமா ...' சொல்லிவிட்டு யார்

பதிலுக்கும் நிற்காமல் தனது பெட்டியை இழுத்துக்கொண்டு நடந்தான் அவன்.

அவனை பற்றிதான் எல்லாருக்கும் தெரியுமே!!! இனி நிற்க மாட்டான் அங்கே. அவன் சென்ற திசையையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தனர் அம்மாவும் அப்பாவும்.

அவன் சென்னை விமான நிலையத்துக்குள் நுழைந்த போது நேரம் பத்தரையை தாண்டிக்கொண்டிருந்தது.

'அது ஏன்??? அது எப்படி??? அவனுக்கே புரிவதில்லை. விமான நிலையத்துக்குள் நுழைந்ததும் எங்கிருந்து வருகிறதாம் அவனுக்கு இப்படி ஒரு உற்சாகம்???

'ஹாய்... குட்.. மார்னிங்... ஸோ.. வேர் யூ ஆர் ஆஃப் டூ???' கேட்டுக்கொண்டே நடக்கும் அவனது பளீர் சிரிப்பு அங்கே இருக்கும் அவனது சக ஊழியர்களிடமும் தொற்றிக்கொள்ளும்.

அங்கே இருந்த கணினியில் செக் இன் செய்தபடியே 'சும்னே மாத்தாடுத்தா இத்ரே ஏனு ஆக்ல்லா. மதுவே மாடுக்கொள் மகா.........

அங்கே நின்றுக்கொண்டு ஒரு பெண்ணுடன் கன்னடத்தில் பேசிக்கொண்டிருந்த ஒரு விமானியை, அந்த பெண்ணை திருமணம் செய்துக்கொள்ள சொல்லி சீண்டினான் இவன். இந்த

வேலையில் இருப்பதில் இன்னொரு நன்மை எல்லா மொழிகளும் அவனுக்கு அத்துபடி

'அய்யோ.. அப்படி எல்லாம் இல்லை சார்... நான் சும்மாதான் பேசிட்டிருந்தேன்..' அவன் பதறி தமிழுக்கு மாற ,

அழகாக மலர்ந்து சிரித்து 'ஏன்யா பயப்படுறே...' என்று அவன் தோளை தட்டிவிட்டு, தனது பயண திட்டத்தை ப்ரின்ட் அவுட் எடுத்தான் அவன்!!!!.

'6 லெக்ஸ்... நாட் பேட்...' மகிழ்ச்சியான முறுவல் அவனிடத்தில்!!! அடுத்த 15 மணி நேரத்தில் ஆறு விமானங்கள்!!!

அடுத்த சில நிமிடங்களுக்கு தன்னுடன் வரப்போகும் கேபின் உறுப்பினர்களுடன் சேர்ந்து விமானத்தை, பயண திட்டங்களை, வானிலையை என எல்லாவற்றையும் சரி பார்க்கும் பணிகள்.

அதன் பிறகு விமானத்தில் பயணிகள் ஏறிக்கொள்ள, வந்தது எப்போது வருமென அவன் எப்போதும். அவன் காத்திருக்கும் அந்த நிமிடம்.

விமானத்தில் ஏறினான் அவன். காக்பிட்டில் சென்று அமர்ந்தான் தனது சிம்மாசனத்தில். அந்த காக்பிட்டே அவனது அரசவை என எப்போதும் தோன்றும் அவனுக்கு. அவனது இந்த பயணம் டெல்லியை நோக்கி.

அவனது பல சக விமானிகள் புலம்புவார்கள் பல நேரங்களில்.....

'கொல்றானுங்க... எத்தனை மணி நேரம்டா இந்த காக்பிட்லேயே கிடக்குறது.???'

ஆனால் இவனை பொறுத்தவரை இவன் மிக மிக மகிழ்ச்சியாக இருப்பதே நடுவானில் இருக்கும் போது தானே!!!!

ஒரு மகிழ்ச்சியான ஆழமான சுவாசத்துடன் மைக்கில் அறிவிக்க துவங்கினான் இவன்.

'குட் மார்னிங் லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்... திஸ் இஸ் யுவர் கேப்டன் 'விவேக் ஸ்ரீனிவாசன்'.ப்ளீஸ் ஃபாசென் யுவர் சீட் பெல்ட்ஸ் ..... இட்ஸ் டைம் ஃபார் டேக் ஆஃப்...'

அடுத்த சில நிமிடங்களில் ஓடு பாதையில் வேகமெடுத்தது விமானம்.

'வி1..' அருகில் வேகத்தை கண்காணித்து கொண்டிருக்கும் துணை விமானியிடமிருந்து அவனுக்கு அறிவிப்பு வர... விமானம் இன்னும் கொஞ்சம் வேகமெடுக்க....

'ரொடேட்....' அறிவிப்பு வர... விவேக் எலிவேடரை இயக்க ..... மேலே எழும்ப ஆரம்பித்தது விமானம்.... உற்சாகத்தில் பொங்கி எழும் அவனது மனதை உள்ளத்தை போல...மேலே எழும்பியது அது!!!! ' மேலே.......... மேலே......மேலே....

# அத்தியாயம் 2

**மே**லே ஏறி, விமானம் காற்றில் மிதக்க துவங்க அவன் எதிரில் இருந்த அந்த கண்ணாடியின் வழியே கண் முன்னே விரிந்தது முடிவில்லா ஆகாய வீதி. மேகங்களின் இடையே பூமியிலிருந்து 11,000 அடி மேலே பறந்துக்கொண்டிருந்தது அவனது ராட்சத பறவை.

'வீ ஹேவ் ஜஸ்ட் ஹிட் தி அல்டிடியூட் ஆஃப் 11000 ஃபீட் லேடீஸ் அண்ட் ஜெண்டில்மென், நவ் யூ கேன் டேக் ஆஃப் தி சீட் பெல்ட்ஸ்' பயணிகளுக்கான அடுத்த அறிவிப்பை கொடுத்தான் விவேக்.

'நவ் யூ ஆர் ஃப்ரீ டு மூவ் அபௌட் இன் தி கேபின் லேடீஸ் அண்ட் ஜெண்டில்மேன்.... பட்..... ப்ளீஸ் ஸ்டே இன்சைட் தி பிளைட் டில் வி லேன்ட் அண்ட் ப்ளீஸ் அவாய்ட் வாக்கிங் ஆன் தி விங்ஸ்!!!'

தயவு செய்து இறக்கைகளில் நடந்து விடாதீர்கள் என நகைச்சுவையாக அவன் சொல்ல பயணிகளின் மத்தியில் சிரிப்பலை.

சூரிய கதிர்கள் சுள்ளென ஊடுருவி அவன் கண்களை தொட, குளிர் கண்ணாடியை எடுத்து அணிந்துக்கொண்டவனின்

கண்கள், மேகங்களுக்கு நடுவே எதையோ.... இல்லை இல்லை யாரையோ தேட ஆரம்பித்தன....

'இருப்பேன்... உன் கூடவே இருப்பேன்... வானத்திலே இருந்து உன்னையே பார்த்திட்டு இருப்பேன்....' முன்பு ஒரு முறை அவன் கதறி துடித்து விழுந்த போது அவனருகே ஒலித்த குரல் மேகங்களுக்கு இடையிலிருந்து அவனை தொட்டது போலே ஒரு பிரமை!!!

கண்கள் இங்கமங்கும் சுழன்ற போதும் ...அவனுடன் ஒட்டப்பந்தயம் வைத்து முந்திச்செல்லும் மேகக்கூட்டங்களை தவிர வேறெதுவும் கண்களுக்கு தட்டுப்படவில்லை!!!! ஆனால் அவன் மனதிற்கு தட்டுப்பட்டது ஒரு அமைதி!!! வெயிலை கடந்து வந்தவனுக்கு குளிர் நிழலில் கிடைக்கும் ஒரு ஆறுதல்!!! ஒரு ஆழமான சுவாசம் அவனிடம்.

அதே நேரத்தில்...

டெல்லியின் அந்த மருத்துவமனையில் தோள்களில் கிடந்த ஸ்டெதஸ்கோப்புடன் நின்றிருந்தாள் டாக்டர் சுஹாசினி!!! அங்கே இருந்த மருத்துவர்கள் அவளுக்கு பிரியா விடை கொடுத்துக்கொண்டிருந்தனர்.

அவளது கணவன் ராகுலுக்கு சென்னையில் வேலை. அவன் மாற்றாலாகி சென்று ஆறு மாதங்கள் ஆகி விட்ட நிலையில் மூன்று வயது மகனையும், கணவனையும் அங்கே விட்டுட்டு

விட்டு இவள் இத்தனை நாட்கள் இங்கே இருந்ததே பெரிய விஷயம்!!!

'இன்னைக்கு நைட் சென்னைக்கு பிளைட்......' யாரிடமோ மகிழ்ச்சியாக சொல்லிக்கொண்டிருந்தாள் அவள். தமிழ் நாட்டுக்கு போவதில் அவளுக்கு இன்னொரு சந்தோஷமும் இருக்கிறது.

'சந்தித்து விட வேண்டும்!!! 'இத்தனை நாட்களாக அவள் பார்க்க வேண்டும் என்று தவித்துகொண்டிருக்கும் அந்த நபரை சந்திக்கும் சந்தர்ப்பம் எப்படியாவது கிடைக்க வேண்டும்!!!!

'அவரை எப்படியாவது சந்தித்து விட வேண்டும்!!!' தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள் ஹாசினி.

'ஏன்டா உனக்கு இந்த லவ் எல்லாம் வரவே வராதா???' இப்படி ஜாலியா சுத்திட்டு இருக்கியே??? நாங்க எல்லாரும் படாத பாடு படறோம்???'

விமானம் மேகங்களுக்குள் ஊடுருவி சென்றுக்கொண்டிருக்க விசிலடித்துக்கொண்டே அதை இயக்கிகொண்டிருந்த விவேக்கை பார்த்து ஆங்கிலத்தில் கேட்டான் அவனருகே அமர்ந்திருந்த ஃபர்ஸ்ட் ஆஃபிசர் தருண்!!!

'ஐ அம் அல்ரெடி எங்கேஜெட் மேன் ...' என்றான் விவேக் அழகாக சிரித்தபடியே. அவன் பார்வை வானத்தை சுட்டியது. புரிந்துக்கொண்டவனாக புன்னகைத்தான் அந்த பைலட் நண்பன்.

மேகங்கள்!!! அடுக்குமாடி கட்டிடம் போல் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கடுக்காய் மேகங்கள்!!! அலையலையாய் ஒன்றோடு ஒன்று ஓடி விளையாடி கடந்து கலைந்து....

இந்த மேகங்களின் இடையே புகுந்து, இதன் மேலே ஏறி, கீழே இறங்கி அனைவரையும் பாதுக்காப்பாக அழைத்து செல்வது தான் அவனது தினசரி வேலை!!! அவன் ரசிக்கும் விளையாட்டும் கூட!!!!

ஒரு காலத்தில் இரு சக்கர வாகனத்தை செலுத்த கூட உயிர் நடுங்கும் இவனுக்கு!!!

'என்னடா ஆகும்??? அப்படி என்ன ஆயிடும். பார்த்துடலாம் வா...' என அவனை சாலையில் இறக்கி விட்டவர் அப்பா! இன்று அனாயாசமாக வானில் ஏறி பறந்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய இந்த வளர்ச்சிக்கு காரணம். அப்பா!!! அப்பா!!! அவன் அப்பா மட்டுமே!!!

அவர் ஒரு மருத்துவரும் கூட. அதனாலேயே மருத்துவர்கள் என்றால் அவனுக்கு எப்போதுமே ஒரு பிரமிப்பும் மரியாதையும் உண்டு.

'வீட்டிலே அப்பா அம்மா எல்லாரும் எப்படி இருக்காங்க???'. கேட்டான் தருண். ஒரு முறை அவனை திரும்பி பார்த்து ஒரு பெருமூச்சு கலந்த புன்னகையுடன் தலை அசைத்தான் விவேக்.

பொதுவாக ஆட்டோ பைலட் முறையை இயக்க விவேக் அதிகம் விரும்புவதில்லை. உடலில் சோர்வு ஏற்படும் வரை, விமானம் அவனது கட்டுப்பாட்டிலேயே இருக்கும். உற்சாகமாய் மேகங்களை துரத்தி, விலக்கி முத்தமிட்டு காதலித்துக்கொண்டிருந்தான் விவேக்!!!

இந்த வானத்தின் மீது, மேகங்களின் மீது, அவனோடு விளையாடி அவனை அலைக்கழிக்கும் இந்த காற்றின் மீது என எல்லாவற்றின் மீதும் காதல் அவனுக்கு. டெல்லியை நோக்கி பறந்துக்கொண்டிருந்தது விமானம்!!!!

அதே நேரத்தில்....... டெல்லியில்....

அந்த ஹோட்டல் அறையிலிருந்து புறப்பட தயாரகிக்கொண்டிருந்தாள் அவள்!!! ஹரிணி!!! விமானிகளுக்கான சீருடையுடன் கண்ணாடி முன்னாடி நின்றவளின் இதழ்களில் தன்னாலே ஒரு புன்னகை பிறந்தது.

அவளுடைய புன்னகை அவளுக்கு மிகப்பெரிய அழகை கொடுக்கும். ஒரு கம்பீரத்தை தோற்றுவிக்கும். ஆனால் அந்த புன்னகை பல நேரங்களில் பெண்களை பார்க்கும் போது மட்டுமே மிளிரும்!!!

ஏன்??? ஆண்களை பார்த்தால் புன்னகைக்க முடிவதில்லை. இந்த கேள்விக்கு சரியாக விடை கிடைத்ததில்லை அவளுக்கு. ஆண்களை பார்த்து சிரித்து பேசி எல்லாம் பழக்கம் இல்லை.

அவர்களை எல்லா விஷயத்திலும் அவர்களுடன் போட்டி போட்டு பல நேரங்களில் அவர்களை தோற்கடித்து மட்டுமே பழக்கம் அவளுக்கு..

அறையிலிருந்து வெளியே வந்து, டாக்ஸியில் ஏறி அமர்ந்த போது ஒலித்தது அவள் கைப்பேசி. அதில் ஒளிர்ந்த அந்த பெயரை பார்த்ததும் அவள் புருவங்கள் கொஞ்சம் முடிச்சிட்டன!!! நிறையவே யோசித்துவிட்டு

'ஹலோ...' என்றாள் அவள்.

'ஹலோ...' மறுமுனையில் கொஞ்சம் தயக்கத்துடன் ஒலித்தது குரல்.

'நான் கொஞ்சம் பிஸியா இருக்கேன். அப்புறம் பேசறேன்..' துண்டித்தாள் அழைப்பை. டாக்ஸி சாலையில் விரைந்துக்கொண்டிருக்க அவளது பார்வை சாலையில் பதிந்திருந்தது.

டாக்ஸி சிறிது தூரம் நகர்ந்திருக்க அவளது பார்வையில் பட்டது அந்த கடை வாசலில் இருந்த பெயர் பலகை. 'விவேக்' என இருந்தது அந்த பெயர். சுள்ளென்றது அவளுக்குள்ளே!!! 'விவேக்' அந்த பெயர் பல நேரங்களில் அவளுக்கு எரிச்சலை கொடுத்திருக்கிறது!!!

கல்லூரி காலம் துவங்கி எல்லா விஷயங்களிலும் அவளுக்கு நேரடி போட்டி அவன்தான். இத்தனைக்கும் அவன் இவளுடன்

அதிகம் பேசியதே இல்லைதான். இருந்தாலும் போட்டிகளிலும், தேர்வுகளிலும் வெற்றி கோப்பையை அவன் இவளிடமிருந்து தட்டி பறிக்கும் நாட்களில், அவன் இவள் பக்கம் பார்த்துவிட்டு போகும் அந்த ஒற்றை பார்வை இவளுக்குள்ளே எரிமலைகளை உருவாக்கும்.

இவள் ஜெயித்து விடும் நாட்களில் அவள் அருகில் வந்து கைக்குலுக்கி விட்டுப்போகும் அவனது செய்கையும் கூட இதுவரையில் அவளுக்குள்ளே எரிச்சலையே விதைத்து இருக்கிறது.

'ஜெயிச்சிட்டா நீ என்ன பெரிய இவளா???' அவன் பார்வை அவளிடம் இப்படி கேட்பதை போலே தோன்றும் அவளுக்கு.

அவள் தேர்ந்தெடுத்த இந்த விமானத்துறையையே அவனும் தேர்ந்தெடுப்பான் என அவள் கனவிலும் நினைக்கவில்லைதான். இங்கும் வந்து விட்டான் அவன். பல நேரங்களில் அவனை சந்திக்க வேண்டி இருக்கத்தான் செய்கிறது.

ஆனால் இருவரும் ஒரே விமானத்தை இயக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தது மிகக்குறைவு தான். இவர்கள் நிறுவனத்தில் விமானிகள் எண்ணிக்கை அதிகம் என்பதால் உடன் வருபவர்கள் மாறிக்கொண்டே இருப்பார்கள்.

அவனை பற்றி யோசித்துக்கொண்டிருந்த வேளையில் சுரீரென ஊசியாக தைத்தது அந்த எண்ணம். அவனிடம்

இல்லாத ஒரு பொக்கிஷம் அவளிடம் இருக்கிறதே!!! அது... அந்த ரகசியம் அவனுக்கு தெரிந்தால் என்ன செய்வான்??? அள்ளி சென்று விட துடிப்பானோ???

இல்லை இல்லை அது எப்படி நடக்கும்??? அது எப்படி சாத்தியம்??? தனக்குள்ளே சொல்லிக்கொண்டாலும் ஒரு பயம் அவளுக்குள்ளே பரவியது நிஜம்.

இவளது நெருங்கிய தோழி ரஞ்சனி திருமணம் செய்திருப்பது விவேக்கின் தம்பியை. அவர்கள் திருமணத்தில் தான் இந்த ரகசியம் இவளுக்கு தெரிய வந்ததே. இது ரஞ்சனிக்கு கூட தெரியாது!!!

ஏதோ யோசித்தவள் ஒரு வித தவிப்புடன், பரபரவென சற்று முன் அழைப்பு வந்த எண்ணை மறுபடியும் அழைத்தாள் ஹரிணி.

ஹலோ... நான் ஹரிணி பேசறேன். நல்லா இருக்கீங்களா??? அப்போ டக்குன்னு கட் பண்ணிட்டேன். அதான் மறுபடியும் கூப்பிட்டேன். நெக்ஸ்ட் வீக் ஃப்ரீ தான் நான் ஊருக்கு வந்து உங்களை பாக்கறேன்... பத்திரமா இருந்துக்கோங்க ... சரியா??? இப்போ வெச்சிடறேன்..'

படபடவென பேசிவிட்டு அழைப்பை தூண்டித்தாள் ஹரிணி. மறுமுனையில் ஆச்சர்யம் கலந்த மௌனம் 'என்னவாயிற்று இந்த பெண்ணுக்கு???

'அப்படி எல்லாம் விட்டு விட மாட்டேன்!!! அப்படி எல்லாம் தோற்று விட மாட்டேன்!!!' அவள் உறுதியாக தனக்குள்ளே சொல்லிக்கொள்ள அவளது கார் டெல்லி விமான நிலையத்தை நோக்கி பறந்துக்கொண்டிருக்க...

அதே நேரத்தில்...

பூமியில் அவனை தாக்க அவனை நோக்கி வந்துக்கொண்டிருந்த அந்த புயலால் தானோ என்னவோ ... டெல்லி நோக்கி வந்துக்கொண்டிருந்த அந்த விமானத்தில்... டர்புலன்ஸ்!!! லேசாக ஆட்டம் கண்டது விமானம்!!!

காற்றை விட சற்றே அடர்த்தியான மேகங்கள், இல்லை சற்றே அடர்த்தி குறைவான மேகங்கள் விமானத்தின் இறக்கைகளுடன் உராயும் போது விமானங்களில் அடிக்கடி நிகழும் இந்த ஆட்டம்.

'சீட் பெல்ட்ஸ்...' அணிவதற்கான இன்டிகேடரை எரியவிட்டு..... அறிவித்தான் விவேக்.....

'இட்ஸ் டைம் டு வேர் யுவர் சீட் பெல்ட்ஸ் லேடீஸ் அண்ட் ஜென்டில் மென்.......அன்டில் தி நெக்ஸ்ட் அன்னௌன்ஸ்மெண்ட் ப்ளீஸ் ஸ்டே ஆன் யுவர் சீட்ஸ் மை டியர் கேபின் ஸ்டாஃப்ஸ்...'

அவர்களுக்கு சற்று முன் கடந்து சென்ற விமானத்தில் இருந்து தகவல் வர.......... அருகில் இருக்கும் ஃபர்ஸ்ட்

ஆபிசரிடமிருந்து கட்டளை வர.......... மெதுவாக விமானத்தின் வேகத்தை குறைத்து சற்றே கீழிறக்கினான் விமானத்தை!!!!

'உன்னை திக்குமுக்காட செய்யும் ஒரு ரகசியம் மறைந்திருக்கிறதடா ஹரிணியிடம்... சொல்லத்தான் அவனை உரசினவோ அந்த மேகங்கள்??? அறியவில்லை அவன்.

அடுத்த பத்து நிமிடங்களில் அந்த மேகங்களை கடந்திருந்தது விமானம். மெல்ல திரும்பி தருணை பார்த்து கண் சிமிட்டி சிரித்தான் விவேக்.

டெல்லி விமான நிலையத்தை விமானம் அடைந்திருக்க அதை தரை இறக்கும் படலம்!!! மேகங்களையும் வானத்தையும் பிரிய மனமில்லாதது போலே அவற்றை ஒரு பார்வை பார்த்துக்கொண்டான் விவேக். இதோ அடுத்த அரை மணி நேரத்தில் மறுபடியும் வரப்போகிறேனே!!! மானசீகமாக அவர்களிடம் சொல்லிக்கொண்டான்.

'தரை இறங்குகிறோம்...' என்பதை பயணிகளுக்கு அறிவித்து விட்டு கொஞ்சம் கொஞ்சமாக கீழிறக்கினான் விமானத்தை. விமான நிலையத்தின் ஓடு தளம் கொஞ்சமாக கண்களில் தெரிய துவங்கியது.

இறங்கிக்கொண்டிருந்தான் பூமியை நோக்கி!!! அதே நேரத்தில் அந்த விமான நிலையத்துக்குள் நுழைந்தாள் ஹரிணி!!! சற்று முன் இறங்கி இருந்த இன்னொரு விமானத்தில் இருந்து

இறங்கக் தயாராகிக்கொண்டிருந்தனர் டாக்டர் சுஹாசினியின் கணவனும் மகனும்!!!

# அத்தியாயம் 3

**த**ரை இறங்கி ஓடு தளத்தை முத்தமிட்டது விமானம். எந்த விதமான அதிர்வுகளும் இல்லாமல் மெத்தன ஒரு முத்தம்.

'ஆவ்சம் லேண்டிங் மேன். ஐஸ் லவட் இட் ' முகம் மலர்ந்து சக விமானி சொல்ல, அழகாய் சிரித்துக்கொண்டான் விவேக். இது ஒன்றும் புதிதல்லவே அவனுக்கு.

கேபின் பணியாளர்கள் பயணிகளுக்கு விடைக்கொடுத்து வழி அனுப்பிக்கொண்டிருந்தனர் சில நேரங்களில் பயணிகள் கூட இவன் காக்பிட்டை விட்டு வெளியே வர காத்திருந்து இவனுக்கு கை குலுக்கி விட்டு செல்வார்கள்!!!

இவனுக்கு இதெல்லாம் பெரிய விஷயமாக தெரிந்ததே இல்லை. காதலிப்பதற்கு கூட நீ மிக நன்றாக காதலிக்கிறாய் என பாராட்டுவார்களா என்ன??? சிரிப்புதான் வரும் அவனுக்கு.

எல்லா பயணிகளும் இறங்கி சென்ற பிறகு காக்பிட்டை விட்டு வெளியே வந்தான் அவன். கேபின் பணியாளர்களும் அவனுக்கு குலுக்க சின்ன புன்னகையுடன் அவற்றை ஏற்றுக்கொண்டு நடந்தான் அவன்.

எப்போதும் விமானத்தில் ஏறும் போது இருக்கும் உற்சாகம் இறங்கும் போது அவனுக்கு கொஞ்சம் குறைந்து விடும் தான்.

ஆனால் இன்று ஏதோ புதிதாய் ஒரு உணர்வு. எதையோ, இல்லையென்றால் யாரையோ புதிதாக சந்திக்க போகிறோம் என்று மனதின் ஓரத்தில் ஒரு உற்சாக தீப்பொறி.

அதே நேரத்தில்....

அங்கே மதுரையில்... ஒரு கல்யாண மண்டபத்தில்... சமையலறையில் எண்ணை சட்டியின் முன்னால் நின்று வடை தட்டிக்கொண்டிருந்தார் அவர்!!! தாமோதரன்!!!

'ஆச்சா??? இன்னும் எவ்வளவு நேரம்??? உங்களாலே முடியலை. எனக்கு நல்லா தெரியுது. வயசாச்சு நீங்க வேலை செஞ்சது போதும்ன்னாலும் கேட்க மாட்டேங்கறீங்க...' சமையல் காண்ட்ராக்டரின் குரல் ஒலிக்க

'இல்ல.... இல்ல... முடியுது..... முடியுது என்னாலே... இதோ முடிச்சிட்டேன். ரெண்டே நிமிஷம்...' பரபரத்தார் அவர். .அவர் முகத்தில் வியர்வை வழிந்துக்கொண்டிருந்து!!!!

'வயாசச்சு இல்ல... உங்களுக்கு எதுக்கு இந்த வெட்டி வீம்பு... நீங்க சரின்னு சொன்னா உங்களை ராஜா மாதிரி பார்த்துக்க ஆள் இருக்கு...' அறுபது வயதை நெருங்கிக்கொண்டிருக்கும் தாமோதரன் பல முறை கேட்ட வார்த்தைகள் இவை. ஆனால் அவரை பொறுத்தவரை இது வெட்டி வீம்பு அல்ல!!! தன்மானம்!!!

அங்கே டெல்லியில் அதே நேரத்தில்

மின்னலென விமான நிலையத்துக்குள் நுழைந்தாள் ஹரிணி. எல்லாவற்றிலும் வேகம்தான் அவளுக்கு. கார் ஓட்டுவதில் துவங்கி, நடையில், பேச்சில் என எல்லாவற்றிலும் எதை பற்றிலும் கவலை படாத பாவம் இருக்கும் அவளிடம்.

ஆனால் அவளது இத்தகைய வேகம் சிலரது வாழ்வில் ஈடு செய்ய முடியாத இழப்பை தந்திருக்கிறதே அது அவளுக்கு எப்போது புரியுமோ???

அதே நேரத்தில் டாக்டர் சுஹாசினியின் கணவரும் அவளது பதிமூன்று வயது மகனும் அவளுக்கு எதிரே வர, எதிரே வந்தவர்களை கவனிக்காமல் நடந்தவள் அவர்களுடன் மோதிக்கொண்டு கீழே சடாரென விழுந்திருந்தாள்.

தெரியவில்லை அவளுக்கு!!! அந்த ராகுல் அவளது சொந்த அக்கா சுஹாசினியின் கணவன் என தெரியவில்லை அவளுக்கு!!! விழுந்தவள் எழுந்து, தான் கீழே விழுந்து விட்டோம் என்ற உணர்வு தந்த அவமானம் தாங்காமல், பொங்கி எழுந்த கோபத்துடன் படபடவென பொறிய ஆரம்பித்திருந்தாள் அவன் மீது. பதிலுக்கு தனது பங்கிற்கு பேச ஆரம்பித்திருந்தான் ராகுல்.

அங்கே அவர்கள் இருவருக்கும் வாக்கு வாதம் வலுத்திருக்க அந்த பதிமூன்று வயது சிறுவன் சற்றே பயந்து

போனவனாக ஓரமாக சென்று அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்துவிட்டிருந்தான்.

அதே நேரத்தில் அங்கே விமான நிலையைத்தினுள் இருந்த அந்த ஹோடேலில் அமர்ந்துக்கொண்டு ஒரு கையில் சாண்ட்விச்சும் ஒரு கையில் காபியுமாக காலை உணவை ருசித்தபடியே திரும்பிய விவேக்கின் கண்களில் விழுந்தனர் சண்டையிட்டுகொண்டிருந்த இருவரும்.

அங்கே பொங்கி வெடித்துக்கொண்டிருப்பது ஹரிணி என சட்டென புரிய அவன் விழிகளில் கொஞ்சம் எரிச்சல் பரவியது.

'இவள் எப்போதும் இப்படித்தான்!!!' தனக்குள்ளே சொல்லிகொண்டவனுக்கு தனது தம்பியின் திருமணமும் அப்போது இவள் நடந்துக்கொண்ட விதமும் நினைவுக்கு வந்து போனது. அதுதான் இன்று வரை வீட்டில் நடக்கும் அத்தனை பிரச்னைகளுக்கும் காரணம்.

சில நொடிகள் கழித்து நிமிர்ந்தவனின் பார்வை விழுந்தது அந்த சிறுவன் மீது!!!

உடலை சற்றே குறுக்கிக்கொண்டு அந்த சண்டையையே பயம் கலந்த கண்களுடன் வெறித்துக்கொண்டிருந்த அந்த சிறுவன், சட்டென விவேக்கின் மனதில் ஒட்டிக்கொண்டான். ஏதோ சின்ன வயதில் இருந்த தன்னையே பிரதிபலிப்பதை போல் ஓர் உணர்வு விவேக்குக்கு.

அடுத்த விமானம் கிளம்ப இன்னும் நேரம் இருக்க சாண்ட்விச்சை முடித்துவிட்டு மெல்ல நடந்து வந்து அந்த பையனின் அருகில் அமர்ந்துக்கொண்டான் விவேக். இப்படி எல்லாம் ஒரே பார்வையில் சட்டென யாரும் அவனை இப்படி ஈர்த்தது இல்லை இதுவரை. அவன் பார்வை அந்த சிறுவனை விட்டு விலக மறுத்தது.

ஏதோ ஒரு உந்துதலில் அவனை நோக்கி சட்டென திரும்பினான் அந்த சிறுவன். இதழ்களில் புன்னகை பூக்க அவனை பார்த்து புருவம் உயர்த்திக்கேட்டான் விவேக் என்னவாயிற்று என....

'எனக்கு சண்டைன்னா பயம்...' அவன் கொஞ்சம் தடுமாறும் குரலில் தமிழில் சொல்லி முடிக்க சிரித்தே விட்டான் விவேக்.

'எனக்கும் கூட ரொம்ப பயம் கொஞ்ச வருஷம் முன்னாடி வரைக்கும். இதுக்கு மட்டும் இல்ல எல்லாத்துக்கும் பயம். இப்போ எல்லாத்தையும் தூக்கி போட்டுட்டேன்...' கண் சிமிட்டி சிறுவனின் கன்னம் தட்டி சொன்னான் அவன். 'கவலைபடாதே நீயும் தூக்கி போட்டுடலாம்...'

மெல்ல தலை அசைத்த சிறுவனின் முகத்தில் நிறையவே வியப்பு. விவேக்கையும் அவன் சீருடையையும் பார்த்தவன் ' நீங்க பைலெட்ட்டா..???' என்றான் மெதுவாக.

'எஸ்.. புன்னகை இன்னமும் மறையவில்லை விவேக்கின் இதழ்களை விட்டு. ஐ... யாம்... விவேக் .' என்றான் அவனது முகத்தில் ஓடும் அப்பாவி தனத்தை ரசித்தபடியே

'எனக்கும் பிளைட் பிடிக்கும்... ' மெல்ல சொன்னான் சிறுவன்.

'ஓ ரியலி... நீயும் பெரியவனா ஆனா பிளைட் ஓட்டலாம்... ஆமாம் உன் பேரென்ன...' மிக இதமான குரலில் கேட்டான் விவேக்.

விமானத்தில் இல்லாமல் தரையில் இருக்கும் தருணங்களில் இப்படி இறுக்கம் கரைந்து புன்னகையுடன் அவன் யாருடனும் பேசி பல வருடங்கள் ஆகின்றன.

'ஸ்ரீ.. நி.. வாசன்...' அவன் தனது பெயரை நிதானமாக உச்சரிக்க தனது ஒவ்வொரு நரம்பிலும் புத்துணர்ச்சியை செலுத்திக்கொண்ட ஒரு உணர்வில் முகம் மலர நிமிர்ந்தான் விவேக்.

'ஸ்ரீநிவாசன்!!!' குரல் நிறைய சந்தோஷத்துடன் உச்சரித்தான் விவேக். புன்னகை மாறா முகத்துடன் அவனை நோக்கி கை நீட்டினான் 'கிளாட் டு மீட் யூ மிஸ்டர் ஸ்ரீனிவாசன்..'

சட்டென அவன் கை பற்றி குலுக்கினான் சிறுவன். விவேக்கிடம் ஒரு ஆழமான சுவாசம். சிறுவனுக்கும் நிறையவே

சந்தோஷம். 'இதுவரை அவனை யாருமே மிஸ்டர் என அழைத்தது இல்லையே!!!

'எனக்கு காக்பிட் பார்க்கணும் என்னை கூட்டிட்டு போறீங்களா அங்கிள் '

ஓ... எஸ் கண்டிப்பா ஒரு நாள் உன்னை கூட்டிட்டு போறேன்....' என்றவன் இது என்னோட கார்ட் என்றபடி தனது கார்டை அவனிடம் நீட்டினான் 'இதிலே என் நம்பர் இருக்கு. நீ அப்பபோ இந்த அங்கிளோட பேசறியா???'

சிறுவன் கார்டை வாங்கிக்கொள்ள விவேக்குக்கே கூட ஆச்சரியம்தான். ஏன் இந்த சிறுவனிடம் இப்படி கரைகிறேன் நான்???

அதற்குள் அங்கே அந்த விவாதம் ஒரு வழியாக முடிவுக்கு வந்து ஹரிணி அங்கிருந்து நகர, அங்கே அவர்கள் அருகில் வந்து நின்றுவிட்டிருந்த ஒன்றிரண்டு பயணிகளும் நகர்ந்து விலக இவர்கள் இருவரையும் நோக்கி வந்தான் ராகுல்

அவனிடம் தன்னை அறிமுக படுத்திக்கொண்டு விட்டு, 'ஶ்ரீனிவாசன்... ' ரசித்து உச்சரித்த படியே சிறுவனை பார்த்து புன்னகைதான் விவேக்.

'நம்ம ஶ்ரீனிவாசன் சார் உங்க பையனா மிஸ்டர் ராகுல்??? ஸ்வீட் பாய்... இப்போதான் நாங்க ரெண்டு ஃபிரண்ட்ஸ் ஆனோம்...'

'ஓ...' வியப்புடன் புன்னகைதான் ராகுல் 'இவன் அப்படி சட்டுன்னு யாரோடையும் பேச மாட்டானே!!!'

'நானும் கொஞ்சம் அப்படிதான்னு வெச்சுக்கோங்களேன் . அதனாலே தான் என்கூட ஃப்ரெண்ட் ஆயிட்டானோ???' ஸ்ரீனிவாசனை விட்டு விலக மறுத்தது விவேக்கின் பார்வை.

'நான் உங்க பையோனோட ஃப்ரெண்டா இருக்க உங்க பர்மிஷன் வேணுமே' அழகான மென் நகையுடன் கேட்டான் ராகுலை பார்த்து.

'ஓ ஷ்யூர்' ராகுல் மகிழ்ச்சியுடன் புன்னகைக்க அதன் பிறகு ராகுலுடன் சில நிமிடங்கள் சாதரணமாக பேசிக்கொண்டிருந்து விட்டு

'நான் வரேன் மிஸ்டர் ஸ்ரீனிவாசன்..' சிறுவனிடம் சொல்லிவிட்டு ஒரு முறை அவன் கேசம் வருடிக்கொடுத்து விட்டு விவேக் நகரப்போக ஏனோ சட்டென அவன் கை பற்றிக்கொண்டான் ஸ்ரீனிவாசன்.

'அங்கிள் நான் அப்புறமா உங்க கிட்டே பேசறேன்...'

'வெயிட் பண்ணிட்டே இருப்பேன்.. இப்போ பிளைட்க்கு டைம் ஆச்சு நான் வரேன் ..' அவனிடம் விடைபெற்றுக்கொண்டு அவன் இறுக்கமாக பற்றி இருந்த கரத்தை விலக்க மனமில்லாமல் விலக்கிக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தான் விவேக். அப்போது ஒலித்தது அவனது கைப்பேசி.

'சொல்லுங்கப்பா...' என்றான் விவேக்.

நிறையவே உற்சாகம் அவனது குரலில். மறுமுனையில் இருந்த அப்பாவுக்கு அது புரியாமல் இல்லை. நிறைவாக இருந்தது அவர் மனம்.

'இல்லப்பா... நீ காலையிலே சாப்பிடாம கிளம்பிட்டே. மனசு கேக்கலை. அதுதான் கூப்பிட்டேன். சாப்பிட்டியாபா எங்கே இருக்கே நீ??..'

'சாப்பிட்டேன்பா.. திருப்தியா சாப்பிட்டேன். இப்போ டெல்லி ஏர்போர்ட்டிலே ஜாலியா சுத்திட்டு இருக்கேன்...'

'தெரியுதுபா. நீ ஜாலியா இருக்கேன்னு தெரியுது. என்ன விசேஷம்???' என்றார் மெதுவாக.

'விசேஷம்??? அழகாய் சிரித்தான் விவேக். 'அது வந்து பா... இங்கே ஒரு ஸ்ரீனிவாசனை பார்த்தேனே...' சொன்னவனின் குரலில் இருந்த குழந்தைத்தனமான சந்தோஷத்தை உணர முடிந்தது அப்பாவால். ஒரு ஆழமான சுவாசத்துடன் புன்னகைத்துக்கொண்டார் அவர்.

'சரிப்பா... பிளைட்டுக்கு டைம் ஆச்சு. அடுத்து மும்பை போறேன். அப்புறம் பேசறேன்..' துண்டித்து விட்டு உற்சாகமாக நடந்தான் விவேக்.

சில அடிகள் அவன் நடக்க. நேருக்கு நேராக எதிர்பட்டாள் அவள். ஹரிணி!!! அவள் முகத்தில் அதிர்ச்சி!! அவனது முகத்தில் கொஞ்சம் மாற்றம்.

'நினைத்தவுடன் கண்ணெதிரே வந்து நிற்கிறது பார் இந்த பூதம்..' சொல்லிக்கொண்டாள் அவள். அவள் முகத்தில் நிறையவே கோப கோடுகள்.

சில நொடிகள் அவனை பார்த்தபடியே நின்றவள் என்ன தோன்றியதோ சற்றே நகர்ந்து சென்று கைப்பேசியை எடுத்தவள் அழைத்தது ரஞ்சனியை.

'ஹாய்... ரஞ்சனி..' காதில் விழுகிறது இவனுக்கு. இதையெல்லாம் கண்டுக்கொள்வதாக இல்லை அவன்..

சில நிமிடங்கள் கடக்க அடுத்த விமானம் கிளம்புவதற்கான ஆயத்த வேலைகள் துவங்க, அந்த விமானத்தில் அவனுடன் வரப்போகும் சக விமானிகளின் அறிமுக படலம். அங்கே அவனருகே நின்றிருந்தாள் ஹரிணி. அவள்தான் அவனுடன் வரப்போகிறாள் என புரிந்தது அவனுக்கு.

தனது தம்பியின் திருமணத்தில் நடந்தவைகளை மறந்து, வெகு இயல்பாக, சக விமானியாக அவளை நோக்கி அவன் கையை நீட்ட, இதழோரம் தோன்றிய ஒரு அலட்சிய சிரிப்புடன் அங்கிருந்து நகர்ந்தாள் அவள். தலையை இடம் வலமாக அசைத்துக்கொண்டு நகர்ந்தான் இவன்.

விமானத்தில் ஏறி காக்பிட்டில் தேவையான பாதுகாப்பு சாதனங்களை சரி பார்த்துவிட்டு மும்பையின் தற்போதைய வானிலை, தட்பவெப்பம் என எல்லாவற்றையும் கணக்கெடுத்துக்கொண்டு, அவன் திரும்ப கைகளை கட்டிக்கொண்டு அவனையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள் ரஞ்சனி. இருவர் கண்களும் சந்தித்துக்கொள்ள பற்றி எரிந்தது அவளுக்குள்ளே!!!

ரஞ்சனியின் திருமணத்தில் இவனை அவள் சந்தித்த போது ரௌத்திர மூர்த்தியாக அல்லவா இருந்தான் இவன்!!! இவளது அத்தனை தோழிகளுக்கும் முன்னால் எப்படி வெடித்தான் இவன்!!

அன்று சரேலென வேகத்துடன் அவள் கன்னம் வரை வந்த அவனது கரம்... அவளை அடிக்காமல் கையை தாழ்த்திக்கொண்டு கண்களால் வெறுப்பை உமிழ்ந்து விட்டு அவன் நகர்ந்த விதம்.... இவை எல்லாம் இன்னமும் அவள் நினைவில் அப்படியே!!!

இவற்றை எல்லாம் நினைக்கும் போதே கொஞ்சம் அவமானமாக இருந்தது ஹரிணிக்கு. அவளிடம் எதுவும் பேசும் மனநிலையில் இல்லாதவனாக அங்கிருந்து நகர்ந்தான் விவேக்.

பயணிகள் விமானத்தில் ஏறி இருக்க. விமானம் கிளம்ப ஆயத்தமாக இருக்க யார் விமானத்தை இயக்குவது என

அவர்களுக்குள் முடிவு செய்துக்கொள்ளும் தருணம் அது. இவன் அந்த விமானத்தின் கேப்டன் என்பதால் அதை முடிவு செய்யும் அதிகாரம் அவனுக்கே.

ஒரு முறை அவளை ஏற இறங்க பார்த்தவனுக்கு என்ன தோன்றியதோ...

'ப்ளீஸ்....' என்றான் கேப்டன் இருக்கையை நோக்கி அவளை அமருமாறு கை நீட்டியபடியே...

'தேவை இல்லை...' பட்டென அவளிடமிருந்து பதில். 'நீ சொல்லி நான் என்ன கேட்பது???' என்பதை போன்றதொரு பாவம் அவள் கண்களில். இது எல்லாம் அவனை பாதிக்கவே இல்லை!!!

'அவனுக்கென்ன விமானம் ஓட்டுவது கசக்கிறதாமா???' சந்தோஷமாக அமர்ந்தான் கேப்டன் இருக்கையில். சீட் பெல்ட்டுக்கான விளக்குகளை எரியவிட்டு..

'குட் ஆஃப்டர் நூன் லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்... திஸ் இஸ் யுவர் கேப்டன் 'விவேக் ஸ்ரீனிவாசன்'.ப்ளீஸ் ஃபாசென் யுவர் சீட் பெல்ட்ஸ் ..... இட்ஸ் டைம் ஃபார் டேக் ஆஃப்...' அவன் அறிவிக்க... இவள் அவனுக்கு ஆணை கொடுக்க நகரத்துவங்கியது விமானம்.

இந்த முறை விமானத்தின் எடை சற்று கூடுதலாக இருக்க மேகங்களை கடந்து மேலே எழும்ப கொஞ்சம் சிரமமாகவே

இருந்தது. மெது மெதுவாக விமானம் மேலே எழும்ப எழும்ப இவன் முகத்தில் பரவிய சந்தோஷ ரேகைகள் அவளுக்குள்ளே நெருப்பை கிளப்பியது.

என்ன செய்யலாம் இவனை??? யோசித்தபடியே அவனை பார்த்திருந்தாள் அவள். அவன் இவள் பக்கம் திரும்பவதாகவே இல்லை. அவனை திரும்ப வைப்பதென்ன தடுமாற வைக்கும் ஆயுதமே அவளிடம் இருக்கிறதே.

விமானம் பறந்துக்கொண்டிருக்க, மும்பையில் தரை இறங்க இன்னும் அரை மணி நேரம் இருக்க... திடீரென காக்பிட்டில் எப்போதும் பரவி இருக்கும் வழக்கமான எரிவாயுவின் வாசத்தையும் தாண்டி அவன் நாசியை தொட்டது அந்த வாசம்!!!

காக்பிட் அறை முழுவதும் பரவியது ரோஜாப்பூக்களின் மணம். அவனது உடலின் ஒவ்வொரு அணுவும் ஒரு முறை உதறி ஓய்ந்தது. சரேலென திரும்பினான் அவள் பக்கம். அங்கே இருந்த அவளது திறந்திருந்த அவளது கைப்பையில் இருந்தன கிட்டத்தட்ட ஐம்பது ரோஜாக்கள்.

அந்த பூக்களை பார்க்க பார்க்க அவன் உயிர் வரை பரவியது நடுக்கம். முகம் முழுவதும் வியர்வை முத்துக்கள். ரோஜாப்பூக்கள் என்னுடைய மிகப்பெரிய வலியின் சாட்சி ஆயிற்றே!!! அவனது நினைவு திரையில் ஏதேதோ வந்து போயின

மேகங்கள் விமானத்தின் மீது மோதிக்கொண்டு விலக அவற்றை தவிர்த்து விலகுவதற்காக அவனது கட்டை விரலும் ஆள்காட்டி விரலும் ஹெட்டிங் டயலை சற்றே நகர்த்த சில டிகிரிகள் சாய்கிறது விமானம்.

அந்த பூக்களின் வாசத்துடன் சேர்ந்து காக்பிட்டில் சுற்றிக்கொண்டிருந்த அந்த கூலர் மின் விசிறிகளின் சத்தம் அவன் தலைக்குள்ளே ஊடுருவவது போல் ஒரு உணர்வு. அவன் தடுமாறுகிறான் என புரிகிறது அவளுக்கு.

மேகங்களை கடந்த அடுத்த நொடி விமானம் மறுபடி விமானம் மற்றொரு திசையில் சாய வேண்டிய சூழ்நிலை......ஒரே ஒரு கணம் தடுமாறுகிறது அவனது கவனம். விமானம் ஒரே பக்கமாக சாய்ந்து சாய்ந்து...

சட்டென அந்த சூழ்நிலையை சமாளித்து விட அவளால் முடியும் ஆனாலும் இதழோரம் தேங்கிய சின்ன புன்னகையுடன் அவனையே பார்த்திருக்கிறாள் ஹரிணி.

'தெரிய வேண்டும்!!! அவன் தடுமாறுகிறான் என எல்லாருக்கும் புரிய வேண்டும்!!! அவன் தோற்றுப்போக வேண்டும்!!!

சரியாக அந்த நொடியில் 'டேய்....' அப்பாவின் குரல் அதட்டுவது போன்றதொரு உணர்வு அவனுக்கு

அடுத்த நொடி.... அடுத்த நொடி... தன்னிலை உணர்ந்து சுதாரித்துக்கொண்டான் அவன். அவன் விரல்கள் சட்டென விளையாட சரியான கோணத்தில் நிலைக்கொண்டது விமானம். என்ன நிகழந்தது என்பது அவர்கள் இருவருக்கும் மட்டுமே தெரியும். அவன் உடல் ஒரு முறை குலுங்கி ஓய்ந்தது.

'ச்சே.... என்னவாகிறது??? என்னவாகிறது எனக்கு??? என்னை நம்பி எத்தனை உயிர்கள் இங்கே??? ஒரு சின்ன ரோஜாப்பூ என்னை தடுமாற வைப்பதா???

'ஃபேஸ் பண்ணு... உன்னோட எல்லா வீக்னெஸ்சையும் தைரியமா 'ஃபேஸ் பண்ணு' இதுவும் அப்பா கற்றுக்கொடுத்த பாடம்தான்.

.ஒரு ஆழமான சுவாசத்துடன் ஹரிணியின் பக்கம் திரும்பினான் விவேக். அவள் சற்றுமுன் பேசிய போது என்னை தடுமாற வைக்க ரஞ்சனி கொடுத்த யோசனையாக இருக்க வேண்டும் இது என புரிந்தது அவனுக்கு.

'என்னை தடுமாற வைக்க, ஏன் அழ வைக்க கூட முடியும் இந்த ரோஜாப்பூக்களால். அது ஒரு பக்கம் இருக்கட்டும்.!!! ஆனால் இங்கே விமானத்தில் என்னை நம்பி இருக்கும் இத்தனை உயிர்களை பற்றி கொஞ்சம் கூட கவலை இல்லாமல் எப்படி இந்த ஹரிணி??? எப்படி பட்ட விமானி இவள்?? ' உள்ளுக்குள் பற்றி எரிந்தது விவேக்குக்கு.

'இல்லை!!! இந்த நொடி முதல் இந்த ரோஜாப்பூக்கள் என்னை ஒன்றும் செய்ய போவதில்லை.!!!

ஒரு முடிவுடன் சற்றே குனிந்து அந்த ரோஜாப்பூக்களை கையில் எடுத்துக்கொண்டான் விவேக். அவற்றை அவன் நுகர உயிர் வரை சென்று சேர்ந்தது அந்த வாசம்.

அவனது கண்களின் ஓரங்களில் சின்னதாக ஒரு நீர்த்துளி. சட்டென சுண்டிவிட்டுக்கொண்டான் அதை. இப்போது எந்த நடுக்கமும் இல்லை அவனிடத்தில். அந்த ரோஜாப்பூக்களை மடியில் வைத்துக்கொண்டான் அவன்.

மெல்ல திரும்பி அவளை பார்த்தவனின் இதழ்களில் மிளிர்ந்தது ஒரு வெற்றி புன்னகை. அவள் முகமெங்கும் வியப்பின் ரேகைகள். ஒரு முறை அவளை பார்த்து கண் சிமிட்டி விட்டு திரும்பிக்கொண்டு புது உற்சாகத்துடன் தனது மேக காதலிகளை மறுபடியும் முத்தமிட துவங்கி இருந்தான் விவேக்!!!

# அத்தியாயம் 4

மும்பை விமான தளத்தை நெருங்கிக்கொண்டிருந்தது விமானம். கீழே விமான நிலையத்தின் கட்டுப்பாட்டு அறையிலிருந்து தரை இறங்குவதற்கான அனுமதி கிடைத்தது. மேகத்திரைகளின் வழியே ஓடுதளம் கண்ணில்பட்டது.

'டூ தௌசண்ட்..' ..

'ஒன் தௌசண்ட்' ....

'ஃபைவ் ஹண்ட்ரட்..' விமானத்துக்கும் தரைக்குமான தூரத்தை அறிவிக்கும் ஹரிணியின் குரல் அவனுக்கு கேட்டுக்கொண்டிருக்க தரை இறங்கிக்கொண்டிருந்தான் விவேக்.

மும்பை விமான நிலையத்துடன் அவனது ஒரு இனிமையான நினைவும் கலந்திருக்கிறது. அவனை பொறுத்தவரை மறக்கவே முடியாத நிமிடங்கள் அவை.

மறுபடியும் அப்படி ஒரு நிகழ்வு வரக்கூடிய சாத்தியம் இருக்கிறதா என்ன??? அழுத்தமான ஒரு மூச்சு மட்டுமே எழுந்தது விவேக்கிடம். அவன் மடியில் இன்னமும் ரோஜாப்பூக்கள் மணம் வீசிக்கொண்டிருந்தன அந்த நிகழ்வு மறுபடியும் வராது என்பதற்கு அடையாளமாக!!!

'ஹண்ட்ரட்...'..................... ஃபிஃப்டி .............டென்.............தரை இறங்கியது விமானம்.!!!

சில நிமிடங்கள் கடக்க, விமானத்துக்குள் செய்ய வேண்டிய நடைமுறைகளை முடித்துவிட்டு கையில் அந்த ரோஜாப்பூக்களையும் எடுத்துக்கொண்டு, ஹரிணியை திரும்பிக்கூட பார்க்காமல் இந்தியாவின் மிக அழகான விமான நிலையங்களில் ஒன்றான மும்பை விமான நிலையத்துக்குள் இறங்கி நடந்தான் விவேக்.

'ஹேய்....உனக்குத்தான் போன் பண்ணனும்னு நினைச்சேன் டக்குன்னு நேர்லே வந்து நிக்கற...' சிரித்தாள் அங்கே எதிர்ப்பட்ட ராதிகா.

இவளுமே ஒரு விமானி. அவள் இவனுடைய உயிருக்கு உயிரான தோழி எல்லாம் இல்லை என்றாலும்.......

தலையை பிடித்துக்கொண்டு அமரும் நேரத்தில் 'என்னப்பா... என்னாச்சு தலை வலிக்குதா??? காபி வேணுமா..' என கேட்டுக்கொள்ளும் அளவு நட்பு இருவருக்கும் இடையில் உண்டு.

'என்ன பைலட் மேடம் நலமா??? என்றான் மலர்ந்த முகத்துடன்.

'எனகென்ன ஜம்முனு இருக்கேன்...' என்றாள் ராதிகா.

'ஸோ.. வேர் யூ ஆர் ஆஃப் டூ???' கேட்டான் விவேக்.

'கொல்கத்தா .. நீ ..'

'அடுத்து... வைசாக்...' மகிழ்வுடன் புன்னகைதான் அவன். '

மும்பை - விசாகபட்டினம்!!! இந்த வழியில் பயணம்!!! அவன் மனதிற்கு மிகவும் நெருக்கமான பயணம் அது!!!

'பூ யாருக்கு??? அழகா இருக்கு..' அவன் கையில் இருந்த ரோஜப்பூக்களை பார்த்தபடியே கேட்டாள் அவள்.

'யாருக்கும் இல்லை. நான் யாருக்கும் ரோஜாப்பூ கொடுக்கறதில்லை ராதிகா...' பேசிக்கொண்டே அவளுடன் நடந்தான் விவேக்.

'அப்புறம் இதை எதுக்கு எடுத்திட்டு வந்தே???'

'இது எனக்கு ஒரு வார்னிங் மாதிரி கிடைச்சது. எதுகிட்டேயும் யார்கிட்டேயும் தோத்து போயிடாதேடா ராஜா... அப்படின்னு ஒரு மேலிருந்து ஒரு வார்னிங்...' அழகான சிரிப்பு பூத்தது அவன் இதழ்களில்.

'என்னது... புரியலை.. '

'புரிய வேண்டாம் விட்டுடு .. இது விவேக்ஸ் புக் ஆஃப் சீக்ரெட்ஸ்..' கண் சிமிட்டினான் விவேக்.

அவன் மனதில் இருக்கும் வேதனைகள் முழுவதுமாக தெரியாவிட்டாலும், அதன் அடிப்படை புரியும் அவளுக்கு. அதையும் மீறி அவன் உற்சாகமாக வளைய வருவது அவளுக்கு வியப்பையே கொடுக்கும்.

'ஹேய்... புக்ன்னு சொன்னதும் ஞாபகம் வருது. இன்னைக்கு 'ஹாப்பி ஃப்ளையிங்' பார்த்தியா... உன்னோட இன்டர்வியூ வந்திடுச்சே..' என்றாள் உற்சாகமாக.

'ஹாப்பி ஃப்ளையிங்' அவர்களது விமான நிறுவனத்தின் பிரத்தியேக பத்திரிக்கை!!! அது பொதுவாக விமானத்தில் வரும் எல்லா பயணிகளுக்கும் அவர்கள் படிப்பதற்கு கொடுக்கப்படும் ஒரு பத்திரிக்கை!!! அதில் அவனது சிறிய பேட்டி வந்திருந்தது.. அந்த பேட்டி வருவதற்கு முக்கிய காரணம் ராதிகா.

'அப்படியா??? வெரி குட்...'என்றான் இதழ்கள் புன்னைகையில் விரிய.

இதுக்கும் உன் ட்ரேட் மார்க் ஸ்மைல்தானா..... இந்தா படிச்சு பார்த்திட்டு சொல்லு ... நான் கிளம்பறேன் டைம் ஆச்சு....' கையில் இருந்த பத்திரிக்கையை அவனிடம் நீட்டிவிட்டு விடைபெற்றாள் அவள்.

செயற்கை அருவியும், வண்ண வண்ண ஓவியங்களும், அழகான சிலைகளும், என ஒரு அரண்மனை போல் காட்சி அளித்துக்கொண்டிருந்தது மும்பை விமான நிலையம்.

அங்கே இருந்த அந்த தென் இந்திய உணவு விடுதியில் மதிய உணவை வாங்கிக்கொண்டு அங்கே ஓரமாக இருந்த ஒரு மேஜையில் சென்று அமர்ந்தான் விவேக்.

முதலாவதாக அந்த தட்டில் இருந்த பாயசத்தை எடுத்து சுவைத்தவனுக்கு அப்பாவின் ஞாபகம்.

'தட்டில் வேறே எவ்வளவு விஷயம் இருந்தாலும் முதல்லே ஸ்வீட்ட்டைதான் எடுப்பான் என் பையன். ஸ்வீட் பாய்..' அவன் சாப்பிடும் போதெல்லாம் சொல்வார் அப்பா. அவனை பார்க்கும் போதெல்லாம் அவர் கண்கள் பெருமையில் மின்னத்தான் செய்யும்.

அந்த நினைவில் தனக்குதானே புன்னகைத்து கொண்டபடியே அந்த பளப்பள பத்திரிக்கையை புரட்டிக்கொண்டே வர வந்தது அவன் தேடிய பக்கம்!!! விழிகள் அந்த பக்கத்தில் இருந்த அந்த புகைப்படத்தில் நிலைக்கொள்ள வாயிலிருந்த இனிப்பு ஒரு நொடி உள்ளிரங்க மறுத்தது.

'அப்பா அமர்ந்திருக்க அவரை இருகரங்களால் அணைத்தபடி அவர் பின்னால் இவன் நிற்கும் புகைப்படம்' இமைகள் கீழிறங்க மறுக்க அதையே சில நொடிகள் பார்த்துவிட்டு நிமிர்ந்தான் அவன்.

'ஸ்கை'ஸ் லவர்..' என்ற தலைப்பில் ஆங்கிலதில் வெளியாகி இருந்தது அவனது பேட்டி. அவனை பற்றிய சின்ன அறிமுகத்திற்கு பிறகு,

'அது ஏன் இந்த விமான துறையை தேர்ந்தெடுத்தீங்க..' பேட்டியின் முதல் கேள்வி.

'சின்ன வயசிலே இருந்து...'

'சின்ன வயசிலே இருந்து விமானி ஆகணும்னு ஒரு கனவு அப்படித்தானே???' கேள்வி தொடர

'இல்ல சின்ன வயசிலே இருந்து எனக்கு உயரம்னா பயம் அதனாலே...'

'வாட்???' கேள்வி கேட்பவர் வியக்க, அழகான ஆங்கிலத்தில் அவனது பதில்,

'எஸ்.. என்னோட பயங்களை நானே தூக்கி போட்டு வெளியே வரணும் அப்படிகிறது எங்கப்பா எனக்கு கத்து கொடுத்த பாடம். எல்லா பயத்தையும் உடைச்சிட்டு வெளியே வந்து, பாரதி சொன்ன மாதிரி விட்டு விடுதலையாகி, வானத்திலே ஏறி பறந்து பார்த்த பிறகுதான் எனக்கு புரிஞ்சது வானம் முழுக்க என்னுடைய மேக காதலிகள் எனக்காக காத்திருக்காங்கன்னு.... ஹா ஹா.... ஹா.....'

'அப்போ பூமியிலே உங்களுக்கு எத்தனை காதலிகள்???'

'நீங்க வேறே அப்படி யாரும் கிடையாதுங்க... அப்படி யாரவது இருந்தா மேலே இருக்கிற என் காதலிகள் கோவிச்சுப்பாங்க... அப்புறம் அவங்களுக்கு யார் பதில் சொல்றது???'

'ஹா ஹா ஹா...... உங்க குடும்பத்தை பத்தி சொல்லுங்க...'

'எங்க குடும்பத்திலே என்னையும் சேர்த்து இன்னும் நிறைய பேர்.. நான் ... அப்பா.... அப்பா... அப்பா ... அப்பா... அப்பா...'

'புரியலை சார்...'

'எனக்கு எல்லாமே எங்க அப்பாதான்...'

'பொதுவா பையன்களுக்கெல்லாம் எல்லாம் அம்மாதான் பிடிக்கும் இல்லையா? பல பசங்க அப்பாகூட சண்டைதான் போடுவாங்க. நீங்க எப்படி இப்படி வித்தியாசமா..'

'ஹா... ஹா... ஹா ....'

'இதுக்கும் சிரிப்புத்தானா??? எல்லாத்துக்கும் நான் இருக்கேன்னு தைரியம் கொடுத்த அப்பாவா அவர். அதனாலே தான் அவர் உங்களுக்கு ஸ்பெஷலா'???

'எல்லாத்துக்கும் நான் இருக்கேன்னு அவர் எப்பவும் சொன்னதே இல்லை. அப்படி அவர் சொல்லி வளர்த்து இருந்தா இப்போ நான் வாழ்ந்திட்டு இருக்கவே மாட்டேன்..(சில நொடி மௌனம்)

'உன் நிழல் கூட இருட்டிலே உன்னை விட்டு ஓடி போயிடும் நீதான் உனக்கு எப்பவும் துணைன்னு சொல்லி சொல்லி வளர்த்தார். என் பையன் கண்ணிலே தண்ணி வருதேன்னு அவர் எப்பவுமே கவலை பட்டது இல்லை. என் கூட சேர்ந்து அழுததும் இல்லை. என் கண்ணீருக்கான

காரணத்தை என் வாழ்க்கை பாதையிலிருந்து விலக்கித்தான் பழக்கம் அவருக்கு.......... அதற்கு மேல் அந்த பேட்டியை படிக்க முடியாமல் அவன் கண்களை மறைத்தது அவனது கண்ணீர்.

'விவேக் அழாதேடா.... ச்சே வெக்கமா இல்லை ...அழாதே.....' அப்பா அதட்டுவதை போலே ஒரு பிரமை. அவனருகில் இருந்த அந்த ரோஜாப்பூக்கள் அவனை பார்த்து சிரித்துக்கொண்டிருந்தன.

'என் கண்ணீருக்கான காரணத்தை என் வாழ்க்கை பாதையிலிருந்து விலக்கித்தான் பழக்கம் அவருக்கு!!!'

கைக்குட்டையை எடுத்து கண்ணீரை ஒற்றி எடுத்துக்கொண்டான். எப்போதும் என்னை அதட்டிவிடுவதே வேலை இவருக்கு. இப்போது எனது கண்ணீருக்கான காரணத்தை எனது வாழ்க்கை பாதையிலிருந்து நீக்கி விட முடியுமா இவரால்??? அவன் அப்படி யோசித்த மறுநொடி ஒலித்தது அவனது கைப்பேசி.

அதில் ஒளிர்ந்தது ஏதோ ஒரு லேண்ட் லைன் எண். அது எந்த ஊர் என்றெல்லாம் கவனிக்க தோன்றவில்லை அவனுக்கு. தலையை உலுக்கி மனதை நிலைப்படுத்திக்கொண்டு அழைப்பை ஏற்றான் விவேக்.

'விவேக் ஸ்ரீனிவாசன்!!!'

மறுமுனை அந்த பெயரை எதிர்ப்பார்க்கவில்லை போலும். மௌனம் அங்கே!!!

ஹலோ விவேக் ஹியர்..'

'நான் தாமோதரன் பேசறேன்..' சற்றே ஓய்ந்து தளர்ந்த குரல் அந்த பக்கம்.

சில மணி நேரங்கள் முன்பாக மதுரையில் கல்யாண மண்டபத்தில் வடை தட்டிக்கொண்டிருந்தாரே அதே தாமோதரன்!!!

'சொல்லுங்க உங்களுக்கு யார் வேணும்...' என்றான் இதம் பரவும் குரலில்.

'எனக்கு என் பொண்ணுகிட்டே பேசணும். நான் வந்து... நம்பர்... வந்து நம்பர்... தப்பா போட்டுட்டேன் போலிருக்கு..' தடுமாறும் குரலில் அவர் சொல்ல..

'ராங் நம்பர்' என சட்டென சொல்லி அழைப்பை துண்டிக்க மனம் ஏனோ வரவில்லை விவேக்குக்கு .அவர் குரலை கேட்டதிலேயே அவர் வயதானவர் என்று புரிந்தது அவனுக்கு.

'அப்படியா??? பரவாயில்லை' என்றான் மெதுவாக. 'நம்பர் சரியா பார்த்து போடுங்க..'

'உங்க பேர் விவேக் ஸ்ரீநிவாசனா??? எங்கேயோ கேள்விப்பட்ட பேர் மாதிரி இருக்கு...' அவருக்கும் அழைப்பை துண்டிக்க மனமில்லை போலும்.

'ஹா... ஹா... ஹா....' ஒரு உற்சாக சிரிப்பு அவனிடத்தில். இத்தனை நேரம் இருந்த இறுக்கம் எப்படி காணாமல் போனது என புரியவில்லை அவனுக்கு.

'உலகத்திலே நான் மட்டும்தான் விவேக் ஸ்ரீநிவாசனா??? நிறைய பேர் இருப்பாங்க இல்லையா??? எங்கேயாவது கேள்விப்பட்டிருப்பீங்க..' என்றான் விவேக்.

'ஆமாம் இருக்கும்....' என்றார் அவர் சின்ன சிரிப்புடன்.

'அவருக்கு தெரியவில்லை அவர் கேள்விப்பட்டது இவனை பற்றிதான் என!!! அவனுக்கும் தெரியவில்லை இவர் யாரென!!! தெரிந்திருந்தால் அவரை அடுத்த நிமிடம் அவரை தேடி ஓடி இருக்க மாட்டானா அவன்!!!! அவன் கண்ணீர் எல்லாம் ஒட்டு மொத்தமாக காணாமல் போயிருக்காதா???

'நான் என் பொண்ணுக்குதான் போன் போட்டேன். அவ ரொம்ப பிசி. அவளை நான் தொந்தரவு எல்லாம் பண்றது இல்லை எப்பவும்.. இப்போ கொஞ்சம் அவசரம் அதான்.' அவனிடம் இதை சொல்லிக்கொள்ள வேண்டுமென தோன்றியது போலும் அவருக்கு.

'அப்படியா???"

'சரி.. உங்ககிட்டே பேசினது ரொம்ப சந்தோஷம்..' என்றார் அவர்.

'எனக்கும் ரொம்ப சந்தோஷம்...' என்றான் அவன் பொய் இல்லாத தொனியில்.

'நான் வெச்சிடறேன். பத்திரமா இருந்துக்கோபா...' துண்டித்தார் அழைப்பை. கடைசியில் அவர் வார்த்தைகளில் ஒருமை குடிகொண்டதில் சின்னதாய் ஒரு நிறைவு அவனுக்குள்ளே.

'ஏன் இந்த சந்தோஷம், நிறைவு எல்லாம்???" புரியவில்லை அவனுக்கு.

'தாமோதரன்!!!' தனது கைப்பேசியில் அந்த எண்ணை பதித்துக்கொண்டான் அவன் காரணமே இல்லாமல். பின் தன்னிச்சையாக கையை திருப்பி நேரம் பார்த்தவன்...

'மை..காட் இட்ஸ் டைம்..' என்றபடி சாப்பாட்டை அள்ளி விழுங்கிவிட்டு அந்த பத்திரிக்கையை அள்ளிக்கொண்டு ஓடினான் விவேக். அங்கே மேஜையின் மீது அவன் மறந்துவிட்டு சென்ற ரோஜாப்பூக்கள் அவன் சென்ற திசையையே பார்த்திருந்தன இனி தாங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை என்பதைப்போல்!!!

காக்பிட்டுக்கு சென்று சீட் பெல்ட்டை மாட்டிக்கொண்டு அமர்ந்தான் விவேக். மும்பையிலிருந்து விசாகப்பட்டினம் நோக்கி கிளம்புவதற்கு தயாராக விமானம்!!!

முன்பொரு முறை இதே பாதையில் அவன் பறந்த போதுதான்... புன்னகைத்துக்கொண்டான் அந்த நினைவில்...

அந்த பயணம் துவங்குவதற்கு முன் அப்படி ஒரு படபடப்பு, பரபரப்பு அவனிடத்தில். அவன் முதல் முறையாக விமானத்தை தனியாக ஓட்ட ஆரம்பித்த தினத்தில் கூட இத்தனை தவிப்பு இருக்கவில்லை அவனிடத்தில். இது அதி முக்கியமான பயணம் ஆயிற்றே!!!

ஏதோ ஒரு வேலையாக சென்னையிலிருந்து மும்பை வந்திருந்த அவனது தந்தை அவனுடைய அந்த விமானத்தில்தான் விசாகபட்டினம் செல்வதாக இருந்தது.

விமானத்தை சுற்றி வந்து செய்ய வேண்டிய சோதனைகளை முடித்துவிட்டு, பயணத்திட்டத்தை வகுத்துக்கொண்டு, காக்பிட்டில் ஏறி அமர்ந்துவிட்டான் அவன். பயணிகள் எல்லாரும் விமானத்தில் ஏறிவிட்டிருந்தனர்

தந்தை வந்தாரா??? இல்லையா??? தெரியவில்லை அவனுக்கு. ஒரு வேளை வந்து ஏறி அமர்ந்திருப்பரோ??? சிறு வயதில் அவர் வேலை முடிந்து திரும்பி வர காத்திருந்ததை போல் காக்பிட்டின் ஜன்னல் வழியே எட்டி எட்டிப்பார்துக்கொண்டு அமர்ந்திருந்தான் விவேக்..

அப்போது இவன் கேப்டன் பதவியை தொட்டிருக்கவில்லை. துணை விமானி இருக்கையில்தான் அமர்ந்திருந்தான் அவன்.

ஆசை அவனுக்கு!!! தனது தந்தை வரும் விமானத்தை அவனே செலுத்த வேண்டுமென ஒரு ஆசை!!

சிறு வயதில் அவர் தோள்களில் ஏறி செய்த சவாரி உட்பட எத்தனை முறை அவர் என்னை சுமந்து சென்றிருப்பார்??? இப்போது நான் அவரை அழைத்து செல்ல வேண்டாமா???

இவனும் அந்த கேப்டனும் இதுவரை மாற்றி மாற்றியே விமானத்தை செலுத்திக்கொண்டிருக்க இப்போது செலுத்துவது அவன் முறையாகவே இருந்த போதிலும் மெதுவாக அவரிடம் கேட்டான் அவன் ஆங்கிலத்தில் 'என் தந்தை வருகிறார் நான் இந்த முறை விமானத்தை செலுத்துகிறேன் என..'

'அஃப் கோர்ஸ்.. யூ ஹேவ் டு...அதுவும் உங்க அப்பா வரும் போது...ப்ளீஸ் .கோ அஹெட்..' புன்னகையுடன் சொன்னார் அவர்.

'வந்தாரா இல்லையா அப்பா??? எத்தனை நேரம் காத்திருப்பதாம் இவன்.??? ஒரு வேளை வரவில்லையோ யோசித்தபடியே இவன் கேப்டன் இருக்கையில் சென்று அமர கண்ணில் பட்டார் அப்பா. ஏறிக்கொண்டிருந்தார் விமானத்தில் .படபடத்தது இவன் இதயம்.

அவர் அங்கே விமான பணிப்பெண்ணிடம் ஏதோ பேசுவது தெரிகிறது. அவள் அவரை அழைத்து வருகிறார்கள் காக்பிட்டினுள்ளே!!!

அவரை இவன் கேப்டனிடம் அறிமுக படுத்தி வைக்க, அவர் அந்த காக்பிட்டின் செயல் முறைகளை அப்பாவுக்கு விளக்கிகொண்டிருக்க அப்பாவின் பெருமை பொங்கும் பார்வை அவனை அவ்வபோது தொட்டு தொட்டு விலகிக்கொண்டிருந்தது. அவன் காதில் ஹெட்போனை அணிந்துக்கொள்ள சட்டென ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டார் அவனை.

காக்பிட்டை விட்டு வெளியே செல்ல மனமில்லாதது போலவே அவனை பார்த்தபடியே நின்றிருந்தார் அப்பா. தயங்கி தயங்கிதான் அவரை வெளியே போக சொன்னான் அவன். புன்னகையுடன் அவன் கேசம் தொட்டு கலைத்துவிட்டு வெளியேறினார் அவர்.

அதுவும் இது போன்ற மாலை நேரம்தான். பிரேக்குகள் விலக்கப்பட மாலை வெயிலை ரசித்தபடியே காற்றை கிழித்துக்கொண்டு விருட்டென மேலே ஏறி.. அப்பாவை அழைத்துக்கொண்டு அப்படியே பறந்து பறந்து............

'ரெடி கேப்டன்???' பக்கத்தில் இருந்த துணை விமானியின் குரல் அவனை பழைய நினைவுகளிலிருந்து தரை இறக்கியது.

'ஆங்... யா.. எஸ் ஐம் ரெடி..' என்றவனின் கண்கள் சிறு குழந்தையாய் அப்பாவை தேடின. கண்ணில் தென்படவில்லையே அப்பா!!! காக்பிட்டில் இல்லையே அப்பா!!!

தறிகெட்டு துடிக்க ஆரம்பித்த மனதை இழுத்து பிடித்து ஒரு நிலையில் நிறுத்திவிட்டு,

'ஆர் வீ க்ளியர் டு ஸ்டார்ட் ..' கேட்டான் கீழே இருப்பவர்களிடம்.

'க்ளியர் டு ஸ்டார்ட் கேப்டன்..' ஆணை கிடைத்தவுடன் என்ஜின்களின் சத்தம் மெல்ல மெல்ல கூட துவங்க..

'திஸ் இஸ் யுவர் கேப்டன் விவேக் ஸ்ரீநிவாசன் அலாங் வித் அவர் கோ பைலட் வைபவ் ஸ்ரீவத்சன்.... அறிவித்துக்கொண்டிருந்தான் விவேக்.

அவர் பிளைட் இஸ் ரெடி ஃபார் டேக் ஆஃப் லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன் ப்ளீஸ் ஃபாஸ்டென் யுவர் சீட் பெல்ட்ஸ்.!!!

'நான் அங்கே சீட்லே உட்கார்ந்து இருந்தேன்டா. நீ அன்னௌன்ஸ் பண்ணியே திஸ் இஸ் விவேக் ஸ்ரீநிவாசன் அப்படின்னு அப்போ எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா??? இவன் என் பையன்... இவன் என் பையன்னு எல்லாருக்கும் கேட்கிற மாதிரி கத்தணும் போலே இருந்தது. என் பக்கத்திலே இருக்கிறவங்களுக்கு எல்லாம் சொன்னேன்....' அந்த பயணம் முடிந்த பிறகு இவன் அருகில் அமர்ந்து மறுபடி மறுபடி சிலாகித்துக்கொண்டாரே அப்பா!!!

மறுபடி அந்த புள்ளியை தொட ஓடிய எண்ணங்களை கடிவாளம் கொண்டு கட்டிவிட்டு ஓடுதளத்தில் அதி வேகத்தில் செலுத்திக்கொண்டிருந்தான் விமானத்தை. அந்த வேகத்தில் இவன் உடலும் தடதடத்துக்கொண்டிருந்தது.

'வி ஒன்... ரோடேட்...' காக்பிட்டில் துணை விமானியின் குரல் ஒலிக்க சரேலென காற்றில் ஏறியது விமானம்.

மாலை சூரியனின் கதிர்கள் கண்ணாடிகளின் வழியே ஊடுருவி அவன் அனுமதி இல்லாமலே அவனை முத்தமிட உனக்கு இதற்கெல்லாம் அனுமதி இல்லை என்பதை போலவே குளிர் கண்ணாடியை அணிந்துக்கொண்டான் விவேக்..

நீல வானத்தை நோக்கி அவன் செல்ல செல்ல உள்ளமும் மெதுமெதுவாய் அவன் கட்டுக்குள் வந்து விட்டிருந்தது. இதழ்களில் புன்னகையின் நாட்டியம் துவங்கி இருந்தது.

அதே நேரத்தில்

அங்கே பயணிகள் இருக்கையில் அமர்ந்திருந்தான் அவன். சுதர்ஷன். அவனருகில் அவனது தந்தை!!! சிலையாகிப்போனவன் போல் அமர்ந்திருந்தான் அவன்.

'திஸ் இஸ் யுவர் கேப்டன் விவேக் ஸ்ரீநிவாசன்' அந்த அறிவிப்பே அவனை சுழற்றிப்போட்டிருந்தது.

விவேக் ஸ்ரீநிவாசனா??? அந்த விவேக் ஸ்ரீநிவாசனா அவன்??? அவன் தான் இந்த விமானத்தை

ஒட்டிக்கொண்டிருக்கிறானா??? அதிர்ந்து போய் படபடத்துக்கொண்டிருந்தது இதயம்.

இவன் விவேக்குக்கு செய்த அந்த மிகப்பெரிய தவறு, தவறு இல்லை அது பாபம், அந்த பாபம் கண் முன்னே வந்து வந்து போய்க்கொண்டிருந்து!!!!

அந்த நிலையில் ஏன் அப்படி செய்தேன்??? எப்படி அப்படி செய்தேன் நான்??? விமானம் புறப்பட்டு கிட்டதட்ட இருபது நிமடங்கள் கடந்திருக்க மனசாட்சி அவனை கூறு போட்டுக்கொண்டிருக்க அப்படியே அமர்ந்திருந்தான் சுதர்ஷன்.

அப்போது நிகழ்ந்தது அது!!!!

'த... த...ர்...ஷன்... நெஞ்....சு ரொம்...ப வலிக்கு....துடா,,' நெஞ்சை பிடித்தபடியே நடுங்கும் குரலில் சொன்னார் அவன் அப்பா!!!

# அத்தியாயம் 5

**மா**லை நேர சூரிய கதிர்களுடன் செல்ல சண்டை போட்டுக்கொண்டே விசாகப்பட்டினம் பறந்துக்கொண்டிருந்தான் விவேக். அதே நேரத்தில் அங்கே பயணிகள் பகுதியில் சுவாசத்துக்கு தடுமாறிக்கொண்டிருந்தார் சுதர்ஷனின் அப்பா.

உடல் நலம் சரி இல்லாத நேரத்தில் இந்த விமான பயணத்தை தவிர்த்து இருக்கலாம் அவர். செய்யவில்லையே!!! விமான பணிப்பெண்கள் உடனே அவர் அருகில் வர அவருக்கு சட்டென ஆக்சிஜன் மாஸ்க் பொருத்தப்பட்டதது. இரண்டு நிமிடங்கள் கழிந்தும் சுவாசம் சீராகவில்லை.

விமான பணிப்பெண்கள் அவசரமாக பயணிகள் மத்தியில் யாரேனும் மருத்துவர்கள் இருக்கிறர்களா என்று தெரிந்துக்கொள்ளும் வகையில் அறிவிக்க அந்த அறிவிப்பு அவன் அணிந்திருந்த ஹெட் போன் வழியே விவேக்கின் காதையும் தொட்டது.

'யாருக்கு என்ன என்ற லேசான தவிப்பு அவனிடம் தொற்றிக்கொண்டது. ஒரு முறை திரும்பி சக விமானி வைபவை பார்த்துக்கொண்டான் விவேக்.

பொதுவாக விமானத்தில் இருக்கும் வரை எல்லா பயணிகளுக்கும் அவனே பொறுப்பு என்ற உணர்வு விவேக்குக்கு அதிகம். அதுவும் அப்பா கற்றுக்கொடுத்த பாடம்தான்.

முன்பு ஒரு முறை இந்த விமானத்துறையில் சேர்ந்த புதிதில் கேட்டார் அப்பா

‘எப்படிடா போகுது உன்னோட வேலையெல்லாம்..’

‘செம.. பா..’. என்றான் அவன். ‘இட் இஸ் அ ஃபன் டு ஃப்ளை யூ நோ...’ அவன் உற்சாகமாக சொல்ல கோபம் வந்து விட்டிருந்தது அப்பாவுக்கு.

‘என்னது ஃபன்னா.. உன்னை நம்பி அங்கே எத்தனை உயிர் இருக்கு தெரியுமா.. விளையாட்டு இல்லை விவேக் உன் வேலை..’ என்றார் சற்றே கடினமான குரலில்.

‘இல்லப்பா.. நான் அப்படி சொல்லலை..’

‘நீ எப்படி சொன்னியோ எனக்கு தெரியாது. ஆனா உன்னோட ஃபளைட்லே ட்ராவெல் பண்ற எல்லாரோட உயிரும் அப்பா உயிருக்கு சமம். அதை மட்டும் எப்பவும் உனக்கு சொல்லிக்கோ...’’ சொல்லி முடித்துவிட்டார் அவர்.

இப்போதும் அந்த வார்த்தைகள் அவன் செவிகளில் ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றன!!! அடுத்து என்ன செய்ய வேண்டுமென அவன் மனது கணக்கு போட்டுக்கொண்டிருக்க,

சுதர்ஷன் அப்பாவின் துரதிர்ஷ்டமோ என்னவோ அங்கே பயணிகள் பகுதியில் மருத்துவர்கள் யாரும் இல்லை. இரண்டு மூன்று முறை அறிவித்த பிறகும் தோல்வியே பதிலாக கிடைக்க பரிதவித்துப்போனான் சுதர்ஷன்.

'ப்ளீஸ்... டு சம்திங்... ' அவன் படபடக்க விமான பணிப்பெண்கள் காக்பிட்டை நோக்கி செல்வதற்குள் விமான கட்டுப்பாட்டை வைபவிடம் விட்டுவிட்டு காக்பிட்டை திறந்துக்கொண்டு வெளியே வந்திருந்தான் விவேக்.

'குச் ப்ராப்ளம் ஹை க்யா?' அவர்களிடம் ஹிந்தியில் கேட்டபடியே விவேக் சுதர்ஷனின் இருக்கை நோக்கி வர இவனை பார்த்து அவன் அதிர்ந்து எழுந்துக்கொள்ள உடலும் மனமும் ஒரே நொடியில் இறுகி செயலற்றுப்போனதைப்போல் நின்றிருந்தான் விவேக்.

இந்த விமானத்துறைக்கு வருவதற்கு முன்பு கல்லூரியில் இவன் இளங்கலை படித்த காலத்தில் இவனும் ஹரிணியும் படித்த அதே கல்லூரியில் படித்தவன்தான் இந்த சுதர்ஷன். அப்போது இவனுக்கு உயிர் நண்பன் சுதர்ஷன். இவனது அப்பாவை 'அப்பா.. அப்பா... ' என அழைத்துக்கொண்டு திரிந்தவன். ஆனால்...

நினைக்க நினைக்க உயிர் வரை பற்றி எரிந்தது விவேக்குக்கு.

‘ஆயுள் முழுவதும் இவனை கண் கொண்டு காணக்கூடாது..’ என்ற ஒரு வேண்டுதல் விவேக்குக்கு எப்போதும் உண்டு.

‘இன்று காலம் இரக்கமில்லாமல் மறுபடியும் என்னை இவன் எதிரில் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறதே!!! என் இதய சுவர்களை பழைய நினைவுகள் துண்டு துண்டாய் கிழிக்கிறதே!!!’ சுவாசம் இறுகி அழுந்தியது விவேக்குக்கு.

இப்போது அவன் விழிகள் சுதர்ஷன் அப்பா மீது நிலைக்கொள்ள நெஞ்சை பிடித்துக்கொண்டு துடித்துக்கொண்டிருந்த அவர் நிலை அவனை உலுக்கியது.

‘விவேக் அப்பாவுக்கு ரொம்ப முடியலை எதாவது பண்ணு விவேக்...’ அவன் கெஞ்ச

‘ம்???’ என்றபடி விவேக் விழி நிமிர்த்த விவேக்கின் கத்தி முனை பார்வை அவன் மனசாட்சியை கூறு போட கண்களை தாழ்த்திக்கொண்டான் சுதர்ஷன்.

பார்வையை அவன் அப்பாவிடமிருந்து திருப்பிக்கொண்டு இதயத்தை கல்லாய் சமைத்துக்கொண்டு சொன்னான் விவேக் ‘இன்னும் ஒண்ணே முக்கால் மணி நேரத்திலே வைசாக் போயிடும். அங்கே லேண்ட் ஆனதும் ஏதாவது பார்த்துக்கோ..’

‘விவேக்.... உயிருக்கு போரடறார். ப்ளீஸ்... விவேக் ஏதாவது செய்... உலகத்திலே மனித உயிரை விட முக்கியம் வேறெதுவுமே இல்லை...’ அவன் படபடவென சொல்ல

‘அப்படியா???’ என்றபடி மெல்ல சிரித்தான் விவேக். அவன் என்ன நினைத்து சிரிக்கிறான் என சுதர்ஷனுக்கு புரியாமலும் இல்லை.

‘எனக்கு அதெல்லாம் தெரியாது... ஃப்ளைட் கரெக்ட் டைமுக்கு வைசாக் போகணும் அதுதான் எனக்கு முக்கியம்..’ சொல்லிவிட்டு அவன் அழைப்பை காதில் வாங்காமல் நடந்தான் விவேக்.

‘அவருக்கு என்ன வேண்டுமானாலும் ஆகட்டும். எதை பற்றியும் எனக்கு கவலை இல்லை. நான் இப்படி செய்வதில் நூறு சதவிகித நியாயம் இருக்கிறது’ என்று தனக்குதானே சொல்லிக்கொண்டான் அவன்.

ஆனால் அவனால் அப்படி எல்லாம் இருந்துவிட முடியாது என அவனுக்கே தெரியும்தான். ஏனென்றால் விவேக் ஸ்ரீநிவாசன் அல்லவா அவன்!!! ஸ்ரீநிவாசனின் மகனல்லவா அவன்!!!

காக்பிட்டின் கதவுகளை திறந்துக்கொண்டு உள்ளே நுழைந்தவன் ஒரு நொடி கண்களை மூடித்திறந்தான்.

‘அப்பா!!!!’ அடி மனதிலிருந்து எழுந்து அவன் உதடுகள் தொட்டது அந்த வார்த்தை. அடுத்த சில நிமிடங்களில் மும்பை நோக்கி மறுபடியும் திரும்பிக்கொண்டிருந்தது விமானம்.

‘லேடீஸ் அண்ட் ஜென்டில் மென்..’ ஒலித்தது விவேக்கின் குரல். ‘தேர் இஸ் அ மெடிக்கல் எமெர்ஜென்சி ஆன் போர்ட்.

ஸோ வீ ஆர் ஃபளையிங் பேக் டு மும்பை. வீ வில் ஃபளை பேக் டு வைசாக் ஒன்ஸ் தி எமெர்ஜென்சி இஸ் ரிசால்வ்ட். சின்சியர் அபாலிஜீஸ் ஃபார் தி இன்கன்வீனியன்ஸ் லேடீஸ் அண்ட் ஜென்டில் மென்..'

கண்களில் நீர் கட்டிக்கொள்ள பாதி உயிர் திரும்பியது சுதர்ஷனுக்கு.

மும்பையில் உடனடியாக தரை இறங்க அனுமதியை பெற்றுகொண்டு அங்கே ஆம்புலன்ஸை காத்திருக்க செய்திருந்தான் விவேக்..

'கேபின் க்ரூ இன் ஸ்டேஷன் ஃபார் லேண்டிங்..' விவேக்கின் அறிவிப்பு வர அடுத்த சில நிமிடங்களில் மும்பை விமான நிலையத்தில் விமானத்தை மறுபடியும் தரை இறக்கி இருந்தான் விவேக்.

அடுத்த இரண்டு நிமிடங்களில் ஸ்ட்ரெசரில் அப்பா அழைத்து செல்லப்பட அங்கே எல்லா முதலுதவி ஏற்பாடுகளும் தயாராக இருப்பது புரிந்தது சுதர்ஷனுக்கு. காக்பிட்டின் ஜன்னலிலிருந்து இந்த காட்சிகளை பார்த்துக்கொண்டேதான் இருந்தான் விவேக்.

சுதர்ஷன் நிமிர்ந்து, நன்றி சொல்லிவிட அவசரமாக இவன் முகம் தேடுவதை புரிந்துக்கொள்ள முடிந்தது விவேக்கால். ஆனால் அதை எல்லாம் இவன் எதிர்ப்பார்க்கவும் இல்லை.

ஏற்றுக்கொள்ள தயாராகவும் இல்லை. கண்களை மூடி பின்னால் சாய்ந்துக்கொண்டான் விவேக்.

'உன்னோட ஃபளைட்லே ட்ராவெல் பண்ற எல்லாரோட உயிரும் அப்பா உயிருக்கு சமம். மறுபடியும் காதில் கேட்டது விவேக்குக்கு!!!

அடுத்த சில நிமிடங்களில் மறுபடியும் ஆகாய வீதியில் விவேக்!!! இரண்டு மணி நேரங்களில் விசாகபட்டிணத்தை அடைந்திருந்தது விமானம்.

நிதானமாக, அமைதியாக, நிறைவாக ஒரு காபியை சுவைத்து முடித்துவிட்டு அடுத்த டெல்லி விமானத்துக்கு இவன் தயாராகிக்கொண்டிருந்த போது ஒலித்தது இவனது கைப்பேசி..

'சென்னையிலிருந்து அப்பாவாக இருக்கும். காலையில் அவனது தம்பி மனைவி செய்த அந்த ரோஜாப்பூ விளையாட்டை மன்னிக்க முடியவில்லையோ இவரால்??? மனம் ஆறவில்லையோ??? மறுபடி மறுபடி அழைக்கிறாரே' என்று யோசித்தபடியே இவன் எடுக்க...

அழைத்தது சுதர்ஷன்!!! எப்படியோ யாரையோ கேட்டு இவனது எண்ணை வாங்கி இருக்க வேண்டும் அவன்.

'அப்பா அபாய கட்டத்தை தாண்டிட்டார் விவேக்.. சரியான நேரத்துக்கு ஹாஸ்பிடல் வந்திட்டோம் நிஜமாவே உனக்கு

வார்த்தையாலே எல்லாம் தாங்க்ஸ் சொல்ல முடியாது...' அவன் சொல்லிக்கொண்டே போக

'டேக் கேர்..' சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்து விட்டான் விவேக். அதற்கு மேல் அவனிடம் பேசவோ அவன் பேச்சை கேட்டுக்கொண்டிருக்கவோ எந்த தேவையும் இருப்பதாக தோன்றவில்லை விவேக்குக்கு.

கடமையை சரியாக செய்தாகிவிட்டது!!! அவ்வளவுதான்!!! ஒரு ஆழமான சுவாசத்துடன் 'அப்பா..' என மறுபடியும் ஒரு முறை மனதார சொல்லிக்கொண்டான் அருமை மகன்

அங்கே முகத்தை கைகளுக்குள் புதைத்துக்கொண்டு அமர்ந்தான் சுதர்ஷன்.

'அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்பது இதுதானோ??? நான் இப்போது என்ன செய்ய??? நான் செய்த பாவத்துக்கு ஏதாவது பரிகாரம் இருக்கிறதா இந்த உலகத்தில். இருந்தால் காட்டிக்கொடு இறைவா!!!

இரவு!!!

விசாகபட்டினத்திலிருந்து டெல்லி வந்து இப்போது டெல்லியிலிருந்து சென்னை நோக்கி செல்லும் விமானத்தில் அமர்ந்திருந்தான் விவேக். அவனருகில் இந்த முறை இருந்தது ஒரு பெண் விமானி.

சந்தியா சதுர்வேதி!! ஹிந்தி பேசும் பெண்ணவள். அவனது உற்சாக பபுன்னகை அவளிடமும் தொற்றிக்கொண்டது. இந்த முறை விமானத்தை செல்லுத்தும் பொறுப்பை அவளிடம் கொடுத்திருந்தான் அவன்.

இரவு நேர வானமும் விமான பயணமும் அவனுக்கு அதிகமாகவே பிடிக்கும். குளிர் கண்ணாடி அணிய தேவை இல்லாமல், சுடும் வெப்பம் இல்லாமல், டர்புலன்ஸ் போன்ற தடைகள் இல்லாமல் நிம்மதியாய் அமைதியாய் இருக்கும் அந்த பயணம். .

‘குட் ஈவினிங் லேடீஸ் அண்ட் ஜென்டில் மென்... திஸ் இஸ் விவேக் ஶ்ரீனிவாசன் வித் அவர் கேப்டன் இன் கமாண்ட் சந்தியா சதுர்வேதி!!! ப்ளீஸ் ஃபாஸென் யுவர் சீட் பெல்ட்ஸ். இட் இஸ் டைம் ஃபார் டேக் ஆஃப்’ விவேக் அறிவித்து முடிக்க

அங்கே பயணிகள் பகுதியில் துள்ளியே விட்டான் அவன். ஶ்ரீநிவாசன்!!! காலையில் விவேக் சந்தித்த அதே சிறுவன்.!!!. டாக்டர் சுஹாசினி தனது கணவன் ராகுலுடனும், மகன் ஶ்ரீனிவாசனுடனும் அந்த விமானத்தில்தான் சென்னை திரும்பிக்கொண்டிருந்தாள்.

‘அப்பா... மார்னிங் பார்த்தோமே அந்த அங்கிள். விவேக்.. அங்கிள்...அவரேதான்..’ கிட்டதட்ட குதித்தான் அவன்.

‘டேய்... நிறைய விவேக் இருப்பாங்கடா..’

‘‘இல்லபா... இது அவரேதான் எனக்கு தெரியும்...’ அத்தனை கொண்டாட்டம் அவனுக்கு. அவர்கள் இருவரையும் வியப்புடன் பார்த்திருந்தாள் சுஹாசினி.

இங்கே விவேக் ஆணைகளை கொடுத்துக்கொண்டிருக்க சந்தியா விமானத்தை மேலே ஏற்றிக்கொண்டிருந்தாள்.

அங்கே பயணிகள் பகுதியில்

‘அப்பா எனக்கு அந்த அங்கிளை பார்க்கணும்..’ விடாமல் சொல்லிக்கொண்டிருந்தான் ஸ்ரீநிவாசன்.

‘இப்போ எல்லாம் டிஸ்டர்ப் பண்ணக்கூடாது. லேண்ட் ஆனதுக்கு பிறகு பார்க்கலாம் சொல்லிக்கொண்டிருந்தான் ராகுல்.

நிலவில்லா இரவாக இருந்தது. அந்த நிலவில்லா வானத்தில் மின்னி மின்னி சிரித்துக்கொண்டிருந்தன பல நூறு நட்சத்திர கூட்டங்கள். அவனது மேக காதிலிகள் குளித்து முடித்த நீர் துளிகளோ அவை என்று கூட தோன்றியது அவனுக்கு. சின்ன புன்னகையுடனே எல்லாவற்றையும் ரசித்தபடி பறந்துக்கொண்டிருந்தான் விவேக்.

கொஞ்ச தூரம் கடந்திருக்க அவன் கண்ணில் பட்டது ஒரு பூமியை நோக்கி விழும் ஒரு எரி நட்சத்திரம். இரவு நேர பயணங்களில் ஒரு நாளைக்கு இது போன்ற மூன்று நான்கு நட்சத்திரங்களையாவது அவன் பார்ப்பது வழக்கம்தான்.

‘ஹேய்... ஷூட்டிங் ஸ்டார்...’ கூவினாள் சந்தியா. அழகாய் புன்னகைத்தான் விவேக்.

‘உனக்கு ஷூட்டிங் ஸ்டார்ஸோட ஸ்பெஷாலிட்டி பத்தி தெரியுமா??? அவள் கேட்டாள் அழகான ஹிந்தியில்.

‘வஹ் கௌன்சி ஸ்பெஷாலிட்டி ஹை??? (அது என்ன ஸ்பெஷாலிட்டி???) புருவங்கள் உயர கேட்டான் அவன்.

இப்போ ஒரு ஷூட்டிங் ஸ்டார் பார்க்கும் போது உனக்கு என்ன தேவையோ அதை அது கீழே விழறதுக்குள்ளே மூணு தடவை சொல்லணும். இப்போ உனக்கு பணம் தேவைன்னா ‘மணி மணி மணின்னு மூணு தடவை சொல்லணும். அதுக்கு அப்புறம் உன் கர்சீஃப் லே ஒரு முடிச்சு போட்டு வெச்சுக்கணும். உன் ஆசை ரொம்ப சீக்கிரம் நிறைவேறிடும். ட்ரை பண்ணி பாரு..’ ஹிந்தியில் அவள் விளக்கி முடிக்க மலர்ந்து சிரித்தான் விவேக்.

‘எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கையும் இல்லை. வேணும் கேட்குற அளவுக்கு எந்த ஆசையும் இல்லை..’ புன்னகை மாறமால் சொன்னான் விவேக்.

அதே நேரத்தில் அங்கே பயணிகள் பகுதியில் இருந்த சுஹாசினி அவர்கள் இருக்கையில் இருந்த பத்திரிக்கைகளை துழாவ கையில் தட்டுப்பட்டது 'ஹாப்பி ஃப்ளையிங்க்'!!! அந்த விமான நிறுவனத்தின் பிரத்தியேக பத்திரிக்கை!!! விவேக்கின்

பேட்டி வந்திருந்த அந்த பத்திரிக்கை. அவள் சாதரணமாக அதை புரட்ட ஆரம்பித்தாள்.

நட்சத்திர கூட்டங்களை சீண்டிக்கொண்டே விமானம் பறந்துக்கொண்டிருக்க ஏனோ சந்தியா சொன்னது விவேக்கினுள்ளே ஓடிக்கொண்டே இருந்தது. ஒரே ஒரு ஆசை இருக்கிறதுதான் அவனுக்கு. நடக்கவே முடியாத ஆசைதான்!!!! இருந்தாலும் அவனுக்கு இருக்கிறது அந்த வலியான ஏக்கம்!!!

காக்பிட்டின் கண்ணாடி வழியே நட்சத்திரங்களை பார்வையால் துழாவிக்கொண்டே இருந்தான் அவன். கொஞ்ச தூரம் கடக்க திடீரென மறுபடியும் கண்ணில் பட்டது இன்னொரு எரி நட்சத்திரம். சட்டென ஒரு பரபரப்பு அவனுக்குள்ளே.

அது கீழே விழுவதற்குள் மூன்று முறை ரகசிய குரலில் சொல்லியே விட்டிருந்தான் ‘அப்பா!!! அப்பா!!! அப்பா!!! தனது கைக்குட்டையை எடுத்து ஒரு முடிச்சும் போட்டு வைத்துக்கொண்டான்.

சிரித்தே விட்டாள் அருகிலிருந்த சந்தியா. ஹலோ.. ஆசையே இல்லைன்னு சொன்ன??? அப்படி என்ன கேட்டே??? என்ன லவ் மேட்டர்ரா??? இதற்கும் முகம் மலர்ந்த சிரிப்பே அவனிடமிருந்து பதிலாய் வெளிவந்தது.

‘நடக்கும் பார். நீ நினைச்சது கண்டிப்பா நடக்கும் பார்..’ அழகாய் ஆசீர்வதித்தாள் அந்த சக விமானி.

தேங்க்யூ. சந்தியா. அப்படி மட்டும் நடந்தா இந்த உலகத்திலே ரொம்ப ரொம்ப சந்தோஷமான ஆள் நானாதான் இருப்பேன். ..' என்றான் அவன் நெகிழ்ந்த குரலில்.

அங்கே பயணிகள் பகுதியில் அவனது பேட்டியை மறுபடி மறுபடி படித்துக்கொண்டிருந்தாள் சுஹாசினி.. அந்த பேட்டியை படிக்க படிக்க அவனது மனதில் இருக்கும் வலி புரிகிறது அவளுக்கு. அவள் கொஞ்சம் திகைப்பில் உறைந்திருந்தாள் என்று சொல்ல வேண்டும்தான்.

அவனது தந்தை டாக்டர் ஸ்ரீனிவாசனை அவளுக்கு நன்றாக தெரியுமே. அவளது ப்ரோஃபசர் ஆயிற்றே அவர். அவரை பற்றி நினைத்தாலே இவள் நெஞ்சம் நெகிழ்கிறதே.

திடீரென தனது மகனிடம் திரும்பி கேட்டாள் அவள் 'இந்த அங்கிள்தானாடா நீ சொன்ன விவேக் ஸ்ரீநிவாசன்.'

'ஆமாம் இவரேதான்' சந்தோஷமாக கூவினான் மகன். 'வாம்மா..' காக்பிட் போய் பார்க்கலாம்.

மகனுக்கு பதில் சொல்லவில்லை சுஹாசினி.. விவேக்கும் அவனது தந்தையும் இருக்கும் அந்த புகைப்படத்தை மறுபடி மறுபடி பார்த்துக்கொண்டிருந்தாள் அவள். அவனது வலிக்கான மருந்து கைகெட்டும் தூரத்தில் இருப்பதும் நன்றாக புரிகிறது அவளுக்கு!!!

அதே நேரத்தில் ஏனோ தனது கைக்குட்டையில் போட்ட அந்த முடிச்சை மறுபடி ஒரு முறை பார்த்துக்கொண்டான் விவேக் ஸ்ரீனிவாசன்!!!

# அத்தியாயம் 6

**கா**க்பிட் அறையின் அந்த மங்கலான வெளிச்சத்தில் திரும்பி அவன் முகம் பார்த்தாள் துணை விமானி சந்தியா.

நிஜமா சொல்லு லவ் மேட்டர்தானே' கண் சிமிட்டினாள் அவள்.

'நோ சந்தியா... என் வாழ்கையிலே இந்த லவ் கல்யாணம் எல்லாத்துக்கும் இடமிருக்கான்னு தெரியலை...' என்றான் சின்ன புன்னகையுடன்.

'ஏன்..ஏன் அப்படி...'

'அது பெரிய சீக்ரெட்... விவேக் புக் ஆஃப் சீக்ரெட்ஸோட ஒரு பார்ட்..' என்று அவன் அழகாய் சிரிக்க அவளும் அவனுடன் சிரிப்பில் இணைந்துக்கொண்டாள் சந்தியா. அவனது விழிகள் ஜன்னலின் வழியே தெரிந்த நட்சத்திர கூட்டங்களை உரச அவற்றை பார்த்து சிரித்துக்கொண்டான் விவேக்.

அவர்களுக்கு தெரியுமே அந்த ரகசியம்!!! அந்த காரணம்!!! அன்று அவனும் அவன் தந்தையும் பேசிக்கொண்ட வார்தைகைகளுக்கு சாட்சியும் அவர்கள்தானே.

பல வருடங்களுக்கு முன்னால் நிகழ்ந்த நிகழ்வு அது. அவனது பதினான்காவது வயதில் நடந்த சம்பவம் அது!!!

கூடைப்பந்து விளையாடுவதில் அவனுக்கு ஆர்வம் அதிகம். அவனது பள்ளி கூடைபந்து அணியின் கேப்டனாக அவன் இருந்த காலம் அது.

அவனது தந்தை அவனுக்காக வீட்டின் பின்னால் சின்னதாக ஒரு கூடைபந்து மைதானத்தை அமைத்திருந்தார். இவன் காலையிலும் மாலையிலும் அங்கே சிறிது நேரம் விளையாடி பயிற்சி செய்வது வழக்கம்.

அவனது பள்ளித்தோழி கீதா!!! அவள் அவனது பக்கத்து வீட்டில் குடி இருந்தாள். இவன் விளையாடிக்கொண்டிருக்கும் நேரங்களில் அங்கே வந்து அமர்ந்து இவனை பார்த்துக்கொண்டு பேசிக்கொண்டு இருப்பது அவளது வழக்கம். எதனால் என்று புரியாத ஒரு ஈர்ப்பு இவனிடத்தில் அவளுக்கு.

அன்றும் காலையில் வழக்கம் போல் இவன் பந்தை தட்டிக்கொண்டே சுழன்றுக்கொண்டிருக்க என்ன நினைத்தாளோ சட்டெனெ இவன் கன்னத்தில் முத்தமிட்டிருந்தாள் கீதா. மீசை அரும்ப ஆரம்பித்திருந்த பருவம் அது .நிறையவே படபடப்பும், பரபரப்பும், இவனிடம் தொற்றிக்கொள்ள அடுத்து என்ன செய்வது என புரியாமல் இவன் திகைத்து திரும்ப அங்கே நின்றிருந்தார் ஸ்ரீநிவாசன்!!!

அவர் அந்த காட்சியை பார்த்துவிட்டார் என இருவருக்குமே புரிந்தது. அங்கிருந்து ஓடியே விட்டிருந்தாள் அந்த சின்ன பெண். இவன் மீது எந்த தப்பும் இல்லைதான்.

அதற்கும் மேலாக அப்பா அவனை திட்டி இருந்தால் கூட மனது நிம்மதியாக இருந்திருக்கும். அப்பா எதுவுமே பேசாமல் உள்ளே சென்று விட உயிர் மொத்தமாக வற்றிப்போன ஒரு உணர்வு இவனுக்கு.

அன்று மாலை வரை இவனிடம் எதுவுமே பேசவில்லை அப்பா. இரவு இவர்கள் உறவினர் ஒருவரின் திருமணத்திற்காக இருவரும் ஹைதிராபாத் செல்ல வேண்டி இருந்தது. விமானம் ஏறி இருவரும் அருகருகே அமர்ந்த பிறகும் அப்பா எதுவுமே பேசவில்லை.

அப்போதெல்லாமும் விமானப்பயணம் கொஞ்சம் பயம்தான் விவேக்குக்கு!!! விமானம் மேலே ஏறத்துவங்க கண்களை இறுகமூடிக்கொண்டு அப்பாவின் கைகளை கோர்த்துக்கொண்டு அமர்ந்து கொண்டான் மகன். அப்பாவின் இதழ்களில் மெது மெதுவாக ஒரு புன்னகை மலர்ந்தது.

சில நிமிடங்கள் கழித்து அவன் கண் திறக்க காலையில் நடந்த அந்த நிகழ்வினால் இத்தனை நேரம் நரகத்தின் பிடியில் இருந்தவன் அப்பாவின் புன்னகையில் கரைந்து போனான். அவன் கண்களில் நீர் கட்டிக்கொண்டு நின்றது.

அவனது பயங்கள், குழந்தைத்தனங்களை விட்டு அவனை வெளியே கொண்டு வரும் பொருட்டு அவர் அவனை கண்ணா என்று கூட அடிக்கடி அழைப்பது இல்லைதான். சற்றே அதிரடியாகத்தான் அவனிடம் பேசுவார் அவர். இன்று பிறந்த குழந்தையாய் முதன் முதலாய் அவர் கைகளில் தவழ்ந்த அந்த விவேக்கை பார்க்கும் உணர்வு அப்பாவுக்கு.

'என்னடா கண்ணா..' என்றார் இதமாக!!!

'தப்பு எதுவும் செய்திட்டேனாபா??? உங்களை எதுவும் கஷ்டப்படுதிட்டேனாபா..' என்றான் அப்பாவின் முகம் கூட பார்க்க முடியாத தயக்கத்துடன்.

'முதல்லே நிமிர்ந்து உட்காரு. என் பையன் எப்பவும் இப்படி தலைகுனிஞ்சு இருக்க கூடாது..' என்றார் அவர். நிமிர்ந்தான் விவேக்.

'தப்பெல்லாம் எதுவும் இல்லைடா கண்ணா' என்றார் பாசம் நிறைந்த குரலில்.

இல்லப்பா. அவ அப்படி செஞ்சப்போ எனக்கு கொஞ்சம் சந்தோஷமாதான் இருந்ததுபா...' என்றான் அடியிலும் அடிக்குரலில்.

அழகாய் சிரித்தார் அப்பா 'இதெல்லாம் இந்த வயசிலே வர்றதுதான்டா. இதை எப்படி சரியா ஹேண்டில் பண்றதுன்னு நீ கத்துக்கணும்..' என்றார் புன்னகையுடன்..

ஒரு நண்பனாய், ஒரு தந்தையாய், ஒரு மருத்துவனாய், ஒரு ஆசிரியனாய் அந்த வயதுக்கான அவனுடைய மாற்றங்களை அதன் காரணங்களை மிக நிதானமாய் விளக்கினார் அவனுக்கு. அப்பாவின் தோளில் குழந்தையாய் சாய்ந்தபடி எல்லாவற்றையும் கேட்டிருந்தான் மகன்.

கடைசியாய் கேட்டான் மகன் 'அப்பா அப்போ லவ் பண்ணா தப்பில்லையாபா..'

வாஞ்சையுடன் மகனை அணைத்துக்கொண்டார் அப்பா 'காதல்ங்கிறது ரொம்ப அழகான விஷயம்டா கண்ணா. இந்த உலகத்திலே பொண்ணை மட்டும்தான்னு இல்லை. மழை, வானம், மரம், புக்ஸ், பாட்டு உன்னுடைய படிப்பு, வேலை இப்படி எல்லாத்தையும் காதலிக்கலாம். இப்படி ஜன்னல் வழியா வெளியே கொஞ்சம் பாரேன் இந்த ராத்திரி வானமும், மேகமும் நட்சத்திரங்களும். எவ்வளவு அழகா இருக்குன்னு. நீ என்னமோ பயந்துபோய் கண்ணை மூடிட்டு உட்கார்ந்திருக்கே'

மெதுவாக வெளியே எட்டிப்பார்த்தான் விவேக். விமானத்தினுள்ளே இருந்த மங்கிய ஒளியில் வெளியே இரவு வானம் மிளிர்ந்துக்கொண்டிருந்தது.

காற்று பைகளுக்குள் புகுந்து பல வண்ணங்களின் ஒளிச்சிதறல்களுடன் சிரித்துக்கொண்டிருந்த நட்சத்திரங்களும், அவற்றை மூடி மறைத்து விளையாடிக்கொண்டிருந்த

மேகங்களும், இவற்றையெல்லாம் தொந்தரவு செய்யாமல் ஒரு பக்கத்தில் ஒளிர்ந்துக்கொண்டிருந்த பிறை நிலவும் என முதல் பார்வையிலேயே அந்த இரவு வானத்திடம் விவேக் விழுந்திருந்தான் எனதான் சொல்ல வேண்டும்.

‘நானும் உங்க அம்மாவும் லவ் பண்ணித்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டோம். லவ்ங்கிறது ஒரு பொறுப்பு!!! பெரிய ரெஸ்பான்சிபிளிட்டிடா கண்ணா. அதை எடுத்துக்கிற, சமாளிக்கிற தகுதியை நீ முதல்லே வளர்த்துக்கோ. அதுவரைக்கும் வேணும்னா இந்த மேகம் வானம் இதையெல்லாம் காதலிச்சு பாரேன்...’ என்றார் அப்பா புன்னகையுடன்.

இன்னொரு முறை திரும்பி பார்த்தான் அப்பா அறிமுகப்படுத்திய அந்த வான்மகளை. அப்போது சில்லென ஒரு மகிழ்ச்சி அவனுக்குள்ளே பிறந்தது நிஜம். அதுவே அவன் விமானியாக வளர்வதற்கும் ஒரு வித்தாக அமைந்தது.

‘நீ படிச்சு ஒரு நல்ல நிலைக்கு வந்திடு அதுக்கு அப்புறம் நீ எந்த பொண்ணை விரும்பினாலும் அப்பா உனக்கு கல்யாணம் பண்ணி வைப்பேன் சரியா???’

உள்ளுக்குள் லேசாக ஏதோ ஒரு தவிப்பு பிறக்க மறுபடியும் அப்பாவின் தோளிலேயே சாய்ந்துக்கொண்டான் விவேக்.

‘நான் எந்த பொண்ணையும் லவ் எல்லாம் பண்ண மாட்டேன். பெரியவனா ஆன பிறகு எங்க அப்பாதான் எனக்கு

பொண்ணு பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கணும்.' அவன் மெல்ல சொல்ல கலகலவென சிரித்தார் அப்பா.

'சிரிக்காதீங்கபா. நான் உண்மையாதான் சொல்றேன். அப்பா சொல்ற பொண்ணைதான் நான் கல்யாணம் பண்ணிப்பேன்.... .கண்டிப்பா..'

'சரிடா கண்ணா... சரிடா கண்ணா.. அப்பாவே உனக்கு நல்ல பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கிறேன்..' வாக்கு கொடுத்தார் அன்று. அதற்கு சாட்சியாக நின்றன இதோ இந்த நட்சத்திரங்கள். அன்று முதலே இந்த உறுதி. அப்பா சொல்லும் பெண்ணைத்தான் திருமணம் செய்ய வேண்டுமென்ற உறுதி.

அன்று கொடுத்த வாக்கை இப்போது எப்படி காப்பாற்றுவாராம்??? ஒரு பெருமூச்சு அவனிடம். ஆனாலும் அவன் எடுத்துக்கொண்ட உறுதியில் துளியிலும் துளிக்கூட மாற்றம் இல்லை. இந்த நிமிடம் வரை அவர் அறிமுக படுத்திய வான்மகள் மட்டுமே அவனது காதலி.

அந்த பழைய நினைவுகளில் முடிச்சுப்போட்ட தனது கைக்குட்டையை மறுபடி ஒரு முறை பார்த்துக்கொண்டான் விவேக்..

அதே நேரத்தில்

இன்னொரு விமானத்தை செலுத்திக்கொண்டிருந்தாள் ஹரிணி அதுவும் சென்னை நோக்கியே வந்துக்கொண்டிருந்தது. காலையில் விவேக்கை பார்த்த பிறகு புறப்பட்ட எரிச்சல் இன்னமும் தீரவில்லை அவளுக்கு. தரை இறங்க வேண்டிய நேரம் வர

டூ தௌஸன்ட் ... ஒன் தௌஸன்ட்.... ஃபைவ் ஹண்ட்ரட்.... இறங்கிக்கொண்டே இருந்தது விமானம். ஹண்ட்ரட் ...பிஃப்டி...... இறங்க வேண்டுமென முடிவு செய்ய வேண்டிய உயரம் வர திடுமென தரை இறக்கினாள் விமானத்தை!!!

அருகில் இருந்த துணை விமானியே அவள் முகம் பார்த்து கேட்டார் ‘வாட் இஸ் திஸ் மிஸ் ஹரிணி??? ஏன் இத்தனை டென்ஷன் உங்களுக்கு???’

இறுக்கமான சுவாசத்துடன் கண்களை மூடிக்கொண்டாள் அவள். அவசரம்!!! எல்லாவற்றிலும் அவசரம் அவளுக்கு,

சில வருடங்கள் முன்னால் நடந்தது இது. இவர்கள் கல்லூரி காலம் முடிந்து விமானத்துறையில் ஹரிணியும் விவேக்கும் அடி எடுத்து வைத்திருந்த நேரமது. எல்லா நேரத்திலும் இவளுக்கு போட்டியாகவே இருந்தவன் விவேக்.

விவேக்குக்கு பெண் தேடும் நோக்கத்தில் அவனது அப்பா கொடுத்திருந்த விளம்பரம் ஹரிணியின் அப்பாவின் கண்ணில்

பட்டிருந்தது. இருவரும் விமானிகள் என்பதாலேயே இது சரியாக வரும் என அவள் அப்பாவுக்கு ஒரு எண்ணம்.

'ஹரிணிமா...' என்றார் அவள் அப்பா. அதிர்ந்து கூட பேசத்தெரியாத ஒரு மனிதர் அவர். 'யாரோ விவேக் ஸ்ரீநிவாசனாம். உன்னோடதான் வேலை பார்க்கிறானாமா அந்த பையன்??? அவனை உனக்கு பார்க்கலாமாமா??? தயக்கத்தில் ஊறிய ஒரு குரலிலேயே கேட்டார் அவர். ஏற்கனவே பெரிய மகளிடம் பட்ட காயம் இன்னமும் அவர் மனதில் இருக்கிறதே!!!

டைனிங் டேபிளில் அமர்ந்து இரவு உணவை சுவைத்துக்கொண்டிருந்த ஹரிணி திடுக்கிட்டு பார்த்தாள். அலையடித்தது அவளுக்குள்ளே. வேண்டாமென சொல்லிவிடாலாம் என்பதே அவளது முதல் எண்ணமாக இருக்க, பேச வாயெடுத்தவளை உள்ளுக்குள் ஏதோ ஒன்று தடுத்தது.

'எப்படியும் நான் ஒரு நாள் ஒருவனை திருமணம் செய்துக்கொள்ளத்தான் போகிறேன். அந்த ஒருவன் ஏன் விவேக்காக இருக்க கூடாது??? படிப்பிலும் அந்தஸ்திலும் எனக்கு இணையானவன்தானே அவன். அவன் குணம், அவனது பலம், பலவீனம் என எல்லாம் எனக்கு தெரியும். அவன் எனக்கு கணவன் என்று ஆகிப்போனால் நான் நினைத்தபடி அவனை மாற்றி விட முடியாதா என்ன???

சில மணி நேர யோசனைக்கு பிறகு அப்பாவிடம் சொன்னாள் ஹரிணி 'சரிப்பா... நீங்க விவேக் வீட்டிலே பேசுங்க...'

இரண்டு வீட்டிலும் தொலைப்பேசி வழி பேச்சு வார்த்தைகள் நடந்தன. ஹரிணியின் குணம் நன்றாகவே தெரியும் விவேக்குக்கு. இவளுடன் என்னால் நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியுமா என்ற கேள்வி அவனை உறுத்திக்கொண்டேதான் இருந்தது.

அந்த நிலையிலும் அவனுக்குள் இருந்த உறுதி மட்டும் மாறவில்லை. 'அப்பா சொல்ற பொண்ணைதான் நான் கல்யாணம் பண்ணிப்பேன். அப்பா யாரை சொன்னாலும் சரி...'

ஹரிணியின் புகைப்படம் அவர்கள் வீட்டுக்கு வந்திருக்க அதை பார்த்தபடியே மகனை அருகில் அமர்த்திக்கொண்டார் ஸ்ரீநிவாசன்.

'பொண்ணுக்கு ஒகேயாம். சொல்லுடா கண்ணா நீ என்ன சொல்றே..' அவன் தோள் அணைத்தபடியே கேட்டார் அப்பா.

அவனது முகத்தில் சலனத்தின் நிழல் கூட இல்லை 'நீங்க சொல்ற பொண்ணுதான்பா என் பொண்டாட்டி.. இதை முன்னாடியே நான் சொல்லி இருக்கேன். அதிலே எந்த மாற்றமும் இல்லை. நீங்க என்ன சொன்னாலும் சரி. யாரை சொன்னாலும் சரி எனக்கு ஒகே ' அழுத்தம் திருத்தமாக சொன்னான் விவேக்.

சில நிமிடங்கள் பார்த்துக்கொண்டே இருந்தார் மகனை. என்ன தோன்றியதோ அப்பாவுக்கு

‘உனக்கு இந்த பொண்ணு வேண்டாம்டா கண்ணா..’ சொல்லிவிட்டிருந்தார் அவர். என் மனம் படித்துவிட்டாரா என்ன? வியப்புடன் அப்பாவை பார்த்துக்கொண்டே இருந்தான் மகன்.

இவர்கள் திருமணதிற்கு மறுத்த விவரம் அவளை அடைவதற்குள் வந்தது அந்த நாள். அப்போதும் சென்னை விமான நிலையத்தில்தான் இருவரும் சந்தித்துக்கொண்டனர்.

‘ஹாய்.. விவேக்...’ என்றபடி இவன் அருகில் வந்தாள் ஹரிணி. அவளுடன் இன்னும் அவர்களுடன் பணியாற்றும் மூன்று நான்கு நண்பர்கள். எல்லோரையும் பார்த்து நட்பாய் புன்னகைத்தான் விவேக்.

அவசரம். ஹரிணிக்கு!!! எப்போதுமே அவசரம்!!!

‘எப்படியும் என்னை மறுக்க மாட்டான், விவேக். இவன் என்ன எந்த ஒரு ஆண் மகனுக்கும் என்னை மறுத்துவிடும் எண்ணம் வருமா என்ன???’ என்ற கண்மூடித்தனமான ஒரு நம்பிக்கை அவளுக்கு.

‘கைஸ்... உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா??? எங்க ரெண்டு பேருக்கும் சீக்கிரமே கல்யாணம்...’ வெகு இயல்பாக நண்பர்களை பார்த்து ஹரிணி சொல்ல,

‘தட்’ஸ் கிரேட்... மேட் ஃபார் ஈச் அதர்... ‘என்றபடியே எல்லாரும் இருவரையும் வாழ்த்த துவங்க கொஞ்சம் திகைத்து போனான் விவேக்.

‘எப்போ கல்யாணம் விவேக்...’ இது இன்னொரு நண்பன்

‘ஐ யாம் நாட் ஷுர்... நான் இன்னும் கல்யாணத்தை பத்தியே டிசைட் பண்ணலை...’ என்றான் விவேக் மெதுவாக. திடுக்கிட்டு நிமிர்ந்தாள் ஹரிணி.

‘இதிலே டிசைட் பண்ண என்ன இருக்கு.. ஹரிணி இஸ் ஸோ ஸ்வீட் விவேக்..’ இது ஹரிணியின் தோழி.

‘அப்படியா??? எனக்கு தெரியலை.. ஐ.. ரியலி டோன்ட் நோ..’ தோள்களை குலுக்கியவன் சில நொடிகள் பேசிவிட்டு வெகு இயல்பாக அங்கிருந்து விலகி நழுவ அவனை கிட்டதட்ட துரத்திக்கொண்டு வந்தாள் ஹரிணி.

‘விவேக் நிஜமாவே உன் மனசிலே என்ன நினைச்சிட்டு இருக்கே..’

‘ஐ ஆம் ரியலி சாரி ஹரிணி .. எனக்கு எல்லாமே எங்கப்பாதான்.. அவருக்கு இந்த கல்யாணத்திலே விருப்பம் இல்லை. ஸோ எனக்கும் நோதான்...’

ரத்தம் முழுவதும் கொதிப்பேறிய ஒரு உணர்வு அவளுக்கு. ‘ஏன்? ஏன் உங்க அப்பாக்கு விருப்பம் இல்லை???

‘நான் காரணம் கேட்கலை ஹரிணி. எது எப்படி போனாலும் அவர் சொல்ற பொண்ணுதான் என் வைஃப்.. அதிலே எந்த மாற்றமும் இல்லை…உனக்கு பிடிச்சா மாதிரி வேறே நல்ல மாப்பிள்ளை கிடைப்பார் ஹரிணி.. ஆல் தி வெரி பெஸ்ட்’ நிதானமான அதே நேரத்தில் உறுதியான குரலில் சொல்லிவிட்டு நகர்ந்தான் விவேக்.

எதிர்பார்க்கவில்லை ஹரிணி. தோல்விகளை ஏற்றுக்கொண்டு பழக்கமே இல்லையே அவளுக்கு. நிராகரிப்பு!!! அவனுடைய நிராகரிப்பு!!! அது இன்னும் அடி மனதில் பசுமையான காயமாய் தேங்கி நிற்கிறது. அவனை பார்க்கும் போதெல்லாம் பற்றி எரிகிறது அந்த காயம். அது அவன் மீதும் அவன் தந்தை மீதும் வெறுப்பாய் மாறி வளர்ந்து நிற்கிறது.

அதனால்தானோ என்னவோ சுதர்ஷன் செய்த அந்த காரியத்துக்கு மௌன சாட்சியாகவே இருந்தாள் இவள். இப்போது உடைந்து கிடக்கிறான் விவேக். நொறுங்கி கிடக்கிறான் அவன். அவனுக்கான மருந்து ஒன்று என்னிடத்தில் இருக்கிறது. அதை அவன் கண்ணில் கூட காட்டப்போவதில்லை நான்!!!

அதே நேரத்தில் இங்கே விவேக்கின் விமானத்தில்

‘அம்மா.. வாம்மா காக்பிட் போகலாம் ஹரிணியின் அக்கா டாக்டர் சுஹாசினியை அரித்துக்கொண்டிருந்தான் மகன் ஸ்ரீநிவாசன்.

‘டேய்.. கொஞ்ச நேரம் பேசாம இரு.. இப்போ டியூட்டிலே இருக்கும் போது டிஸ்டர்ப் பண்ணாதே. உன்கிட்டே போன் நம்பர் இருக்கில்ல அப்புறம் பேசலாம்...’ சொல்லிக்கொண்டிருந்தான் அவனது தந்தை ராகுல். எதுவுமே சொல்லத்தோன்றாமல் அமர்ந்திருந்தாள் சுஹாசினி.

காக்பிட்டிலிருந்து பார்த்தவனின் விழிகளை திருடியது கடற்கரையின் அழகு. வானில் இருந்த நட்சத்திரங்கள் இப்போது நீரில் மிதக்கின்றது என்பது போல் விளக்குகளின் ஒளிச்சிதறலில் மிளிர்ந்த கடல் நீரை பார்த்திருந்தான் விவேக். சென்னையை நெருங்கிக்கொண்டிருந்தது அவர்களது விமானம்.

தரை இறங்கிய விமானத்திலிருந்து இறங்கவே மனமில்லாதவனாக திரும்பி திரும்பி பார்த்துக்கொண்டு நடந்தான் சிறுவன் ஸ்ரீநிவாசன். சில நிமிடங்கள் கடந்திருக்க தங்கள் பெட்டிகள், உடமைகளுக்காக அவர்கள் காத்திருந்தனர் பெல்டின் அருகே!!!

தனது வேலைகளை முடித்துக்கொண்டு வெளியே வந்த விவேக்கின் பார்வை வட்டத்துக்குள் விழுந்தான் ஸ்ரீநிவாசன். விழிகள் விரிய நின்றே விட்டான் விவேக்.

அவன் உதடுகள் மெல்ல உச்சரித்தன ‘ஸ்ரீ...நி.. வா..சன்...’

சில நிமிடங்கள் கடக்க கை நிறைய இனிப்புகளுடன் அவர்கள் பின்னால் வந்து நின்றான் விவேக்.

‘அப்பா விவேக் அங்கிளை பார்க்கலாம்பா. நான் போன் பண்றேன்பா..’

‘டேய்…கொஞ்ச நேரம் சும்மா இரு… ‘

‘அப்பா.. … ப்ளீஸ்பா… ஒரே ஒரு தடவை…’ அவன் கெஞ்ச…

‘ஸ்ரீநிவாசா…’ விவேக் அழைக்க சரேலென திரும்பியவன் அடுத்த நொடி மண்டியிட்டு அமர்ந்த விவேக்கின் கைகளுக்குள் வந்து சேர்ந்து இருந்தான்.

அப்பாவை தவிர இப்படி யார் அணைப்பிலும் கட்டுண்டதாக நினைவில்லை விவேக்குக்கு. எந்த விதமான பந்தமிது புரியவில்லை அவனுக்கு.

காலையில் பார்த்தவனை ஏதோ பல நாட்கள் கழித்து பார்க்கும் தவிப்புடன் கேட்டான் விவேக் ‘எப்படிடா இருக்கே கண்ணா???’

அதே நேரத்தில்

இந்த வாரம் முழுவதும் சென்னையில் சில திருமணங்களில் சமையல் வேலை செய்வதற்காக மதுரையிலிருந்து சென்னை நோக்கி செல்லும் பேருந்தில் ஏறினார் அவர். தாமோதரன்!!! சுஹாசினி மற்றும் ஹரிணியின் தந்தை தாமோதரன்!!!!

# அத்தியாயம் 7

இது எந்த விதமான பந்தம் என்பதை அறியமாலேயே அந்த சிறுவனின் அணைப்பில் நெகிழ்ந்திருந்தான் அந்த வானத்து அரசன். அந்த ஸ்ரீநிவாசனுக்குள்ளும் அப்படி ஒரு பரவசம்.

'அங்கிள் நீங்க ஓட்டின பிளைட்லேதான் வந்தேன். அப்போலேர்ந்து உங்களை பார்க்கணும்னு சொல்லிட்டே இருந்தேன்....' குதூகலமாக கூவினான் அவன்.

'ஓ ரியலி... கரெக்டா வந்திட்டேன் பார்த்தியா ஸ்ரீனிவாஸா.??? மனமகிழ்ந்து சிரித்தான் விவேக் அவன் உச்சரித்த அந்த ஸ்ரீனிவாசாவிலேயே அவனது மொத்த பரவசமும் கலந்து வந்தது. 'இதெல்லாம் உனக்குத்தான்' தனது கையிலிருந்த இனிப்புகளை அவனை நோக்கி நீட்டினான் விவேக்.

இவர்கள் இருவரும் சந்தோஷத்தின் எல்லையில் பேசிக்கொண்டிருக்க அவர்களை திரும்பி பார்த்த சுஹாசினியின் முகத்தில் தன்னாலே மலர்ந்தது ஒரு புன்னகை.

‘அங்கிள் நீங்க சென்னையிலே எங்கே இருக்கீங்க??? அவன் கேட்க சின்ன புன்னகை மலர்ந்தது விவேக்கின் இதழ்களில்.

‘நான் மேகத்துலேதான் அதிகம் குடி இருப்பேன். சென்னையிலே இருக்கிற நேரத்திலே எங்க அப்பா வீட்டிலே இருப்பேன்..’

‘உங்க அப்பா எங்கே இருக்கார்???’ விவேக்கின் புன்னகை மெல்ல கலைய ஒரு ஆழமான சுவாசம் விவேக்கிடம்

‘அவருக்கென்ன எங்கேயாவது இருப்பார்.’ தளர்ந்த போன குரலில் சொன்னான் விவேக். புரியாத பார்வை பார்த்தான் ஸ்ரீநிவாசன்.

‘நாளைக்கு நீங்க மேகத்திலே இருப்பீங்களா. பூமியிலேயா???

‘நாளைக்கா??? நாளைக்கு……’ அதை தாண்டி எதுவும் சொல்ல வரவில்லை விவேக்குக்கு.. ‘நாளை!!!’ என்ற அந்த நினைவிலேயே விவேக்கின் குரல் மொத்தமாக ஸ்ருதி இழந்து போயிருந்தது.

‘அங்கிள்..’ .ஸ்ரீநிவாசன் கலைத்து அவனை திசை திருப்ப

சொல்லுப்பா உனக்கு என்ன வேணும் ஸ்ரீனிவாசா…..’ என்றான் விவேக் சமாளித்துக்கொண்டு.

'நாளைக்கு என்னோட பர்த்டே நீங்க எங்க வீட்டுக்கு வரீங்களா. எங்க அம்மாவும் இந்த வருஷம் எங்களோட வந்திட்டாங்க இல்ல. நாங்க பெருசா பார்ட்டி அர்ரெஞ் பண்ணி இருக்கோம்..

'அங்கிள் நாளைக்கு ஒரு நாள் ரூம் விட்டு வெளியே வரமாட்டேன்டா. யாரோடையும் பேச மாட்டேன்.. அதனாலே இன்னொரு நாள் வரேன் உங்க வீட்டுக்கு ஒகே வா...'

'அங்கிள்.. அங்கிள் ப்ளீஸ் அங்கிள்.. என் ஃப்ரெண்ட்ஸ் கிட்டே எல்லாம் உங்களை பைலட் அங்கிள்னு இன்ட்ரோ பண்ணி வைக்கணும் ...... ப்ளீஸ்... அங்கிள்..'

விவேக்கின் சூழ்நிலை அறியாமல் இவன் கேட்டானோ இல்லை இவனை கேட்க சொல்லி ஏதோ ஒரு சக்தி உந்தியதோ தெரியவில்லை. அவனுடன் பல வருட பழக்கம் போல் பிடிவாதமாக கேட்டுகொண்டே இருந்தான் ஸ்ரீநிவாசன்.

'என்ன ஸ்ரீனிவாசா??? நீ என்ன சின்ன குழந்தையா??? இப்படி அடம் பிடிக்கிறே...' இவன் சொல்லிக்கொண்டிருக்க . அதற்குள் தங்கள் உடமைகளை எடுத்துக்கொண்டு இவர்கள் அருகில் வந்திருந்தாள் சுஹாசினி.

'நீங்க டாக்டர் ஸ்ரீநிவாசன் சன்தானே ...' கேட்டாள் நிறையவே சந்தோஷம் ஏறிய குரலில்.

அப்பாவின் பெயர் காதில் ஒலித்ததும் விருட்டென நிமிர்ந்து எழுந்தான் மகன். அவசரமாக அவள் முகம் ஆர்வத்துடன் ஆராய்ந்தான் அவன்.

'உங்களுக்கு அப்பாவை தெரியுமா??? அவன் கேட்ட நேரத்தில் அத்தனை பளபளப்பு அவன் கண்களில். அவன் பேட்டியை படித்ததிலேயே அவன் மனம் புரிந்ததே அவளுக்கு. இதமாய் புன்னகைத்தாள் அவள்.

'அவர் 'எ..ங்..க' டாக்டர் என்றாள் சுஹாசினி. அந்த 'எங்க' வில் அவள் கொடுத்த அந்த அழுத்ததில் உயர்ந்தன அவன் புருவங்கள்.

'அவர் எனக்கு ப்ரோபசர்' என்றாள் புன்னகை மாறாமல். 'குரு!!! கரெக்டா சொல்லணும்னா குருங்கிற ஸ்தானத்துக்கு மேலேதான் அவர் எனக்கு. அதனாலேதான் என் பையனுக்கும் ஸ்ரீநிவாசன்னு பேர் வெச்சேன்..'

'வா....வ்...' என்றவனின் பார்வை ஸ்ரீனிவாசனை தழுவி மீண்டது .அதில் அத்தனை நிறைவும் சந்தோஷமும். அவன் விரல்கள் ஸ்ரீனிவாசனின் கேசத்தை மெல்ல கலைத்தன.

'நான் உங்ககிட்டே நிறைய பேசணும். உங்க அப்பா பத்தி, அதை விட இன்னமும் முக்கியமா...... அதை... அதை... எப்படி சொல்றதுன்னு தெரியலை... உங்களை அப்படியே சந்தோஷ படுத்தக்கூடிய ஒரு விஷயம் என்கிட்டே இருக்கு..

இப்போதைக்கு சஸ்பென்சாவே இருக்கட்டுமே. அதை உங்க கண்ணு முன்னாடி கொண்டு வந்து நிறுத்தறேன் சீக்கிரமே.' அவள் மடமடவென சொல்லிக்கொண்டே போக அவளை வியப்புடன் பார்த்திருந்தான் விவேக்.

'அம்மா.. அங்கிளை நாளைக்கு வீட்டுக்கு வர சொல்லுமா...' ஸ்ரீநிவாசன் இடையில் புக,

'எஸ்... நீங்க கண்டிப்பா வரணும்..' வீட்டு முகவரியை தனது கணவன் ராகுலிடமிருந்து வாங்கி அவனிடம் கொடுத்தாள் சுஹாசினி.

யுவர் குட் நேம் ???' என்றபடியே அந்த கார்டை வாங்கிக்கொண்டான் விவேக்.

'ஐ...ஆம்...... சுஹாசினி..'

'மிசஸ் சுஹாசினி நாளைக்கு என்னாலே ..'. அவன் ஏதோ சொல்ல ஆரம்பிக்க

'ஹா..சி..னி...' இடையில் வந்து புகுந்தது அந்த குரல்!!! எல்லாருமே சற்றே திடுக்கிட்டு திரும்பினர். அங்கே நின்றிருந்தாள் ஹரிணி. தான் ஒட்டி வந்த விமானத்தை தரை இறக்கி விட்டு அங்கே வந்து சேர்ந்திருந்தாள் அவள்.

அக்காவை பார்த்து வருடங்கள் ஆகின்றன!!! ஓடி வந்து அவள் கரம் பற்றிக்கொண்டாள் தங்கை.

‘எப்படிக்கா இருக்கே!!!’ தங்கையை பார்த்தது ஒரு ஆனந்த அதிர்ச்சிதான் சுஹாசினிக்கு. கண்கள் கூட நிரம்பிவிட்டன.

சின்னதாய் ஒரு மாற்றம் விவேக்கின் முகத்தில். ‘அக்காவா??? அப்படி என்றால் இவள் ஸ்ரீனிவாசனின் சித்தியா??? சரியா போச்சு..’ சொல்லிக்கொண்டான் தனக்குள்ளே.

நெகிழ்ச்சியான நலம் விசாரிப்புகளும் பேச்சுகளும் அக்காவும் தங்கைக்கும் இடையே தொடர்ந்துக்கொண்டிருக்க, ராகுல் அவர்களையே பார்த்திருந்தான். காலையில் அவனுக்கும் ஹரிணிக்கும் இடையில் நடந்த அந்த சண்டை அவன் நினைவுக்கு வந்திருக்க வேண்டும்.

‘இவர்தான் ராகுல்’ திருமணம் முடிந்த பதினாலு வருடங்கள் கடந்த பிறகு தனது கணவனை தங்கைக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள் சுஹாசினி. ஹரிணியின் முகத்திலும் மாற்றம்தான். ஒரு புன்னகையை வரவழைத்துக்கொண்டு அவனுடன் கைகுலுக்கினாள் அவள்.

‘அங்கிள்... ‘ மெலிதான குரலில் அழைத்தான் ஸ்ரீநிவாசன். ‘இவங்க காலையிலே சண்டை போட்ட ஆன்ட்டி. மாதிரியே இருக்காங்க..’

மெல்ல சிரித்தான் விவேக் ஸ்ரீநிவாசனின் தோள்களை அணைத்துக்கொண்டு கிசுகிசுத்தான் அவன்

'மாதிரி இல்ல... அவங்களேதான்..'. இப்போது சட்டென அவர்களை நோக்கி திரும்பினாள் ஹரிணி.

'இவன் எங்கே இவர்களுடன்???' என்பதை போன்றதொரு பார்வை அவளிடம். அலட்சிய பார்வையுடன் அவர்களிடம் வந்து இரண்டு நொடிகள் விவேக்கின் முகம் ஆராய்ந்தவள் ஸ்ரீநிவாசனிடம் அவசரமாக சொன்னாள்

'நான் உன் சித்தி தெரியுமாடா???

'ஓ...' என்றபடியே விவேக்கிடம் ஏனோ ஒட்டிக்கொண்டான் சிறுவன்.

வெகு இயல்பாக விவேக் சிறுவனின் கேசம் வருட அதை தாங்கிக்கொள்ளவே முடியவில்லை ஹரிணியால். இவன் என் அக்கா மகன் இவன் யார் அவனை அணைத்துக்கொள்ள??? என்ற எண்ணமா??? இல்லை அவனை அணைத்துக்கொண்டிருப்பது விவேக் என்பதால் மட்டுமா???

விருட்டென அவனை விவேக்கிடமிருந்து பிரித்து இழுத்து தன்னோடு சேர்த்துக்கொண்டாள் ஹரிணி..

'இவன் எனது குடும்பத்திடம் நெருங்கி வருவதா??? அது நடக்க கூடாது. நடக்க விடமாட்டேன் நான்' கூவியது அவள் மனம்.

சலனமே இல்லாமல் அவள் முகம் ஊடுருவினான் விவேக். நிச்சயமாய் அவளுடன் மோதிக்கொண்டு நிற்கும் மனநிலை

இப்போது இல்லை. இப்போதென்றில்லை அது எப்போதுமே இருந்ததில்லை விவேக்குக்கு.

'ஒகேடா கண்ணா.. நான் கிளம்பறேன்' என்றான் ஸ்ரீனிவாசனின் முகம் பார்த்து. 'மெனி மோர் ஹாப்பி ரிடர்ன்ஸ்..' என்றான் புன்னகையுடன்.

'நாளைக்கு வருவீங்க இல்ல அங்கிள்..'

'இல்ல ஸ்ரீனிவாசா... வர்றது .. கஷ்டம்... நீ எதிர்பார்த்து டிஸப்பாயின்ட் ஆகாதே..சரியா..'

எது செலுத்தியதோ அவனை 'அங்கிள்...' என்றான் சற்றே கடினமான குரலில். 'ஸ்ரீநிவாசன் சொன்னா கேட்க மாட்டீங்களா அங்கிள்...' கொஞ்சம் திகைத்தே போனான் விவேக்.

ஸ்ரீநிவாசன் சொன்னதைதானே இத்தனை ஆண்டுகள் கேட்டு இருக்கிறேன் நான்!!!'

'அது... வந்து... நான்.. ப்ளீஸ்டா... கண்ணா.. என்னை கட்டாய படுத்தாதே. இன்னொரு நாள் வரேன் .' சற்றே தடுமாற்றத்துடன் சொல்லிவிட்டு சுஹாசினியையும், ராகுலையும் பார்த்து தலை அசைத்துவிட்டு 'நான் கிளம்பறேன் ஸ்ரீனிவாசா...' சொல்லிவிட்டு அங்கிருந்து விறுவிறுவென நகர்ந்தான் விவேக்.

சில நொடிகள் அங்கே மௌனம். விவேக் கண்ணிலிருந்து மறையும் வரை ஹரிணியின் முக இறுக்கம் தளரவில்லை.

'அப்பா எப்படி ஹரிணி இருக்கார்??? கேட்டாள் ஹாசினி.

‘ஆங் அப்பாவா??? ம்... அவர் கூட சென்னைதான் வந்திட்டு இருக்கார். காலையிலே போன்லே பேசினார் என்கிட்டே..’ என்றாள் ஹரிணி படபடவென. அவர் திருமண வீடுகளில் சமையல் வேலை செய்வது தெரியாதே சுஹாசினிக்கு!!!

‘சரி நாளைக்கு அவரையும் கூட்டிட்டு நம்ம வீட்டுக்கு வந்திடு ஹரிணி. இவனுக்கு நாளைக்கு பிறந்தநாள்..’ என்றவள் மெல்ல கேட்டாள் ‘அப்பா இன்னமும் என் மேலே கோபமாதான் இருக்காரா???’

‘கோபம்!!! .ம்.. கொஞ்சம் இருக்குதான்.. நான் எப்படியாவது கூட்டிட்டு வரேன்..’ சொன்னாள் ஹரிணி.

அதே நேரத்தில் ஒரு வேளை விவேக் அங்கு வந்து நிற்பானோ என்று ஒரு எண்ணம் அவள் அடி மனதில் இருக்கத்தான் செய்தது.

வீட்டுக்கு வந்திருந்தான் விவேக். எப்போதும் போல் எல்லாரும் உறங்கி விட்டிருந்தனர். அறையை அடைந்து கதவை சாத்திக்கொண்டான் விவேக். நிசப்தம் மட்டுமே குடி இருந்தது அங்கே. அவனுக்கு துணையாக அங்கே இருந்தது அந்த ஈஸி சேர் மட்டுமே!!!

சிறு வயது முதலே அவனுக்கும் அவனது அப்பாவுக்குமான பந்தத்துக்கு சாட்சியாக நின்றிருக்கிறது இந்த சாய்வு நாற்காலி.

உடை மாற்றிக்கொண்டு வந்து அந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டான் அவன்.

நாளை!!! மூன்று வருடங்களுக்கு முன்னால் அந்த தினம் அவன் வாழ்வில் வராமலே இருந்திருக்கலாம். வந்து விட்டதே என்ன செய்ய!!! மூன்று வருடங்களாக இந்த நாளில் அவன் இந்த அறையை விட்டு வெளியே வருவதில்லை. யாருடனும் பேசுவதும் இல்லை.

‘அப்பா!!!’ வாய்விட்டு சொன்னான் அவன். இதயம் இமயமலையாய் கனத்து வலித்தது.

கண்களை மூடிக்கொண்டான் விவேக். அப்பாவின் மடியில் படுத்துக்கொள்ளும் ஒரு உணர்வு தந்தது அந்த சாய்வு நாற்காலி. சிறு வயதில் பல முறை இதில் அமர்ந்துக்கொண்டு அவனை தன் மீது சாய்த்துக்கொண்டிருக்கிறார் அப்பா.

அப்போது இவனுக்கு ஒன்பது வயதிருக்கும். ஏதோ ஒரு உடல் நல குறைவு. சிறியதாய் ஒரு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலை. அப்பாவே ஒரு குழந்தைகள் நல மருத்துவர் என்பதால் அவரே இதை செய்து விடுவதென முடிவெடுத்திருந்தார்.

அவனுக்கு அவர் என்ன செய்ய போகிறார் என்பதை அவனுக்கு புரியும் வகையில் விளக்கியும் விட்டிருந்தார் அவர். எல்லாவற்றுக்கும் பயப்படும் விவேக்குக்கு இதற்கு ஏனோ

பயமே இல்லை. மறுநாள் அறுவை சிகிச்சை எனும் நிலை. இதே சாய்வு நாற்காலியில் அவரும் சாய்ந்துக்கொண்டு அவனை தன் மீது சாய்த்துக்கொண்டார்.

‘நாளைக்கு எதுக்கும் பயப்படகூடாது சரியாடா கண்ணா..’ என்றார் மெதுவாக.

‘அப்பா... எனக்கு பயமே இல்லைபா. நீங்கதான் என் கூடவே இருப்பீங்களே. எங்க அப்பா என்னை பத்திரமா பார்த்துப்பார். எப்பவும் என் கூடவே இருப்பார் ’ சொல்லிவிட்டு கண்களை மூடிக்கொண்டு அவர் மீது சாய்ந்துக்கொண்டான்.

அப்போது அவர் அவனை அணைத்துக்கொண்ட அந்த அணைப்பு இன்னமும் அப்படியே நினைவில் இருக்கிறது விவேக்குக்கு. அடி மனதில் அந்த நேரத்தில் அப்பாவுக்கும் பயம் இருந்திருக்குமா??? அப்பாவுக்கு கூட பயம்வருமா தெரியவில்லை இவனுக்கு.

முத்தம் கொடுத்துக்கொண்டே இருந்தார் இரவு முழுவதும். அவை இப்போது நிகழந்தது போலே நினைவிருக்கிறது அவனுக்கு. கன்னத்தில் அந்த ஈரம் கூட மிச்சமிருப்பதை போல் ஒரு உணர்வு.

‘அப்பா!!!’ என்றான் மறுபடியும். ‘எங்க அப்பா எங்கே இருந்தாலும் என் கூடவே இருப்பார்’

தனது கைப்பேசியில் அந்த புகைப்படத்தை எடுத்தான். அது சிறு வயதில் அப்பாவின் மடியில் அவன் அமர்ந்திருக்கும் போது எடுத்த புகைப்படம். இப்போதும் அவன் அதே நிலையில் இருப்பது போலேதான் தோன்றுகிறது அவனுக்கு.

அப்பாவை பற்றிய எண்ணங்களிலும் அவருடைய புகைப்படங்களுடனுமே அந்த சாய்வு நாற்காலியில் கழிந்துக்கொண்டிருந்தது அவனது இரவு. துளியும் உறக்கம் இல்லை. விடிந்தும் விட்டது அன்றைய நாள். ஆனாலும் அந்த இடத்தை விட்டுக்கூட அசைய மனமில்லை விவேக்குக்கு

அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு தெரியும். அவன் அன்றைய தினம் அறையை விட்டு வெளியே வர மாட்டான் என தெரியும். சாப்பிடக்கூட மாட்டன்தான் அதனால் அம்மா கூட அவனை தொந்தரவு செய்யக்கூட மாட்டார்.

நேரம் காலை எட்டு மணி. அப்போது அவனது கைப்பேசிக்கு வந்தது அந்த அழைப்பு. ஏதோ ஒரு எண் ஒளிர்ந்தது அதில்.

‘யாராக இருக்கும் என ஒரு நொடி யோசனை. ஒரு வேளை ஸ்ரீநிவாசனாக இருக்குமோ மறுநொடியில் அடுத்த எண்ணம். ஆனாலும் அழைப்பை ஏற்கவில்லை அவன். அப்பாவின் நினைவுகளிலிருந்து வெளி வர கொஞ்சமும் விரும்பவில்லை.

மறுபடியும் அப்பாவுக்குள்ளேயே மூழ்கி கரைந்து... சில நிமிடங்கள் கழித்து மறுபடியும் அழைப்பு. அதே எண். ஏற்கவில்லை அவன்.

‘‘இல்லை எனக்கு யாரும் வேண்டாம் இந்த பூமியில். அப்பாவின் நினைவுகள் மட்டுமே போதும்.’

நிமிடங்கள் கரைய மறுபடியும் அழைப்பு.. இப்போது இவன் மனமும் கொஞ்சம் கரைகிறது. இருப்பினும் அவன் இப்படியே அமர்ந்திருக்க ஒலித்து நின்று விட்டது கைப்பேசி

‘பாவம் அது ஒரு குழந்தை. அதன் மனதை எதற்கு காயப்படுத்துவதாம்??? எடுத்து வாழ்த்து மட்டும் சொல்லிவிடலாம்..’ இப்போது தோன்றுகிறது அவனுக்கு..

வேண்டாம் யாரும் வேண்டாம் எனக்கு என்று ஒரு பக்கம். பாவம் அந்த பிஞ்சு மனம் என்று ஒரு பக்கம். பல நூறு எண்ண அலைகள் அடிக்க ஒரு கட்டத்தில் விரல்கள் அந்த எண்ணை அழைத்தும் விட்டது. இது அவன் எண்தானா மனம் இப்போது யோசிக்க அதற்குள் மறுமுனையில் ஏற்கப்பட்டது அழைப்பு.

‘ஹலோ... விவேக் அங்கிள்..’ ........ ஸ்ரீனிவாசன் உற்சாகமாக கூவினான் மறுபுறம்.

‘ஏனடா ஏன் எனக்காக இப்படி தவிக்கிறாய்??? நிஜமாகவே என்ன பந்தமாம் இது???.’ அவனது அன்பில்

தோற்றுப்போனதால் ஒரு சின்ன புன்னகை எழுந்தது விவேக்கின் முகத்தில்.

‘மெனி மோர் ஹாப்பி ரிடர்ன்ஸ்டா கண்ணா..’ என்றான் இதமாக.

‘தேங்க் யூ அங்கிள்... ஈவினிங் வரீங்களா அங்கிள்...’

‘ஸ்ரீனிவாசா... நான் நேத்தே சொன்னேன்தானே. பிடிவாதம் பிடிக்க கூடாது. நீ நல்லா என்ஜாய் பண்ணு சரியா..’ சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்திருந்தான் விவேக். கைபேசியை அணைத்துவிட்டு கண்களை மூடிக்கொண்டான் மறுபடியும்.

‘அப்பா!!!’ ‘எனக்கு வேறெதுவும் வேண்டாம். அப்பா மட்டுமே வேண்டும். அவர் என் கண் முன்னாலே வரவேண்டும்’ குழந்தை போல் தவித்தது அவன் மனம்.

நிமடங்கள் கரைய ஏதோ ஒரு கரம் அவன் தலை வருடுகிறது. சட்டென அவன் கண் திறக்க அங்கே நின்றிருந்தார் அப்பா!!! அவன் அப்பா!! ஸ்ரீனிவாசன்!!! அவரேதான்!!!

‘என்னடா கண்ணா???’ புன்னகை ஆடும் அவர் முகம் அவன் அருகில்

‘அப்பா... அப்பா... அப்பா வந்துடீங்களாபா???’’

‘ஆமாம் நான் வந்திட்டேன். சரி நீ என்ன பண்ணிட்டு இருக்கே??? உனக்கென்ன அவ்வளவு பிடிவாதம் அந்த

பையன்தான் அவ்வளவு பாசமா உன்னை கூப்பிடறான் இல்ல. போயிட்டு வாடா’ அப்பாவின் அதே அதட்டலான தொனி.

‘பா.. எனக்கு.. நீங்க மட்டும் போதும்... அவங்க எல்லாம் வேண்டாம்..’

‘டேய்... முதல்லே கிளம்பு...அங்கே போகாம எப்படி நீ தாமோதரனை பாக்குறது???’

‘தாமோதரனா??? யாருப்பா.. அது ..’

..................................

‘அப்பா... அப்பா... எங்கேபா இருக்கீங்க??? அப்பா..’ காணவில்லை அவரை.

‘அப்பா!!!’ திடுக்கென கண் திறந்தான் விவேக். கனவா??? அப்பா வந்தது கனவிலா??? உயிர் வரை பதறிய பதற்றம் குறைய சில நிமிடங்கள் பிடித்தது அவனுக்கு.

‘வரவில்லையா??? அப்பா நிஜமாக வரவில்லையா??? தளர்ந்துதான் போனது உள்ளம். ஒரு சில நொடிகள் பெருமூச்சுடனே கழிந்தது.

பின்னர் நேரம் பார்த்தான். மதியம் பன்னிரண்டு.

‘எப்படி உறங்கிப்போனேன்???’ புரியவில்லை அவனுக்கு. கைகெட்டும் தூரத்தில் இருந்த தண்ணீரை எடுத்து மடமடவென பருகினான் விவேக். அந்த கனவு மறுபடியும் மனதில் ஓட

‘முதல்லே கிளம்பு...அங்கே போகாம எப்படி நீ தாமோதரனை பாக்குறது???’ கனவில் அப்பா சொன்னது நினைவு வர ‘தாமோதரனா??? யாரந்த தாமோதரன் கேள்வி பிறந்தது அவனுக்குள்ளே!!!

நேற்று மதியம் மும்பை விமான நிலையத்தில் அவன் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது வந்ததே ஒரு அழைப்பு. 'நான் தாமோதரன் பேசறேன்..' என்றாரே ஒரு வயதான மனிதர். காரணமே இல்லாமல் நினைவுக்கு வந்தது அவனுக்கு. தலையை குலுக்கிக்கொண்டான் அவன்.

அதே நேரத்தில் அங்கே அந்த ஹோடேலில் ஹரிணியின் கைபேசிக்கு ஐந்தாவது முறையாக வந்தது சுஹாசினியின் அழைப்பு.

‘அப்பாவை என்கிட்டே பேச சொல்லேன். ஏன் இப்படி பண்றார்.. ப்ளீஸ்... ஹரிணி.. அவரை எப்படியாவது கூட்டிட்டு வா ’

காலையிலேயே பேருந்து நிலையத்திலிருந்து அவரை தான் தங்கி இருக்கும் ஹோட்டல் அறைக்கு அழைத்து வந்திருந்தாள் ஹரிணி.

மார்புக்கு குறுக்காக கைகளை கட்டிக்கொண்டு இறுக்கமான பாவத்துடன் அமர்ந்திருந்தார் தாமோதரன். ‘இத்தனை நாள் இல்லாத பாசம் இப்போது என்னவாம்???’

‘நான் யார்கிட்டேயும் பேசற மாதிரி இல்லை. எங்கேயும் வர மாதிரியும் இல்லை.’ காலையிலிருந்து இதையேதான் சொல்லிக்கொண்டிருக்கிறார் அவர்.

‘ட்ரை பண்ணிட்டுதான் இருக்கேன். மாட்டேங்கறார் என்ன பண்ண???’ கொஞ்சம் டைம் கொடு சொல்றேன்..’ அழைப்பை துண்டித்தாள் ஹரணி. உண்மையில் அவரை அதிகம் கட்டாயபடுத்தவில்லை ஹரிணி. இவர் அங்கே வந்து ஒரு வேளை விவேக்கும் அங்கு வந்து அவன் இவரை பார்த்துவிட்டால்???’

கனவில் வந்தாலும் அதட்டிவிட்டு போவதுதான் இந்த மனிதரின் வேலை. தாமோதரன் யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும் நான் எங்கேயும் போவதாக இல்லை...’ தனக்குள்ளே மருகிக்கொண்டான் விவேக்.

‘ஸ்ரீனிவாசன் சொன்னா கேட்க மாட்டீங்களா அங்கிள்..’ இப்போது அந்த ஸ்ரீனிவாசனின் வார்த்தைகள் அவன் செவிகளில்.

‘கேட்க மாட்டேன். எந்த ஸ்ரீநிவாசன் சொன்னாலும் கேட்கமாட்டேன்’ சொல்லிக்கொண்டானே தவிர மெல்ல எழுந்தான் சாய்வு நாற்காலியை விட்டு. கனவேதான் என்றாலும் அப்பா சொன்ன வார்த்தையை எந்த நிலையிலும் அவன் தட்டுவதாக இல்லை.

மதியம் ஒன்றரை மணி. அந்த ஹோட்டல் அறையை விட்டு கிளம்பினாள் ஹரிணி.

‘உங்க பேரன் பிறந்தநாள் பார்டிக்குதான் போறேன். கடைசி தடவையா கேட்கிறேன் வரீங்களா..’ அவர் வர மாட்டார் என அறிந்தேதான் கேட்டாள் அவள்.

‘நான் அஞ்சு மணிக்கு கல்யாண மண்டபத்தில் இருக்கணும். நான் வேறே எங்கேயும் வர மாதிரி இல்ல. நீ தாராளமா போகலாம்’ பதில் வந்தது இறுக்கமாக. நகர்ந்தாள் ஹரிணி.

‘பேரனா??? அவன் எப்படி இருப்பான்???. வடபழனியில்தானே அவர்கள் வீடு என்றாள் ஹரிணி. அங்கே தான் மண்டபமும். ஒரு முறை பார்த்துவிடலாமா அவனை??? என் பேரனை ஒரு முறை பார்த்துவிடலாமா???’ தவிக்க ஆரம்பித்தது தாமோதரனின் உள்ளம்.

அதே நேரத்தில் சிறுவன் ஸ்ரீனிவாசனின் வீட்டின் முன்னால் வந்து நின்றது விவேக்கின் கார். இந்த நாளில் இவன் காரை எடுத்துக்கொண்டு வெளியே வந்தது வீட்டில் உள்ளவர்களுக்கு கூட ஆச்சரியமே!!!

‘பைத்தியம் ஆக்குகிறார்கள். ஸ்ரீநிவாசன் என்ற பெயர் கொண்ட எல்லாருமே என்னை பைத்தியமாக ஆக்குகிறார்கள். அவர்கள் பின்னாலேயே சுத்த வைக்கிறார்கள். என்ன மந்திரம்

இருக்கிறது இவர்களிடத்தில்???'' தனக்குத்தானே புலம்பிக்கொண்டே இறங்கினான்.

அழகாய் இருந்தது அவர்கள் வீடு. கை நிறைய பரிசு பொருட்களுடன் உள்ளே நுழைந்தான் விவேக். வீட்டு வாசல் படியிலேயே கன்னத்தில் கை வைத்துக்கொண்டு ஏதோ யோசனையுடன் கண்களை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தான் ஸ்ரீனிவாசன். சத்தம் வராமல் அவன் அருகில் சென்று அமர்ந்துக்கொண்டான் விவேக். அவனை கவனிக்கவே இல்லை சிறுவன்.

'என்ன யோசனையாம்.??? ஒரு வேளை எனக்காகத்தான் காத்திருக்கிறானோ???' புன்னகையுடன் இரண்டு நிமிடங்கள் அவனையே ரசித்திருந்தவன் ரகசியமான குரலில் மெல்ல அழைத்தான் விவேக்.

'மிஸ்டர் ஸ்ரீனிவாசன்!!!'

# அத்தியாயம் 8

இவனது குரல் கேட்டதுதான் தாமதம் அகமும் முகமும் மலர சரேலென திரும்பினான் ஸ்ரீநிவாசன். நிச்சியமாக இவன் வருவானோ என அவன் காத்திருந்தது போலவே தோன்றியது விவேக்குக்கு.

'ஹேய்.... விவேக் அங்கிள்..' தாவி வந்து கட்டிக்கொண்டான் அவன் கழுத்தை. இப்போது ஸ்ரீனிவாசனின் முகத்தில் சின்னதாய் ஒரு வெற்றி சிரிப்பு!!!

'அவனால் செய்யவே முடியாத ஒரு வேலையை அவர் சொல்ல, அவர் சொல்வதை முதலில் மறுத்து, பின் தயங்கி, கடைசியில், அவர் வழிக்கு வந்து, அந்த வேலையை இவன் சரியாக செய்து முடிக்கும் போது அப்பாவின் முகத்தில் எப்போதும் தேங்கி நிற்கும் இதே வெற்றி சிரிப்பு!!!

அவனுக்கு ஒரு சில நேரம் கோபம் கூட வரும் அவரது இந்த சிரிப்பை பார்க்கும் போது!!!

'போங்கப்பா ...என்னை செய்ய வெச்சிட்டீங்க இல்ல... ரொம்ப பிடிவாதம்பா உங்களுக்கு 'என்பான் அவரிடம்.

'உன்னை கொஞ்சம் கஷ்டம்தான்டா படுத்தறேன். ஆனா அது பின்னாலே உனக்கு எவ்வளவு உதவியா இருக்குன்னு நீயே பார்ப்பே. அப்போ நினைச்சுப்பே அப்பாவை.' சொல்வார் அவர்.

இப்போது நினைத்துக்கொள்கிறானே அவரை!!! ஒவ்வொரு நொடியும் நினைத்துக்கொள்கிறானே!!!

'ரொம்ப பிடிவாதக்காரன் ஸ்ரீனிவாசா நீ' என்றான் விவேக் அவன் கன்னம் வருடியபடியே.

இவனிடம் பேசும்போது ஏதோ தனது அப்பாவிடம் பேசிக்கொண்டிருப்பதை போன்றதொரு நிறைவு வருவதை அவனால் தவிர்க்க முடியவில்லை.

'எல்லாம் நல்லதுக்குதான் அங்கிள்...... வாங்க..' என்று பெரிய மனிதன் போல் சொல்லியபடியே அவன் கையை பற்றி இழுத்துக்கொண்டே ஸ்ரீநிவாசன் நடக்க .கொஞ்சம் சிரித்துத்தான் விட்டான் விவேக். இன்றைய நாளில், அவன் இருக்கும் மனநிலையில் அவன் சிரிப்பான் என விவேக்கே எதிர்ப்பார்க்கவில்லைதான்.

எல்லாம் நல்லதுக்குதான்!!! இப்படிதான் அடிக்கடி சொல்வார் அவன் தந்தையும். இன்று என்ன வைத்திருக்கிறாரோ அவனுக்காக!!! என்ன செய்ய காத்திருக்கிறாரோ!!!

யோசித்தவனுக்கு திடீரென அந்த கனவின் ஞாபகம் 'அங்கே போகாம எப்படி நீ தாமோதரனை பாக்குறது???' அப்பா கனவில் ஏதோ சொன்னது போலே இருந்ததே!!!

'ஸ்ரீனிவாசா' என்றான் விவேக். 'உனக்கு தாமோதரன்னு யாரவது ஃப்ரெண்ட்ஸ் இருக்காங்களாபா??? இல்லை அப்படி

யாரைவயவது தெரியுமா???' விவேக் கொஞ்சம் யோசனையுடன் கேட்க

'தாமோதரனா அப்படி யாரும் இல்லையே அங்கிள். ஆங்... எங்க தாத்தா பேர் தாமோதரன். எங்க அம்மா சொல்லி இருக்காங்க. ஆனா அவர் எங்கே இருக்கார்ன்னு தெரியலை..'

'தாத்தாவா???' யோசித்தபடியே வீட்டுக்குள் ஸ்ரீனிவாசனுடன் நுழைந்தான் விவேக்.

இன்னும் விருந்தினர்கள் யாரும் வந்திருக்கவில்லை போலும். பிறந்தநாள் விழாவுக்கான அலங்காரங்களுடன் இருந்த போதும் வீடு சற்றே அமைதியாகவே இருந்தது.

'வாங்க.. வாங்க... வாங்க..' சந்தோஷம் மட்டுமே நிறைந்து இருந்த குரலில் வரவேற்றாள் சுஹாசினி. 'நீங்க வந்தது பெர்சனலா ரொம்ப ரொம்ப சந்தோஷம் எனக்கு'

அவன் சென்று சோபாவில் அமர அவன் நடையையும், அவன் அமர்ந்த தோரணையையும் பார்த்து நெகிழ்ந்து போனாள் அவள். அப்படியே அவனது தந்தையை நினைவு படுத்தினான் விவேக்.

கொஞ்சமாகவா கடன் பட்டிருக்கிறாள் அவருக்கு. ஒரு ஆழ்ந்த மூச்சுடன் புன்னகைத்தபடியே அவனை பார்த்து சொன்னாள்

‘அப்படியே எங்க டாக்டரை பார்த்த மாதிரியே இருக்கு. சட்டென நிமிர்ந்து பளீரென புன்னகைத்தான் விவேக்.

‘எங்கப்பாவை தெரிஞ்சவங்க என்னை பார்த்தா அப்படிதான் சொல்லுவாங்க. அவர் கிட்டே இருந்தது எல்லாத்தையும்... எல்லாத்தையும் எனக்கு கொடுத்திருக்கார் மிசஸ் ஹாசினி. எல்லாத்தையும் கொடுத்திட்டு இப்போ அவர் மட்டும்.....’ சொல்லிக்கொண்டே போனவனின் குரல் கொஞ்சம் ஸ்ருதி தப்பியது

‘மிஸ்டர் விவேக்..’ என்றாள் சுஹாசினி கொஞ்சம் தளர்ந்தவனை கலைத்து நிமிர்த்தி......

‘நான் ஒண்ணு கேக்கறேன். இப்போ இங்கே திடீர்னு உங்க அப்பா உங்க முன்னாடி வந்து நின்னுட்டா, நான் அவரை கூட்டிட்டு வந்து நிறுத்திட்டா என்ன செய்வீங்க???’

அந்த கேள்வியிலேயே கொஞ்சம் தடுமாறிப்போனான் விவேக்!!!

‘நீ.. நீங்க வேறே... அவர் வந்து நின்னுட்டா ...நான் அப்படியே... என்ன சொல்றதுன்னு தெரியலை...... எனக்கு அப்புறம் இந்த உலகத்திலே வேறே ஒண்ணுமே வேண்டாமே ஹாசினி..... என்கிட்டே இருக்கறது, என் சொத்து, சுகம் எல்லாத்தையும் உங்ககிட்டேயே கொடுத்திட்டு அவரை மட்டும் கூட்டிட்டு போயிடுவேன்..’

சின்ன குழந்தை போல் உணர்ச்சி வசப்பட்ட குரலில் அவன் சொல்லிக்கொண்டே போக நீர் சேர்ந்த விழிகளின் வழியே அவனையே பார்த்திருந்தாள் சுஹாசினி. அவள் முகம் பார்த்து சட்டென சுதாரித்தான் விவேக்

'நான் அப்படித்தான். அப்பாங்கிற வார்த்தையிலேயே உணர்ச்சி வசப்பட்டுடுவேன் .என்னோட ஸ்ட்ராங் பாயின்டும் அவர்தான். வீக் பாயின்டும் அவர்தான். நீங்க வித்தியாசமா நினைக்காதீங்க...' சொல்லிவிட்டு அருகில் நின்று அவனையே திகைப்புடன் பார்த்திருந்த ஸ்ரீனிவாசனை இழுத்து தனது அருகில் அமர்த்திக்கொண்டான் விவேக்..

'இதெல்லாம் உனக்குத்தான்..' தன் கையிலிருந்த பரிசு பொருட்களை அவனிடம் கொடுத்து, அவனிடம் ஏதேதோ பேசி தன்னை இயல்புக்கு திருப்பிக்கொண்டிருந்த விவேக்கிடமிருந்து பார்வையை அகற்றி அங்கே சற்றே தள்ளியிருந்த அந்த அலமாரியில் இருந்த அந்த புகைப்படத்தை பார்த்தாள் சுஹாசினி!!! இப்போதே அந்த புகைப்படத்தை எடுத்து வந்து விவேக்கிடம் காட்டி விடவேண்டுமென்று தோன்றியது அவளுக்கு!!!

'என்ன செய்வான் இவன்???' மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப்போவனா??? நிழல் படம் சரியாக வருமா??? இல்லை நிஜமே எதிரில் வந்து நிற்பதுதான் அழகா??? நிஜத்தை எப்படி

இங்கே கொண்டு வர??? இல்லை நிஜம் இருக்கும் இடத்திற்கு இவனை அழைத்து சென்று விடலாமா??? அவளுக்குள்ளே பல நூறு கேள்விகள்!!!

படு சுவாரஸ்யமாக ஸ்ரீனிவாசன் ஏதோ சொல்லிகொண்டிருக்க, கன்னத்தில் கை வைத்துக்கொண்டு அதை விவேக் கேட்டுக்கொண்டிருக்க

‘விவேக் என்ன சாப்பிடறீங்க???’ கேட்டாள் சுஹாசினி.

‘இல்ல ஹாசினி.. நான் இன்னைக்கு எதுவும் சாப்பிட மாட்டேன்..’

‘ஏன் விரதமா???’ அவள் யோசிக்காமல் கேட்க

‘ம்??? கொஞ்சம் வறட்சி கலந்த புன்னகை அவன் உதடுகளில். ‘ம்.....அப்படிக்கூட வெச்சுக்கலாம்...’ என்றான் மெதுவாக. அவன் முக பாவம் அவளுக்கு சட்டென அந்த தினத்தை ஞாபகப்படுத்தியது.

சற்றே அதிர்ந்து போனாள். இன்று தானே!!! ஆம்!!! இன்று தானே அந்த தினம்!!! மெல்ல எல்லாம் நினைவுக்கு வந்தன அவளுக்கு.

‘ஓ!!! ஐ ஆம் சாரி விவேக். இன்னைக்கு உங்க அப்பாவோட நினைவு நாள். ஏதேதோ ஞாபகத்திலே இதை நான் மறந்திட்டேன். வெரி சாரி இன்னைக்கு இங்கே பார்ட்டிக்கு

வர சொல்லி நாங்க உங்களை கஷ்ட படுத்திட்டோமோ…' அவள் கேட்க

'அதெல்லாம் ஒண்ணுமில்லை விடுங்க. நம்ம ஸ்ரீநிவாசன் சந்தோஷமா இருந்தா போதும்' சிறுவனின் தோள் அணைத்து இவன் சொல்ல..

'உங்களுக்கு அப்பா இல்லையா அங்கிள்..' கொஞ்சம் திகைத்து போன குரலில் கேட்டான் ஸ்ரீநிவாசன்.

'அதெல்லாம் இருக்காங்க. அவங்க அப்பா இங்கேதான் இருக்காங்க. நான் காமிக்கறேன் பாருங்க..' சொல்லிக்கொண்டே அவள் நகர்ப்போன நேரத்தில் உள்ளே நுழைந்தது அந்த அதிர்வான குரல்

'ஹாசினி!!!'

அதே நேரத்தில் வடபழனி செல்லும் பேருந்தில் வந்துக்கொண்டிருந்தார் அவர்!!! தாமோதரன்!!! காலையில் ஹரிணி சொன்ன சுஹாசினி வீட்டு முகவரி அவர் மனதில் ஓடிக்கொண்டிருந்தது.

பேரனை பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் ஒரு புறம்!!! அதே நேரத்தில் இத்தனை நாட்களாய் அவரை கட்டுப்படுத்தி வைத்திருக்கும் அந்த வைராக்கியம் ஒரு புறம். அங்கே போவோமா??? வேண்டாமா என்கிற குழப்பம் மனமெங்கும் மேலோங்க வந்துக்கொண்டிருந்தார் அவர்.

இரண்டு பெண்களை பெற்றெடுத்த தகப்பன். பெண்களை பெற்றதற்காக என்றுமே வருத்தப்படாத தகப்பன்.. இரண்டு பெண்களும் நிரம்ப படித்திருக்கிறார்கள். சொந்தக்காலில் வேரூன்றி இருக்கிறார்கள்!!! ஆனால் அவரது மனதை பற்றி, அவரது வருத்தங்களை பற்றி என்றாவது யோசித்திருக்கிரார்களா அவர் மகள்கள்???

இந்த கேள்வி அவருக்குள்ளே எத்தனை முறை எழுந்தாலும், என்னதான் மாற்றி மாற்றி யோசிக்க முயன்றாலும் இல்லை என்ற வலிக்கொடுக்கும் பதிலே அவருக்கு கிடைக்கிறது.

‘‘இந்த உலகத்தில் காதல் என்ற உணர்வு மிக அழகானதாமே??? கதைகளிலும், கவிதைகளிலும், சினிமாவிலும் அதை போற்றி புகழ்கிறார்கள்’’

‘‘இருக்கட்டும்!!! உலகத்தின் மிக அற்புதமான உணர்வாக காதலே இருக்கட்டும். ஆனால் தந்தை பாசம். காதல் வந்தால் தந்தை பாசம் காணாமல் போய் விடுமா என்ன???’’

‘‘என்னை விட காதலே பெரிதென என்னை பற்றி கொஞ்சமும் கவலை படாமல் பதினான்கு வருடங்களாக என்னை விட்டு விலகி இருக்கும் பெரிய மகள். இப்போது அவளுக்கு எங்கிருந்து திடீரென வருகிறதாம் என் மீது பாசம்!!!’’

“நான் என்றில்லை இந்த உலகத்தில் இருக்கும் எல்லாரையும் விட தான் நினைப்பதே பெரிதென நினைக்கும் சின்ன மகள். அவளுக்கும் இன்றைக்கு ஏனோ என் மீது திடீர் பாசம். காலையில் பேருந்து நிலையம் வரை வந்து என்னை அழைத்து வந்து அவளுடன் தங்க வைத்து...” இதையெல்லாம் நினைக்க நினைக்க வலிதான் நிரம்பியது அவருக்குள்ளே.

‘இல்லை!!! நான் யாரையும் சார்ந்து இல்லை!!!’ கடைசி வரை என்னால் இப்படியே வாழ்ந்து விட முடியும்!!!’ தனக்குள் சொல்லிக்கொண்டே பேருந்தின் இருக்கையில் பின்னால் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டார் தாமோதரன்!!!

ஆனாலும் மனதின் ஓரத்தில் சின்னதாய் ஒரு ஏக்கம்!!! நிஜமான அன்புடன் சேர்ந்த ‘அப்பா..’ என்ற ஒரு அழைப்புக்கான ஒரு ஏக்கம்!!!

அதே நேரத்தில் அங்கே சுஹாசினியின் வீட்டில்... உள்ளே வந்திருந்தாள் ஹரிணி!!!

‘அவங்க அப்பா இங்கேதான் இருக்காங்க. நான் காமிக்கறேன் பாருங்க….’. அவள் உள்ளே நுழையும் நேரத்தில் சுஹாசினி சொன்ன அந்த வார்த்தைகள் அவளை அதிர வைத்தன.

‘என்ன செய்துக்கொண்டிருக்கிறாள் இவள்??? நான் எது நடக்ககூடாது என்று நினைத்தேனோ அதையே செய்கிறாளே இவள்.

‘ஹாசனி..’ என்றபடியே ஓடி வந்தாள் அவளருகே!!! அவளை பார்த்ததும் மெலிதான மாற்றம் விவேக்கின் முகத்திலும் ஸ்ரீனிவாசனின் முகத்திலும்.

தங்கையை பார்த்ததும் மகிழ்வான புன்னகையுடன் வரவேற்றாள் சுஹாசினி.

‘என்ன பார்ட்டிக்கு யாரையுமே காணோம். எல்லா ஏற்பாடும் ரெடியா..’ அவசரமாக பேச்சை மாற்றினாள் இவள்.

‘எல்லாம் ரெடி. இரு வரேன். ஒரு நிமிஷம். அந்த போட்டோ…’ என்றபடி சுஹாசினி அலமாரியின் அருகில் செல்ல அவள் கையை பிடித்து உள்ளே இழுத்துக்கொண்டு நடந்தாள் ஹரிணி.

‘நீ உள்ளே வா.. உன்கிட்டே பேசணும்…’

அவர்கள் இருவரும் உள்ளே நகர இவனுக்கு அப்பா இல்லை என்ற அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளாதவன் போலவே விவேக்கின் முகத்தையே பார்த்திருந்தான் ஸ்ரீனிவாசன்.

மெல்ல திரும்பி அவன் முகம் படித்து, தனது முகத்தில் புன்னகையை பூசிக்கொண்டு கேட்டான் விவேக்.

‘பர்த்டே பேபிக்கு என்ன யோசனை???

‘அங்கிள் உங்கப்பாக்கு என்னாச்சு..’ அவன் கேட்க

‘அதெல்லாம் ஒண்ணும் ஆகலை. நீ கிஃப்ட் எல்லாம் பிரிச்சு பார்த்தியா.. ’உனக்கு பிடிச்சிருக்கா. இல்லை வேறெதுவும் இன்னும் பெரிய கிஃப்ட்டா வாங்குவோமா???’ என்றான் பேச்சை திசை திருப்பியவாறு.

பிறந்தநாளன்று இந்த சிறுவனின் மனதை தேவை இல்லமல் வருத்தப்பட வைப்பானேன்!!!

‘அது இருக்கட்டும். உங்களுக்கு உங்க அப்பான்னா ரொம்ப பிடிக்குமா அங்கிள்..’ விடுவதாக இல்லை ஸ்ரீநிவாசன்.

‘ரொம்ப ரொம்ப பிடிக்கும்டா..’ என்றான் நெகிழ்ந்து தளர்ந்தவனாய் ‘அவர்தான் எனக்கு எல்லாம்..

‘அவங்க எப்படி இருப்பாங்க???’ அடுத்த கேள்வி.

‘பார்க்கணுமா உனக்கு???’ என்றபடியே தனது கைப்பேசியில் இருந்த அவரது புகைப்படத்தை அவனுக்கு காட்டினான் விவேக்.

‘அங்கிள்... நான் இவரை எங்கேயோ பார்த்திருக்கேன்...’ மின்னும் கண்களுடன் சட்டென சொன்னான் ஸ்ரீநிவாசன்.

‘இவரையா???’ எங்கேடா???’

‘தெரியலை. ஆனா பார்த்திருக்கேன். எனக்கு இந்த ஃபேஸ் நல்லா ஞாபகம் இருக்கு. நிறைய தடவை பார்த்தா மாதிரி இருக்கு’ என்றான் யோசனையுடன்.

‘ஒரு வேளை... சின்ன வயசிலே பார்த்திருப்பே..’

‘இல்ல.. இப்போ ரீசென்ட்டா பார்த்திருக்கேன்...’ என்றவனை வியப்புடன் பார்த்தான் விவேக்.

அதே நேரத்தில் உள்ளே

‘இந்த விஷயம் தெரிஞ்சா விவேக் ரொம்ப சந்தோஷ படுவான் ஹரிணி’ சுஹாசினி ஹரிணியிடம் திரும்ப திரும்ப மன்றாடிக்கொண்டிருக்க

‘அதனாலேதான் அதை அவன்கிட்டே சொல்லாதேன்னு சொல்றேன்’ சுஹாசினியிடம் பதிலுக்கு கத்திக்கொண்டிருந்தாள் ஹரிணி

‘ஹரிணி.. விவேக் அப்பா நம்ம ஸ்ரீநிவாசனுக்கு....’ சுஹாசினி ஏதோ சொல்ல வர

‘நீ திரும்ப திரும்ப சொன்னதையே சொல்லிட்டு இருக்கே... எனக்கு எதை பத்தியும் கவலை இல்லை... அவனும் அவங்க அப்பாவும் என்னை வேண்டாம்னு தூக்கி போட்டவங்க. அவன் இன்னும் வருத்தப்படணும். நிறைய வருத்தப்படணும்..’ கருவினாள் ஹரிணி. சுஹாசினியிடம் நிறையவே அதிர்ச்சி.

‘இங்கே பாரு கல்யாண பேச்சுன்னு வந்தா நாம ரெண்டு பேரை வேண்டாம்னு சொன்னா ரெண்டு பேர் நம்மை வேண்டாம்னு சொல்வாங்க இதுக்கு போய்..’ சுஹாசினி சொல்ல

‘நீ கொஞ்சம் வாயை மூடறியா???’’ என பாய்ந்த ஹரிணியின் மனதிற்குள் இன்னொரு யோசனை. ‘திடீரென அப்பா இங்கே வந்து நின்று விட்டால்???’

அவசரமாக அவர் கைப்பேசிக்கு அழைத்தாள் அவள்!!!

‘இங்கே சுஹாசினி வீட்டிலே இன்னைக்கு பார்ட்டி இல்லை. கான்செல் ஆயிடுச்சு. அதனாலே நீங்க வர வேண்டாம். நீங்க உங்க வேலைக்கே போயிடுங்க..’ என்றாள் படபடவென.

‘பார்ட்டி இல்லைனா நான் வரக்கூடாதா???’ அப்பா நிதானமான குரலில் கேட்க

‘இல்லை வேண்டாம். நீங்க உங்க வேலைக்கே போங்க... ஹாசினி வேண்டாம்னு சொல்லிட்டா..’ சொல்லிவிட்டு துண்டித்திருந்தாள் அழைப்பை.

‘ஹேய்... உன்னை அறைஞ்சேன்னா எப்படி இருக்கும் தெரியுமா??? நான் எப்போ அப்பாவை வர வேண்டாம்னு சொன்னேன். முதல்லே அப்பா நம்பர் குடு நீ எனக்கு.’ வெடித்தாள் சுஹாசினி.

‘அந்த விவேக் எதுக்கு நம்ம வீட்டிலே... முதல்லே அவனை இங்கிருந்து கிளப்பு. அப்புறம் தரேன் அப்பா நம்பர். உனக்கு நானும், அப்பாவும் வேணுமா, அந்த விவேக் வேணுமா சீக்கிரம் முடிவு பண்ணு. இல்லைனா நான் இப்படியே கிளம்பறேன்..’

‘ஹரிணி… விவேக் நம்ம வீட்டு கெஸ்ட்…’

‘மண்ணாங்கட்டி!!! இப்போ நீ போய் போக சொல்றியா. நான் போய் சொல்லட்டுமா…’ எகிறினாள் ஹரிணி.

‘இவர்கள் வாவென்றால் வர வேண்டும்!!! வேண்டாமென்றால் வரக்கூடாதாமா??? யோசித்தபடியே ஒரு பெருமூச்சுடன் வடபழனி பேருந்து நிறுத்தத்தில் இறங்கினார் தாமோதரன்.

‘இருங்க அங்கிள்.. நான் யோசிச்சு சொல்றேன். இவரை எங்கே பார்த்திருக்கேன்னு..’ இன்னமும் நெற்றியை தேய்த்தபடியே யோசித்துக்கொண்டிருந்தான் ஸ்ரீநிவாசன்.

‘இப்போ நீ அவனை கிளப்ப போறியா இல்லையா???’’ இது ஹரிணி

‘முடியாது..’

‘அப்படியா??? முடியாதா?? சரி நான் இப்போ நான் என்ன பண்றேன் பாரு..’ சொல்லிக்கொண்டே ஹரிணி ஹாலுக்கு வர, அவள் பின்னாலேயே சுஹாசினி ஓடி வர என்ன தோன்றியதோ எழுந்து விட்டான் விவேக்.

‘நான் கிளம்பறேன். சுஹாசினி..’

‘அய்யோ.. ஏன் அதுக்குள்ளே??? இன்னும் பார்ட்டி ஆரம்பிக்கவே இல்லையே??? என் ஃப்ரெண்ட்ஸ் யாருமே வரலை அங்கிள் இன்னும்..’ பரபரத்தான் ஸ்ரீனிவாசன்

‘இல்லடா கண்ணா. இன்னொரு நாள் நான் ரிலாக்ஸ்டா வரேன். அப்போ உன் ஃப்ரெண்ட்ஸ் எல்லாரோடையும் நாம நிறைய பேசலாம்’ என்றவன் அவன் நெற்றியில் அழுத்தமாக ஒரு முத்தமிட்டு வாழ்த்திவிட்டு

‘ராகுல் எங்கே காணோம்....’ என்றான் சுஹாசினியை பார்த்து

‘அவர் வெளியிலே போயிருக்கார்.’

‘ஓ அப்போ கன்வே மை ரிகார்ட்ஸ் டு ஹிம்... நான் இன்னொரு நாள் வரேன்’ என அவளிடமும் விடைபெற்றுக்கொண்டு ஹரிணியை நிமிர்ந்து கூட பார்க்காமல் நடந்தான் விவேக்.. ஹரிணிக்குள் நிறையவே சந்தோஷமும், நிம்மதியும்.

காரை சரேலென்று கிளப்பிக்கொண்டு பறந்தான் அந்த மேகங்களின் நாயகன்.

‘திடீர்னு உங்கப்பா கண் முன்னாடி வந்திட்டா நீங்க என்ன பண்ணுவீங்க???’ ஹாசினியின் கேள்வியே அவனை சுற்றிக்கொண்டிருக்க கார் சாலையில் விரைந்துக்கொண்டிருக்க

அப்பா!!! நிஜமாவே திடீர்னு என் முன்னாடி வந்து நில்லுங்களேன்..’ என்றான் வாய்விட்டு. ‘அப்பா ப்ளீஸ்...பா..’

வந்துக்கொண்டிருந்தார் அவர்!!! அந்த சாலையின் இன்னொரு கோடியில் வந்துக்கொண்டிருந்தார் அவர். தாமோதரன்!!!

சுஹாசினி வீட்டில் இருந்த அந்த புகைப்படம் அவளது தந்தை தாமோதரனுடையது!!!

பல வருடங்களாகவே அவளுக்கு தெரிந்த ஆச்சர்யம்தானே அது!!!. உடையிலும் நடையிலும் பாவனைகளிலும் நிறையவே மாற்றம் இருந்தாலும் உருவத்தில் அவனது தந்தையை அப்படியே உரித்து வைத்தவராக அவளது தந்தை!!!

அவனது தந்தை இருந்தபோது ஓரிரு முறை அவரிடம் கூட சொல்லி இருக்கிறாள் இவள்.

‘நீங்க நம்ப மாட்டீங்க டாக்டர். எங்க அப்பா அப்படியே உங்களை மாதிரியே இருப்பார்..’

‘ஓ!!! ரியலி. ஒரு நாள் கண்டிப்பா மீட் பண்ணுவோம்..’ என்றார் அவர். ஆனால் அவர்கள் இருவரும் சந்தித்துக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏனோ சரியாக வாய்க்கவில்லை.

அது ஏனோ அப்போது அவர் அந்த உருவ ஒற்றுமையை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அதனால்தான் மகனிடமும் சொல்லவில்லையோ அவர்???

இவளது தந்தையிடம் கூட சொல்லி இருக்கிறாள்தான். அவரும் இதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால்

ஒவ்வொரு முறை அவனது தந்தையை பார்க்கும் போதும் ஹாசினி இந்த உருவ ஒற்றுமையை ரசித்துக்கொண்டேதான் இருப்பாள்.

தனது தாத்தாவை புகைப்படத்தில் மட்டுமே பார்த்திருக்கிறான் ஸ்ரீநிவாசன். நேரில் பார்த்திருந்தால் ஒரு வேளை அந்த உருவ ஒற்றுமை அவனுக்கு புரிந்திருக்குமோ என்னவோ!!! இவனது தந்தையின் புகைப்படத்தை பார்த்த மாத்திரத்தில் சொல்லி இருப்பானோ என்னவோ இந்த உண்மையை.

அவளது தந்தையை விவேக் பார்ப்பதில், அவரில் தன் தந்தையை அவன் காண்பதில், கண்டு மகிழ்ந்து போவதில் துளியும் விருப்பம் இல்லை ஹரிணிக்கு.

‘ஆனால் நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் என்ற ஒன்று இல்லையே!!!’

இவன் காரில் பறந்து வந்துக்கொண்டிருக்க மெதுவாய் சாலையில் நடந்து வந்துக்கொண்டிருந்தார் தாமோதரன்.

‘அப்பா ப்ளீஸ் வாங்கப்பா…’ இன்னொரு முறையாக வாய்விட்டு சொன்னான் நம் கேப்டன் விவேக் ஸ்ரீனிவாசன் !!!

# அத்தியாயம் 9

**கா**தலித்து, அப்பாவை கேட்காமல் அவரது அனுமதி இல்லாமலேயே ராகுலை மணந்து கொண்டாள்தான். இருந்தாலும் கிட்டத்தட்ட பதிமூன்று பதினாலு வருடங்களாக இவள் அப்பாவை நினைக்காத நிமிடம் இல்லையே!!! பார்க்கவேண்டும் அவரை!!! பேசவேண்டும் அவரிடம்!!! தவித்தது சுஹாசினியின் உள்ளம்.

‘அவர் என்ன உனக்கு மட்டும்தான் அப்பாவா??? எனக்கும் அவர்தான் அப்பா. சொல்லப்போனா அவர் முதல்லே எனக்குதான் அப்பா. அப்புறம்தான் உனக்கு. எனக்கு அப்பாகிட்டே பேசணும்’ ஹரிணியை பிடித்து உலுக்காத குறையாக கத்தினாள் சுஹாசினி.

‘பார்க்கலாம்..என்றாள் ஹரிணி படு நிதானமாக. ‘எனக்கு எப்போ தோணுதோ, நான் எப்போ நினைக்கறேனோ அப்போதான் நீ அப்பாகிட்டே பேச முடியும்..’

இவர்கள் இருவர் பேசுவதையும் உன்னிப்பாக பார்த்திருந்தான் கவனித்திருந்தான் ஸ்ரீநிவாசன்.

‘பார்க்கலாம். அதையும் பார்க்கலாம். நீ சொல்லலைன்னா என்னாலே அப்பாவை கண்டு பிடிக்க முடியாதுன்னு மட்டும் நினைக்காதே..’ இது ஹாசினி.

‘ரொம்ப சந்தோஷம் கண்டு பிடிச்சுக்கோ. ஏதோ ரொம்ப வருஷம் கழிச்சு பார்க்கிறோமே. கொஞ்ச நேரம் சந்தோஷமா இருப்போம்னு உங்க வீட்டுக்கு வந்தேன். இங்கேயும் எனக்கு போட்டியா வந்திட்டான் அந்த விவேக். நான் கிளம்பறேன். இனி என்னாலே இங்கே நிம்மதியா இருக்க முடியாது..’ சொல்லிவிட்டு வாங்கி வந்திருந்த பரிசை ஸ்ரீனிவாசனின் கையில் கொடுத்துவிட்டு...

‘ஹாப்பி பர்த்டேடா செல்லம்..’ சொல்லிவிட்டு விறுவிறுவென அங்கிருந்து கோபத்துடன் வெளியேறினாள் ஹரிணி.

‘நான் எப்போ நினைக்கறேனோ அப்போதான் நீ அப்பாகிட்டே பேச முடியும்..’ மிக அழுத்தமாக சொன்னாள் ஹரிணி. அப்போது அறிந்திருக்கவில்லை அவள். இனி தான் நினைத்தாலுமே அவரை பார்த்துவிடுவது கடினம், அவரிடம் பேசுவது கடினம் என்று என்று அறிந்திருக்கவில்லை அவள்.

விவேக் காரை செலுத்திக்கொண்டிருந்த சாலையின் இன்னொரு கோடியில் வந்துக்கொண்டிருந்த தாமோதரனுக்கு என்ன தோன்றியதோ மறுபடியும் மகள் ஹரிணியை அழைத்தார்.

சுஹாசினியின் முன்னால் அழைப்பை ஏற்க விரும்பவில்லை ஹரிணி. சட்டென துண்டித்தாள் அழைப்பை. அவளது அப்பாவுக்கு மனதின் ஓரத்தில் சுளீரென வலித்தது. பல நேரங்களில் ஹரிணி அப்படிதான்.

நிச்சியமாக இது அவள் வேலையினால் மட்டுமல்ல. அலட்சியம். அப்பாவின் மீது அப்படி ஒரு அலட்சியம். இது நன்றாகவே புரிந்தது அவருக்கு. இப்போது அவர் சாலையை கடந்தாக வேண்டும்.

‘இரண்டு மகள்கள் இருந்தும் எனக்கென யாரும் இல்லை. அப்பா என்று எனை அன்பாய் அழைக்க ஒரு உள்ளம் இல்லை’ உள்ளுக்குள்ளே மருகிக்கொண்டே நடந்தார் தாமோதரன்.

கண்ணுக்கு எட்டும் தூரத்தில். ‘அப்பா ப்ளீஸ் வாங்கப்பா..’ மறுபடி மறுபடி மனதிற்குள் கெஞ்சியபடியே விவேக் செலுத்திக்கொண்டிருக்க வந்துக்கொண்டிருந்தது அவன் கார்.

சாலை முழுதும் இங்கமங்கும் வாகனங்கள். ஏதேதோ யோசனைகளுடனே சாலையை கடக்க முயன்றார் தாமோதரன். அப்போது.. அங்கே .. விவேக்கின் காருக்கு முன்னால் வேகமாக சென்ற அந்த கார் அவர் மீது மோதி இடித்து தள்ள, அவர் தடுமாறி சாலையில் விழ

க்ரீசிட்டன பல வாகனங்கள்!!! ‘க்…ரீ…ச்… பிரேக்கை அழுத்தினான் விவேக்!!!’

‘விபத்தா??? அய்யோ!!! விபத்தா??? விழுந்தது வயதானவரா??? மொத்தமாக பதறினான் விவேக். ‘இறைவா!!! காப்பாற்று!!!’ சில வருடங்களுக்கு பிறகு உள்ளம் ஏனோ அவன் தனிச்சையாய் இறைவனை தேடியது. காரை சற்றே ஓரமாக நிறுத்திவிட்டு படபடக்கும் இறங்கி ஓடினான் அவரை நோக்கி.

சாலையில் குப்புற விழுந்திருந்தார் தாமோதரன். சுற்றிலும் கூட்டம் கூட ஆரம்பித்திருக்க, அவரை மோதிய அந்த கார் ஓட்டுனர் பயந்து போய் அவர் அருகில் அமர்ந்திருக்க, எது இவனை செலுத்தியது என்றே அறியாமல் ஓடி சென்று அவர் அருகில் மண்டியிட்டான் விவேக்.

அவரை நிமிர்த்தி அவர் தலையை மடியில் சாய்த்துக்கொண்டான் அவன். தனது அப்பாவின் உருவத்தின் மொத்த பிரதிபலிப்பாய் இருப்பவரை தன்னையும் அறியாமல் மடியில் சாய்த்துக்கொண்டான் அவன்.

விழுந்த அதிர்ச்சியில் அப்படியே மயங்கி கண்மூடி கிடந்தார் அவர். நெற்றியில் பட்ட காயத்தின் ரத்தம் முகத்தில் வழிந்துக்கொண்டிருந்தது. முகத்தில் அங்கங்கே காயங்கள்

முகத்திலும் மனதிலும் பதற்றமே மேலோங்கி இருக்க தாமோதரனை பார்த்தான் விவேக். அந்த நிலையில் அப்பாவின் பிரதிபிம்பம் ஒன்று தன் மடியில் கிடப்பதை சத்தியமாய் உணர முடியவில்லை அவனால்.

அங்கே அவர் மீது மோதிய அந்த எல்லாரும் ஒன்று சேர்ந்து திட்டிக்கொண்டிருக்க அது எதையுமே கவனிக்கும் நிலையில் இல்லை விவேக்.

‘சுவாசம் இருக்கிறதா இல்லையா இவருக்கு..’ தவிப்புடன் அவரின் நாடியை பரிசோதித்தான் விவேக். அவரை எப்படியும் காப்பாற்றிவிட வேண்டும் என்பதே அவனது இப்போதையே தவிப்பாக இருந்தது.

சுவாசம் அவரிடம் இன்னமும் மிச்சமிருக்க, தனது கைகுட்டையை எடுத்து அவரது ரத்தத்தை கொஞ்சம் கட்டுப்படுத்தியவன் அவரை மோதிய அந்த வாகன ஓட்டியும் உதவிக்கு வர அவரை அப்படியே அள்ளி தனது காரில் கிடத்திவிட்டு மருத்துவமனை நோக்கி பறந்தான் விவேக்.

விபத்தில் அடிப்பட்ட யாரையும் விட்டுச்செல்ல அவனால் இயலாது!!! கண்டிப்பாக இயலாது!!!

‘காப்பாத்திடலாம்பா. அவரை எப்படியும் காப்பாத்திடலாம்..’ ஏனோ தனது அப்பாவிடம் மானசீகமாக சொல்லிக்கொண்டான் விவேக்.

அவரை மோதிய அந்த வாகன ஓட்டி பின் இருக்கையில் தமோதரனுடன் இருக்க, படுத்து கிடப்பவர் யாரென்றே தெரியாமல், திரும்பி அவர் முகம் கூட பார்க்காமல் கவனம்

முழுவதும் சாலையிலேயே இருக்க அதிவேகமாக காரை ஓட்டிக்கொண்டிருந்தான் விவேக்.

பின்னால் இருப்பவர் கண்டிப்பாக அவனது தந்தை இல்லைதான். அவரை பார்த்து விடுவதால் அவனது தந்தை திரும்பி வந்து விடுவதாக அர்த்தம் இல்லைதான். இதனால் அவனது இப்போதைய நிலையில் பெரிய மாற்றம் இல்லைதான். இருந்தாலும்......

இழக்கக்கூடாத ஒன்றை இழந்து, அதை மறுபடியும் ஒரு முறை பார்த்துவிடவாவது முடியாதா என்று ஏங்கிக்கொண்டிருப்பவனுக்கு அவன் இழந்ததின் பிரதிபிம்பமாவது கிடைப்பது பேரின்பம் அல்லவா??? அந்த உணர்வுக்கு ஈடு இணை இல்லை அல்லவா???

ஆனால் இந்த நிலையில் அவர் முகத்தை கூர்ந்து கவனிக்கவில்லையே விவேக்!!!

மருத்துவமனையை அடைந்தது கார். அது அவனது தந்தை பார்த்து பார்த்து கட்டிய மருத்துவமனை. அவர் இருந்தவரை அதன் நிர்வாக பொறுப்புகள் எல்லாம் அவருடையதாகவே இருந்தது. இப்போது அதன் நிர்வாகத்தை கவனித்து வருவது வீட்டிலிருக்கும் அவனது அப்பாவும், தம்பி ஷிவாவும்.

அப்பா!!! இவனை பெற்ற அப்பா ஸ்ரீநிவாசன் இவனை விட்டு போன பிறகு அவரை அப்படிதான் அழைக்கிறான் விவேக்!!!

அவர் ஸ்ரீனிவாசனின் உடன் பிறந்த சகோதரர் ஸ்ரீதரன்!!! அவரை விட மூன்று வயது இளையவர். இவனது சித்தப்பா. ஷிவா அவரது ஒரே மகன்.

ஸ்ரீனிவாசன் இவனை விட்டு போன நிலையில் உடைந்து, சிதைந்து கிடந்தவனை கொஞ்சமாக தேற்றி எடுத்தவர் அவர்தான்.

‘அப்பா இல்லைனா என்னடா. என்னை அப்பான்னு கூப்பிடு’ என்றார் அவர்.

அப்படிதான் அழைக்கிறான் அவரை. ஆனாலும் அவனது அப்பாவின் இடத்தை நூறில் ஒரு பங்கு கூட அவரால் நிரப்ப முடியவில்லை என்பது அவரே ஏற்றுக்கொள்ளும் உண்மைதான்.

பரபரவென மருத்தவமனையின் உள்ளே அவன் நுழைய, சரசரவென மருத்துவமனை சிப்பந்திகள் அவனை சூழ்ந்துக்கொள்ள அவனது விழி அசைவில் இயங்கியது மொத்த மருத்துவமனையும். அப்பாவின் மீது அவர்கள் வைத்திருந்த அந்த மரியாதை இன்னமும் இவனிடத்திலும் தொடருகிறது.

மயக்க நிலையில் மருத்துவமனைக்குள் அனுமதிக்கப்பட்டார் தாமோதரன். இன்னமும் அவர் முகம் சரியாக பார்க்கவில்லை

விவேக். அவர்களுடன் வந்த அந்த இன்னொரு கார் ஓட்டுனரிடம் கைப்பேசி எண்ணை வாங்கிக்கொண்டு அவனை அனுப்பிவிட்டு உள்ளே சென்று அந்த அறைக்குள் அமர்ந்தான் விவேக். பதற்றம் சற்றே தணிந்தது போலே இருந்தது

அது அவனது அப்பாவின் நிர்வாக அறை. அவரின் நாற்காலியில் அமர்ந்துக்கொண்டான் மகன். எதிரே அங்கே புகைப்படத்தில் சிரித்துக்கொண்டிருந்தார் அப்பா. அந்த சுழல் நாற்காலியில் மெல்ல ஆடிக்கொண்டே, அவரின் புகைப்படத்தை பார்த்து புன்னகைத்தான்.

'அப்பா நிஜமா என்ன செய்யறீங்க நீங்க??? என்னை என்ன செய்ய வைக்கறீங்க???' வாய்விட்டே கேட்டான் விவேக். பதிலற்ற மனதாகச புன்னகை அவரது புகைப்படத்தில்.

விவேக்கின் மனதிற்குள் திடீரென ஒரு மின்னல் 'ஒரு வேளை இவர்தான் அப்பா சொன்ன தாமோதரனா???' அவரது உடமை என அவனது கை சேர்ந்திருந்தது ஜிப் வைத்த ஒரு பை.

'அதை திறக்கலாமா வேண்டாமா???

'எப்படி என்றாலும் அவர் யாரென தெரிந்துக்கொள்ள, அவர் உறவினர்களுக்கு தகவல் சொல்லவாவது அவரது பையை திறந்துதானே ஆக வேண்டும்!!!' யோசித்தபடியே திறந்தான் அவன். அவரது கைப்பேசியை தேடி துழாவினான் பையை.

அது கிடைத்தால் அவரது உறவினர்கள் எண் ஏதாவது கிடைக்கவில்லை. அது கிடைக்கவில்லை அவனுக்கு.

அதனுள் இருந்தன சுத்தமாய் துவைத்து மடித்து வைக்கபட்டிருந்த இரண்டு வெள்ளை வேஷ்டிகள், இரண்டு வெள்ளை துண்டுகள், இரண்டு அரைக்கை சட்டைகள், ஒரு கைப்பேசி. சார்ஜர், கொஞ்சம் பணம். சாதரண வேஷ்டி சட்டை அணியும் மிக எளிமையான மனிதராய் இருந்தார் அவர். அந்த வெள்ளை வேட்டியை மறுபடியும் ஒரு முறை பார்த்தான்.

அப்பா வேட்டி அணிந்து அவன் அதிகம் பார்த்தது இல்லை. காரணமே இல்லாமல் இந்த வேட்டி சட்டையில் அப்பாவை கற்பனை செய்து பார்த்துக்கொண்டது அவன் மனம். சின்னதாய் ஒரு மென்சிரிப்பு அவன் இதழ்களில்.

அந்த பையை இன்னும் சற்றே அவன் துழாவ அதிலிருந்தது சின்ன நோட்டுப்புத்தகம். அதில் ஏதேதோ சின்ன சின்ன குறிப்புகள், ஏதேதோ கணக்குகள் மட்டுமே இருந்தன.

அவரது முகவரியோ, கைப்பேசி எண்ணோ அது போன்ற எந்த குறிப்புகளுமே இல்லமல் போக கொஞ்சம் ஏமாற்றத்துடன் அதை மூடியவனின் மடியில் அந்த நோட்டுக்குள்ளிருந்து விழுந்தது அந்த புகைப்படம்.

அதை எடுத்து பார்த்த விவேக்கின் விழிகள் திகைப்பில் விரிந்தன!!!

# அத்தியாயம் 10

**வெ**ளியில் மழை மேகங்கள் கூடி இதோ கொட்டப்போகிறேன், கொட்டப்போகிறேன் என அறிவிப்பு கொடுத்துக்கொண்டிருக்க அப்பாவின் அறையில் அமர்ந்துக்கொண்டு அந்த புகைப்படத்தையே குழுப்பத்துடன் பார்த்திருந்தான் விவேக்.

அந்த புகைப்படத்தில் கருநீல ஜீன்சும், டி ஷர்டும் அணிந்து ஒய்யாரமாய் நின்றிருந்தாள் ஹரிணி!!! அந்த புகைப்படத்தின் பின்னால் அவளது கைப்பேசி எண்ணும், முகவரியும் எழுதப்பட்டு இருந்தன.

இந்த ஹரிணிக்கும் இவருக்கும் என்ன சம்மந்தம்??? தீவரமான சிந்தனையுடன் நெற்றியை தேய்த்து விட்டுக்கொண்டான் விவேக்.

ஹரிணியின் நடை உடை பாவனைகளும், சாதாரண வேட்டி, சட்டை என இருந்த தாமோதரனும் நேரெதிராக தோன்ற, இவர் அவளது அப்பாவாக இருக்கும் என்ற எண்ணமே வரவில்லை விவேக்குக்கு.

எதுவாக இருந்தாலும், இவர் யாராக இருந்தாலும் அவளை தொடர்பு கொள்வதுதான் சரி என தோன்ற தனது கைப்பேசியில் இருந்த அவளது எண்ணை அழைத்தான் விவேக்.

சுஹாசினியின் வீட்டிலிருந்து கிளம்பி தோழிகளுடன் ஏதோ ஒரு மாலுக்கு சென்றிருந்தாள் ஹரிணி. விவேக்கின் அழைப்பை பார்த்ததும் துணுக்கென்றது அவளுக்கு.

‘இவனெதற்கு அழைக்கிறான் இப்போது??? ஒரு வேளை அப்பாவின் விஷயம் தெரிந்திருக்குமோ??? ஹாசனி சொல்லி இருப்பாளோ??? இருக்கும்!!! அப்படிதான் இருக்கும்!!!’ யோசித்தபடியே பட்டென துண்டித்தாள் அழைப்பை.

‘ஒரு வேளை அப்பா இருக்குமிடம் அவனுக்கு தெரிந்திருக்குமோ???

‘இல்லை வாய்ப்பே இல்லை. அவரென்ன இந்திய பிரதமரா அமெரிக்க ஜனாதிபதியா எல்லாரும் அவரை எளிதாக கண்டுகொள்ள??? என் உதவி இல்லாமல் அவர்களால் அப்பாவை நெருங்கவே முடியாது!!!’ சின்னதாய் ஒரு கேலி சிரிப்புடன் தலையசைத்துக்கொண்டாள் ஹரிணி.

இங்கே ஒரு பெருமூச்சுடன் தலையசைத்துக்கொண்டான் விவேக். ஆனாலும் இது அப்படியே விட்டு விடக்கூடிய விஷயம் இல்லையே!!! அவளிடம் சொல்லித்தானே ஆக வேண்டும். மறுபடி அழைத்தான் மறுபடி கட்.

‘அப்படி என்னதான் கொஞ்சம் கூட யோசனை இல்லாத அவசர புத்தியோ???’ சுறுசுறுவென ஏறத்தான் செய்தது விவேக்கின் கோபம்.

‘யார் எப்படிப்போனால் எனக்கென??? என தூக்கி எரிந்துவிட்டு போகவும் மனமில்லை. அவன் அப்பா கொஞ்சம் மனிதாபிமானத்தையும் சேர்த்து ஊட்டி அல்லவா வளர்த்து இருக்கிறார் அவனை..

இனி இவளை அழைப்பதில் பயனில்லை என்பதை உணர்ந்தவனாக மருத்துவமனையின் பெயருடன், ஆங்கிலத்தில் குறுஞ்செய்தியை தொகுத்து அனுப்பினான் அவளுக்கு.

‘இங்கே ஒரு வயதானவருக்கு விபத்து. அவரிடம் இருந்த உன் புகைப்படத்தை பார்த்தேன். அதனால் அவர் உனக்கு வேண்டியவராக இருக்குமென தோன்றுகிறது. அவரை மருத்துவமனையில் சேர்த்திருக்கிறேன். சீக்கிரமாக இங்கே வந்து சேர்.!!!’

பல நேரங்களில், ஒரு விஷயத்தை இது இப்படித்தான் என நாம் கண்மூடித்தனமாக முடிவு செய்துக்கொண்டு விடும் பொழுதுகளில் இருண்டு போய் விடுகிறது அறிவு!!!

எது நடக்ககூடாது என, யார் அவன் கண் முன்னால் வர வேண்டாம் என நினைத்தாளோ அவரே அவன் அருகில் இருக்கிறார் என தெரிந்தால் இப்படி செய்திருப்பாளா???

அவனிடமிருந்து வந்தது என்பதாலேயே அதில் என்ன இருக்கிறது என்று கூட பார்க்க விரும்பாதவளாக, அதில் ஒரு வரியை கூட படிக்காமல் அந்த குறுஞ்செய்தியை அப்படியே அழித்திருந்தாள் ஹரிணி!!!

மழை கொட்ட ஆரம்பித்திருந்தது. ஜன்னலின் அருகில் சென்று மழையையே பார்த்திருந்தான் விவேக். சற்றுமுன் நடந்த அந்த விபத்து அவனை கொஞ்சம் உலுக்கி இருந்தது. தாமோதரன் அடிப்பட்டு விழுந்த அந்த காட்சி திரும்ப திரும்ப கண் முன்னே வந்து போனது.

அப்பாவுக்கும் சில வருடங்கள் முன்னால் இப்படித்தானே நடந்திருக்கும். அய்யோ!!! எப்படி எல்லாம் துடித்தாரோ??? இறைவா!!! இவரையாவது காப்பாற்று!!!

அரை மணி நேரம் கடந்திருக்க ஹரிணியிடமிருந்து பதிலோ, அழைப்போ வருமென எதிர்பார்த்தவனுக்கு ஏமாற்றமே!!!

அப்போது வந்தது அந்த அழைப்பு. அவனது அலுவலகத்திலிருந்து!!! ஏதோ ஒரு விமானி அவசர விடுப்பில் சென்றிருக்க இவனை வர முடியுமா என கேட்டு அழைப்பு. இவனது வேலையில் இது அடிக்கடி நடக்கும் ஒன்றுதான்.

‘அப்பாவின் நினைவு நாளில் விமானம் ஓட்டுவது எல்லாம் இயலாது’ முதலில் மறுத்திடத்தான் தோன்றியது அவனுக்கு

அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தவனை தடுத்தது புகைப்படத்தில் இருந்த அப்பாவின் புன்னகை.

‘நோ... விவேக்.... லீவ் எல்லாம் கிடையாது.. கம்... ஆன்... ரன்.. ரன்.. ரன்...இட்ஸ் கெட்டிங் லேட் ... எப்பவுமே டியூட்டிதான் ஃப்ர்ஸ்ட்

.’பள்ளிக்காலங்களில் அப்பா இவனை புன்னகையுடன் பள்ளிக்கு துரத்தும் கணங்களின் ஞாபகம்.. அப்பா இருந்திருந்தால் இப்படிதான் துரத்துவார் இன்றைக்கும்!!!.

‘ஐ ஹேட் டிஸ்டர்பிங் யூ ட்யூரிங் யுவர் ப்ரேக் விவேக். பட் இட்ஸ் எ ரியல் எமர்ஜென்சி..’ மறுமுனை தன்னிலை விளக்கம் கொடுத்துக்கொண்டிருக்க

‘இட்ஸ் ஒகே... ஐ வில் பி தேர்...ஆன் டைம் ’ நிதானமாக சொன்னான் விவேக். சரியாக சொன்னால் புகைப்படத்தில் இருந்த அப்பாவின் புன்னைகை இப்படி சொல்ல வைத்தது அவனை.

அழைப்பை துண்டித்துவிட்டு சில நிமிடங்கள் அப்பாவின் படத்தை பார்த்துகொண்டு நின்றான். அதன் பின் அவருக்கு தலையசைத்துவிட்டு அறையைவிட்டு வெளியே வந்தவனுக்கு ஏனோ கிளம்ப மனம் வரவில்லை. இப்போது கிளம்பி சென்றால் அவன் திரும்பி வர இரண்டு மூன்று நாட்கள் ஆகலாம்.

'எப்படி இருக்கிறார் நான் அழைத்து வந்த அந்த மனிதர்???' சின்னதாய் ஒரு கேள்வி பிறந்தது விவேக்குக்கு.

உடலில் நிறைய காயங்கள், ஒன்றிரண்டு எலும்பு முறிவு, அபாய கட்டத்தில் இல்லை என்றாலும் இன்னும் நினைவு திரும்பவில்லை என்பதே மருத்துவர்களிடமிருந்து அவனுக்கு கிடைத்த பதிலாக இருந்தது.

ஹரிணியிடமிருந்து எந்த தகவலும் வராமல் போக, அநாதை போல் படுத்துக்கிடக்கும் அந்த மனிதரின் மேல் நிறையவே இரக்கம் பிறந்தது.

இப்போது உள்ளே சென்று அவரை பார்க்க அவர் உடல்நிலை அனுமதிக்கவில்லை. என்ன தேவை என்றாலும் தன்னை உடனே தொடர்பு கொள்ள சொல்லிவிட்டு நகரப்போனவனுக்கு தன்னுடையது எதையோ விட்டு செல்வதை போல் ஒரு உணர்வு.

சற்றே அவன் தயங்கி நிற்க 'மிஸ்டர் தாமோதரன்..' என யாரோ யாரிடமோ கைப்பேசியில் பேசியபடியே அவனை கடந்து செல்ல, அந்த பெயர் மறுபடியும் அவனை உறுத்தியது. அறைக்குள் மறுபடியும் வந்து அமர்ந்தான்.

அடிபட்டு படுத்திருப்பவர்தான் தாமோதரனாக இருக்குமோ??? அப்பா ஏன் அவரை என்னிடம்

சேர்த்திருக்கிறார்??? நான் இப்போது போவதா??? இங்கேயே இருப்பதா??? நிமிர்ந்து அப்பாவின் புகைப்படத்தை பார்த்தான்.

‘என்னமோ போகவே மனசில்லைபா. ஏதோ குழப்பமாவே இருக்கு...ஏன்பா...’ அவன் அப்பாவை கேட்க மாறா மர்ம புன்னகையுடன் சுவற்றில் வீற்றிருந்தார் அப்பா!!!

‘மிஸ்டர் ஸ்ரீனிவாசன் இப்படியே சிரிச்சிட்டே இருந்தா என்ன செய்ய நான்??? சொல்லுங்க.. இப்போ நான் போகவா??? இங்கேயே இருக்கவா. அட பேசுங்க மிஸ்டர் ஸ்ரீனிவாசன் ’ அவன் கேட்டு முடித்ததுதான் தாமதம் ஒலித்தது அவன் கைப்பேசி. அவன் அழைப்பை ஏற்க

‘‘ஹலோ நான் ஸ்ரீனிவாசன் பேசறேன்.!!!!’ என்றது மறுமுனை.

அழைத்தது சிறுவன் ஸ்ரீனிவாசன்தான் என்று தெரிந்த போதிலும் அந்த நொடியில் திடீரென ஒலித்த ‘நான் ஸ்ரீனிவாசன் பேசறேன்’ ல் கொஞ்ச திக்கு முக்காடி போனான் விவேக்.

‘சொல்லுங்க.. சொல்லுங்க மிஸ்டர் ஸ்ரீனிவாசன் என்றான் சின்ன புன்னகையுடன். இதுக்கெல்லாம் ஒண்ணும் குறைச்சலே இல்லை..’ என்பதை போல் அப்பாவின் புகைப்படத்தை பார்த்தபடியே.

‘கிஃப்ட் எல்லாம் செம அங்கிள்..’ என்றான் சிறுவன் உற்சாகமாய் ‘எனக்கு எல்லாமே பிடிச்சிருக்கு..’

தட்ஸ் கிரேட்.. தேங்க் யூ மை ஸ்வீட் ஹார்ட்..' என்றான் இதமாக 'பார்ட்டி ஸ்டார்ட் ஆயிடுச்சா. என்ஜாய் பண்றியா???'

'எஸ் அங்கிள்.... நீங்க என்ன பண்றீங்க??? ஃப்ளைட்லே இருக்கீங்களா???

'இல்லடா... வரச்சொல்லி கால் கூட வந்தது. என்னமோ போகவே பிடிக்கலை..' விவேக் சாதரணமாக சொல்ல

'நோ.. நோ... லீவ் எல்லாம் போடகூடாது... கிளம்புங்க... ரன்.. ரன்... ரன் ஃபாஸ்ட்... இட்ஸ் கெட்டிங் லேட்..' அப்பா எப்போதும் சொல்லும் வார்த்தைகளை ஸ்ரீனிவாசன் அப்படியே சொல்லிவிட பேச்சிழந்து போனான் விவேக்.

'என்ன... சைலென்ட் ஆகிட்டீங்க... அங்கே எத்தனை பேர் வெயிட் பண்ணிட்டு இருப்பாங்க. ட்யூட்டிதான் ஃபர்ஸ்ட... கிளம்புங்க.. கிளம்புங்க..'

'சரி.. சரிங்க... மிஸ்டர் ஸ்ரீனிவாசன்...' சற்றே நெகிழ்ச்சியுடன் சொன்னான் விவேக் 'இதோ கிளம்பறேன்..'

யார் மூலமாக சொன்னால் என்ன??? அப்பா சொல்லியாகிவிட்டது!!! இதற்கு மறுபேச்சு இல்லை. அதன் பிறகு வேறெந்த சிந்தனையையும் மனதிற்கு கொடுக்காமல் வீட்டுக்கு சென்று சில மணி நேரங்கள் கண்களுக்கு உறக்கத்தை பரிசளித்து விட்டு எழுந்தான் விவேக்.

மனம் கொஞ்சம் இலகுவாகி இருக்க மடமடவென தயாராகி அடுத்த சில மணி நேரத்தில் பளீர் சீருடையில் விமான நிலையத்தில் இருந்தான் விவேக்.

நேரம் அதிகாலை நான்கு மணி. மழை இன்னமும் தொடர்ந்துக்கொண்டிருந்தது. ஆறு மணிக்கு டெல்லி நோக்கி கிளம்ப வேண்டும் விமானம்.

விமானம் ஓடு தளத்தில் காத்திருக்க கதவை திறந்துக்கொண்டு உள்ளே நுழைந்தான் விவேக்.

விமானத்தின் மின்சார தொடர்ப்பு அணைக்கப்பட்டிருக்க உள்ளே அவன் மனதை பிரதிபலிக்கும் விதமாக இருளான நிசப்தம்.

டார்ச் லைட்டின் உதவியுடன் சில முக்கியமான இயக்கங்களை உயிர்ப்பித்து விமானத்தின் பின்னால் இருக்கும் என்ஜினை இயக்க இரண்டு நிமிடத்தில் உயிர் பெற்றது அது. மெது மெதுவாய் காக்பிட்டிலும், பயணிகள் பகுதியிலும் விளக்குகள் மின்ன ஆரம்பிக்க, குளிர் மின் விசிறிகள் சத்தம் கொடுக்க ஆரம்பிக்க, அங்கே இருந்த இருண்டு கிடந்திருந்த கணினி திரைகள் உயிர் பெற, அவனது ஒவ்வொரு நரம்பிலும் மெது மெதுவாக பரவ ஆரம்பித்தது உற்சாகம்.

அடுத்த சில மணி நேரத்தில் பளீர் புன்னகையுடன் காக்பிட்டில் அமர்ந்திருந்தான் விவேக். மழையும் இருளும்

போட்டி போட்டு கண்கட்டு வித்தை விளையாடிக்கொண்டிருக்க, நீரில் நனைந்து திளைக்கும் சுறா மீனாய் நின்றிருந்தது அவனது விமானம்.

‘என் மேல் அப்படி என்ன காதலோ ஏன் மேக காதலிகளுக்கு. ஒரு நாள் நான் வரவில்லை என்றால் இப்படியா அழுது தீர்ப்பார்கள்???’ சின்னதாய் சிரித்துக்கொண்டான் விவேக்.

'குட் மார்னிங் லேடீஸ் அண்ட் ஜென்டில்மென்... திஸ் இஸ் யுவர் கேப்டன் விவேக் ஹ்ரீனிவாசன் . ப்ளீஸ் ஃபாசென் யுவர் சீட் பெல்ட்ஸ் ..... இட்ஸ் டைம் ஃபார் டேக் ஆஃப்...' உற்சாகத்தில் ஊறி ஒலித்தது விவேக்கின் குரல்.

அவன் விழிகள் ஒடதள விளக்கொளியில் மழையினிடைய ஊடுருவ ஈரமான ஓடு தளத்தில் மெல்ல மெல்ல வேகமெடுத்தான் விவேக். இருளை கிழித்துக்கொண்டு சரேலென மேலே எழும்பியது அவனது விமானம்!!!

நேரம் காலை ஒன்பதை தொட்டிருக்க அந்த மருத்துவமனையை அடைந்தாள் சுஹாசினி. தனது தந்தை இங்கேதான் அனுமதிக்க பட்டிருக்கிறார் என்பதை அறியமாலே உள்ளே நுழைந்தாள் அவள். இன்று அந்த மருத்துவமனையின் ஒரு மருத்துவராக பொறுப்பேற்க இருக்கிறாள் சுஹாசினி!!!

வழக்கமான நடை முறைகள், அறிமுகங்கள், எல்லாம். முடிந்திருக்க அவளது தந்தை அனுமதிக்க பட்டிருக்கும் மதியம் பண்ணிரெண்டு ஐ.சி.யூ வினுள் நுழைந்தாள் சுஹாசினி.

அதே நேரத்தில் கொல்கத்தா விமான நிலையத்தில் இருந்தாள் ஹரிணி. ஆரம்பத்திலிருந்தே தான் எங்கே இருக்கிறோம் என்பதை அப்பாவிடம் தெரிவிப்பது, அவர் எப்படி இருக்கறார் என தினமும் விசாரிப்பது போன்ற பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ளவே இல்லை ஹரிணி.

அதானாலேயே இந்த நிமிடம் வரை தனது தந்தையின் நிலையை உணராதவளாக, அறியாதவளாக, யாரோ ஒரு சக விமானியிடம் அரட்டை அடித்துக்கொண்டிருந்தாள் அவள்

அன்போ, உறவோ, காதலோ இல்லை ஒரு சாதரண உயிரற்ற பொருளே ஆயினும் இறைவன் நமக்கு பரிசளித்தவற்றின் மீது நாம் காட்டும் அலட்சியம் பின்னாளில் நம்மை அதற்காக ஏங்க வைக்கும் என்ற விதி புரியாதவளாக சிரித்துக்கொண்டிருந்தாள் அவள்.

இங்கே ஐ.சி யூவிற்குள் நுழைந்தாள் சுஹாசினி. ஒவ்வொரு நோயாளியாக பரிசோதித்துக்கொண்டே, அவர்களின் மருத்துவ குறிப்புகளை ஆராய்ந்தபடியே வந்தாள் அவள்.

மெல்ல நடந்து அவளது தந்தை கண் மூடி கிடக்கும் அந்த கட்டிலின் அருகே வந்து நின்றாள் மகள். அவளது கவனம்

முழுவதும் பெயர் கூட எழுதப்படாத அவரது ரிப்போர்ட்களில் இருக்க, உடலில் அங்கங்கே கட்டுகளுடன் கண் மூடி கிடக்கும் அவரின் முகத்தை அத்தனை கவனத்துடன் ஆராயவில்லை அந்த அன்பு மகள்.

அவளை சொல்லியும் தவறில்லைதான்.. பதினான்கு வருடங்களுக்கு முன்னால் இருந்த அப்பா இல்லையே அவர்!!! தேகம் மெலிந்து, தோல் சுருங்கி, வலுவிழந்து, இப்போது நினைவையும் இழந்து மயங்கி கிடக்கிறாரே அவரை எப்படி தனது அப்பாவாக இருக்ககூடும் என யோசிப்பாளாம் அவள்???

அந்த கட்டிலை தாண்டி நடந்தவள் ஏதோ ஒரு உந்துதலில் பின் நோக்கி வந்தாள். சுஹாசினி. என்ன தோன்றியதோ அவரது ரிபோர்ட்டை மறுபடி பார்த்தவள், ஒரு ஊசியை எடுத்து அவர் கையில் செலுத்தினாள். அப்போதும் அவர் முகத்தை கூர்ந்து கவனிக்க தோன்றவில்லை பெண்ணுக்கு.

‘ஏம்மா… நான் உன்னை பெத்த அப்பாமா. என்னை தூக்கி போட்டுட்டு அந்த பையனோட போயிடுவியா??? அப்பா வேண்டாமாமா உனக்கு’ பதினான்கு வருடங்களுக்கு முன்னால் உடைந்து போன குரலுடன் கேட்டிருக்கிறார் தாமோதரன்.

‘ஆமாம். அப்படிதான். எனக்கு அப்பா வேண்டாம்..’ உச்சகட்ட தொனியில் கூவி இருக்கிறாள் ஹாசினி.

இன்று அவள் மனம் அப்பாவை கண்டுவிடத்தான் தினம் தினம் தவிக்கிறது. ஆனாலும் விதி அவள் கண் மறைத்து சிரிக்கிறது!!!

ஊசி போட்டுவிட்டு, அங்கே இருந்த நர்ஸ்களிடம் தேவையான ஆணைகளை கொடுத்துவிட்டு நகர்ந்தாள் சுஹாசினி.

ஒரு நாள் முழுவதுமாக கடந்திருந்தது!!!

மறுநாள் மதியம் பெங்களூர் விமான நிலையத்தில் இருந்தாள் ஹரிணி. அந்த ஹோடேலில் மதிய உணவை வாங்கிக்கொண்டு அவள் வர அங்கே கிட்டத்தட்ட எல்லா இருக்கைகளும் நிரம்பி இருக்க ஒரு இருக்கையை கஷ்டபட்டு தேடிப்பிடித்துக்கொண்டு அமர்ந்தாள்.

கையிலிருந்த காபியை ருசித்தபடியே தான் படித்துக்கொண்டிருந்த அந்த தினசரியின் பக்கத்தை வெகு இயல்பாக திருப்பிய விவேக்கின் பார்வை எதிரில் அமர்ந்திருத்த ஹரிணியின் மீது விழ வியப்பும், திகைப்புமாக விரிந்தன அவன் கண்கள்.

கொஞ்சம் திடுக்கிட்டுதான் போனாள் அவனை பார்த்த ஹரிணி!!!

இவன் இங்கே அமர்ந்திருப்பது தெரிந்திருந்தால் நான் வந்து அமர்ந்திருக்க மாட்டேனே!!!' யோசித்தவளின் முகம் கொஞ்சம்

வெறுப்பை கக்கியது இதையெல்லாம் எப்போதும் பெரிதாக கண்டு கொண்டதில்லையே விவேக்!!!

வெகு இயல்பாக இன்னொரு துளி காபியை ருசித்தவனை பார்த்ததும் பற்றிக்கொண்டு வந்தது ஹரிணிக்கு. 'எத்தனை அலட்சியமாய் ஒரு பார்வை??? எத்தனை திமிர் இவனுக்கு??? என் அப்பாவை பற்றி தெரிந்துக்கொண்டு விட்டானா இல்லையா??? ஒரு வேளை தெரிந்துக்கொண்டதினால் தான் இந்த அலட்சிய பார்வையா??? படபடவென கேள்விகள் எழுந்தன அவளுக்குள்ளே!!!

அதே நேரத்தில் அவனது எண்ண ஓட்டங்கள் தாமோதரனை தொட்டன. இந்த பெண் மருத்துவமனையை தொடர்பு கொண்டாளா இல்லையா??? யோசனையுடன் ஒரு நொடி அவள் முகம் பார்த்தான்.

கண்டிப்பாக தொடர்பு கொண்டிருக்க மாட்டாள் என்றே தோன்றியது. இவளிடம் ஏதாவது கேட்டு வம்பு வளர்த்து இன்றைய பொழுதின் நிம்மதியை தொலைக்க அவன் கண்டிப்பாக விரும்பவில்லை. அவருக்கு நினைவு திரும்பி விட்டால் அவரே தனது சொந்தங்களை பற்றி சொல்வார். அப்போது பார்த்துக்கொள்ளலாம்.

அவளை பார்த்துக்கொண்டே தனது கைப்பேசியை எடுத்து தாமோதரனை கவனிக்கும் அந்த மருத்துவரை தொடர்பு

கொண்டான் விவேக். அவனது பார்வை இவளுக்குள் படபடப்பை கிளப்பியது

யாரை அழைக்கிறான் இப்போது??? அப்பா இருக்குமிடத்தை தெரிந்துக்கொண்டானா என்ன??? கூடாது அப்படி நடக்க கூடாது!!! தனக்குள்ளே கத்திக்கொண்டிருந்தாள் ஹரிணி.

இவள் கூடாது கூடாது என கூவிக்கொண்டிருக்க இறைவன் அவரை அவனது கைகளிலேயே சேர்த்த மாயம் அறியவில்லை பெண்.

'குட் ஆஃப்டர் நூன் டாக்டர். திஸ் இஸ் விவேக். நான் அட்மிட் பண்ண பேஷன்ட் இப்போ எப்படி இருக்கார்???'

'அபாய கட்டத்தை தாண்டிட்டார் சார் என்றார் மருத்துவர். இன்னும் நினைவு திரும்பலை. எப்படியும் இன்னைக்கு ஈவினிங்குள்ளே ஐ.சி.யூ விலிருந்து டிஸ்சார்ஜ் பண்ணிடலாம். ஹீ இஸ் ஸ்டேபிள் '

'அதற்குள் இவள் படபடவென அப்பாவின் எண்ணை அழுத்தி இருந்தாள். அவரிடம் பேசியே இரண்டு நாட்கள் ஆகிறதே!!! அவரது கைப்பேசி அணைக்கபட்ட நிலையில் இருந்தது. அது அந்த விபத்தில் வாகனங்களுக்கு அடியில் சிக்கி சிதறிய கதை அறியாதவளாக மறுபடி மறுபடி முயன்றுக்கொண்டிருந்தாள் ஹரிணி.

சரி நான் நாளைக்கு மதியம் வந்து அவரை பார்க்கிறேன்..' சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்துவிட்டு, காபியை முடித்துவிட்டு அவளை ஒரு முறை ஏற இறங்க பார்த்துவிட்டு விவேக் நகர, உள்ளுக்குள் பற்றி எரிய ஆரம்பித்தது ஹரிணிக்கு.

அடுத்த சில மணி நேரங்களில் அப்பாவுக்கு அவள் விட்டு விட்டு முயல தோல்வியே பதிலாக இருந்தது அவளுக்கு. எப்போதும் இப்படி நடந்ததில்லையே. எங்கே இருக்கிறார் அப்பா???

அடுத்து ஹைதிராபாத், லக்னோ, மும்பை என நாளை மதியம் வரை இருக்கிறது அவளது பயண அட்டவணை. இப்போது அவரை தேடி ஓடவும் முடியாதே!!!

அவர் வழக்கமாக தங்குவது மதுரையில் ஒரு வாடகை வீட்டில், அங்கே தொடர்பு கொண்டு அவள் கேட்க அங்கேயும் அவர் ஊர் திரும்பவில்லை என்பதே பதிலாக கிடைத்தது.

பதற்றம் மொத்தமாக ஆட்கொண்டது அவளை. ஒரு வேளை இந்த விவேக்கும், ஹாசினியும் சேர்ந்து அவரை கண்டுபிடித்து எனக்கு தெரியாமல் எங்காவது மறைத்துவிட்டார்களோ???

ஆம்!!! அப்படிதான் இருக்கும். கூடாது!!! அய்யோ!!! நான் தோற்றுவிட்டேனா??? இப்போது நான் என்ன செய்ய???

அவசரமாக ஹாசினியை அழைத்தாள் ஹரிணி.

‘ஹேய்... அப்பாவை எங்கே ஒளிச்சு வெச்சிருக்கே??? என்றாள் நேரிடையாய்.

‘என்னது அப்பாவா??? நீ என்ன கேக்கறேன்னு எனக்கு புரியலை..’ ஹாசினி திகைக்க

‘பொய்.. சொல்லாதே.. மரியாதையா சொல்லிடு. நீயும் விவேக்கும் சேர்ந்து அப்பாவை என்ன செஞ்சீங்க..’ இவளது அவசரத்தையும், கற்பனையையும் அவளது குரல் ஒரு சேர பிரதிபலிக்க

‘உனக்கு என்ன பைத்தியமா நான் இப்போ ட்யூட்டிலே இருக்கேன். அப்பாவை பத்தி எனகென்ன தெரியும் வை போனை..’ ஹாசினி துண்டித்தாள் அழைப்பை.

அவள் அமர்ந்திருக்கும் அறையை விட்டு இரண்டு அறைகள் தள்ளி படுத்திருக்கிறார் அப்பா என்பதை அறியவில்லையே அவள் பாவம்!!!

மறுநாள் மதியம் வரை அப்பா எங்கிருக்கிறார் என்று தெரிந்துக்கொள்ள ஹரிணி எடுத்த முயற்சிகள் பலனளிக்காமல் போக, ஒரு வழியாக சென்னையில் வந்து இறங்கினாள் ஹரிணி.

அதே நேரத்தில் சென்னையை நெருங்கிக்கொண்டிருந்தது விவேக் ஓட்டி வந்த விமானம்.

'டூ தௌசண்ட்..' ..

'ஒன் தௌசண்ட்' ....

'ஃபைவ் ஹண்ட்ரட்..

விவேக் விமாத்தை தரை இறக்கிக்கொண்டிருக்க அக்காவை நேரில் சந்திக்க அவள் வேலை பார்க்கும் அதே மருத்துவமனை நோக்கி பறந்துகொண்டிருந்தது ஹரிணியின் கார்.

அதே நேரத்தில் அங்கே தனி அறையில் இருந்த தாமோதரனுக்கு கொஞ்சம் கொஞ்சமாக நினைவு திரும்பிக்கொண்டிருந்தது. அரை குறையாக ஹரிணியின் முகம் நினைவில் வந்து வந்து போனது. மருத்துவர்கள் அவர் அருகில் வந்து அவரை பரிசோதித்த படியே ஏதோ கேட்க அவர் ஏதோ சொல்ல வாயெடுத்தார்.

விவேக் விமானத்தை விட்டு இறங்கி நடந்த நொடியில் ஒலித்தது அவனது கைப்பேசி. மருத்துவமனையிலிருந்து அழைப்பு.

‘சார். நீங்க கூட்டிட்டு வந்த பேஷண்டுக்கு கொஞ்சம் நினைவு திரும்பிடுச்சு...’

‘தட்ஸ் கிரேட்..’ உற்சாகமாக கூவினான் விவேக். ‘இறைவா உனக்கு பல நூறு நன்றிகள்!!!’ பல நாட்களுக்கு பிறகு இறைவனுக்கு நன்றி கூறியது மனம்.

‘அவர் பெயர் தாமோதரன்னு மட்டும் சொல்றார்..’ மறுமுனை சொல்லி முடிக்க திகைத்து திக்கு முக்காடிப்போனான் விவேக்.

‘மை... காட்..’ என்றான் வாய்விட்டு. ‘இதோ வரேன். நான் உடனே வரேன்..’ மருத்துவமனையை நோக்கி விரைந்தான் அவன்.

அதற்குள் அங்கே சென்று சேர்ந்திருந்தாள் ஹரிணி. தனது அக்காவின் முன்னால் நின்றிருந்தாள்.

‘ஹேய்.. திரும்ப திரும்ப அதையே உளறிட்டு இருக்கே. நிஜமாவே எனக்கு அப்பா எங்கேன்னு தெரியாது ..’ பதினெட்டாவது முறையாக சொல்லிக்கொண்டிருந்தாள் சுஹாசினி. ‘டியூட்டி டைம்லே வந்து ஏன் டிஸ்டர்ப் பண்றே இப்படி???

ஒரு விஷயம் இருவருமே அறிந்திருக்கவில்லை!!! தங்களுடைய அப்பா படுத்திருக்கும் அந்த அறையின் வாசலில்தான் இருவரும் நின்றுகொண்டிருக்கிறார்கள் என்று இருவருமே அறிந்திருக்கவில்லை!!!

‘அப்போ நீ சொல்றது உண்மைன்னா அப்பாவை காணோம் சுஹாசினி. உண்மையை சொல்லு நீ விவேக்கிட்டே எதுவும் சொன்னியா???’

‘ஹேய்.. இல்லடி .. அன்னைக்கு விவேக் வீட்டை விட்டு கிளம்பி போனதிலிருந்து நான் அவர்கிட்டே பேசவே இல்லை.

‘அப்போ அப்பா எங்கே???’ ஹரிணி கேட்டுக்கொண்டிருக்க

மனம் நிறைய சந்தோஷத்துடன் வந்துக்கொண்டிருந்தான் விவேக். அப்பா சொன்ன தாமோதரன் இவர்தான்!!!

இவரேதான்!!! நான் அவரை பார்க்க வேண்டுமென அப்பா ஏன் விரும்பினார்??? ஒரு வேளை அவர் அப்பாவுக்கு தெரிந்தவரா??? மனதிற்கு நெருக்கமான தோழனாக இருந்திருப்பாரோ??? மனதிற்குள் கேள்வி மழை பொழிந்துக்கொண்டிருக்க ஒரு வித பரவச உணர்வுடன் மருத்துவமனையை அடைந்து சரசரவென உள்ளே நுழைந்தான் விவேக்.

தாமோதரன் இருக்கும் அறை எண்ணை கேட்டுகொண்டு இவன் விறுவிறுவென அந்த அறை நோக்கி நடந்துவர, அவன் பின்னால் இரண்டு டாக்டர்கள் பவ்யமாக நடந்து வர அவனை பார்த்த மாத்திரத்தில் திடுக்கிட்டு போனாள் ஹரிணி.

‘இவன் எங்கே இங்கே வந்தான்??? இவனுக்கு ஏன் இங்கே ராஜ மரியாதை???’

அவனுடன் வந்த டாக்டர்கள் வெளியில் நிற்க சுஹாசினி அவனை பார்த்து மலர்ந்து மகிழ்ந்து நட்பாய் புன்னகைக்க, பதிலுக்கு புன்னகைத்துவிட்டு தாமோதரன் இருந்த அறைக்குள் நுழைந்து தனக்கு பின்னால் கதவை சாத்திக்கொண்டான் நம் விவேக் ஸ்ரீனிவாசன்!!! சகோதரிகள் இருவரும் அவன் சென்ற திசையையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தனர்!!!

# அத்தியாயம் 11

'**நா**ன் எங்கே போனாலும் வந்து நிக்கறானே இவன்??? எரிச்சலா இருக்கு எனக்கு ' சுஹாசினியிடம் சொன்னாள் ஹரிணி.

'இது அவங்க அப்பா கட்டின ஹாஸ்பிடல். இங்கே அவன் வராம வேறே யார் வருவாங்க??? இது ஹாசினி. அவனது தந்தை கட்டிய மருத்துவமனை இது என தெரிந்துதானே இங்கே சேர்ந்திருந்தாள் சுஹாசினி.

'அவன் ஹாஸ்பிடல்லா.. ச்சே.. தெரியாம வந்திட்டேன்..' என்ற ஹரிணி 'இது அப்பா போன் நம்பர். சுவிட்ச் ஆஃப் ஆகி இருக்கு. நீயும் ட்ரை பண்ணி பாரு' என்றாள் ஹரிணி.

'நான் ஃபர்ஸ்ட் அவருக்கு தெரிஞ்சவங்க எல்லாரையும் கேட்கறேன். அன்னைக்கு எந்த கல்யாணத்துக்கு சமையல் பண்ண வந்தார்னு தெரியலை. தெரிஞ்சா அங்கே கூட கேட்டு பார்க்கலாம்...' ஹரிணியின் வாய் தவறி வெளியே வந்து விட்டிருந்தன வார்த்தைகள்.

அதிர்ச்சியில் குலுங்கினாள் சுஹாசினி 'அப்பா கல்யாண வீட்டிலே சமையல் பண்றாரா??? ஏன்???'

இப்போதுதான் துணுக்கென்றது ஹரிணிக்கு. என்ன பேசிவிட்டோம் என இப்போதுதான் புரிந்தது அவளுக்கு.

‘இல்ல அது வந்து சும்மா பொழுது போக்கா…’

‘என்னது??? பொழுது போக்கா??? எது அடுப்பிலே வேகறதா??? அவருக்கு என்ன வயசுன்னு தெரியுமா??? அப்போ அப்பாவை இந்த நிலையிலேதான் வெச்சிருந்தியா நீ??? குரலில் நிறைந்து நின்ற கோபத்துடன் ஹாசினி கேட்க

‘நீ வாயை மூடு’ என்றாள் ஹரிணி. நாங்க யாரும் வேண்டாம்னுதானே தூக்கி எறிஞ்சிட்டு போனே??? இப்போ நாங்க எப்படி இருந்தா உனக்கு என்ன??? என்னை கேள்வி கேட்க உனக்கு எந்த அதிகாரமும் இல்லை. எங்க அப்பாவை எப்படி தேடறதுன்னு, எப்படி கண்டு பிடிக்கறதுன்னு எனக்கு தெரியும்…’ பளாரென முகத்தில் அடிக்காத குறையாக சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு விடுவிடுவென நடந்தாள் ஹரிணி.

எனக்கு எல்லாம் தெரியும் என்ற நமது அகந்தையே பல நேரங்களில் நம் கண்ணை மறைத்து விடுகிறதோ???

‘எனக்கு தெரியும்!!! எனக்கு எல்லாம் தெரியும்!!!’ சொல்லிக்கொண்டே தனது அப்பா அங்கேதான் இருக்கிறார் என்பதே தெரியாமலே அவர் இருந்த அறையை தாண்டி நடந்தாள் ஹரிணி.

பற்றி எரிந்தது சுஹாசினியின் உள்ளம்.

அப்பாவின் நிலை கண்டு ஹரிணி மீது அப்படி ஒரு கோபம் அவளுக்கு. அதே நேரத்தில் அவள் கடைசியாக சொன்ன வார்த்தைகளில் இருந்த உண்மை அவளை உறுத்தத்தான் செய்தது.

‘ஆம் அவளை கேட்க எனக்கு எந்த அதிகாரமும் இல்லைதான்!!!’

‘சரி...அப்பா எங்கே??? நிஜமாகவே காணாமல் போய்விட்டாரா???’ கேள்வி துளைத்தது அவளை. அவள் கேள்விக்கான விடை அவள் அருகில் இருக்கும் கதவின் பின்னால் இருப்பதை அறியாமல் ‘ராகுலை கேட்க வேண்டும். அவரை கண்டுபிடிக்க ஏதாவது வழி சொல்வான் அவன்.’ என யோசித்துக்கொண்டே அங்கிருந்து நகர்ந்தாள் அவளும்.

அதே நேரத்தில்

விமானி சீருடையுடனே மனம் நிறைய சந்தோஷத்துடன் அந்த அறைக்குள் நுழைந்திருந்தான் விவேக்.. அந்த அறையில் அவனையும், அவரையும் தவிர வேறு யாரும் இல்லை. அங்கே இருந்த நர்ஸ் அப்போதுதான் வெளியே சென்றிருந்தாள்.

அவரை பார்த்தான்தான் விவேக் பார்த்தவுடனும் எதுவும் தோன்றிவிடவில்லை அவனுக்கு. அவர் இடது கையில் வலது காலில் நெற்றியில் என சில கட்டுக்கள்.

‘பாவம் நிறையவே காயங்கள் போலும். எப்படி வலித்திருக்குமோ??? அவருக்கும் அப்பாவின் வயது இருக்குமோ??? என அவன் யோசித்துக்கொண்டிருக்க....

மெதுமெதுவாய் கண் திறந்தார் தாமோதரன். கண்கள் மறுபடி சொருகி சொருகி திறக்க சிரமத்துடன் அவன் முகம் பார்த்து

‘கொ.. கொஞ்ச...ம் த...ண்ணி’ என்றார் தட்டு தடுமாறி.

‘இதோ.. இதோ தரேன்..’ என்றபடி அங்கே இருந்த தண்ணீரை ஒரு டம்ப்ளரில் ஊற்றிக்கொண்டு அவர் அருகில் அமர்ந்துக்கொண்டு அவரை கொஞ்சம் நிமிர்த்தி தனது கையில் தாங்கிக்கொண்டு டம்ப்ளரில் இருந்த தண்ணீரை மெதுமெதுவாக அவர் வாயில் விட்டபோது....

அவனது கண்களுக்கு அருகில் தாமோதரனின் முகம்!!! அவனது அப்பாவின் முகம்!!!

எந்த விழிகளின் அசைவில் அவன் வாழ்க்கை பாடத்தை கற்றுக்கொண்டானோ அதே விழிகள்.!!!

எந்த இதழ்களின் புன்னகையின் நிழலில் எப்போதும் இளைப்பாறினானோ அதே உதடுகள்!!!

எந்த முகத்தை மறுபடியும் பார்த்துவிட முடியாதா என ஏங்கிக்கொண்டிருந்தானோ, அதே முகம்!!!

அவனது உடல் முழுவதும் கிடுகிடுத்து போக, உயிர் வரை ஒரு சந்தோஷ நடுக்கம் பரவ வாய்விட்டு சத்தமாக சொன்னான் விவேக்.

அ,..........ப்................பா!!!

‘என் அப்பாவா??? இவர் என் அப்பாவா??? இவர் எப்படி வந்தார் மறுபடியும்??? என் அப்பா மறுபடியும் என் மடியிலா??? எப்படி அது??? நிஜமாகவா??? நிஜமாகவா??? இதை விட சொர்க்கம் வேறொன்று இருக்கிறதா??? நம்பவே முடியாமல் மறுபடி மறுபடி தலையை குலுக்கிக்கொண்டு அவர் முகம் பார்த்தான் விவேக்.

உடல் முழுவதும் வெள்ளை துணியால் மூடப்பட்டிருக்க அதன் மேலாக ரோஜாப்பூவும், ரோஜாப்பூ மாலைகளுமாகத்தானே கடைசியாக என் மடியில் படுத்திருந்தார் அப்பா. அந்த பூக்களின் வாசமே எப்போதும் அந்த காட்சியின் நினைவை எனக்குள் கொண்டு வந்து சேர்க்குமே!!! அப்போது அவர் நெற்றியிலும் கை காலிலும் இதே போல் கட்டுக்கள் இருந்தது.

‘ஆம்!!! இவர் என் அப்பாவேதான்!!!’ நெகிழ்ச்சி மேலோங்க கண்களில் கண்ணீர் திரையிட அவரை மறுபடியும் அழைத்தான்

‘அப்....பா!!!’ அரை மயக்க நிலை தாமோதரனுக்கு. எதுவும் புரியவில்லை

‘அப்….பா..’ அவன் மறுபடியும் அழைக்க, எதுவுமே புரியவில்லை என்றாலும் அந்த அழைப்பில் இருந்த இதம் பாசம் அந்த தந்தையையும் நிறையவே நெகிழ்த்தியது என்றுதான் சொல்ல வேண்டும். கஷ்டபட்டு விழிகளை விரித்து அவன் முகம் பார்த்தார்.

அவன் யாரென புரியவில்லை தொண்டை வரண்டது போல் இருக்க ‘எனக்கு தண்ணி….’ அவர் மெல்ல கேட்க

‘ஆங்…..இதோ..’ மெது மெதுவாய் அவர் வாயில் நீரை ஊற்றினான் விவேக்.

தாமோதரன் அவரது மனைவி இருந்த போது உணர்ந்தது இப்படி ஒரு இதமான பாசம். பல வருட காலத்துக்கு பிறகு இன்று அதே போன்றதொரு நிறைவும், அமைதியும் அவருக்குள்ளே!!!

‘யாரிவன்??? அவன் முகத்தையே கண்களால் பருகியபடியே மறுபடி உறங்கிப்போனார் தாமோதரன்.

கிட்டத்தட்ட கால் மணி நேரம் அப்படியே அமர்ந்திருந்தான் விவேக். அப்பா தனது மடியில் இருக்கிறார் என்ற உணர்வுடனே அவர் முகத்தையே பார்த்திருந்தான் நம் விமானி.

அப்போது உள்ளே வந்தார் அவரது மருத்துவர். அவருடனே இரண்டு நர்ஸ்கள்

‘குட் நூன் சார்.’ அவர் சொல்ல கொஞ்சம் தெளிந்தான் விவேக். தாமோதரனை மடியில் வைத்துக்கொண்டு கண்களில் கண்ணீருடன் அவன் அமர்ந்திருந்த கோலத்தை ஊடுறுவிக்கொண்டே கேட்டார் டாக்டர்.

‘இவர் உங்களுக்கு ரொம்ப வேண்டியவரா???’

‘ஆங்... அது வந்து...வார்த்தைகள் தடுமாறின விவேக்குக்கு. ‘இவர் என் அப்பா...’

‘சார்??? என்றார் மருத்துவர் கொஞ்சம் குழப்பத்துடன் ‘உங்க அப்பா நம்ம டாக்டர்தானே சார்... உங்க அப்பா நம்ம கூட இருக்க நமக்கு கொடுத்துவைக்கலையே. இவர் பெயர் தாமோதரன்னு சொன்னார்.’

‘தாமோதரன்!!!’ வாய்விட்டு சொன்னவனின் மனம் தெளிந்து அறிவு மெல்ல மெல்ல விழித்துக்கொண்டது. மடியில் படுத்திருந்த தாமோதரனை மெல்ல நகர்த்தி தலையணையில் படுக்க வைத்து விட்டு எழுந்தான்,

‘அங்கே போகாம எப்படி நீ தாமோதரனை பாக்குறது???’ கேட்டாரே அந்த மஹாமனிதர். என்னை பெற்றவர். என் ஸ்ரீனிவாசன். இதோ காட்டிவிட்டாரே தாமோதரனை என் கண்ணில்!!! கைக்குட்டையை எடுத்து முகத்தை அழுந்த துடைத்துக்கொண்டான் விவேக்.

‘என் அப்பா தன்னையே எனக்கு திரும்ப தந்து விட்டார்!!! ‘‘ கண்களை மூடிக்கொண்டு மனதிற்குள் சொன்னான் விவேக். அப்பா தேங்க் யூ பா...

என்னாச்சு சார்..’ டாக்டர் குழப்பம் நீங்காமல் கேட்க

‘ஆக்ச்சுவலி ஹீ லுக்ஸ் வெரி மச் லைக் மை ஃபாதர். அதனாலே நான் கொஞ்சம் இமோஷனல் ஆகிட்டேன்.’

‘ஓ!!! அப்படியா??? டாக்டருக்கே கொஞ்சம் வியப்புத்தான். தாமோதரன் முகத்தை கொஞ்சம் அருகில் சென்று பார்த்தவர்

‘ஆமாம் அப்படித்தான் தோணுது. இவர் எந்த வகையிலாவது உங்களுக்கு சொந்தமா..’ என்றார்

‘இல்லை டாக்டர். எனக்கு தெரிஞ்ச வரைக்கும் இல்லை. இது எப்படின்னு எனக்கு புரியலை. பட் ஒண்ணு மட்டும் புரியுது ஐ ஹேவ் காட் மை ஃபாதர் பேக். என்னாலே இப்போ என் அப்பாவை, அப்பா முகத்தை கண்ணாலே பார்க்க முடியும். இல்லையா???’’ என்றவன் தாமோதரனின் அருகில் நின்று ஒரு நிமிடம் முழுவதுமாக அவர் முகத்தை ஆசை தீர பார்த்திருந்தான்.

டாக்டரும் நர்ஸ்களும் அவனையே பார்த்திருந்தனர்.

சட்டென நிமிர்ந்து ‘இவர் எப்போ கண் முழிப்பார் டாக்டர் நான் அவர்கிட்டே பேசணும்...’ எனக்கு அப்பாகிட்டே

போகணும் என ஏங்கி கேட்கும் மழலையாய் அவன் கேட்க புன்னகைத்தார் மருத்துவர்.

‘மே பீ நைட்குள்ளே, இல்லைனா நாளை காலைக்குள்ளே பேச ஆரம்பிச்சிடுவார்..’ சின்ன சின்ன ஃப்ராக்சரஸ் தவிர பெரிய காம்ப்ளிகேஷன்ஸ் எதுவும் இல்லை. ஹீ வில் பீ ஃபைன் சூன்’

ஓ!!! தட்’ஸ் கிரேட். தேங்க் யூ டாக்டர்.’ என்றவன் அந்த நர்ஸ்களை பார்த்து சொன்னான் ‘இந்த ஹாஸ்பிடல் பூராவும் எல்லாருக்கும் ஸ்வீட்ஸ் டிஸ்ட்ரிபியூட் பண்ணுங்க.

அவர்கள் இருவரும் இவனை வியப்புடன் பார்க்க

‘ஐ யாம் வெரி வெரி ஹேப்பி டுடே!!! .‘ஐ ஹேவ் காட் மை ஃபாதர் பேக்...’ உற்சாகமாய் கூவினான் விவேக் ஸ்ரீனிவாசன்.

அந்த மருத்துவமனையில் இருக்கும் எல்லா டாக்டர்களின் அறைக்கும் வந்தன இனிப்புகள்.

‘ஸ்வீட் எடுத்துக்கோங்க டாக்டர்..’ சுஹாசினியிடம் இனிப்பை நீட்டினாள் அந்த நர்ஸ்.

‘என்ன விசேஷம்??? உங்களுக்கு கல்யாணமா??? ஹாசினி கண் சிமிட்ட

‘அது இல்லை டாக்டர். நம்ம ஸ்ரீனிவாசன் டாக்டர் திரும்ப வந்திட்டார்..’

‘வா...ட்.???’ திகைப்பில் அவள் விழிகள் பெரிதாய் விரிய, புன்னகைத்தாள் அந்த நர்ஸ்.

‘நீங்க இப்போதானே வந்திருக்கீங்க. உங்களுக்கு எங்க பெரிய டாக்டர் பத்தி தெரியுமா???

‘அவர் எங்க டாக்டர்’ என்றாள் ஹாசினி உரிமையும் அன்பும் தொனிக்கும் குரலில். ‘சொல்லுங்க என்ன விஷயம்’

ரெண்டு நாள் முன்னாடி ஒரு ஆக்சிடென்ட் கேஸ். அதிலே அட்மிட் ஆன ஒரு பேஷன்ட். அவர் அப்படியே நம்ம ஸ்ரீனிவாசன் டாக்டர் மாதிரியே இருக்கார்’ அவள் சொல்ல ஒரு நொடி சுஹாசினியின் இதயம் துடிக்க மறந்தது.

‘எ..ன்..னது???’ இருக்கையிலிருந்து எழுந்தே விட்டாள் அவள்.

‘எஸ் டாக்டர்.. அவரை பார்த்ததும் நம்ம விவேக் சார்க்கு ரொம்ப, ரொம்ப சந்தோஷம். எனக்கு அப்பா திரும்ப கிடைச்சிட்டார்ன்னு சொல்லி எல்லாருக்கும் ஸ்வீட்ஸ் கொடுக்க சொல்லி இருக்கார்’ சொல்லிவிட்டு நர்ஸ் நகர்ந்து விட அசைவின்றி நின்றிருந்தாள் மகள்.

‘என் அப்பாவா அது??? ஆம் அப்பாவேதான் வேறே யாராக இருக்க முடியும் அது??? படபடத்தது சுஹாசினியின் மனம்.

'ஹரிணி அவரை காணவில்லை என்றாளே??? இங்கேதான் இருக்கிறாரா??? என் அருகிலேயேதான் இருக்கிறாரா??? அவள் கால்கள் தன்னாலே அப்பாவை தேடி நகர்ந்தன.

தந்தை இருக்கும் அறைக்குள் தவிப்புடன் நுழைந்தாள் மகள். அங்கே கட்டிலில் துவண்டு போன இலையாய் சுருண்டு கிடந்தார் அப்பா. கால்கள் நடுங்குவது போன்ற உணர்வுடன் கட்டிலுக்கு அருகில் சென்றாள் ஹாசினி.

'அப்பாவா??? அப்பாவா இது??? பதினான்கு வருடங்களுக்கு முன்னால் இருந்த அப்பாவாக இல்லையே இவர். ஏன் இப்படி துவண்டு கிடக்கிறார்.' அவரை விட்டு விழி விலக்க தோன்றாமல் பார்த்திருந்தாள் சில நொடிகள்.

'டாக்டர் ஹாசினி...' கலைத்தான் அவர் அருகில் அமர்ந்திருந்த விவேக்.. 'இவரை பார்த்தீங்களா??? அப்படியே எங்க அப்பா மாதிரியே இருக்கார்...' கண்கள் மின்ன சொன்னான் அவன்.

பதிலேதும் பேசாமல் அவன் முகம் படித்தாள் சுஹாசினி.

'எனக்கு எங்க அப்பா திரும்ப கிடைச்சிட்டார் ஹாசினி. ஐ யாம் ஸோ எக்சைடெட். எங்க அப்பா கனவிலே எனக்கு சொன்னார் 'நீ தாமோதரனை பார்க்கணும்னு. அவர் யாரா இருக்கும்னு ரொம்ப யோசிச்சிட்டு இருந்தேன். இதோ பதில் கிடைச்சிடுச்சு...'

அவன் சொல்ல வியப்பில் உயர்ந்தன ஹாசினியின் புருவங்கள்.

இப்போ இவர் அப்படியே அச்சு அசலா எங்கப்பா மாதிரியே... எனக்கு நிஜமாவே என்ன செய்யறதுன்னே தெரியலை. இனி நான் இவரை விட மாட்டேன். அப்படியே என் கூடவே வெச்சுக்குவேன்.' படபடபடவென நிறுத்தாமல் பேசிக்கொண்டிருந்தான் விவேக்.

மெலிதாய் ஒரு புன்னகை ஓடியது சுஹாசினியின் இதழ்களில். இப்படி இவன் மகிழ வேண்டும் என்றுதானே அவள் எதிர்ப்பார்த்தாள். அவனது தவிப்புக்கு,மகிழ்ச்சிக்கு முன்னால் தனது உணர்வுகளை வெளிக்காட்டிக்கொள்ள தோன்றவில்லை அவளுக்கு. இவர்தான் என் தந்தை என சொல்லிக்கொள்ளவில்லை அவள்.

'ஏன் மிஸ்டர் விவேக் என்றாள் நிதானமான குரலில். 'உங்ககூடவே இவரை எப்படி நீங்க வெச்சுக்க முடியும். அவருக்கும் பசங்க குடும்பம் எல்லாம் இருப்பாங்க இல்லையா.???'

'ஆங்???'' கொஞ்சம் யோசனை கோடுகள் அவன் முகத்தில் '

அடுத்த நொடி அதனாலே என்ன??? என்றான் அவன். யாரா இருந்தாலும் நான் அவங்ககிட்டே பேசிடுவேன். ரொம்ப

ரிக்வெஸ்ட் பண்ணி கேட்டுக்குவேன். நீங்க வேணும்னா பாருங்க கண்டிப்பா ஒத்துக்குவாங்க இவரை நான் அருமையா பார்த்துக்குவேன் ஹாசினி. இனிமே இவரை தரையிலே கூட நடக்க விட மாட்டேன் ஹாசினி'

தவிப்பும், சந்தோஷமுமாக அவன் பேசிக்கொண்டே போக வியந்து போனாள் ஹாசினி.

'விமானி உடையில் மிக கம்பீரமாக இருக்கும் ஒரு ஆண் மகனுக்குள் இப்படி ஒரு குழந்தை மனமா??? தனது தந்தை மீது இப்படி ஒரு பாசமா??? '.

இவன் பாசத்துக்கு முன்னால் நான் என் தந்தை மீது கொண்ட அன்பெல்லாம் ஒன்றுமே இல்லை. ஹரிணி சொல்வதைப்போல் என் சுயநலத்திற்காக எனது தந்தையை வேண்டாமென தூக்கி எறிந்து போனவள்தானே நான். ஒரு தீர்க்கமான சுவாசத்துடன் தந்தையை பார்த்தாள் மகள்.

விவேக்கை பார்த்தாலே எரிச்சல் படும் ஹரிணி வந்து போனாள் சுஹாசினியின் மனதில்!! அதே நேரத்தில் டாக்டர் ஸ்ரீனிவாசனும் அவர் அவளுக்கு செய்த அந்த இணையில்லா உதவியும் மனதில் வந்து போயின!!!

'யாரா இருந்தாலும் நான் அவங்ககிட்டே பேசிடுவேன். ரொம்ப ரிக்வெஸ்ட் பண்ணி கேட்டுக்குவேன்.' சொன்னானே விவேக். இவன் சென்று கேட்டால் ஒப்புக்கொள்வாளா

ஹரிணி??? அவனை கெஞ்ச விட மாட்டாளா??? அவமான படுத்த மாட்டாளா??? சந்தேகமே இல்லாமல் அதைதான் செய்வாள் அவள்.

வேண்டாம் அது நடக்க வேண்டாம். ஸ்ரீனிவாசன் எனக்கு செய்த உதவிக்கு என் தந்தையை இவனுடன் அனுப்பி வைப்பதுதான் நன்றிக்கடன்!!!

வயதான காலத்தில் தந்தையை அடுப்பின் முன்னால் வேக வைத்த ஹரிணிக்கும் பெரிதாய் எந்த அதிகாரமும் இல்லை அவரிடம். கண்டிப்பாய் விவேக் என் தந்தையை அருமையாய் கவனித்துக்கொள்வான். அவனது அன்பில் அவரும் உருகித்தான் போவார்.

‘ஒரு வேளை இவருக்கு நினைவு திரும்பி ஹரிணியின் பெயரை சொல்லிவிட்டால் என்ன செய்வது???’ சற்றே குழம்பியது மனம்.

பார்க்கலாம். என்னால் இயன்ற வரை ஹரிணிக்கு எந்த தகவலும் செல்லாமல் பார்த்துக்கொள்கிறேன். இவரை விவேக்குடன் எப்படியாவது அனுப்பி வைத்து விடுகிறேன். ஒரு வாரம் அவனுடன் அவர் இருந்துவிட்டால் கூட போதும் அவனது காயம் கொஞ்சமேனும் ஆறிப்போகும். விவேக்கின் அன்பில் திளைப்பவர் அவனுடனே இருந்துவிட முடிவெடுத்துவிட்டாலும் வியப்பதற்கு இல்லை.

மனம் மெல்ல மெல்ல ஒரு முடிவுக்கு வர விவேக்கை பார்த்து புன்னகைத்தாள் ஹாசினி. இவர் அவளது தந்தை என மூச்சுகூட விடவில்லை அவள்.

தெரிந்தால் என்ன செய்வானோ??? அவர் ஹரிணிக்கும் தந்தை என்ற விஷயம் அவனுக்கும் சில நாட்களுக்காவது. தெரியாமலே இருக்கட்டுமே.

'நீங்க கவலை படாதீங்க விவேக். அவர் வீட்டிலேயும் கண்டிப்பா ஒத்துக்குவாங்க. எல்லாம் சரியா நடக்கும்' என்றாள் உறுதியான குரலில்.

'எல்லாம் சரியா நடக்குமில்லையா ஹாசினி??? எனக்கும் அப்படிதான் தோணுது. தேங்க்யூ ஹாசினி. தேங்க் யூ ஸோ மச்.' அவனது குரலில் மகிழ்ச்சி தாண்டவம்.

அதே நேரத்தில் அப்பாவுடன் சில நிமிடங்கள் தனியாக இருக்க சின்னதாய் ஒரு ஆசை பிறந்தது மகளுக்கு. அவன் சற்று நேரம் எங்காவது வெளியில் சென்றால் நன்றாக இருக்குமே என்று தோன்றவும் செய்தது.

அவன் முகம் பார்த்து புன்னகைத்தவள் மெல்லக்கேட்டாள் 'நீங்க ரொம்ப டயர்டா இருக்கீங்க. மதியம் எதுவும் சாப்பிடலையோ??? யூனிஃபார்ம் கூட மாத்தலை போலிருக்கே. போங்க போய் ஏதாவது சாப்பிட்டுட்டு வாங்க''

‘நீங்க வேறே. நான் தாமோதரன்ங்கிற பேரை கேட்டதும் ஏர்போர்ட்லேர்ந்து அப்படியே ஓடி வந்திட்டேன். அதுக்கு அப்புறம் எனக்கு வேறே எதுவும் தோணவே இல்லை. இப்போ இருக்கிற சந்தோஷத்திலே எனக்கு பசியே இல்லை, அப்புறம் சாப்பிட்டுக்கறேன் விடுங்க’ என்றான் விவேக்.

‘நோ… நோ.. விவேக். அப்புறம் இவர் கண் முழுச்சுட்டார்ன்னா என்ன செய்வீங்க??? நீங்க அவர்கிட்டே பேச வேண்டாமா??? போங்க போங்க. ஓடுங்க. சீக்கிரம் ஏதாவது சாப்பிட்டு வந்திடுங்க’ அவள் செல்லமாய் விரட்ட

‘நீங்க சொல்றது கூட கரெக்ட்தான். இதோ வந்திடறேன்..; நகர்ந்தான் அங்கிருந்து.

அவன் விலகியவுடன் அப்பாவின் அருகில் அமர்ந்துக்கொண்டாள் ஹாசினி. அவள் இறுக்கமாக பற்றிக்கொண்டு நடைப்பயின்ற கரத்தை, மெல்ல பற்றிக்கொண்டாள் அவள். அவர் நிச்சியமாக மகாராஜா இல்லைதான் என்றாலும் என்னை இளவரசி போல்தான் பார்த்துக்கொண்டார். ஆனால் நான்???

அவள் விழி ஈரம் கன்னம் தொட்டது. பல நூறு முறை மன்னிப்பு கேட்க விழைந்தது மனம். தோள் சாய்ந்து கூட அழுதிட தோன்றியது அவளுக்கு. இப்போது எதுவும் செய்யவும் இயலாது. செய்தாலும் எந்த அர்த்தமும் இல்லை. இது வரை

நான் அவருக்கு தந்த வலிகளை அது அழிக்கவும் போவதில்லை. பெருமூச்சு ஒன்று எழுந்தது அவளிடம்.

அடுப்பில் அவிந்ததற்கும், பாத்திரங்களோடு தேய்ந்ததற்கும் சாட்சியாய் அவரது உள்ளங்கை சுரசுரப்பாய் இருந்தது.

‘நாங்க ரெண்டு பேரும் உங்களை தவிக்க விட்டுடோம்பா. சரியா கவனிச்சுக்கலை. தப்பு. ரொம்ப தப்பு. சாரிப்பா ஆனா இப்போ உங்களுக்கு ஒரு பையன் வந்திருக்கான். அவன் உங்களை ரொம்ப நல்லா பார்த்துப்பான். நீங்களும் ரொம்ப சந்தோஷமா இருப்பீங்க பாருங்களேன்’ வாய் விட்டு சொன்னவள்

அவரது வலது கையை எடுத்து தனது கன்னத்தில் வைத்துக்கொண்டாள். மெல்ல முத்தமிட்டாள். சிறிது நேரம் அப்படியே அவருடனேயே அமர்ந்திருந்தவள்,

விவேக் வந்ததும் அவரது மருத்துவ அறிக்கைகளை எடுத்து பார்த்து எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது என்பதை உறுதி செய்துக்கொண்டு, அவனிடம் விடைபெற்றுக்கொண்டு எதுவுமே நடவாதது போல் அங்கிருந்து அகன்றாள்.

தவம்!!! இரவு முழுவதும் அவர் எப்போது கண் விழிப்பார் என அருகிலேயே தவம் இருந்தான் விவேக். அவனே அறியாமல் அவன் சிறிது கண் அசந்துவிட்ட நேரமது!!! காலை ஏழு மணி.

மெது மெதுவாய் கண் திறந்தார் தாமோதரன். உறக்கமும் மயக்கமும் கொஞ்சம் கொஞ்சமாக தெளிய தான் மருத்தவமனையில் இருக்கிறோம் என்பது மெல்ல மெல்ல தெளிவாகியது.

அந்த விபத்து அவர் நினைவில் வந்து போக அவர். ஹரிணி வந்திருக்க கூடுமோ என்ற யோசனையில் சுற்றுமுற்றுமாய் பார்வையை சுழற்றினார். அவள் கண்ணிலே தென்படவில்லை.

‘வர மாட்டாள். அவள் வர மாட்டாள்’ நான் இறந்தே போனாலும் அவள் வர மாட்டாள்’ அவர் மனம் துவண்டு போனது.

‘என் வலிக்கு ஆறுதல் கூட சொல்ல வேண்டாம். வலிக்கும் போது அருகிருக்க, அப்பாவென அழைக்ககூட யாருமில்லை’ வலியும் வேதைனையும் அழுத்த திரும்பியவரின் பார்வையில். அருகில் இருந்த நாற்காலியில் சாய்ந்து உறங்கிக்கொண்டிருந்த விவேக் விழுந்தான்

‘யாரிவன்??? என்ற யோசனையுடனே அவர் சற்றே அசைந்து எழ முயன்றதுதான் தாமதம் சட்டென உறக்கம் கலைந்து அவரிடம் ஓடி வந்தான் விவேக்.

‘அப்பா...’ என்றான் கரையும் குரலில். அவர் அவனை புரியாத பார்வை பார்க்க

‘அப்பா எப்போ எழுந்தீங்க நீங்க. நான் தூங்கிட்டேன்.’ என்றான் அவசரமாய். அவர் அருகில் அமர்ந்தவனின் பார்வை அவரை பரபரவென ஆராய அவர் கன்னம் வருடினான் மெல்ல

‘எப்படி இருக்கீங்க??? ரொம்ப வலிக்குதா உங்களுக்கு???’ கேட்டவனின் கண்களில் பளபளத்த நீர் தாமோதரனை என்னவோ செய்ய

யாரு…டா க…ண்….ணா நீ??? மெலிதான குரலில் கேட்டார் தாமோதரன்..

எப்படி வந்ததோ அவர் வாயில் தன்னாலே வந்தது அந்த ‘கண்ணா’. விவேக்கின் அப்பா அவனை அடிக்கடி அழைக்கும் தொனி!!! மகிழ்ச்சி கடலில் மொத்தமாக மூழ்கிப்போனான் விவேக்.

‘அப்பா’ என்றான் உற்சாகமாய்’

‘நீ யாருன்னு முதல்லே சொல்லுப்பா..’ தாமோதரன் சொல்ல

‘உங்க பையன்’ என்றான் நெகிழ்ச்சியாய்.

அதே நேரத்தில் அங்கே குழப்பத்தின் உச்சியில் அமர்ந்திருந்தாள் ஹரிணி.

‘எங்கேதான் போய்விட்டார் அப்பா??? இரவு முழுவதும் தெரிந்தவர்களை, உறவுக்காரர்களை என அனைவரையும் கேட்டாகி விட்டது. யாருக்குமே தெரியவில்லை. இன்று மதியம்

மறுபடியும் அவள் வேலைக்கு சென்றாக வேண்டும்!!! இப்போது என்ன செய்ய??? போலிசுக்கு செல்வதா வேண்டாமா???

யோசித்தபடியே அப்பாவின் புகைப்படம் ஒன்றை தேடி எடுத்தாள் அவள்.

அதே நேரத்தில் இங்கே மருத்துவமனையில் ஐந்தாவது முறையாக விவேக்கிடம் கேட்டார் தாமோதரன்

'என்...னா...லே ச...ரி...யா பே... ச... முடியலைபா மூ...ச்சு வாங்குது சொல்லேன் நீ யாருன்னு'

'உங்க பையன்.பா எத்தனை தடவை கேட்டாலும் இதே பதில்தான் .' சொல்லிய படியே அவரது கையை எடுத்து தனது கைகளுக்குள் வைத்துக்கொண்டான் விவேக். அவரை ஆசை தீர பார்த்து முடித்ததால் எழுந்த புன்னகை அவன் இதழ்களில்.

'என் பேர் விவேக். விவேக் ஸ்ரீனிவாசன். இப்போ நீங்க ரெஸ்ட் எடுங்கபா .' என்றான் கையை விடுவிக்காமல்.

'விவேக் ஸ்ரீனிவாசன்..' மனதிற்குள் சொல்லிக்கொண்டார் அவர். எங்கோ கேட்டது போல் கூட இருந்தது. அவனை ரொம்பவுமே பிடித்திருந்தது அவருக்கு. அவன் , அவன் பெயர் அவன் பேச்சு, அன்பான இதமான புன்னகை எல்லாவற்றுக்கும் மேலாக அவன் மூச்சுக்கு மூன்று தடவை சொல்லும் அந்த அப்பா!!!

ஹரிணி கூட அவரை அப்பா என அழைப்பது மிக குறைந்த சந்தரப்பங்களிலேயே. கைப்பேசியில் அழைத்தால் கூட ‘சொல்லுங்க. என்ன வேணும்???’ என்பாள் பட்டென. முகத்தில் அடித்தார் போல் இருக்கும் அப்பாவுக்கு.

‘அப்பா!!!’ இந்த வார்த்தைக்காக அவர் ஏங்கி இருக்கிறார் என இப்போதுதான் புரிகிறது அவருக்கு. விவேக்கையே பார்த்திருந்தார் அவர்.

‘அப்பா..’ என்றான் மறுபடியும். ‘உங்க சொந்தக்காரங்க எல்லாரும் எங்கே இருக்காங்க???’. ‘அவங்களுக்கு நீங்க இங்கே இருக்கறதை சொல்லணும் இல்ல’

‘நீ மட்டும் உன்னை பற்றி எதுவும் எதுவும் சொல்ல மட்டாயாம். நான் மட்டும் சொல்ல வேண்டுமோ???’ என்பதை போல் அவர் பார்க்க

இவன் மட்டும் ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறானேன்னு பார்க்கறீங்களா??? அதெல்லாம் அப்புறம் சொல்றேன். நீங்க இப்போ உங்க வீட்டு போன் நம்பர் கொடுங்க’

..............................................

‘அப்பா…’ சொல்லுங்கப்பா… மறுபடியும் அவன் அவர் கன்னம் வருட இப்போது இவர் கண்களில் ஏனோ கண்ணீர். ஹரிணியின் எண்ணை கொடுக்க ஏனோ தோன்றவில்லை.

‘எனக்குன்னு யாரும் இல்லைப்பா..’ என்றார் கசப்பு கலந்த குரலில்.

‘அய்யோ..’ அவசரமாக அவர் கண்ணீர் துடைத்தான் விவேக்.. உங்களுக்குதான் ஆறடிலே பையன் நான் இருக்கேனே அப்புறம் என்னபா???’ கவலையை விடுங்க என்றான் மிக இதமாய் ‘எங்கப்பா கண்ணிலே தண்ணி எல்லாம் வரக்கூடாது. எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கும். சரியா???

அவர் தலை தன்னாலே அசைந்தது.

‘இப்போ எங்கப்பா கொஞ்சம் ரெஸ்ட் எடுப்பாராம். உங்களுக்கு சாப்பிட என்ன கொடுக்கலாம்னு நான் டாக்டரை கேட்கறேன்’

அதே நேரத்தில்

மருத்துவமனைக்குள் நுழைந்தாள் சுஹாசினி. வந்தவுடன் கேட்ட முதல் கேள்வி ‘தாமோதரன் எழுந்துட்டாரா??? கண் விழித்து ஹரிணியை பற்றி எதுவும் சொல்லி இருப்பாரோ என்ற பதபதைப்பு அவளுக்கு.

‘எஸ் டாக்டர்...இப்போதான் கொஞ்ச நேரம் முன்னாடி’ என்றாள் அந்த நர்ஸ்

‘அவர் குடும்பத்தை பத்தி எதுவும் சொன்னாரா.???’

‘இல்லை டாக்டர்... அவருக்கு சொந்தம்னு யாரும் இல்லையாம்’

சுள்ளென வலிக்கத்தான் செய்தது மகளுக்கு. இருப்பினும் சின்னதாய் ஒரு சந்தோஷமும் அவளிடம். ‘ஹரிணி இங்கே வருவதற்கான சந்தர்ப்பங்கள் இனி இல்லை.’

அதே நேரத்தில் அங்கே ஹரிணி

தனது தந்தையின் புகைப்படத்தை தனது கைப்பேசியில் பதித்து தனது நண்பர்களுடனான வாட்ஸ் ஆப் குழுவில் பகிர்ந்துக்கொண்டிருந்தாள்

‘எனது தந்தையை இரண்டு, மூன்று நாட்களாக காணவில்லை. அவரை பற்றி ஏதாவது தகவல் தெரிந்தால் உடனே சொல்லுங்கள். இதோ அவருடைய புகைப்படம் ‘ என்ற செய்தியுடன்.

அந்த செய்தி போய் சேர்ந்ததில் முக்கியமானவர்கள் இருவர்.

ஒன்று சுதர்ஷன்!!! இன்னொன்று ஹரிணியின் தோழியும், விவேக்கின் தம்பி மனைவியுமான ரஞ்சனி!!!

# அத்தியாயம் 12

அச்சு அசலாய் விவேக்கின் அப்பாவை போலவே இருக்கிறாரே இவர்!!! இது அதிர்ச்சியா, வியப்பா, சந்தோஷமா என புரியாத உணர்வுடன் ஹரிணி அனுப்பிய அந்த புகைப்படத்தையே பார்த்திருந்தான் சுதர்ஷன்

மும்பையின் அந்த மருத்துவமனையில் அவனது அப்பா இருக்கும் அறையில்தான் இருந்தான் சுதர்ஷன். இப்போது சற்றே தெளிந்திருந்தார். எழுந்து அமர்ந்து மெல்ல மெல்ல சாப்பிட்டுக்கொண்டிருந்தார்.

அன்று விமானத்தில் நடந்ததை நினைத்தால் இன்னமும் உயிர் வரை நடுக்கம் பரவுகிறது சுதர்ஷனுக்கு. போக இருந்த அவனது தந்தையின் உயிர் திரும்பி இருக்கிறது. அதற்கு காரணம் விவேக் மட்டுமே.

அவன் ஒரு நல்ல நண்பன். அதையும் தாண்டி ஒரு மனிதாபிமானம் மிக்க மனிதன் என்பதை நிரூபித்து இருக்கிறான் ஆனால் நான்??? அவன் செய்த அந்த மிகப்பெரிய தவறு எப்போதும் போல் இப்போதும் மனதை அழுத்த ஆரம்பித்தது.

கல்லூரி காலத்தில் ஹாஸ்டலில் தங்கி படிக்க வேண்டிய நிர்பந்தம் சுதர்ஷனுக்கு. அப்போதெல்லாம் அவனுக்கு உணவு,

பணம், உடல்நலம். அன்பு என எதில் குறை ஏற்பட்டாலும், எது தேவையாக இருந்தாலும் அதை தேடி அவன் தஞ்சம் அடையுமிடம் விவேக்கின் வீடு மட்டுமே.

‘எத்தனையோ நாட்கள் தன் கையாலேயே சமைத்து அவனுக்கு மனதார பரிமாறி இருக்கிறார் அவன் அப்பா. ஏன் தர்ஷன் இவ்வளவு கம்மியா சாப்பிடறே. அப்பா சமையல் பிடிக்கலையா???’ கேட்பார் இதமாய்.

இவனுக்கு திருமணம் நிச்சியம் ஆனதும் கூட மிகவும் மகிழ்ந்து போனவர் விவேக்கின் அப்பா!!! ஆனால் அவன் மகிழ்ச்சியாய் திருமணம் செய்துக்கொண்ட போது அவரின் நிலை???

‘அதான் நான் கூட இருக்கேன்ல அப்புறம் ஏன்டா கவலை படறே???’ தடுமாறி நின்ற பல தருணங்களில் கைகொடுத்து அரவணைத்திருக்கிறான் விவேக்.

இவன் செய்யவில்லையே. அவனுக்கு கை கொடுக்க வேண்டிய நேரத்தில் கை கொடுக்கவில்லையே. எல்லாவற்றையும் அந்த தருணத்தில் எப்படி மறந்து போனேன். எப்படி அப்படி ஒரு சுயநலவாதியாக மாறிப்போனேன்???

மூன்றாண்டுகளுக்கு முன்னால் வந்தது அந்த நாள்!!! இவனது திருமணதிற்கு முந்தைய நாள் இரவு பதினோரு மணி!!!

கோவையில் நடக்கவிருந்தது அவனது திருமணம். சென்னையிலிருந்து கிளம்பினர் அனைவரும். அவனது உறவினர்கள் அனைவரும் முன்னால் சற்றே பெரிய வேனில் சென்றுக்கொண்டிருக்க, அவர்கள் பின்னால் நண்பர்களுடன் காரில் இவன். அந்த நண்பர்களில் ஹரிணியும் அடக்கம்.

மறுநாள் காலையில் திருமணம். நல்ல நாள் பார்த்து, நேரம் பார்த்து கிளம்புவதில் இத்தனை தாமதம் ஆகி இருந்தது. அதனாலேயே எல்லாரிடமும் ஒரு அவசரம் தொற்றிக்கொண்டிருந்தது. கோவையை நோக்கி தேசிய நெடுஞ்சாலையில் அதிவேகத்தில் பறந்துக்கொண்டிருந்தன இந்த வாகனங்கள்.

அப்போதுதான் நிகழந்தது அந்த விபத்து. பின்னால் காரில் வந்துக்கொண்டிருந்தவனுக்கு அந்த விபத்து எப்படி நிகழ்ந்தது என்று புரியவில்லை. முன்னால் சென்றுக்கொண்டிருந்த இவர்கள் குடும்பத்தினரின் வேன் அவர்களுக்கு முன்னால் சென்றுக்கொண்டிருந்த அந்த காரை மோதி கவிழ்த்ததை மட்டும் நன்றாக பார்க்க முடிந்தது.

கொஞ்சம் எழும்பி உருண்டது அந்த கார்.. இவனது வாகனம் க்ரீச்சிட்டு நின்றது. இறங்கி ஓடி வந்தான் சுதர்ஷன். வந்தவன் காரில் இருப்பவரின் முகத்தை பார்த்ததும் மொத்தமாக

அதிர்ச்சி கடலில் விழுந்தான். அதிலிருந்தார் விவேக்கின் தந்தை ஸ்ரீனிவாசன்!!!

‘அப்பா…’ தன்னாலே அலறினான் சுதர்ஷன்.

காரில் இருந்தது அவரும், அவரது ஓட்டுனரும். ஓட்டுனர் இப்போது அரை மயக்கத்தில் இருந்தார்., பின்னால் அமர்ந்திருந்த ஸ்ரீநிவாசனுக்கு பலத்த காயம். மயங்கியே விட்டிருந்தார் அவர்.

அந்த ஓட்டுனர் பல வருடங்களாக ஸ்ரீனிவாசனுடன் இருப்பவர். அவருக்கு சுதர்ஷனை நன்றாகவே தெரியும்.

‘தர்ஷன் தம்பி… ஹா…ஸ்..பிடல்..’ மெல்ல முனகினார் அவர்.

‘இதோ.. இதோ… போயிடலாம்… பதறினான் சுதர்ஷன்.

‘சுதர்ஷன் வேண்டாம். இது வேண்டாத வேலை’ சட்டென இடை புகுந்து அவன் அப்பா. ‘நாளைக்கு காலையிலே கல்யாணத்தை வெச்சுகிட்டு ஹாஸ்பிட்டல் அதுக்கு அப்புறம் போலீஸ்னு அலைய முடியாது. வா கிளம்பலாம்..’

‘ஆமாம் சார் நாம கிளம்பிடலாம். போலீஸ் வந்தாங்கன்னா நம்ம யாரையும் போக விட மாட்டங்க’ இது அந்த வேனை ஒட்டி வந்த டிரைவர். அவன் கவலை அவனுக்கு!!!

‘அப்பா என்னபா நீங்க? இவர் நம்ம விவேக்கோட அப்பா. எப்படிப்பா இவரை இப்படி விட்டுட்டு போறது. முதல்லே ஹாஸ்பிடல் போலாம்ப்பா’

‘யாரு அது விவேக்? உன் ஃப்ரெண்டா? அப்போ வேறே வினையே வேண்டாம். நாமதான் அவங்களை இடிசோம்னு தெரிஞ்சா சும்மா விடுவானாடா. பேசாம கிளம்புடா. நமக்கு முதல்லே கல்யாணம்தான் முக்கியம்.’ சொன்னார் அவனது மாமா.

‘நாம இப்படி ஒரு ஆக்சிடென்ட் பண்ணிட்டோம்னு தெரிஞ்சா பொண்ணு வீட்டிலேயும் என்ன சொல்வாங்கன்னு தெரியாது. ஏதாவது அபசகுனம்னு நினைக்க போறாங்க. அப்புறம் கல்யாணத்திலே எதாவது பிரச்சனை வரப்போகுது ஒழுங்கா வாடா ’ இது அவனது அத்தை

இதில் இன்னொரு வேதனை இவர்கள் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் அந்த இருளில் அங்கே வந்த மற்ற வாகனங்களும் நிற்கவில்லை. யாரும் எதையும் கண்டுக்கொள்ளவுமில்லை எல்லாருக்கும் தங்கள் வேலைகளே முக்கியம் என்பது போல பறந்துகொண்டிருந்தனர்.

பார்த்தியா? எவனாவது நிக்கறானா பார்த்தியா? எல்லாருக்கும் அவங்க வேலைதான் முக்கியம். கிளம்புங்க பேசாம. நாம்தான் இடிசோம்னு யாருக்கும் தெரிய போறதில்லை.

அது யாருக்கும் தெரியறதுக்கு முன்னாலே கிளம்பறதுதான் நல்லது.' இது இன்னொரு சொந்தகாரர்.

அவரவருக்கு தோன்றியதை அவரவர்கள் சொல்ல கடைசியில் அங்கிருந்து கிளம்புவதே சரி என ஒட்டு மொத்தமாக முடிவானது. அங்கே இரக்கம் மொத்தமாக செத்து போயிருந்தது.

'விவேக்குக்கு போன் பண்ணியாவது சொல்லிட்டு வந்திடறேன்..' இவன் தயங்க

'டேய்... பைத்தியமா உனக்கு. கிளம்புடா' பாய்ந்தார் அப்பா. 'இங்கே பாரு. காரை சரியா ஒட்டாதது அந்த டிரைவரோட தப்பு. இதிலே நம்ம மேலே எந்த தப்பும் இல்லை. நீ மனசை குழப்பிக்காம கிளம்பு' சொல்லிவிட்டு வேனில் ஏறி இருந்தார் அப்பா.

ஹரிணி காருக்கு உள்ளேயே அமர்ந்திருந்தாள். எல்லாவற்றையும் மௌன சாட்சியாக பார்த்திருந்தாள். அவள் நினைத்திருந்தால் நிச்சியமாக அவருக்கு உதவி இருக்கலாம் செய்யவில்லை அவள். அவளை மருமகளாக ஏற்றுக்கொள்ள ஸ்ரீனிவாசன் மறுத்ததே அவள் மனதில் ஓடிக்கொண்டிருக்க இறுக்கமாக, செயலற்றவளாக எதையும் செய்ய விரும்பாதவளாக அமர்ந்திருந்தாள் அவள்.. அந்த நிகழ்வின் போது ஹரிணி சுதர்ஷனுடன் இருந்தது இதுவரை தெரியாது விவேக்குக்கு.

ஸ்ரீனிவாசனின் டிரைவருக்கு நடப்பவை ஓரளவுக்கு புரிந்தது. இவர்களை நம்பி புண்ணியம் இல்லை என உணர்ந்து, எழுந்து ஏதாவது செய்துவிட அவர் செய்த முயற்சி தோல்வியில் முடிந்து அவரும் மயங்கி சாய்ந்தார்.

மற்றவர்கள் எல்லாரும் வேனில் ஏறி வேன் கிளம்பி இருக்க கிளம்ப மனமில்லை சுத்ர்ஷனுக்கு. ஏதோ யோசனையுடனே ஸ்ரீனிவாசனின் காரின் அருகில் வந்தான் அவன். அப்போது ஒலித்தது அவனது கைப்பேசி. எதிர்முனையில் அவனது வருங்கால மனைவி.

'எங்கே இருக்கீங்க???' சற்றே கிசுகிசுப்பான குரலில் 'நான் உங்களுக்காக எவ்வளவு நேரமா வெயிட் பண்றேன்'

'ஆங்...வரேன்மா.. இதோ வந்திட்டே இருக்கேன். இங்கே நடுவிலே ஒரு சின்ன பிரச்சனை'

'அய்யோ... என்ன பிரச்சனை? இங்கேயும் ஏதோ சகுனம் சரியில்லை அப்படி இப்படின்னு சொல்லிட்டு இருக்காங்க. எனக்கு நம்ம கல்யாணம் நடக்குமோ நடக்காதோன்னு பயமா இருக்கு. சீக்கிரம் வந்திடுங்களேன் ப்ளீஸ்..' கெஞ்சலும் சிணுங்கலுமாய் அவள் கொஞ்ச

'பொண்ணு வீட்டிலேயும் என்ன சொல்வாங்கன்னு தெரியாது ஏதாவது அபசகுனம்னு நினைக்க போறாங்க சற்று முன் அத்தை சொன்னதும் அவன் மனதில் ஆட

'நமக்கு எதுக்கு சார் வம்பு வாங்க கிளம்பலாம்' அவனது கார் டிரைவரும் அவர் பங்குக்கு சொல்ல வந்து அமர்ந்திருந்தான் காரினுள்ளே. அடுத்த சில நொடிகளில் ஸ்ரீனிவாசனின் காரை கடந்து நகர்ந்தது அவன் கார்.

அங்கே இவன் திருமணம் கோலாகலமாக நடக்க இங்கே ஸ்ரீநிவாசனுக்கு எல்லாம் முடிந்திருந்தது. அவரது டிரைவர் பிழைத்திருந்தார்.

உடைந்து, நொறுங்கி களைத்து தளர்ந்திருந்த விவேக்கை ஓட்டுனர் மூலமாக எட்டியது இந்த உண்மைகள். நம்பவே முடியவில்லை அவனால். சுதர்ஷனா??? சுதர்ஷனா இப்படி செய்தான்???

கலைந்த கேசமும், பல நாள் தாடியும் ,கசங்கிய உடையும் துவண்டு போன நடையுமாய் ஒரு நாள் சுதர்ஷன் வீட்டுக்கு வந்தான் விவேக்.. இன்னும் புது மாப்பிள்ளை மெருகு குறையாமல் இவன்!!!

'உண்மையாடா? எங்க டிரைவர் சொன்னது எல்லாம் உண்மையாடா??? நடுங்கும் குரலில் கேட்டான் விவேக்.

'இல்லடா... தப்பு எல்லாம் எங்க வேன் டிரைவர் மேலதான். நான் அவனை பிடிச்சு உள்ளே தள்ளிடறேன்.'

'அப்போ அவர் சொன்னது எல்லாம் உண்மைதான் இல்லையா? உடனே ஹாஸ்பிடல் கூட்டிட்டு போயிருந்தா எங்க

அப்பா பிழைச்சிருப்பார் தர்ஷன்' விவேக்கின் விழிகள் நிரம்பி வழிந்தன.

'அப்போ எனக்கு வேறே வழி தெரியலை. நான் கல்யாணத்துக்கு போயிட்டு இருந்தேன்'

'ஒரு உயிரை விட உனக்கு உன் கல்யாணம் முக்கியமாடா??? ச்சே... மனுஷனாடா நீ.... ஒரு மாசம் கழிச்சு கல்யாணம் பண்ணா என்னடா குறைஞ்சு போகும்' உச்சத்தில் எகிறியது விவேக்கின் குரல்.

'இல்லடா.. இல்லடா நான் அந்த டிரைவரை... சும்மா விட மாட்டேன்..'

'வே......ண்.......டாம்.. எனக்கு வேறே ஏதும் வே...ண்....டாம். எனக்கு எங்க அப்பாவை மட்டும் திருப்பி குடு.. திருப்பி குடுடா.. திருப்பி குடு. உடனே ஹாஸ்பிடல் கூட்டிட்டு போயிருந்தா எங்க அப்பா பிழைச்சிருப்பார்டா... பிழைச்சிருப்பார்டா... .' இவன் சட்டையை பிடித்து உலுக்கி பைத்தியம் பிடித்தவனை போல் விவேக் கத்தியதும், அதன் பின் அவனே தளர்ந்து

'நான் என்ன செய்வேன். இனிமே நான் என்ன செய்வேன் என புலம்பியபடியே வீட்டை விட்டு வெளியேறியதும் இன்னமும் கண் முன்னே நிற்கிறது.

அதன் பின் இவன் பலமுறை அழைத்தும் பேசவில்லை விவேக். யார் மீதும் எந்த வழக்கும் வேண்டாமென மறுத்திருந்தான் அவன். எதுவும் அவனது அப்பாவை திருப்பி கொடுக்க போவதில்லை என்பதை அறிந்தவன்தானே அவன்.

அதன் பிறகு விவேக்கை சுதர்ஷன் சந்தித்தது விமானத்தில்தான். எல்லாவற்றுக்கும் மௌன சாட்சியாக இருக்கும் காலம் விவேக்குக்கு மிக அழகாக சந்தர்ப்பம் அமைத்துகொடுத்தது. ஆனால் அதை பயன்படுத்திக்கொள்ளவில்லையே அவன்!!!.

‘நான் அவன் நிலையில் இருந்திருந்தால் அன்று விமானத்தை தரை இறக்கி இருப்பேனா???’ தன்னை தானே கேட்டுக்கொண்டான் சுதர்ஷன்

‘நூறு சதவிகதம் செய்திருக்க மாட்டேன்’ என்பதுதான் அவன் மனசாட்சி அவனுக்கு கொடுத்த பதிலாக இருந்தது.

‘விமானத்தை தரை இறக்கி, அதே நேரத்தில் அவருக்கான முதலுதவி ஏற்பாடுகளையும் சரியாக செய்து, ஸ்ரீனிவாசன் வளர்த்த வளர்ப்பு என்றைக்கும் தப்பாக போகாது என்பதை மிக அழகாக நிரூபித்து விட்டானே விவேக். மேன் மக்கள் எப்போதும் மேன் மக்களே!!!’ சுதர்ஷனின் கண்கள் தாண்டி கண்ணீர் வழிந்தது.

அங்கே கட்டிலில் அமர்ந்திருந்த அப்பாவுக்கு விவேக் செய்த உதவி இன்னமும் தெரியாது. மெல்ல அவர் அருகில் வந்தான் மகன்.

‘அப்பா உடம்பு எப்படிப்பா இருக்கு..’

‘இப்போ பரவாயில்லைபா.. அவர் மெல்ல சொல்ல

‘அப்பா அன்னைக்கு ப்ளேன்லே வரும்போது உங்களுக்கு ரொம்ப உடம்பு சரியில்லை. அப்போ ப்ளேனை மறுபடியும் லேண்ட் பண்ணி நமக்கு ஹெல்ப் பண்ணது யார் தெரியுமாபா???’ இவன் கேட்க அப்பா புரியாமல் பார்க்க இவன் கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்துக்கொண்டான்.

‘விவேக்பா..’ என்றான் சுதர்ஷன்

விவேக்கா???’

உங்களுக்கு ஞாபகம் இருக்காப்பா? என் கல்யாணத்துக்கு போறப்போ ஒரு ஆக்சிடென்ட் நடந்தது’ அவன் சொல்லும் போதே அப்பாவின் முகத்தில் மாற்றம்.

‘நாளைக்கு காலையிலே கல்யாணத்தை வெச்சுகிட்டு ஹாஸ்பிட்டல் அதுக்கு அப்புறம் போலீஸ்னு அலைய முடியாதுனு நாம எல்லாரும் கிளம்பி போயிட்டோம். அந்த விபத்திலே இறந்து போன டாக்டர் ஸ்ரீனிவாசனோட பையன்தான்பா இந்த விவேக். உங்களை இப்போ காப்பத்தினதும் இவன்தான். நாம செய்யாததை அவன் செஞ்சு

காட்டிட்டான்பா. இப்போ நான் அவனுக்கு துரோகம் பண்ண பாவியா நிக்கிறேன்' அப்படியே அப்பாவின் அருகில் மடிந்து அமர்ந்து குலுங்கி குலுங்கி அழத்துவங்கினான் சுதர்ஷன்.

வாயிலிருந்த உணவு உள்ளிறங்கவில்லை அப்பாவுக்கு. திடீரென்று எழுந்த குற்ற உணர்வில் அப்படியே சிலையாகி அமர்ந்திருந்தார் அவர்.

சில நிமிடங்களில் சுதாரித்து எழுந்தான் சுதர்ஷன். 'சுயநலத்தின் பெயரால் நட்பை அழித்துவிட்டேன். நம்பிக்கையை அழித்துவிட்டேன் இதற்கு பரிகாரமே இல்லை!!!. நான் செய்த பாவத்திற்கு பரிகாரமே இல்ல!!. காலம் முழுதும் இதே குற்ற உணர்வு என்னை வாட்டி வதைக்கும்' ஒரு பெருமூச்சுடனே கையிலிருந்த கைப்பேசியில் இருந்த புகைப்படத்தை மறுபடியும் ஒரு முறை பார்த்தான்.

'இவரை பற்றி விவேக்குக்கு தெரியுமா??? தெரியாதா???. தெரிந்தால் மிகவும் மகிழ்ந்து போவானே!!!' யோசித்தவனுக்கு, ஹரிணி இதை பற்றி சொல்லி இருக்க மாட்டாள் எனதான் தோன்றியது. அவனுக்குதான் ஹரிணியை பற்றி நன்றாக தெரியுமே.

'ஒரு வேளை ஹரிணியின் அப்பாவை பார்த்தால் விவேக்கின் காயங்கள் கொஞ்சம் ஆறுமோ???' சின்னதாய் ஒரு கேள்வி உதயம்

‘ஆம்!!! அது கூட சரிதான். சென்னைக்கு சென்று இவரை தேடி, எப்படியாவது ஹரிணியிடம் பேசி அவன் முன்னால் இவரை கொண்டு நிறுத்திவிட வேண்டியதுதான். இதனால் அவன் முகத்தில் ஒரு துளி புன்னகை மலர்ந்தால் கூட போதும் என் குற்ற உணர்வு கொஞ்சம் குறையும்’ யோசிக்கலானான் சுதர்ஷன்.

‘மும்பையில் அண்ணன் இருக்கிறான். அம்மாவும் இங்கே வந்தாகி விட்டது. இவர்கள் அப்பாவை பார்த்துக்கொள்வார்கள். நான் உடனே சென்னைக்கு கிளம்புகிறேன்’ முடிவுடன் நகர்ந்தான் அவன்.

அதே நேரத்தில் அங்கே சென்னையில்

எப்போதும் போல் நிர்வாக பணிகளை கவனிக்க மருத்துவமனைக்கு வந்திருந்தான் விவேக்கின் தம்பி ஷிவா. அவன் வந்த சில நிமிடங்களிலேயே அந்த செய்தி அவனை எட்டியது.

‘நிஜமாவா???’’ அவன் வியப்பு மேலோங்க கேட்க

‘ஆமாம் சார்.. அவர் பார்க்க அப்படியே உங்க பெரியப்பா மாதிரியே இருக்கார்’ வந்தது பதில்.

ஆர்வமும் மகிழ்ச்சியுமாக விழுந்தடித்துக்கொண்டு ஓடினான் அந்த அறைக்குள். தாமோதரனை நம்பவே முடியாமல் பார்த்திருந்தான் சில நிமிடங்கள்.

‘இவன் என் தம்பி..’ விவேக் ஷிவாவை தாமோதரனுக்கு அறிமுக படுத்தி வைக்க அண்ணனின் மலர்ந்த முகத்தை பார்த்தவனுக்கு அப்படி ஒரு நிறைவு.

‘உங்களை இப்படி பார்த்து ரொம்ப நாள் ஆச்சு’ ஷிவா புன்னகையுடன் சொல்ல

‘ஆமாம் ஷிவா தரையிலே இருக்கும் போது நான் இவ்வளவு சந்தோஷமா இருந்து நாளாச்சு’ சொன்னான் விவேக்.

‘நீ பைலட்டா பா..’ அவனது சீருடையை பார்த்து கேட்டார் தாமோதரன்.

‘ஆமாம்பா’ அவரை பார்த்து புன்னகைத்தான் விவேக்.

ஹரிணியின் நினைவு வந்து போனது தாமோதரனுக்கு. ஆனாலும் அவளை பற்றி எதுவும் சொல்லிக்கொள்ள தோன்றவில்லை அவருக்கு,.

‘நீங்க வேணும்னா வீட்டுக்கு போயிட்டு கொஞ்சம் ஃப்ரெஷ் ஆயிட்டு வாங்க. நான் இங்கே இவருக்கு துணையா இருக்கேன்’ விவேக்கிடம் சொன்னான் ஷிவா.

‘இல்லடா... எனக்கு இவரை விட்டு போக மனசில்லை. இங்கேயே இருக்கேனே’ அவர் முகத்தை பார்த்தபடியே விவேக் சொல்ல.

‘.அண்ணா ....நேத்து நைட் ஃபுல்லா இங்கேதான் இருந்தீங்களா நீங்க???’ கேட்டான் தம்பி

'ம்'

'பாருங்க. அதான் ரொம்ப டயர்ட்டா இருக்கீங்க. யூனிஃபார்ம் கூட மாத்தலை. இன்னைக்கு நைட்டும் நீங்க இங்கே இருக்கணும் இல்ல. போயிட்டு வாங்க.' ஷிவா கட்டாய படுத்தி சொல்ல மனமில்லாமல்தான் கிளம்பினான் விவேக்!!! .அங்கே வீட்டில் அவனுக்கு என்ன காத்திருக்கிறது என்பதை அறியாமல்!!!

அவன் கிளம்பியவுடன் 'உங்க அண்ணன் எப்படி என்னை அப்பா அப்பான்னு கூப்பிடறார்???. அவரை பத்தி எதுவும் சொல்லவும் மாட்டேங்கிறார். எனக்கு எதுவும் புரியலை' ஷிவாவிடம் தாமோதரன் கேட்க

ஸ்ரீனிவாசனை பற்றியும், விவேக்கை பற்றியும் அவரிடம் சொல்ல ஆரம்பித்தான் ஷிவா. கேட்க கேட்க தாமோதரனுக்கு அவர்கள் இருவர் மீதும் நிறையவே மரியாதை பிறந்தது.

அதே நேரத்தில் அங்கே வீட்டில் இருந்தாள் ஷிவாவின் மனைவி ரஞ்சனி. ஷிவாவின் அப்பாவும், அம்மாவும் வீட்டில் இல்லை. மாடி பால்கனியில் இங்கமங்கும் உலாவிக்கொண்டிருந்தாள் அவள்.

அவள் கரம் வயிற்றை மெல்ல வருடிக்கொடுத்துக்கொண்டிருந்தது. அவளது வயிற்றில் மூன்று மாதங்களாக வளர்ந்துக்கொண்டிருக்கும் அந்த சின்ன சிசுவே

இப்போதெல்லாம் அவளது சிந்தனையை நிறைய ஆக்கிரமிக்கிறது.

ஏதோ யோசித்தபடியே தனது கைப்பேசியை கையில் எடுத்தவளுக்கு கண்ணில் பட்டது அந்த வாட்ஸ் ஆப் செய்தி!!! ஹரிணி அனுப்பிய அந்த வாட்ஸ் ஆப் செய்தி!!! அந்த புகைப்படம் அவளுக்கு யாரையோ நினைவு படுத்த சிறிது நேரம் யோசித்தபடியே அமர்ந்திருந்தவளுக்கு பொறி தட்டியது. அந்த முகம் யாரை நினைவு படுத்துகிறது என புரிந்தது.

இங்கே எல்லாவற்றையும் தாமோதரனுக்கு விளக்கிய ஷிவா பேசாமல் இருந்திருக்கலாம். இந்த அதிசயத்தை பற்றி ரஞ்சனிக்கு சொன்னால் என்ன என தோன்றியது அவனுக்கு.

பாவம்!!! அவன் எங்கே அறிந்தான் இவர் ஹரிணியின் தந்தை என!!! ரஞ்சனியின் மூலமாக ஹரிணிக்கு செய்தி போகப்போகிறது என!!!

அழைத்தான் அவளை 'ஹேய்... உனக்கு ஒரு விஷயம் தெரியுமா???' கூவினான் அவன்.

'வாட்???' அவன் சொல்ல சொல்ல ரஞ்சனியின் மனம் கடகடவென கணக்கு போட்டது நிமிடத்தில் புரிந்து விட்டது எல்லாம்.

'அப்படி என்றால் அங்கே மருத்துவமனையில் இருப்பவர்தான் ஹரிணியின் தந்தையாக இருக்க வேண்டும்!!!'

அவரை பார்த்ததும் அண்ணன் ரொம்ப சந்தோஷமா ஆகிட்டார்!!!’ ஷிவா சொன்ன இந்த வார்த்தைகளை அவளால் ஏனோ ஜீரணித்துக்கொள்ளவே முடியவில்லை.

‘ம். அப்படியா??? சரி..’ என்று அழைப்பை துண்டித்தாள் ரஞ்சனி.

அது ஏனோ, எப்படியோ ஷிவா அவளை பெண் பார்க்க வந்த நாளிலிருந்தே விவேக்கின் மீது ஒரு காரணமில்லா வெறுப்பு ரஞ்சனிக்கு. அன்று அவளை மற்றவர்கள் எல்லாருக்கும் பிடித்துப்போக, கடைசியில் சொன்னான் ஷிவா

‘எங்க அண்ணன்கிட்டே போட்டோ காமிச்சிட்டு அவர் சரின்னு சொல்லிட்டா எனக்கு ஒகேதான்’ பற்றிக்கொண்டு வந்தது இவளுக்கு.

‘இவன் திருமணதிற்கு அவன் என்ன சம்மதம் சொல்வதாம்???’ முகம் பார்த்திராத போதே அவன் மீது எரிச்சல் மூண்டது.

விவேக்கின் சம்மதம் பெற்று நிச்சியம் நடந்துவிட, ஹரிணி அவளது நெருங்கிய தோழி என்பதால் அவள் அவனை பற்றி சொன்னவைகள் இவளது வெறுப்பை இன்னும் கொஞ்சம் விசிறி விட்டன.

அவளது திருமணத்தின் போதும் ஹரிணியும், ரஞ்சனியும் சேர்ந்து ரகசியமாய் அவனை சீண்டிக்கொண்டேதான்

இருந்தார்கள். அதில் ரஞ்சனிக்கு ஒரு வித திருப்தி இருந்ததே உண்மை. ஒரு கட்டத்தில் அவன் பொறுமை இழந்து வெடிக்க.

‘ர…ஞ்…ச…னி.. என்ன விளையாட்டு இது ’ ஷிவா பாய்ந்தது இவளிடமே

‘இல்ல நாங்க சும்மா விளையாட்டுக்கு ஏதோ பேசிட்டு இருந்தோம். உங்க அண்ணன்…’

‘‘வாயை மூடு. அவர் எனக்கு அண்ணன்னா உனக்கும் அண்ணன். எங்க அண்ணனுக்கு நீ கொடுக்க வேண்டிய மரியாதை கொஞ்சம் குறைஞ்சாலும் நான் மனுஷனா இருக்க மாட்டேன்’ சொல்லிவிட்டான் அவன். அதன் பிறகு இரண்டு நாட்கள் இவளுடன் பேசவே இல்லை ஷிவா. இவள் உள்ளுக்குள் குமைந்து போனாள்.

அதனால்தானோ என்னவோ இந்த நிமிடம் வரை அவனை அண்ணனாக எல்லாம் இவளால் பார்க்கவே முடியவில்லை. ஏதோ ஒரு விதத்தில் தனக்கு எதிரியாகவே பார்த்துக்கொண்டிருக்கிறாள் அவனை.

அதே போல் ஹரிணியை பற்றி நன்றாக தெரிந்தவள் ரஞ்சனி. அவளுக்கு விவேக்கை கண்டாலே பற்றிக்கொண்டு வருமே!!! இதில், விவேக் அவள் தந்தையுடன் இருப்பதில், அவரை பார்த்து மகிழ்வதில் அவளுக்கு நிச்சியமாய் உடன்பாடு இருக்காது என்றே தோன்றியது ரஞ்சனிக்கு.

இந்த உருவ ஒற்றுமை ஹரிணிக்கு தெரிந்திருக்கும் என்றும் புரிந்தது அவளுக்கு. இவளது திருமண மேடையின் அருகில் மாலைகளுடன் இருந்த ஸ்ரீனிவாசனின் புகைப்படத்தை பார்த்துகொண்டே இருந்தாளே???

‘யாரிவர்??? என வியப்புடன் கேட்டாளே. அப்படி என்றால் அப்போதுதான் இந்த உண்மை அவளுக்கு தெரிந்திருக்க வேண்டுமோ??? யோசித்தபடியே அவளது எண்ணை அழைத்தாள் ரஞ்சனி.

அது அணைக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் அவள் விமானத்தில் ஸ்ரீநகர் நோக்கி பறந்துகொண்டிருந்தாள். இரண்டு முறை, மூன்று முறை என இவள் முயல இணைப்பு கிடைக்கவில்லை.

என்ன செய்யலாம் என யோசித்தவள் தொகுத்தாள் அந்த செய்தியை

‘உன் தந்தை இங்கேதான் இருக்கிறார். இந்த செய்தியை பார்த்துதும் என்னை அழைக்கவும்’

அதை ஒரு முறை படித்து பார்த்துவிட்டு வாட்ஸ் அப்பில் ஹரிணிக்கு அனுப்பி விட்டு கைப்பேசியை நொண்டிக்கொண்டே நடந்தவள் கீழே இறங்கும் எண்ணத்துடன் மாடிப்படியில் கால் வைத்தாள்..

முதல் படியிலிருந்து இரண்டாம் படிக்கு பதிலாக மூன்றாம் படியில் கால்வைத்து சமாளிக்க முடியாமல் ....தடுமாறி...... அப்படியே...உருண்டு.......

‘அய்யோ....என் வயிற்றில் குழந்தை இருக்கிறதே!!!’

# அத்தியாயம் 13

**அ**ப்பா கிடைத்துவிட்டார்!!! எனக்கு என் அப்பா கிடைத்துவிட்டார் என்றே ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தது விவேக்கின் உள்ளம். மனம் கொள்ளா சந்தோஷம். தாமோதரனை தவிர வேறெதுவுமே நினைவிலில்லா சந்தோஷம்

வீட்டை நோக்கி காரை செலுத்திக்கொண்டிருந்தான் விவேக் ஸ்ரீனிவாசன். எப்போதும் அவனுக்குள் இருக்கும் அந்த வேகம் கொஞ்சம் மட்டுப்பட்டிருந்தது போலே தோன்றியது அவனுக்கு

'நான் நானாக இல்லையோ??? மெல்ல புன்னகைத்துக்கொண்டான்.

வீட்டு வாசலுக்கு வந்து காரை நிறுத்திவிட்டு நிமிர்ந்து ஜன்னலின் வழியே பார்த்தவன் பார்வையில் மேலே வானத்தில் பறந்துக்கொண்டிருந்த ஒரு விமானம் விழுந்தது.

'இல்லை இன்னும் ஒரு வாரத்திற்கு அந்த பக்கம் நான் வருவதாக இல்லை.' சொல்லிகொண்டவன் கைப்பேசியை எடுத்து அலுவலகத்துடன் பேசி இருந்தான். கடந்த சில வருடங்களாகவே விடுப்பு என்ற ஒன்றை பற்றி நினைக்கக்கூட தோன்றாமல் வானத்தில் சுற்றிக்கொண்டிருந்தவன்தானே அவன். அலுவலகத்திலிருந்து விடுப்புக்கு மறுப்பு ஏதுமில்லை.

அங்கே காரின் டேஷ் போர்டில் இருந்த புகைப்படத்தில் சிரித்துக்கொண்டிருந்தார் ஸ்ரீனிவாசன்.

'அப்பா நீங்க சிரிக்காதீங்க. எனக்கு லீவ் வேணும். அவ்வளவுதான் சொல்லிட்டேன்' அப்பாவை பார்த்து தீர்மானமாக சொன்னான் அவன். 'நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்பா எனக்கு லீவ் வேணும்.' இன்னமும் சிரித்துக்கொண்டே இருந்தார் அப்பா.

'போங்கப்பா..' சொல்லிவிட்டு காரை விட்டு இறங்கினான். அவனுக்கே அவன் போக்கு ஆச்சரரியமாக இருந்தது.

'நான் நானாக இல்லையோ???'

வானத்திலிருந்து ஒன்றிரண்டு மழைத்துளிகள் வந்து அவன் மீது விழ மேலே வானத்தை பார்த்து புன்னகைத்துக்கொண்டான் ஒரு முறை.

'யார் அழைத்தாலும் நான் வருவதாக இல்லை' உள் நோக்கி நடந்தான் அவன்.

அதே நேரத்தில் என்ன நடக்கிறது என்பதை அவள் உணரும் முன்னரே படிக்கட்டில் உருண்டிருந்தாள் ரஞ்சனி. அப்படியே சரிந்து தரையில் வந்து விழுந்தாள். அந்த அதிர்ச்சியிலிருந்து அவள் மீளவே பல நொடிகள் பிடித்தன அவளுக்கு. நிலை புரிந்த போது அவளது கரம் அவசரமாக பாய்ந்தோடுகிறது வயிற்றுக்கு

‘அய்யோ!!! எங்கே அடிப்பட்டிருக்கிறது எனக்கு??? குழந்தை??? என் குழந்தை!!! அதற்கு என்னவாயிற்றோ??? முடியவில்லையே. என்னால் எழ முடியவில்லையே!!!

‘அம்மா!!!’ வலியில் அவள் வாய்விட்டு அழைத்த அந்த கணம் அந்த நேரத்தில் அவளது அன்னையின் கரமாய் சட்டென அவளை நோக்கி நீண்டது விவேக்கின் கரம்.

‘என்னம்மா நீ கொஞ்சம் பார்த்து வரக்கூடாதா???’ இதமாய் வந்தன அவன் வார்த்தைகள். அவள் இந்த வீட்டுக்கு வந்த இத்தனை நாட்களில் அவன் அவள் முன்னால் வந்து பேசியது இதுவே முதல் முறை.

இப்போது வேறெதுவும் யோசிக்கும் மனநிலையில் அவள் இல்லை. அவன் கையை பற்றிக்கொண்டு சிரமப்பட்டு எழுந்தாள் ரஞ்சனி.

‘என் குழந்தை..’ குரல் உடைய சொன்னாள் அவள். ‘எனக்கு ரொம்ப பயமா இருக்கு. எனக்கு ஹாஸ்பிடல் போகணும்..’ ப்ளீஸ் என்னை கூட்டிட்டு போங்க..’ படபடத்தாள் அவள். சரசரவென கண்ணீர் சுரந்தது அவள் கண்களிலிருந்து.

குழந்தையா??? அவள் வயிற்றில் குழந்தை இருக்கிறதா என்ன??? இப்போதுதான் இந்த விஷயமே புரிந்தது அவனுக்கு.

உடல் முழுதும் வலி எடுப்பது போன்றதொரு எண்ணம். பயப்பரவாகம் அவளுக்குள்ளே . ‘என்னவாகிறது???

என்னவாகிறது எனக்கு??? அவன் தோள் பிடித்துக்கொண்டாள் அவள்

'எனக்கு தலை ரொம்ப சுத்துத்து. பயமா இருக்கு என் குழந்தைக்கு ஒண்ணும் ஆகாதில்ல..' அவனிடம் கேட்கும் போதே வெடித்து வருகிறது அழுகை.

அதெல்லாம் ஒண்ணும் ஆகாதும்மா..' அவன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே வயிற்றிலிருந்து பந்தாக கிளம்பி எழுந்தது ஒரு குமட்டல். வாஷ் பேசினை நோக்கி ஓடினாள் ரஞ்சனி.

அழுகையும், வாந்தியும் சேர்ந்து அழுத்த அவள் குலுங்கிகொண்டிருந்தாள். கொஞ்சம் கூட அருவெறுப்பு இல்லாமல் அவள் அருகில் நின்று அவளுக்கு உதவிக்கொண்டிருந்தான் விவேக்.

'ஏதோ ஆகப்போகிறது. ஏதோ நடக்கபோகிறது..' பய பூகம்பம் அவளை உலுக்க உலுக்க கண்ணீர் வலுத்தது. பதற்றத்தின் உச்சியில் மொத்த உடலும் செயலற்று போன உணர்வு.

'எனக்கு எனக்கு ஹாஸ்பிடல்.. போகணும்.. எனக்கு என் குழந்தை வேணும்..' அவசரமாய் வயிற்றை வருடுகிறது அவள் கரம்.

‘ரஞ்சனி..’ முதல் முறையாக பேர் சொல்லி அழைத்தான் அவளை. ‘இவ்வளவு டென்ஷன் இப்போ நல்லதில்லைமா. நீ முதல்லே எதாவது குடி. ரிலாக்ஸ் பண்ணு சீக்கிரம் ஹாஸ்பிட்டல் போயிடலாம் ’

‘குழந்தைக்கு ஒண்ணும் ஆகாதில்ல..’

‘ஒண்ணும் ஆகாது உன் குழந்தைக்கு. தைரியமா இரு..நான் சொல்றேன்ல ’

‘நிஜமா ஒண்ணும் ஆகாதா???

‘ஒண்ணும் ஆகாது.. ரிலாக்ஸ்...’ ஒரு தாயின் பரிவு அவன் குரலில்.

அவளை சோபாவில் அமர வைத்துவிட்டு கிச்சனை நோக்கி ஓடினான் விவேக். நிற்காத கண்ணீருடன் திரும்பியவளின் பார்வையில் விழுந்தன அவை.. அந்த சோபாவின் அருகிலிருந்த மேஜையின் மீதிருந்த பூ ஜாடியில் இருந்த ரோஜாப்பூக்கள்.

அவள் இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து, அவனுக்கு ரோஜாப்பூக்கள் பிடிக்காது என தெரிந்த தினத்திலிருந்து, தினமும் வீட்டுக்குள் வரும் ரோஜாப்பூக்கள். அவளே வரவழைப்பாள். இன்று அந்த ரோஜாப்பூக்களின் வாசமே அவளுக்குள் நுழைந்து உலுக்குவதை போல் ஒரு பிரமை.

‘ஏன்??? ஏன் அவனை வருத்தப்படுத்தி பார்ப்பதில் எனகென்ன ஆனந்தம். ஏன் அப்படி செய்தேன்???’ அவளுக்கே பதில் தெரியவில்லை..

இதுவரை முகமே பார்த்திராத என் குழந்தை மீது எனக்கித்தனை பாசமிருக்குமென்றால் அவனுக்கு அவன் தந்தை மீது எத்தனை பாசமிருந்திருக்கும். எப்படி துடித்திருப்பான் தந்தையை இழந்து. அப்படி என்ன அகங்காரம் எனக்கு?? அவன் மனதை எப்படி எல்லாம் கீறி வேடிக்கை பார்த்தேன் நான்??? ஆனால் இன்று அவன்???’ நான் அவன் நிலையில் இருந்திருந்தால் கண்டிப்பாய் இப்படி உதவி இருக்கமாட்டேன்.

அடி வயிற்றில் சுரீரென்று ஒரு வலி புறப்பட இரு மடங்காகிறது அவள் கண்ணீர். அவசரமாக வயிற்றை வருடிக்கொடுக்கிறது அவள் கரம்.

‘என்னடா பாப்பா செய்யுது உனக்கு???.’ குரல் உடைய கேட்டாள் குழந்தையை. ‘கடவுளே நான் செய்த தவறுக்கு எனக்கு தண்டனை கொடு. என் குழந்தைக்கு வேண்டாம்.

முடிந்துவிட்டதா??? எல்லாமே முடிந்துவிட்டதா??? வயிற்றுக்குள் ஏதேதோ மாற்றம் நிகழ்வதுபோல் தோன்ற உயிர் குலுங்கியது ரஞ்சனிக்கு.

கையில் பழச்சாறுடன் ஓடி வந்தான் விவேக். அவனுக்குள் இப்படி ஒரு தாயுள்ளம் இருப்பதை இத்தனை நாள் கண்டதில்லை இவள்.

‘கொஞ்சம் குடிம்மா இதை. நாம அப்படியே கிளம்பிடலாம்’ அதை வாங்கிக்கொள்ளக்கூட இயலவில்லை அவளால்.

‘அண்ணா..’ என்றாள் முதல் முறையாக. ‘ரொம்ப சாரிண்ணா.. என்னை மன்னிச்சிடுங்க..’ சொன்னவள் அப்படியே மயங்கி சரிந்திருந்தாள்.

அவள் மாடியிலிருந்து தவறி விழுந்ததில் கீழே விழுந்து சிதறிய கைப்பேசி அங்கேயே ஏதோ ஒரு மூலையில் கிடந்தது.

மாலை ஆறு மணி

‘ஜூஸ் குடிக்கறீங்களாபா???’ மருத்துவமனையில் உறக்கத்திலிருந்து விழித்த தாமோதரனை பார்த்து கேட்டான் விவேக்.

‘ஜூஸா??? நான் அதெல்லாம் ரொம்ப குடிக்கறதில்லபா. எப்பாவது ஏதாவது கல்யாணத்திலே மிச்சமிருந்தாதான்.’ அவர் சொல்ல குழப்பத்தில் சுருங்கின அவன் கண்கள்.

‘புரியலபா.. கல்யாணத்திலே மிச்சமிருந்தாவா???’

‘என் வேலை கல்யாணத்திலே சமையல் பண்றதுதான்’ அவர் சொல்ல என்ன தோன்றியதோ சட்டென அவர் அருகில் வந்து அமர்ந்துக்கொண்டான் விவேக்.

‘இனிமே நீங்க அதெல்லாம் செய்ய வேண்டாம். என் கூடவே இருந்திருங்க. நான் பார்த்துக்கறேன் உங்களை. இந்தாங்க முதல்லே ஜூஸ் குடிங்க’ அவர் கரம் பற்றிக்கொண்டு சொன்னவன், பழச்சாறை பருக வைத்தான்

அதன் பின் அவர் கையை அவன் மெல்ல அழுத்திகொடுக்க, சுரசுரவென இருந்த அந்த கரங்கள் அவனை என்னவோ செய்தன.

‘ஏன்பா கையெல்லாம் இப்படி இருக்கு???’

‘அடுப்பில வேலை செஞ்சு பாத்திரம் தேய்ச்சு இதெல்லாம் பண்ணா அப்படிதான் இருக்கும்.’ மெல்ல சிரித்தார் அவர் .’ஆனா இதெல்லாம செய்யறேன்னு எனக்கு எப்பவும் வருத்தம் இருந்ததில்லை’

இதுவரைக்கும் எப்படியோ. இனிமே நீங்க இதெல்லாம் செய்ய வேண்டாம் என் கூடவே வந்திடுங்க. நான் உங்களை பார்த்துக்கறேன்’ சொன்னவன் மெல்ல கேட்டான் ‘நீங்க என்கூட வந்திடுவீங்கதானே???

‘உன் கூடவா??? நான் எப்படிப்பா உன் கூட வருவேன்??? நான் வேலைக்கு போகணுமே’

‘அதெல்லாம் நீங்க எங்கேயும் போக வேண்டாம். வயசு கொஞ்சமாவா ஆகுது. இனிமே ரெஸ்ட் எடுங்க..’ அவன் உறுதியாக சொன்னான் அவன்.

சற்றே ஆச்சரியாமாய்தான் இருந்தது தாமோதரனுக்கு. ‘என் மீதே இத்தனை அன்பென்றால் அவன் அவனது தந்தையிடம் எத்தனை பாசம் வைத்திருப்பான்???’’ சிறிது நேரம் அவனையே பார்த்தவர் கேட்டார்

‘நீ பைலெட்டாபா??? எந்த ஏர்லைன்ஸ்லே..’

அவன் அவர்களது விமான நிறுவனத்தின் பெயரை சொல்ல கொஞ்சம் திகைத்து போனார் தாமோதரன். ஹரிணியும் அதிலேதானே இருக்கிறாள். ஒரு வேளை இவனை அவளுக்கு தெரிந்திருக்குமோ என யோசித்தவருக்கு சட்டென இன்னொரு நினைவும் தட்டுப்பட்டது.

விவேக் ஸ்ரீனிவாசன்!!! ஒரு முறை மனதிற்குள் சொல்லி பார்த்துக்கொண்டார். சில வருடங்களுக்கு முன்னால் ஹரிணிகென மாப்பிள்ளை தேடும் போது இவனை பற்றிய பேச்சு வந்ததோ???

ஆம்!!! வந்ததே. வந்தபோது இவன் மறுத்திருந்தானே!!!

அதற்குள் ஒலித்தது அவன் கைப்பேசி. அழைத்தது ஷிவா .

‘அண்ணா கொஞ்சம் இங்கே வர்றீங்களா???’ என்றான் அவன். ரஞ்சனி அனுமதிக்க பட்டிருந்த அறையிலிருந்து அழைத்தான் அவன். இரண்டு நிமிடங்களில் அந்த அறையின் கதவை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான் விவேக்

‘எப்படிமா இருக்கே???’ ரஞ்சனியை கேட்டான் புன்னகையுடன்.

கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந்தவளின் கரங்கள் நன்றி பெருக்கில் குவிந்தன. அவன் அவசரகதியில் அவளை இங்கே அழைத்து வராதிருந்திருந்தால் அவள் வயிற்றில் இருக்கும் முத்து இன்று அவளிடமே தங்கி இருக்குமா??? நிச்சியமாக இல்லை என புரிந்தது அவளுக்கு.

ஏதேதோ பரிசோதனைகள், மருந்துகள் ஊசிகள் எல்லாவற்றுக்கும் பிறகு குழந்தை நலமென தெரிய வந்திருக்கிறது இவளுக்கு. இந்த சில மணி நேர போராட்டங்களே அவளை புரட்டி இருந்தன.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு உறுதி பிறந்திருந்தது அவள் மனதில்.’இனி எந்த நிலையிலும் யார் மனதையும் புண்படுத்துவதில்லை

‘ரொம்ப தேங்க்ஸ்ண்ணா..’ என்றாள் அவள். அவளது அண்ணா என்ற அழைப்பில் நிறைவான ஒரு புன்னகை பிறந்தது சிவாவின் இதழ்களில்.

‘நான் உங்களை ரொம்ப வருத்தப்பட வெச்சிருக்கேன். காரணமே இல்லாம உங்க மேலே கோபப்பட்டிருக்கேன். அதெல்லாம் ரொம்ப தப்புன்னு இப்போ புரிஞ்சிடுச்சு. மன்னிச்சிடுங்கண்ணா. உங்க நிலையிலே நான் இருந்திருந்தா

எப்படியும் போகட்டும்னு விட்டிருப்பேன், இப்படி எல்லாம் ஹெல்ப் பண்ணி இருக்க மாட்டேன். யூ ஆர் கிரேட்..' அவள் சொல்ல

''நான் ஸ்ரீனிவாசன் மகனடி பெண்ணே. யாரையும் அப்படி எல்லாம் விட்டுச்செல்ல முடியாது என்னால்..' சொல்லிக்கொள்ளவில்லை அவன். அவளது வார்த்தைகளுக்கு பதிலாக ஒரு சின்ன புன்னகை மட்டுமே மலர்ந்தது அவன் இதழ்களில்.

'நீங்க சிரிச்சா ரொம்ப அழகா இருக்கீங்கண்ணா.' இது ஷிவா.

'உனக்கு ஒண்ணு தெரியுமா ரொம்ப நாளைக்கு அப்பறம் அண்ணா இப்போதான் ரொம்ப சந்தோஷமா இருக்காங்க. அவருக்கு அப்பா கிடைச்சிட்டார்ங்கிற சந்தோஷம். அவரை தன்னோட கூட்டிட்டு போய் வெச்சுக்க போறாராம்' அவன் சொல்லிக்கொண்டிருந்தான் ரஞ்சனியினிடத்தில்.

அதே நேரத்தில் அங்கே புவனேஸ்வர் விமான நிலையத்தில் இருந்தாள் ஹரிணி. தனது கைப்பேசியை அவள் உயிர்பிக்க அப்போது சட்டென அவள் திரைக்கு வந்தது அந்த செய்தி. ரஞ்சனி காலையில் அனுப்பி இருந்த அந்த செய்தி.

'உன் தந்தை இங்கேதான் இருக்கிறார். இந்த செய்தியை பார்த்துதும் என்னை அழைக்கவும்'

ஒரு நிமிடம் பரபரத்துப்போனாள் ஹரிணி. அவசரமாக அவளது எண்ணை தேடி அழுத்தின இவள் விரல்கள். அது அணைக்கப்பட்டிருந்தது. அது வீட்டின் ஒரு மூலையில் சிதறிக்கிடந்ததை எங்கே அறிந்தாள் ஹரிணி.

அடுத்தடுத்த முயற்சிகளும் தோல்வி. இப்போது அவள் தேடி எடுத்தது ஷிவாவின் எண்ணை. எப்போதோ ரஞ்சனியிடம் அவள் வாங்கிய எண் இப்போது கைக்கொடுத்தது.

'நான் ரஞ்சனி ஃப்ரெண்ட் ஹரிணி பேசறேன். அவ நம்பர் கிடைக்கலை எனக்கு. அவகிட்டே கொஞ்சம் பேசணும்..'

'இதோ ஒரு நிமிஷம் இருங்க கொடுக்கிறேன் அவகிட்டே.' சட்டென சொல்லிவிட்டிருந்தான் ஷிவா. ரஞ்சனி அனுப்பி வைத்த குறுஞ்செய்தியை பற்றி எல்லாம் எங்கே அறிந்தான் அவன்.

'உன் ஃப்ரெண்ட் ஹரிணி பேசறா..' ரஞ்சனியிடம் ஷிவா சொன்னது தெளிவாக காதில் விழத்தான் செய்தது ஹரிணிக்கு.

'நான் அப்புறம் வரேன் ஷிவா. டேக் கேர் ரஞ்சனி ' சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான் விவேக்.

ஹரிணியின் பெயரை கேட்டவுடன் அங்கிருந்து விலகிவிடவே தோன்றியது விவேக்குக்கு. அவள் ஏதாவது கேட்க, இவள் ஏதாவது பேச இது எதற்கு தேவை இல்லாத சலசலப்பு என்ற எண்ணம் அவனுக்கு.

அவனது குரலும் கேட்கத்தான் செய்தது ஹரிணிக்கு. ‘இது விவேக்கா??? சட்டென தலைக்குள் மணி அடித்தது ஹரிணிக்கு.

ஹரிணி எதற்காக அழைத்திருப்பாள் என்று ஓரளவு ஊகிக்க முடிந்திருந்தது ரஞ்சனியால். ‘இப்போது என்ன சொல்வதாம் அவளிடம்??? நிஜமாகவே புரியவில்லை ரஞ்சனிக்கு

‘ரொம்ப நாளைக்கு அப்பறம் அண்ணா இப்போதான் ரொம்ப சந்தோஷமா இருக்காங்க’ சொன்னானே ஷிவா. இப்போது எல்லாவற்றையும் ஹரிணியிடம் சொன்னால் அவள் வந்து இங்கே எல்லாவற்றையும் நொறுக்கிவிடுவாளே’ குழப்பம் மேலிட்டது அவளுக்கு.

அதே நேரத்தில் ஹரிணியிடம் பேசினால் உண்மைகளை சொல்லாமல் இவளால் இருக்கவும் முடியாது. சில நொடிகளுக்குள் ஒரு முடிவுக்கு வந்து ஷிவாவிடம் சைகையில் சொன்னாள் ரஞ்சனி

‘நான் இல்லைன்னு சொல்லிடுங்க..’ ஒன்றும் புரியாமல் கொஞ்சம் திகைத்து மீண்டவன் சமாளித்துக்கொண்டு ஹரிணியிடம் சொன்னான்.

‘சாரி ஹரிணி அவளுக்கு கொஞ்சம் உடம்பு முடியலை. தூங்கறா. நான் அப்புறம் பேச சொல்றேன்..’ சொல்லிவிட்டு துண்டித்திருந்தான் அழைப்பை.

ஹரிணியின் தலை முழுவதும் குழப்ப மேகங்கள். ‘சற்று முன் அவளிடம் கொடுக்கிறேன் என்றுதானே சொன்னான் ஷிவா. திடீரென என்னவாயிற்று??? அங்கே கேட்டது விவேக்கின் குரல்தானே??? அப்படி என்றால் அப்பா அங்கேதான் இருக்கிறாரா??? விவேக்தான் அவளை என்னிடம் பேச விடாமல் தடுக்கிறானா???

அடுத்த நொடி அவள் கைப்பேசியிலிருந்து அழைப்பு பறந்தது ஹாசினிக்கு.

‘அப்பா விவேக்கிட்டேதானே இருக்கார். எனக்கு மெஸ்சேஜ் வந்திருக்கு அவன் தம்பி பொண்டாட்டிகிட்டேர்ந்து. உண்மையை சொல்லு ஹாசினி.’ மிரட்டலாகவே வந்தது ஹரிணியின் கேள்வி. அவளது தொனி ஹாசினியை குலுக்கியது நிஜம்.

‘தெரிந்துக்கொண்டு விட்டாளே இவள். இப்போது இங்கு வந்து என்னென்ன செய்வாளோ???’ மனம் கொஞ்சம் கலங்கினாலும் எதையும் வெளிக்காட்டிகொள்ளாமல் சொன்னாள் ஹாசினி.

‘ஹரிணி எனக்கு நிறைய வேலை இருக்கு. நீ செஞ்சுக்கற கற்பனைக்கெல்லாம் நான் பதில் சொல்லிக்கிட்டு உன்னோட வம்பு வளர்க்க முடியாது. தயவுசெய்து போனை வெக்கறியா???’

பற்றிக்கொண்டு வந்தது ஹரிணிக்கு.

‘வரேன். இன்னும் ரெண்டு நாளிலே நானே சென்னை வரேன். அப்புறம் கவனிச்சுக்கறேன் உங்களை எல்லாம்’ சொல்லிவிட்டு துண்டித்தாள் அழைப்பை.

‘இன்னும் இரண்டு நாட்கள் இருக்கிறதா??? அதற்குள் ஏதேனும் செய்துவிடுவோம்’ இங்கே கணக்குப்போட்டுக்கொண்டாள் ஹாசினி.

அதே நேரத்தில் அங்கே மும்பையிலிருந்து சென்னை வரும் விமானத்தில் இருந்தான் சுதர்ஷன். அவன் அமர்ந்திருந்த இருக்கைக்கு முன்னால் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்தாள் அந்த பெண். அவனது மனைவி!!! அவளது கையில் அவர்களது ஒன்றரை வயது மகன்.

சிரித்து விளையாடிக்கொண்டிருந்தான் அவன். அவர்களோடு அவனது மனைவியின் உறவினர்கள் சிலரும் இருந்தனர். அவர்கள் எங்கே சென்றுக்கொண்டிருக்கிறார்கள், எங்கிருந்து வருகிறார்கள் என கேட்டால் கண்டிப்பாக தெரியாது இவனுக்கு.

நீண்ட நாட்களுக்கு பிறகு மகனை பார்க்கிறான். வளர்ந்திருக்கிறான் மகன். பேரழகாய் இருக்கிறான். அள்ளிக்கொள்ள துடிக்கிறது மனம். ஆனால் இயலாது இவனால்.

விவாகரத்து!!!

இவர்களுக்கு திருமணம் நடந்து மூன்று ஆண்டுகளுக்குள், எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. கடைசிவரை இது

வேண்டாமென போராடித்தான் பார்த்தான் சுதர்ஷன். ஆனால் எதுவும் சரி வரவில்லை.

இருவருக்கும் இடையில் வழக்கமான சண்டைகள் பூதாகார ரூபமேடுக்க எல்லாம் எப்படி எப்படியோ திரும்பி......

அவன் மீது பாசத்தை பொழிந்த ஒரு உயிரின் இழப்போடு ஆரம்பித்த வாழ்க்கை!!! இப்படிதான் முடிந்து போகுமோ???

இதோ கண் முன்னே அவன் மகன். அவன் சிரிப்பது கேட்கிறது. குதித்து விளையாடுவது புரிகிறது. ஆனால் சுதர்ஷனால் அவனை நெருங்கக்கூட முடியாது. கோர்ட்டின் உத்தரவு அப்படி!!! இப்போது அவர்கள் முன்னால் இவன் சென்று நின்றால் கூட விமானம் என்றும் பாராமல் இவனது மரியாதை பறிபோகும்.

ஒரு மகனிடமிருந்து ஒரு தந்தையை பிரித்த பாவம். இதோ என் மகன் எனக்கு இருந்தும் இல்லாமல்.... அவனுடைய அன்பை, பாசத்தை ஸ்பரிசத்தை எதையும் நான் உணர முடியாமல்.... சரியாக சொல்ல வேண்டுமென்றால் என் மகனை தந்தை என்ற முறையில் நான் தூக்கிக்கொண்டதே இல்லையே!!! அவன் வயிற்றில் இருக்கும் போதே அவள் என்னை விட்டு பிரிந்து விட்டாளே!!!

கலியுகத்தில் கணக்குகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டு தண்டனைகள் உடனுக்குடன் கிடைக்கின்றனவோ!!!

கண்களை கண்ணீர் மறைத்துக்கொள்ள, மகனின் குரல் செவிகளை வருடிக்கொண்டிருக்க கண்களை மூடிக்கொண்டு சாய்ந்துக்கொண்டான் சுதர்ஷன். வயது முதிர்ந்த பிறகுதான், ரத்தம் சுண்டிய பிறகுதான் குற்ற உணர்ச்சிகள் விழித்துக்கொள்ளும் என யார் சொன்னார்கள்??? இதோ தினமும் வாட்டுகிறதே அது என்னை!!!

‘என்னை ஒரு முறை மன்னிப்பாயா விவேக்??? நான் இப்படி கேட்பதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா???

மறுநாள் காலை பத்து மணி.

விவேக்கின் வீட்டுக்கு சென்று விசாரித்துக்கொண்டு அவன் மருத்துவமனையில் இருக்கிறான் என தெரிந்துக்கொண்டு அங்கே வந்து சேர்ந்திருந்தான் சுதர்ஷன் .விவேக்கை பற்றி விசாரித்துக்கொண்டு அவனும் தாமோதரனும் இருக்கும் அறையை நெருங்கினான் சுதர்ஷன்.

சற்றே ஒருக்களித்து மூடப்பட்டிருந்த அறைக்கதவின் வழி கலகலவென விவேக்கின் சிரிப்பு சத்தம் அவன் காதுகளை தொட்டன.

‘சிரிக்கிறானா??? விவேக் சிரிக்கிறானா??? அவன் உள்ளம் கொஞ்சம் பூரித்துபோனது. அந்த சிரிப்பொலியை தடை செய்ய விரும்பாமல் அது குறையும் வரை காத்திருந்துவிட்டு கதவை

தட்டினான் சுதர்ஷன். வந்து கதவை திறந்த விவேக்கின் முகம் அப்படியே கருத்துப்போனது.

‘இவன் எங்கே வந்தானாம் இங்கே???’ உயிர் வரை தீ பற்றி எரிய, உள்ளம் கொந்தளிக்க எதுவும் பேசாமல் திரும்பி நடந்தான் விவேக். அவன் பின்னாலேயே உள்ளே வந்தான் சுதர்ஷன்

‘அவனை இங்கிருந்து போக சொல்லு ஷிவா..’ மனதில் எழும்பிய அத்தனை அழுத்தத்தின் வெளிப்பாடாய் அந்த அறைக்குள் இருந்த ஷிவாவிடம் உச்சக்கட்ட தொனியில் வெடித்தது விவேக்கின் குரல்.

‘யாரு அண்ணா இது???’ ஷிவா அதிர்ந்து திகைத்து கேட்க, தாமோதரனுமே சற்று அதிர்ந்து பார்க்க இது எதுவுமே சுதர்ஷனின் கருத்தில் பதியவில்லை. அவன் பார்வை தாமோதரனின் மேலேயே நிலைதுக்கிடந்தது.

‘இவர் வந்துவிட்டாரா??? இவர் விவேக்கிடம் வந்துவிட்டாரா???’

‘போக சொல்லு ஷிவா..’ இன்னொரு இடி முழங்கியது அங்கே.

‘போயிடறேன். நான் போயிடறேன்...’ அவசரமாக சொன்னான் சுதர்ஷன் .‘நான் வந்த வேலை தன்னாலேயே முடிஞ்சிடுச்சு. மனசு கொஞ்சம் சந்தோஷமா இருக்கு.’

மனதை, அதிலுள்ள கட்டுக்கடங்காத கோபத்தை மேலுழும்பி வெடித்துவிடாமல் அடக்கிகொண்டு கைகளுக்குள் முகத்தை புதைத்துக்கொண்டு அமர்ந்தான் விவேக்.

‘ஷிவா..’ மெல்ல அழைத்தான் சுதர்ஷன். ‘நீங்க அவன் ப்ரதர்தானே???’

ம்...’

நான் ஒரு காலத்திலே விவேக்கோட ஃபரெண்ட் ‘ சுதர்ஷன் சொல்ல

ஃபரெண்ட் ‘என்ற வார்த்தையில் உச்சி முதல் பாதம் வரை கொதித்தது விவேக்குக்கு. தரையை காலால் ஓங்கி ஒரு முறை மிதித்து விட்டு விவேக் எழுந்துக்கொள்ள அந்த சத்தத்தில் அறையே அதிர்ந்தது.

ஒரு முறை சுதர்ஷனை எரிக்கும் பார்வை பார்த்துவிட்டு பேசாமல் சென்று ஜன்னலின் அருகில் சென்று நின்றுக்கொண்டான் அவன். கொழுந்துவிட்டு எரியும் உள்ளத்தின் வலியினால் அவன் கண்களில் தன்னால் கண்ணீர் சேர்ந்தது.

‘அவனோட அப்பா உயிருக்கு போராடிட்டு இருந்தப்போ நான் அவரை காப்பத்தலை ஷிவா சரியா சொல்லணும்னா நான்தான் அவனோட அப்பாவை கொன்ன கொலைக்காரன். ஆனா இவன் என் அப்பா உயிரை காப்பாத்திட்டான் ஷிவா’

அவன் சொல்ல ஷிவா, தாமோதரன் இருவருமே அதிர்ந்து உறைந்திருந்தனர்.

‘தினம், தினம் குற்ற உணர்ச்சியில் துடிச்சிட்டுத்தான் கிடக்கேன். நான் செஞ்ச பாவத்துக்கு ஆண்டவனும் என்னை சும்மா விடலை. சரியா கூலி கொடுத்திருக்கான். என் பையன் இருந்தும் எனக்கு அவன் சொந்தமில்லாம போயிட்டான்..’ அவன் சொல்ல

சட்டென திரும்பி சுதர்ஷனின் முகம் பார்த்தான் விவேக். சலனமே இல்லாத ஒரு வெற்றுப்பார்வை விவேக்கினிடத்தில்.

‘நான் மன்னிப்பு எல்லாம் கேட்க வரலை. அதிலே எந்த அர்த்தமும் இல்லைன்னு தெரியும். அது என்னமோ நீ ஒரு தடவை சந்தோஷமா சிரிக்கறதை நான் பார்க்கணும்னு நினைச்சேன். அதை இன்னைக்கு பார்த்துட்டேன். அது போதும்’ விவேக்கை பார்த்து சுதர்ஷன் சொல்லிக்கொண்டிருக்க

தலையை இடம் வலமாக அசைத்துக்கொண்ட விவேக். எதுவுமே பேசாமல், அந்த அறையை விட்டு வெளியேறினான்.

அந்த மருத்துவமனையின் தோட்டத்தில் இருந்த ஒரு மரத்தடியில் சென்று கைப்பேசியில் இருந்த அப்பாவை பார்த்தபடியே அமர்ந்துக்கொண்டான் விவேக்.

‘என்னடா கண்ணா. கஷ்டமா இருக்கா??? எனக்கு உன்னை நினைச்சா பெருமையா இருக்கு அவன் அப்பாவையே

காப்பாத்தி கொடுத்திருக்கியே நீ' கைப்பேசியில் இருந்த அவரது புன்னகை அவனுக்கு சொல்வதைப்போல தோன்றியது.

'என்ன தைரியம்பா அவனுக்கு. எல்லாத்தையும் பண்ணிட்டு மறுபடியும் என் முன்னாடியே வந்து நிக்கறானே!!!' அப்பாவிடம் புலம்பினான் விவேக்.

'சரி விடுடா. விடு... விடு..' இதுதான் அப்பாவின் பதிலாக இருக்கும். பல முறை அப்பாவிடம் இந்த குணத்தை பார்த்திருக்கிறான் விவேக்.

'அது எப்படிப்பா உங்களுக்கு தப்பு செஞ்சவங்களை அத்தனை ஈசியா மன்னிக்கறீங்க?' கேட்டும் இருக்கிறான்.

'அவன் செஞ்சதையே நாமும் செஞ்சா நமக்கும் அவனுக்கும் என்னடா வித்தியாசம். அவனை மன்னிச்சு பாரு உன் மனசுக்கு எவ்வளவு நிம்மதி கிடைக்குது பாரு' சொல்லியும் இருக்கிறார் அவர்.

'முடியாதுபா இவனை மட்டும் என்னாலே மன்னிக்க முடியாது. இவன் நண்பனா இருந்திட்டே எனக்கு துரோகம் பண்ணவன்பா..' இவன் மனதிற்குள் மருகிக்கொண்டிருந்த நேரத்தில்....

மற்ற யாரிடமும் எதுவும் பேசாமல் அந்த அறையை விட்டு வெளியே வந்திருந்தான் சுதர்ஷன். சரியாக அந்த நேரத்தில்

அங்கே எதிர்ப்பட்டாள் அவள். ஹாசினி.. அவள்தானே அது!!! ஆம் அவளேதான்!!! சொல்லிகொண்டான் அவன்.

ஹாசினியை சில முறைகள் ஹரிணியுடன் பார்த்திருக்கிறான் சுதர்ஷன். அவள் மருத்துவர் எனவும் தெரியும் அவனுக்கு மனம் ஏதேதோ முடிவுகளுக்கு வர நேராக அவளிடம் சென்று நின்றான் அவன்.

‘நீங்க ஹரிணியோட சிஸ்டர் ஹாசினிதானே???

‘எஸ். நீங்க???’

நான் அவ ஃபரெண்ட். சுதர்ஷன். அவ கூட படிச்சவன். அங்கே உள்ளே இருக்கிறது உங்க அப்பாதானே??? கேட்டும் விட்டான் அவளிடம்.

‘எங்கப்பாவா??? யாரு??? அவள் தெரியாதது போல் கேட்க…

‘அதுதான் மிஸ்டர் தாமோதரன்’ என்றான் இவன் பட்டெடன. அவனிடம் என்ன சொல்வது எனத்தெரியாமல் இவள் திகைக்க அவனே தொடர்ந்தான்.

‘ரொம்ப தேங்க்ஸ் டாக்டர் ஹாசினி..’

‘புரியலை எதுக்கு தேங்க்ஸ்…’

‘உங்க அப்பாவை விவேக் முன்னாடி கொண்டு வந்ததுக்கு. ஹரிணிக்கு இது தெரியாதுன்னு நினைக்கிறேன். தெரிஞ்சிருந்தா அவ கண்டிப்பா இதை செய்திருக்க மாட்டா. அவகிட்டே

எப்படியாவது பேசி இதை நடத்திடணும்னுதான் வந்தேன். நீங்களே செய்துட்டீங்க. தயவு செய்து ஹரிணி அவரை பிரிச்சு கூட்டிட்டு போகாம பார்த்துக்கோங்க...’

நீங்க விவேக்குக்கும் பெஸ்ட் ஃபரெண்டா’ அவன் சொன்ன விதத்தை பார்த்து புன்னகையுடன் ஹாசினி கேட்க

‘இல்ல பெரிய துரோகி..’ என்றான் அவன். அவள் குழப்பத்துடன் அவனை பார்க்க அன்று ஸ்ரீநிவாசனுக்கு நடந்ததை விளக்கினான் அவளுக்கு.

அவன் சொல்ல சொல்ல அதிர்ச்சியில் இறுகிப்போய் நின்றிருந்தவள் சில நொடிகள் கழித்து நடுங்கும் குரலுடன் கேட்டாள்

‘அப்போ ஹரிணி நினைச்சிருந்தா கூட எங்க டாக்டரை ஒரு வேளை காப்பாத்தி இருந்திருக்கலாம் இல்லையா???

‘ஆங்.. இல்லை அது வந்து.. நான்.. தப்பு என் மேலேதான்..’ இவள் இப்படி கேட்பாள் என எதிர்ப்பார்க்காத சுதர்ஷன் தடுமாற

‘தப்பு உங்க மேலே மட்டுமில்ல..’ என்றாள் அவள் இறுக்கமாக.

‘ப்ளீஸ்.... ஹாசினி நான் ஹரிணி மேலே குற்றம் சொல்ல வரலை. விவேக் சந்தோஷமா இருந்தா எனக்கு கொஞ்சம் திருப்தி அவ்வளவுதான்’ சொன்னான் சுதர்ஷன்.

‘ஒரு உயிரை எல்லாருமா சேர்ந்து அழிச்சிருக்கீங்க. ச்சே மனுஷங்களா நீங்க…’ வெடித்தாள் பட்டென. ‘இதிலே அவன் சிரிச்சா சந்தோஷம் அது இதுன்னு.. தயவு செய்து என் முன்னாடி நிக்காதீங்க’

‘இல்ல ஹாசினி..’

‘ப்ளீஸ் கெட் அவுட்..’ ஹாசினி கத்த அதற்கு மேல் அங்கே நிற்க முடியாமல் தளர்ந்து நகர்ந்தான் சுதர்ஷன்.

சில நிமிடங்கள் கழித்து மனம் கொஞ்சம் தெளிந்தது போல் இருக்க தோட்டத்தில் தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து நடந்தான் விவேக். ‘மறுபடியும் சுதர்ஷன் கண்ணில் பட்டுவிடக்கூடாது’ என்ற வேண்டுதலுடன்.

‘மன்னிக்க மாட்டேன்பா. நான் அவனை மட்டும் மன்னிக்க மாட்டேன்’ ஜபித்துக்கொண்டேதான் வந்தான் விவேக்.

அதே நேரத்தில் ஹாசினியுடன் பேசிவிட்டு வெளியே வந்துக்கொண்டிருந்தான் சுதர்ஷன். அவன் தலைக்குள் பல நூறு அலைகள் அடித்துக்கொண்டிருக்க கார் நிறுத்துமிடத்தை நோக்கி அவன் நடக்க அவனுக்கு எதிரே விவேக் வந்துக்கொண்டிருக்க தன்னை நோக்கி வேகமாய், அதிவேகமாய் வந்துக்கொண்டிருந்த காரை கவனிக்கவில்லை சுதர்ஷன்.

திடீரென அவனுக்கு பின்னால் வெகு அருகில் கார் வந்ததை சுதர்ஷன் உணர்ந்து செய்வதறியாது தடுமாறி நிற்க,

அவனை எப்படி பார்த்தான் எப்படி நிகழந்தது, என்ன நிகழ்ந்தது என அவனுக்கு புரிவதற்கு முன்னே அவன் மீது பாய்ந்து அவனை நகர்த்திக்கொண்டு போயிருந்தான் விவேக்.

‘டேய்……அறிவில்லை உனக்கு. ரோட்டை பார்த்து வர்றதில்லையா???’ தன்னையும் அறியாமல் எகிறியது விவேக்கின் குரல். அது அவனது அனிச்சை செயல்.

நொடிகள் நகர்ந்த பின்னரே தான் என்ன நிகழ்ந்தது என இருவருமே உணர்ந்தனர். சுதர்ஷனின் கண்களில் இப்போது நீர் படலம். ‘எப்படிப்பட்ட மனிதன் இவன்??? இன்று என் உயிரையும் எனக்கு திருப்பி கொடுத்திருக்கிறானே!!!’

அதுதான் விவேக்!!! அதுதான் ஸ்ரீனிவாசனின் மகன் விவேக். எதிரே நிற்பவன் துரோகியாக இருந்தாலும், நண்பனாக இருந்தாலும் அவன் விவேக் ஸ்ரீனிவாசனாகவே இருப்பான்!!!

சட்டென அவனை விட்டு விலகி தலையை உதறிக்கொண்டு நடந்தான் விவேக். ஒரு முறை நிமிர்ந்து மேலே வானத்தை பார்த்துக்கொண்டான் அவன்.

‘இதெல்லாம் அவர் வேலை. மேலிருந்து என்னை இயக்கிக்கொண்டிருக்கும் ஸ்ரீனிவாசனின் வேலை. எப்போதும் அவர் நினைத்தை என்னை செய்ய வைப்பதுதானே அவர் வழக்கம்’ தனக்குள் புலம்பிக்கொண்டே நடந்தான் விவேக்.

கண்களை தாண்டி, கன்னங்களையும் தாண்டி நீர் வழிந்துக்கொண்டிருக்க அசையக்கூட தோன்றாமல் நின்றிருந்தான் சுதர்ஷன். காலம் முழுவதும், அவன் உடல் மண்ணில் சாயும் வரையிலும் இந்த குற்ற உணர்ச்சியிலிருந்து அவனுக்கு விடுதலை இல்லை என்பது மட்டும் தெளிவாக புரிந்தது சுத்ர்ஷனுக்கு.

மனம் அலைப்புற்று கிடக்க காற்றில் அலையும் இலை போல் மருத்துவமனைக்குள் இங்கமங்கும் நடந்துக்கொண்டிருந்தாள் ஹாசினி. கடைசியில் ஒரு இடத்தில் வந்து நின்றது மனம். அந்த நேரத்தில் அவளை கடந்து நடந்துக்கொண்டிருந்தான் விவேக்.

‘விவேக்..’ அவசரமாய் அழைத்தாள் அவனை

‘ம்… சொல்லுங்க ஹாசினி.

‘நாளைக்கு மார்னிங் அப்பாவை, ஐ மீன் உங்க அப்பாவை நீங்க டிச்சார்ஜ் பண்ணி உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போயிடுங்க. உங்க வீட்டுக்கு… உங்க வீட்டுக்கு கூட வேண்டாம் வேறே எங்கேயாவது ஒரு நிம்மதியான இடத்துக்கு அதாவது அவர் ரிலாக்ஸா இருக்கிற ஒரு இடத்துக்கு…’படபடபடவேன பரபரத்தாள் அவள்.

‘இருங்க இருங்க டாக்டர். ஏன் ஏன் இத்தனை அவசரம்??? இங்கே இருந்தா என்ன??? நான் கூட இருந்து பார்த்துக்கறேன். லெட் ஹிம் ரிகவர் ஃபர்ஸ்ட்’

‘இல்ல விவேக் நான் நல்லதுக்குதான் சொல்லுவேன். உங்க நல்லதுக்கு. இப்போ அவருக்கு கைலேதான் எலும்பு முறிஞ்சிருக்கு. நடக்குறது எல்லாம் எந்த பிரச்சனையும் இல்லை. நீங்க வேணும்னா ஒரு நர்ஸ் வெச்சுக்கோங்க. நாளைக்கு இங்கிருந்து கிளம்பிடுங்க’ மூச்சு முட்டியது அவளுக்கு.

‘ஏன் ஹாசினி..’ இவ்ளோ டென்ஷன். நான் அவரை அட்டென்ட் பண்ற டாக்டரையும் கன்சல்ட் பண்ணிட்டு..’

அவங்க இன்னும் ரெண்டு மூணு நாள் ஆகட்டும்னு சொல்வாங்க. அதெல்லாம் வேண்டாம் நீங்க கிளம்புங்க. அதுதான் நல்லது..’ அவள் திரும்ப திரும்ப அதையே சொல்லி அவனை சம்மதிக்க வைத்திருந்தாள்.

மறுநாள் மதியம்

தாமோதரனை பரிசோதிக்கும் மருத்துவரும் ஒப்புக்கொள்ள அவரை கிழக்கு கடற்கரை சாலையில் இருக்கும் தனது இன்னொரு வீட்டுக்கு அழைத்து செல்ல முடிவு செய்திருந்தான் விவேக். இரண்டு மனதாகவே இருந்தது தாமோதரனுக்கு.

‘என்னதான் இருந்தாலும் இவன் என் மகளை மறுத்தவன் ஆயிற்றே எனவும் தோன்றியது அவருக்கு.

‘ஏன்பா இவ்வளவு யோசிக்கறீங்க??? அவர் அருகில் அமர்ந்தான் விவேக். ‘நான் உங்களை ரொம்ப நல்லா பார்த்துக்குவேன்’

‘அதுக்கில்லேபா. நான் அப்படியே எங்க வீட்டுக்கு போயிட்டு..’

‘அங்கே உங்களுக்குன்னு யாருமே இல்லைதானே???’

‘அது.. வந்து.. எனக்கு..’ ஹரிணியை பற்றி சொல்லி விடுவோமா என அவர் யோசிக்க

‘அப்பா ப்ளீஸ்பா. வந்திடுங்க. எனக்கு உங்களை பார்த்திட்டே இருக்கணும்பா ப்ளீஸ்பா’ அவர் கையை எடுத்து தனது கன்னத்தில் வைத்து அழுத்திக்கொண்டான். மறுபடி மறுபடி அவன் உச்சரிக்கும் அந்த அப்பா அவரை உருக்கிப்போட்டது. வேறெதுவும் சொல்ல தோன்றவில்லை.

‘சரிப்பா..’ போகலாம்..’ அவர் புன்னகைக்க உற்சாகத்தின் முழு உருவமாக கிளம்பினான் விவேக். அவர்கள் கிளம்பி செல்வதை தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டே நின்றிருந்தாள் சுஹாசினி.

அதே நேரத்தில் அங்கே

விமானத்தை செலுத்திக்கொண்டிருந்தாள் ஹரிணி. அந்த விமான நிலையத்தில் விமானத்தை தரை இறக்கும் நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. அடுத்து இங்கிருந்து நேரே

சென்னைதான். போய்விடலாம். மாலைக்குள் போய்விடலாம். போய் விவேக்கை ஒரு கை பார்த்துவிடலாம்!!!

அவள் எண்ணம் முழுதும் விவேக்கே ஆக்கிரமித்திருந்தான். அன்று ரோஜாப்பூவை வைத்து அவனை ஆட்டம் காட்டிய நிகழ்வும் அவள் நினைவில் வந்தது.

‘அன்றே முடித்திருக்கவேண்டும் அவனை. அவன் ஏதாவது தவறாக செய்திருந்தால் அவனது விமான உரிமமே ரத்து செய்ய பட்டிருக்கும். அதோடு ஒடுங்கி இருப்பான். தப்பித்துவிட்டான் அவன் எப்படியோ தப்பித்துவிட்டான்’ கருவிக்கொண்டிருந்தது அவள் உள்ளம்.

தீதும் நன்றும் பிறர் தர வாராது. நம் செயல்களும் எண்ண ஓட்டங்களுமே நமக்கு வரும் பிரச்சனைகளுக்கு காரணம் என அறியவில்லையே அவள்.

அருகிலிருந்த துணை விமானி அவளுக்கு ஆணைகளை கொடுத்துக்கொண்டிருக்க இறக்கி கொண்டிருந்தாள் விமானத்தை. ஓடுதளம் கண்ணில் தெரிந்துக்கொண்டிருந்தது.

டென் தௌசண்ட்

எய்ட் தௌசண்ட்

சிக்ஸ் தௌசண்ட்

அவள் இறக்கிக்கொண்டிருந்த போது ஒலித்தது அந்த அபாய அலாரம். விமானம் நிலத்துக்கு மிக அருகில் இருக்கிறது

என்பதை உணர்த்தும் அபாய ஒலி. உயிர் மொத்தமும் உறைந்து போனது அவளுக்கு. தலைக்குள்ளே சுனாமி தாக்கியது.

‘அய்யோ… நான் இறங்கிக்கொண்டிருப்பது ஓடுதளம் நோக்கி இல்லையே!!!

# அத்தியாயம் 14

**மை** காட்!!! அலறினான் அருகிருந்த விமானி.

தாங்கள் இறங்கிக்கொண்டிருப்பது ஓடு தளத்தை நோக்கி அல்ல அந்த விமான நிலையத்தை ஒட்டி இருந்த சாதரண சாலையை நோக்கி என்பது .புரிந்தது இருவருக்கும். அதிவேகத்தில் இறங்கிக்கொண்டிருந்தது விமானம். இன்னும் கிட்டத்தட்ட தொண்ணூறு நொடிகளுக்குள் விமானம் தரையை தொட்டுவிடும் நிலை.

விமானம் இறங்கி சாலையை தொட்டிருந்தால் அதனால் ஏற்படும் விளைவுகளை கற்பனை கூட செய்ய முடியவில்லை அவளால். இதற்கு இருவரது கவனக்குறைவே காரணம்.

'வாட் தி ஹெல் தருண்..' அருகிருந்த விமானி மீது பாய்ந்தாள் அவள். ஆனாலும், அந்த பரபரப்பிலும் சமாளித்து விட்டிருந்தாள். சட்டென ஒரு வட்டமடித்து விமானத்தை மேலே எழுப்பி இருந்தாள் ஹரிணி. இருப்பினும் படபடத்து போனது அவளுக்கு.

இப்போது சரியான பாதையில் சென்று விமானத்தை ஓடுதளத்தை நோக்கி இறக்கி கொண்டு சென்ற படபடப்பில், ஓடுதளத்தின் முனைக்கு கொண்டு சென்று இவள் பிரேக்குகளை

அழுத்திய வேகத்தில் விமானமே குலுங்கி நின்றது. பயணிகள் கொஞ்சம் மிரண்டுதான் போயிருந்தனர்.

அப்படியே கண்களை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தாள் ஹரிணி. மிகப்பெரிய உயிர் சேதம் தவிர்க்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் அடுத்து என்ன நடக்குமென தெரியும் அவளுக்கு. டி.ஜி.சி.ஏவிற்கு இவர்கள் இருவரும் பதில் சொல்லி ஆகவேண்டும். அதன் விதிமுறைகள் சற்றே கடுமையானவைதான்.

முதலில் இவர்களிடம் இரண்டு மூன்று மாதங்கள் விசாரணை நடக்கும். அதுவரை இவர்களது உரிமங்கள் தாற்காலிகமாக முடக்கப்படும். இவளால் காக்பிட்டுக்குள் கால் கூட வைக்க முடியாது. விசாரணைக்கு பிறகு இவர்களது உரிமங்கள் ரத்து கூட செய்யப்படலாம்!!! அடுத்து டி.வி களிலும் வலைத்தளங்கலிலும் கூட இந்த சம்பவம் விவாதிக்கப்படும். உயிர் வரை சுட்டன இந்த உண்மைகள்.

சில நிமிடங்கள் கடந்திருக்க அங்கே கிழக்கு கடற்கரை சாலையில் இருந்த தனது வீட்டுக்கு தாமோதரனை அழைத்துக்கொண்டு வந்திருந்தான் விவேக்.

விடுமுறை நாட்களில் ஸ்ரீனிவாசனுடன் அவன் இங்கே வந்துவிடுவான். நிறையவே இனிமையான நினைவுகள் கொண்ட

வீடு அது. இப்போது அந்த வீட்டில் அங்கங்கே ஸ்ரீனிவாசனின் புகைப்படங்கள் வீற்றிருந்தன.

வாங்கப்பா... வாங்க... வாங்க.... வாங்க..’. அகமகிழ்ந்து வரவேற்றான் அவரை. சோபாவில் சென்று அமரவைத்தான்.

ஸ்ரீனிவாசன் ஒரு மகாராஜாவை போல் கம்பீரமாக அமர்ந்திருப்பார் அந்த சோபாவில். அவர் அதில் அமர்ந்து தொலைக்காட்சியில் மூழ்கி இருப்பார் இவன் அவருக்கு எதிரில் அமர்ந்து அவரையே ரசித்துக்கொண்டிருப்பான். இங்கே வந்தாலே அடிக்கடி நடக்கும் அந்த விளையாட்டு.

‘சும்மா தைரியமா உட்காருங்க. இது உங்க வீடுப்பா..’ சொன்னான் ஒரு சிறு தயக்கத்துடன் அமர்ந்திருந்த தாமோதரனை பார்த்து. ஒரு ஆழ்ந்த சுவாசத்துடன் சற்றே இயல்பாக அமர்ந்தார் அவர்.

‘எப்படி இந்த உருவ ஒற்றுமை. ஒரே போல் ஏழு பேர்கள் இருப்பார்கள் என்பார்களே அது இதுதான். நிச்சயமாக இதுதான். இறைவன் படைப்பில் இது என்ன ஆச்சரியம்.’ சில நொடிகள் அவரையே பார்த்திருந்தவன் அவர் அருகில் வந்து அமர்ந்துக்கொண்டான்.

‘ரொம்ப தேங்க்ஸ்பா..’ என்றான் நிறைவாக. ‘எங்கப்பா மறுபடியும் இந்த வீட்டுக்கு வரவே மாட்டார்னு நினைச்சு

நினைச்சு அழுதிருக்கேன். ‘இதோ வந்திட்டார். எங்கப்பா வந்திட்டார் என்றான் நெகிழ்ச்சியாக.

‘இருங்க வந்திடறேன்’ என்று தனது பையை எடுத்து வந்தவன் அதிலிருந்து புது வேஷ்டி சட்டையை எடுத்தான்.

‘இனிமே எங்கப்பா இப்படி பழைய டிரஸ் எல்லாம் போடக்கூடாது. எப்பவும் பளிச்சுன்னு கம்பீரமா இருக்காணும்..’ அவரிடம் கொடுத்தான் அதை.

அவருக்கு உடை மாற்றிக்கொள்ள உதவிவிட்டு அவன் கையாலேயே அவருக்கு பிடித்தமானதை சமைத்து சாப்பிட வைத்தான். ஏதோ ஒரு பொக்கிஷத்தை பெற்றதைப்போல் அவர் அருகிலேயே அமர்ந்திருந்தான். ஏதோ ஒரு கிரீமை கொண்டு வந்து அவரது சுரசுரப்பான கையில் தடவினான்.

‘எங்கப்பா கை இப்படி எல்லாம் இருக்க நான் விட மாட்டேன்’ என்றான் இதமாக.

நேரம் இரவு எட்டு மணியை தொட்டிருந்தது.

அப்போது அவனது கைப்பேசிக்கு வந்தது அந்த அழைப்பு. அழைத்தது அவனது தோழி ராதிகா. அன்று மும்பை விமான நிலையத்தில் அவனை சந்தித்த அதே ராதிகா.

‘ஹேய்.. ஹவ் ஆர் யூ??? இவன் குரலில் இருந்த அந்த உற்சாகம் அந்த தோழிக்கு புரியாமல் இல்லை.

‘ஓய் என்னப்பா இவ்வளவு ஹாப்பியா இருக்கே. மேரேஜ் செட் ஆகிருச்சா என்ன??? இப்போ எங்கே இருக்கே நீ???

‘ஏய்... ஒரு ,மனுஷன் சிரிச்சா அதுக்கு காரணம் கல்யாணம் மட்டும்தான் இருக்குமா??? இது வேறே விஷயம். எனக்கே தெரியாம எனக்கு கிடைச்ச சர்ப்ரைஸ். ஒரு வாரம் அப்படியே ப்ரேக் எடுத்திட்டேன் இன்னொரு நாள் உனக்கு எல்லாம் சொல்றேன்’

‘என்னது எங்க வீ.எஸ் ஒரு வாரம் ப்ரேக்கா. அப்போ பெரிய மேட்டர்தான். சரி நான் இப்போ உனக்கு ஒரு மேட்டர் சொல்றேன்’ என்றவள் ஹரிணி ஒட்டி வந்த விமான கதையை அவனுக்கு சொல்ல

‘கேர்லெஸ்.... கேர்லெஸ் எக்ஸ்ட்ரீம்லி கேர்லெஸ் ...’ படபடத்தான் இவன். ‘யாரு நம்ம ஹரிணிதானா ராதிகா???’

‘ஹரிணி’ அந்த பெயரை கேட்டவுடன் திடுக்கென நிமிர்ந்தார் அங்கே அமர்ந்திருந்த தாமோதரன். ‘என் மகளை பற்றிதான் பேசுகிறார்களா???’

‘நம்ம ஹரிணியேதான். உன் அருமை தோழி..’ சிரித்தாள் ராதிகா.

‘மை காட்..’ என்றான் இவன். ‘நிஜமா பாவம். உடனே கிரௌண்ட் பண்ணிடுவாங்களே. லைசென்ஸ் சஸ்பெண்ட் ஆகிடுமே???’’

‘சஸ்பெண்டா??? என்னது சஸ்பெண்ட்??? அவன் பேசியதில் அந்த வார்த்தைதான் தாமோதரனுக்கு சட்டென புரிந்தது. ‘என் மகளை சஸ்பெண்ட் செய்து விட்டார்களா??? ஏனாம்??? எதற்காம்??? படபடத்தது தந்தை மனது.

‘சஸ்பெண்ட் ஆகியாச்சு..’ என்றாள் ராதிகா ‘அடுத்து என்கொயரி ஓடும் ரெண்டு மூணு மாசத்துக்கு. அது சரி. அவளுக்கு உன்னை கண்டாலே ஆகாது. நீ எப்படிப்பா அவளுக்கு போய் பாவம் சொல்றே..’ ஆற்ற மாட்டாமல் கேட்டே விட்டாள் ராதிகா.

அழகாய் சிரித்தான் விவேக் ஸ்ரீனிவாசன். இதற்கு என்ன பதில் சொல்ல!!!

‘பாவம் அவள் என்று தான் நிஜமாகவே தோன்றியது நம் விவேக் ஸ்ரீநிவாசனுக்கு. தனக்கு தீங்கு செய்பவர்கள் கூட அழிந்து போகட்டும் என ஒரு போதும் தோன்றுவதில்லையே அவனுக்கு. அப்படி வளர்த்து தொலைத்துவிட்டாரே நம் ஸ்ரீனிவாசன் என்ன செய்ய!!!

‘இப்போ நியூஸ் சேனல்லே கூட இதுதான் ப்ரேக்கிங் நியூஸ் பாரு..’ சொல்லிவிட்டு சில நிமிடங்கள் ஏதேதோ பேசிவிட்டு அழைப்பை துண்டித்தாள் ராதிகா. அதுவரை முள்ளின் மேல்தான் அமர்ந்திருந்தார் தாமோதரன்.

அவன் பேசி முடித்து அவரருகில் வந்து அமர்ந்ததுதான் தாமதம். சட்டென கேட்டே விட்டார்

‘ஹரிணிக்கு என்னாச்சு???’

ம்???’ சட்டென நிமிர்ந்தவன் இவருக்கு ஹரிணியை எப்படி தெரியும் என்பதைப்போல் பார்த்தான்.

.‘எனக்கென யாருமே இல்லை என பொய் சொல்லிவிட்டேனே!!! இப்போது என்ன செய்ய??? ஹரிணி என் மகளென எப்படி சொல்ல??? பொய் சொன்னேன் என்று சொன்னால் என்னை பற்றி என்ன நினைப்பான் இவன்???’ யோசித்தபடியே எச்சிலை கூட்டி விழுங்கிக்கொண்டார் தாமோதரன்.

‘இல்ல யாரோ சஸ்பெண்ட் ஆகிட்டங்கன்னு சொன்னியே அதுதான் கேட்டேன் நான்..’

‘அது ஒண்ணுமில்லப்பா. அந்த ஹரிணியும் ஒரு பைலட். சரியா பிளேன் ஓட்டலைன்னு அவளை சஸ்பெண்ட் பண்ணி இருக்காங்க..’ அவருக்கு புரியும் மொழியில் வெகு சாதரணமாக சொல்லிவிட்டு டி.வியை உயிர்பித்தான் விவேக்..

அந்த விமான நிலையத்தின் ஓடு தளத்தையும், அதனருகே இருந்த சாலையையும் மாற்றி மாற்றி காட்டி விளக்கிக்கொண்டிருந்தனர் அந்த செய்தி தொலைகாட்சியில். இது விமானிகளின் அலட்சிய போக்கு என

கொதித்துக்கொண்டிருந்தார்கள், பயணிகளின் உயிருக்கு விமான நிறுவனங்கள் பொறுப்பேற்குமா என குதித்துக்கொண்டிருந்தார்கள்

தாமோதரனுக்கு ஆங்கிலம் அந்த அளவுக்கு புரிவதில்லை. டிவியில் என்ன பேசுகிறர்கள் என புரியவில்லை. இருப்பினும் அதில் ஹரிணி என்ற பெயர் சொல்கிறார்களா?? என கூர்ந்து கவனித்தார். எதுவும் சரியாக புரியவில்லை.

விமானம் சரியாக ஒட்டவில்லையா??? முதலில் ஹரிணி என்றானே அது என் மகள்தானா??? வேறே யாருமா??? தலைக்குள் அலையடித்தது அவருக்கு.

‘விவேக்...’ டி.வியில் ஆழ்ந்தவனை கலைத்தார் அவர். மகிழ்ந்து திரும்பினான் அவன். அவர் இவனை பேர் சொல்லி அழைத்தது இதுவே முதல் முறை.

‘சொல்லுங்கப்பா..’ என்றார் பரவசத்துடன்.

‘ஹரிணின்னு பேர் சொன்ன மாதிரி எதுவும் தெரியலையே!!! போட்டோ எதுவுமும் காட்டலை’ அது தன் மகள்தானா என ஊர்ஜித படுத்திக்கொள்ளும் கவலையில் கேட்டார் தாமோதரன்.

‘அதெல்லாம் சொல்ல மாட்டங்கப்பா. சும்மா பைலெட்னு மட்டும்தான் சொல்றாங்க..’ என்றான் இதமான குரலில்.

‘இல்ல அந்த பொண்ணை என்ன பண்ணுவாங்க. போலிஸ்லே எதுவும் பிடிச்சுக்குவாங்களா??? அவர்

அப்பாவியாய் கேட்க வியப்புடன் கலந்த புன்னகை ஓடியது விவேக்கின் முகத்தில்.

'அதெல்லாம் பண்ண மாட்டாங்கபா. ஏன் நீங்க அந்த பொண்ணுக்கு இவ்வளவு கவலை படறீங்க???''

'இல்லை அது அழுதிட்டு இருக்குமோன்னு தோணிச்சு அதான்..' என்றார் மெல்ல.

'அப்பா.. அது ரொம்ப தைரியமான பொண்ணுபா. இதுக்கெல்லாம் கலங்காது. நீங்க வாங்க. சாப்பிடலாம் ' டிவியை அணைத்துவிட்டு அவரை எழுப்பி சாப்பிட அழைத்து சென்றான் விவேக்.

இரவு அவரையும் வசதியாக படுக்க வைத்துவிட்டு இவனும் படுத்துக்கொண்டான். ஏதேதோ பேசிக்கொண்டிருந்த போதும் அவரது கவனம் அதிலில்லை என்று நன்றாக புரிந்தது விவேக்குக்கு. உறங்கவும் இல்லை அவர். புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தார் தாமோதரன். அதற்கான காரணம் விவேக்குக்கு புரியவே இல்லை.

அப்போது சிலீரென்று ஒரு சத்தம் அந்த அறையில். திடுக்கிட்டு எழுந்தான் விவேக். அங்கே அவனது அப்பா ஸ்ரீனிவாசனின் படம் கீழே விழுந்து அதன் கண்ணாடி நொறுங்கிப்போயிருந்தது.

விளக்கை போட்டு பார்த்த விவேக் எதையோ பெரிதாக இழந்து விட்டதை போல் பதைபதைத்துதான் போனான். சில நொடிகள் அவன் இதயம் ஸ்தம்பித்து நின்றதை போல் தோன்றியது.

'என்னப்பா இது???' எழுந்து உட்கார்ந்துவிட்டார் தாமோதரன்

'ஒண்ணுமில்லபா. கண்ணாடி உடைஞ்சிருச்சு அவ்வளவுதான். நாளைக்கு மாத்திடலாம்' அவருக்கு சமாதானம் சொல்லியும் விட்டான்.

இருவரும் விளக்கை அணைத்து விட்டு படுத்துக்கொள்ள இவன் மனம் ஏனோ உறங்க மறுத்து ஸ்ரீனிவாசனையே சுற்றிக்கொண்டிருந்தது. காலை எப்போது விடியுமெனதான் காத்திருந்தான் விவேக். காலை விடியும் தருவாயில்தான் உறங்கிப்போனார் தாமோதரன்.

உறக்கம் பக்கம் கூட வரவில்லை. விவேக்குக்கு. விடிந்தவுடன் எழுந்து குளித்துவிட்டு அந்த வீட்டு சமையல்காரர்கள் கொடுத்த காபியை வயிற்றுக்குள் ஊற்றிக்கொண்டு, அவர்களை தாமோதரனை கொஞ்சம் பார்த்துக்கொள்ள சொல்லிவிட்டு காலை ஒன்பது மணிக்கு கடை திறக்கும் நேரத்தில் அந்த கண்ணாடி கடையின் முன்னால்

நின்றிருந்தான் விவேக். கையில் நேற்று உடைந்து போன ஸ்ரீனிவாசனின் புகைப்படத்துடன்!!!

புகைப்படத்தின் கண்ணாடியை மாற்றி வீட்டுக்கு கொண்டு வந்து அதை அந்த இடத்தில் மாட்டிவிட்ட பிறகே அப்படி ஒரு நிம்மதி விவேக்குக்கு.

‘என்னப்பா நீங்க??? டென்ஷன் பண்ணி விட்டீங்க. உங்க படம் உடைஞ்சதும் நைட் தூக்கமே வரலை. இனிமே இப்படி பண்ணாதீங்க’ அவரிடம் பேசிவிட்டு திரும்பினான் விவேக். தாமோதரன் இன்னமும் உறங்கிக்கொண்டிருந்தார்.

சில மணி நேரங்கள் கடந்த பின்புதான் எழுந்தார் தாமோதரன். நேரம் மதியம் ஒன்றை தொட்டிருந்தது.

‘என்னப்பா நல்ல தூக்கமா. ரொம்ப அசந்து தூங்கிட்டு இருந்தீங்க. அதான் சாப்பிடகூட எழுப்பலை. வாங்க பல் தேய்ச்சி முகம் கழுவி ஏதாவது சாப்பிடலாம்’ இவன் அவரிடம் பரிவாக பேசிக்கொண்டிருக்க

‘விவேக் இன்னைக்கு நீயூஸ் பேப்பர் எதுவும் இருந்தா கொஞ்சம் தர்றியாபா’ என்றார் கவலை தோய்ந்த குரலில்.

யோசனையுடனே அதை எடுத்து அவரிடம் நீட்டினான். அங்கே இருந்தது ஆங்கில பேப்பர்கள். எதுவுமே புரியவில்லை என்ற போதும் அதை அவசரமாக புரட்டினார் அவர். அதன் பின் ஒரு பெருமூச்சுடன் அதை மடித்து வைத்தார்.

‘என்னப்பா என்ன தேடறீங்கபா பேப்பர்லே..’

‘இல்ல நேத்து சொன்னியே அதுதான். அந்த பொண்ணு ஹரிணி பத்தி. அது பத்தி ஏதாவது போட்டிருக்கான்னு..’ ’

‘அப்பா??? சற்றே குழப்பத்துடன் அவர் அருகில் அமர்ந்தான் விவேக் ‘ஹரிணிக்கும் உங்களுக்கும் என்ன சம்மந்தம்??? அந்த நீயூஸ் கேட்டதிலிருந்து நீங்க சரியே இல்லை..’

‘சம்மந்தம் எல்லாம் ஒண்ணுமில்லை சும்மா தெரிஞ்சுக்கதான்’ அவர் சொல்லிக்கொண்டிருந்த போது இவனுக்குள் பளிச்சிட்டது மின்னல்.

‘அப்பா..’ என்றான் சட்டென ‘நிஜமா ஏதோ சம்மந்தம் இருக்கு. அன்னைக்கு ஹாஸ்பிடல்லே உங்க பையிலே ஹரிணி போட்டோ பார்த்தேனே நான். அதுக்கு அப்புறம் நான் அவளுக்கு மெசேஜ் கூட பண்ணேன். இருங்க வரேன்’ என்றவன் சென்று அவர் பையிலிருந்து அந்த புகைப்படத்தை எடுத்து வந்தான்.

அந்த புகைப்படத்தை அவரிடம் நீட்டியபடியே அவர் முகம் படித்தான் ‘ஹரிணி உங்களுக்கு சொந்தமாபா???’

‘சொந்தம்... சொந்தமெல்லாம் இல்லை..’ குரல் பிசிறடித்தது அவருக்கு. ‘தெரிஞ்ச பொண்ணு அவ்வளவுதான்.’ அவர் சொல்ல அவர் முகம் விட்டு விழி அகற்றவில்லை இவன். ‘அவளுக்கு

ரொம்ப பிரச்சனையா, இல்ல என்னாச்சுன்னு கேட்டு சொல்ல முடியுமாபா..’

‘கண்டிப்பா கேட்டு சொல்றேன். நீங்க முதல்லே ஏதாவது சாப்பிடுங்க..’ என்றான் மனதில் விழுந்த அழுத்தமான கேள்விகளுடனே.

சில மணி நேரங்கள் கடந்திருக்க

‘இப்போ என்கொயரி ஸ்டார்ட் பண்ணி இருக்காங்கபா. இப்போ சென்னை கிளம்பி வந்திட்டு இருக்கா. மறுபடியும் ஒரு நாலஞ்சு நாளையிலே இன்னொரு என்கொயரி இருக்கும்..’ யாரிடமோ விசாரித்து அவன் தாமோதரனிடம் விளக்கிக்கொண்டிருந்த நேரத்தில்

சென்னைக்கு வந்து இறங்கி இருந்தாள் ஹரிணி. அவளது டாக்சி நகர்ந்துக்கொண்டிருந்தது

அவள் வாழ்க்கையில் முதல் முறையாக உடலும் மனமும் மொத்தமாய் தளர்ந்து போயிருந்தது. ஒரே நாளில் பூமியே தலை கீழாய் மாறிப்போன உணர்வு.

உடன் வேலை பார்ப்பவர்கள் எல்லாரும் சட்டென இவளை விட்டு சில அடிகள் தள்ளி நின்று விட்டதை போல் தோன்றியது.

‘ஆம்!!! இவள் பிரச்சனைகளை இவள்தானே சந்தித்துகொள்ள வேண்டும்!!!’

நான்கு நிமிடத்திற்கு ஒரு முறை வரும் அழைப்புகளும், இரண்டு நிமிடத்துக்கு ஒரு முறை வரும் வாட்ஸ் ஆப் செய்திகளும் திடீரென நின்று போன உணர்வு. இப்போது எனக்கென யாருமே இல்லையா??? மனம் கரைய அப்பாவை தேடியது உள்ளம்.

'அப்பா!!! அப்பா!!! ஆம் அப்பா வேண்டுமெனக்கு!!!' உயிர் வரை பரவியது ஒரு வித தவிப்பு.

அவரை இப்போது எங்கே சென்று தேடுவது??? விவேக் வீட்டிலா??? யோசித்தபடியே அவள் திரும்பிய நேரத்தில் ஹாசினி வேலைப்பார்க்கும் விவேக்கின் மருத்துவமனையை கடந்துக்கொண்டிருந்தது டாக்சி.

அதுதான் சரி .ஹாசினியிடமே அப்பாவை பற்றி கேட்போம் என்று ஒரு முடிவுக்கு வந்தவளாக. 'இங்கேயே நிறுத்திக்கோங்க' என்றாள் டாக்சி டிரைவரிடம்.

சில நிமிடங்களில் அன்றைய டியூட்டியை முடித்துவிட்டு வெளியே வந்த ஹாசினியின் முன்னால் சென்று நின்றாள் ஹரிணி.

'அப்பா எங்கே???'

அவளை பார்த்த மாத்திரத்தில் உடல் மொத்தமும் பத்தி எரியும் ஒரு உணர்வு ஹாசினிக்கு எரிமலையாய் பொங்கியது அவள் உள்ளம்.

‘ஒரு மனிதன் உயிருக்கு போராடிக்கொண்டிருக்கும் போது அவரை வேடிக்கை பார்த்துவிட்டு சென்ற இவளெல்லாம் மனித இனத்தை சேர்ந்தவளா???’ இரக்கமற்றவள்.!!! அரக்கி இவள்!!! ராட்சசி!!!

‘அப்பா எங்கே??? விவேக்கிட்டேதானே இருக்கார்???’ இவள் மறுபடியும் கேட்க

‘அப்பா இப்போ உயிரோட இல்லை போதுமா..’ அங்கே நடந்து சென்றவர்கள் திரும்பி பார்க்கும் வகையில் உச்சகட்ட தொனியில் கத்தினாள் ஹாசினி.

‘என்ன சொல்கிறாள் இவள்??? என்னதான் சொல்கிறாள்??? நம்ப முடியாமல் உறைந்து போய் நின்றிருந்தாள் ஹரிணி.

‘சுத்ரஷனுக்காவது தான் செய்தது தப்பு என்ற ஒரு குற்ற உணர்ச்சி இருக்கிறது. ஹரிணிக்கு அது கூட இல்லையே. இனி அப்பாவை அவளுடன் அனுப்பி வைப்பது என்ன நியாயம். அவர் விவேக்குடன்தான் இருக்க வேண்டும்’ இனி அப்பாவை பார்க்க வேண்டுமென கனவினில் கூட நினைக்க கூடாது இவள். அப்பா இவளுக்கு கிடைக்கக்கூடாது. அவர் விவேக்குக்குதான்!! கூவியது அவள் மனம்.

‘என்ன ஹாசினி சொல்றே???’’

உண்மையைத்தான் சொல்றேன். அவருக்கு ஆக்சிடெண்ட் ஆகி இருக்கு கொஞ்ச நாள் முன்னாடி.' அவள் குரல் கொஞ்சம் தழைந்தது

'எப்போ???'

'அதுதான் நம்ம ஸ்ரீனிவாசன் பிறந்தநாள் அன்னைக்கு. அன்னைக்குதானே அவர் காணாம போனார். அன்னைக்கே எல்லாம் முடிஞ்சிடுச்சு. அவர் நம்பர் கொடுடி நான் கேட்டேன்ல நீ தான் கொடுக்கல. கொடுத்திருந்தா அவரை அங்கே வர சொல்லி இருக்கலாம். கொன்னுட்டே. நீ தான் அவரை கொன்னுட்டே' வாய் கூசாமல் சொன்னாள் ஹாசினி.

'இப்படி பேச எங்கிருந்து தைரியம் வந்ததோ அவளுக்கே தெரியவில்லை. ஹரிணி தவிக்க வேண்டும்!!! குற்ற உணர்ச்சியில் தவிக்க வேண்டுமவள்' மனம் நிறுத்தாமல் கூவியது.

'ஹாசினி..' குரல் நடுங்க அழைத்தாள் ஹரிணி. எனக்கு அப்பாவை பார்க்கணும்.

'அதுதான் சொன்னன்ல. முடிஞ்சு போச்சு. எல்லாம் முடிஞ்சு போச்சு. போடி. என் முகத்திலேயே முழிக்காதே..' சொல்லிவிட்டு நடந்து தனது காரில் ஏறி பறந்திருந்தாள் ஹாசினி.

பூகம்பத்தால் தாக்கப்பட்டது போல் நிலைகுலைந்து நின்றாள் ஹரிணி.

‘இவள் சொன்னது உண்மையா??? ஆம் உண்மையாகத்தான் இருக்க வேண்டும். ஒரு மகள் இந்த விஷயத்தில் பொய் சொல்வாளா??? என்ன இருந்தாலும் ஹாசினியும் என் அப்பாவின் மகள்’ கால்கள் தளர்ந்து நடுங்கின. நடுங்கியது. கண்ணீர் மாலை மாலையாய் வழிந்தது.

‘அ....ப்....பா!!!’ உங்களை நானே கொன்னுட்டேனாபா ???’ அப்பா எனக்கு உங்களை பார்க்கணும்’. அங்கே இருந்த ஒரு பெஞ்சில் அமர்ந்துக்கொண்டு வாயை பொத்திக்கொண்டு குலுங்கினாள்.ஹரிணி.

அதே நேரத்தில் அங்கே விவேக்கின் வீட்டில்

மகள் சென்னைக்கு வந்துக்கொண்டிருக்கிறாள் என்பதை அறிந்து சற்றே நிம்மதிக்கு வந்திருந்தது தாமோதரனின் உள்ளம். இருப்பினும் அவளை பார்த்து பேச வேண்டும் என்ற தவிப்பு அதிகரித்துக்கொண்டே இருந்தது அந்த தந்தைக்கு.

‘அப்பா என்னப்பா யோசனை??? ஹரிணி பத்தி இன்னமும் கவலை படறீங்களா???’ கட்டிலில் படுத்திருந்தவர் அருகில் அமர்ந்து இவன் கேட்க

‘அதெல்லாம் ஒண்ணுமில்லையே!!! அதெல்லாம் ஒண்ணுமே இல்லை. தூக்கம் வருது’. சொல்லிவிட்டு கண்களை மூடிக்கொண்டார் இறுக

அவரது உடல் மொழியிலும் பேச்சிலும் ஏதோ ஒரு மாற்றம் இருப்பதை மட்டும் உணர முடிந்தது விவேக்கால்.

'நிச்சயாமாய் மருத்துவமனையிலிருந்த தாமோதரன் இல்லையே இவர்???' யோசித்துக்கொண்டே இருந்தான் அவன். 'ஹரிணிக்கும் இவருக்கும் கண்டிப்பாய் ஏதோ ஒரு சம்மந்தம் இருக்கிறது!!!

அதே நேரத்தில் அங்கே

கணவன் ராகுலின் தோளில் சாய்ந்துக்கொண்டு குலுங்கி குலுங்கி அழுதுக்கொண்டிருந்தாள் சுஹாசினி.

'பொய் சொல்லிட்டேன். என் வாயாலே சொல்லக்கூடாத பொய்யை சொல்லிட்டேன் ராகுல். ஆனால் ஹரிணிக்கு இது தேவையான தண்டனை.தான். காலம் பூரா குற்ற உணர்ச்சியிலேயே கிடைக்கணும் அவ. ராட்சசி!!!'

எதுவுமே பேசாமல் அவள் முதுகை வருடிக்கொடுத்துக்கொண்டிருந்தான் ராகுல்.

'ஆண்டவன் எங்கப்பாவையும் விவேக் அப்பாவையும் ஒரே மாதிரி படைச்சது ஒரு காலத்திலே அவனுக்கு இவராலே ஆறுதல் கிடைக்கனும்னுதான் போலே. எல்லாம் நல்லதுக்குதான்' அவள் சொல்லிக்கொண்டிருக்க அந்த நேரத்தில் உள்ளே நுழைந்த சிறுவன் ஸ்ரீநிவாசனுக்கு புரிந்தது ஒன்றே ஒன்றுதான்.

‘என் தாத்தாவும் விவேக் அப்பாவும் ஒரே உருவத்தில் இருப்பார்கள்!!!’

‘ஆம்!!!. அன்று விவேக் அப்பாவின் புகைப்படத்தை பார்த்த போது எங்கேயோ பார்த்த நினைவு வந்ததே எனக்கு’ நினைவு பளிச்சிட்டது அவனுக்கு.

அவசரமாக ஓடிச்சென்று தனது தாத்தாவின் புகைப்படத்தை எடுத்து பார்த்தான் ஸ்ரீனிவாசன். அடுத்த நிமிடத்தில் அவனது விரல்கள் விவேக்கின் எண்ணை அழுத்திவிட்டிருந்தன.

‘ஹலோ மிஸ்டர் ஸ்ரீனிவாசன்!!! எப்படி இருக்கீங்க???’ சந்தோஷமாய் துவங்கினான் விவேக்.

‘நல்லா இருக்கேன் அங்கிள். நான் உங்களுக்கு ஒரு சீக்ரெட் சொல்லவா???’

‘சீக்ரெட்டா எனக்கு ரொம்ப பிடிக்கும் சொல்லு சொல்லு..’

‘நீங்க யார்கிட்டேயும் சொல்லக்கூடாது..’

சொல்ல மாட்டேன் சொல்லு..’

‘உங்க அப்பாவும் எங்க தாத்தாவும் பார்க்க ஒரே மாதிரி இருப்பாங்களாம்’

‘என்னது???’ தனது புரிதல் சரிதானா என தெரிந்துக்கொள்ள விவேக் மறுபடியும் கேட்க

‘உங்க அப்பாவும் எங்க தாத்தாவும் பார்க்க ஒரே மாதிரி இருப்பாங்களாம். அங்கிள்...’ ஸ்ரீனிவாசன் மறுபடியும் சொல்ல தடதடத்தது அவன் இதயம்.

அப்படி என்றால் தாமோதரன் ஹரிணியின் தந்தையா!!! உயிர்வரை பரவியது அதிர்ச்சி.

‘உனக்கு யார் சொன்னஙக???’ ஒரு ஆழ்ந்த மூச்சுக்கு பின் கேட்டான் விவேக்.

‘எங்க அம்மா பேசிட்டு இருந்தாங்க. இப்போ நான் கேட்டேன்..’

‘ஓ!!!!’ என்று ஏதோ யோசித்தவன் ‘வாவ்.. செம சீக்ரெட்டா!!! சரி வேறே என்ன விசேஷம் உங்க ஸ்கூல்லே..’ சிறுவனிடம் எதையும் வெளிகாட்டிக்கொள்ளாதவாறு தன் பேச்சில் கொஞ்சம் சிரிப்பை சேர்த்துக்கொண்டான்.

அவனுடன் பேசி முடித்த பிறகு சில நிமடங்கள் அசைவின்றி அமர்ந்திருந்தான் விவேக் ஸ்ரீனிவாசன். தாமோதரனின் தற்போதைய தவிப்புக்கும் காரணம் புரிந்திருந்தது. ‘அவர் ஹரிணியின் தந்தையா??? அப்படி என்றால் அடுத்து என்ன நடக்கும்.???

தனது மனதை நிலைப்படுத்திக்கொண்டு படுக்கை அறைக்குள் நுழைய அங்கே கட்டிலில் தாமோதரன் அப்படியே உறங்கிப்போயிருந்தார்.

அவர் அருகில் அமர்ந்துக்கொண்டான். அவர் முகத்தையே பார்த்திருந்தான் அவன்..இவரும் என்னை விட்டு சீக்கிரம் பிரிந்து போய்விடுவாரோ???

அதே நேரத்தில்

ஏதோ ஒரு ஹோடேலில் அறையை எடுத்துக்கொண்டு கட்டிலில் சென்று விழுந்தாள். இவள் அப்பாவை அதிகமாக போனில் கூட அழைத்ததில்லை.. ஆனால் இரண்டு நாட்களுக்கு ஒரு முறையாவது அவர் அழைத்து விடுவார் இவளை..

‘ஹரிணிமா..; என்பாரே அன்பாய்.

‘என்ன விஷயம் சொல்லுங்க. பிஸியா இருக்கேன்..’ பட்டென உடைப்பேனே நான். மனசாட்சி அவளை கீறிவிட்டு சிரித்தது.

யாருமற்ற தனிமை அவளை பாரங்கல்லாய் அழுத்தியது. சில லட்சங்கள் தனக்கென சம்பாதித்து வைத்திருந்தாலும் யாருடைய அன்பையும் இதுவரை சம்பாதித்து வைக்கவில்லை என்பது புரிந்தது அவளுக்கு.

‘அப்பா......அப்பா......வென அரற்றிகொண்டே இருந்தாள் அவள்.

‘அப்பா நீங்க வந்திடுங்கபா. உங்க மடியிலே படுத்துக்கணும்..’ அழுதுக்கொண்டே திரும்பி படுத்தவளின்

கண்களில் பட்டன அந்த ரோஜாப்பூக்கள். அங்கே படுக்கைக்கு பக்கத்தில் இருந்த அந்த பூஜாடியில் இருந்த ரோஜாப்பூக்கள்

இப்போது மனக்கண்ணில் வந்து போனார்கள் ஸ்ரீனிவாசனும், விவேக்கும். அவர்களுக்கு தான் செய்தவைகள் ஒவ்வொன்றாய் மனதில் ஓடின.

‘விதைத்ததைதான் அறுக்கிறேனோ???’ சுரீரென குத்தியது மனசாட்சி.

‘அவனுக்கு தீங்கு நடக்கவேண்டுமென நினைத்தேனே. என்னுடைய வேலை இன்று கேள்விக்குறியாய் போனதே!!! என்கொயரி என்ற பெயரில் ஏதேதோ கேள்விகள்.

இதற்கு காரணம் நிஜமாகவே கவனக்குறைவுதானா??? இல்லை யாருடைய தூண்டுதலின் பெயரிலாவது இப்படி நடந்ததா??? இது தீவிரவாதிகள் சதியா??? ஏதேதோ கேள்விக்கணைகள் இவளிடத்தில்.’ மொத்தமாகவே தளர்ந்திருந்தாள் இவள்.

‘என் அப்பா என்னை விட்டு போனதும் நான் அவனுக்கு செய்த பாவத்தினால்தானோ??? இனி வாழ்க்கையில் எதையெல்லாம் சந்திக்க போகிறேனோ??? இனிமேல் கண்ணீர்தான் தொடர்கதையா??? அழுதுக்கொண்டே படுத்துக்கிடந்தாள் ஹரிணி.

மறுநாள் காலை ஹாசினியை கைப்பேசியில் அழைத்தான் விவேக்.

‘எஸ் சொல்லுங்க விவேக். குட் மார்னிங். உங்க அப்பா நல்லா இருக்காரா???’

‘எஸ்.. உங்க அப்பா... ரொம்ப நல்லா இருக்கார்.’ அழுத்தமாக சொன்னான் விவேக்.

‘எங்க அப்பாவா??? யாரது???’ குரலில் பொய்யான ஆச்சர்யத்தை சேர்த்துக்கொண்டாள் பெண்.

‘பொய் சொல்லாதீங்க ஹாசினி. எனக்கு அது பிடிக்காது..’ சற்றே இறுக்கமாக சொன்னான் அவன்.

‘உங்களுக்கு யார் சொன்னது???’ அவள் குரல் கொஞ்சம் இறங்கியது.

‘யாரோ சொன்னங்க அது முக்கியமில்ல. இப்போ நீங்க என் வீடு வரைக்கும் கொஞ்சம் வர முடியுமா ப்ளீஸ்???

சில மணி நேரங்கள் கடந்திருக்க விவேக்கின் வீட்டு வாசலுக்கு வந்து நின்றது அந்த கார். அதிலிருந்து இறங்கினர் ஹாசினி, ராகுல், �RYநிவாசன் என மூவரும்.

‘ஹாய் அங்கிள்...’ அவனை ஓடி வந்து அணைத்துக்கொண்டான் ஸ்ரீனிவாசன். மற்ற இருவரையும் வரவேற்றுவிட்டு

‘டேய்... கண்ணா... உங்க தாத்தாவை நீ பார்த்தது இல்லைதானே??? அவர் எங்கே இருக்காருன்னு தெரியாதுன்னு அன்னைக்கு சொன்னியே. இப்போ உனக்கு சர்ப்ரைஸ். வா உங்க தாத்தாவை பார்க்கலாம்’ என்றபடி அவனை படுக்கை அறைக்குள் அழைத்து சென்றான் விவேக். ஹாசினியும், ராகுலும் பின் தொடர்ந்தனர்.

‘அப்பா..’ விவேக் தாமோதரனை அழைத்த விதத்தில் ஒரு அழகான புன்னகை மலர்ந்தது ஹாசினியின் முகத்தில். கட்டிலில் படுத்திருந்த தாமோதரன் மெல்ல கண் திறந்தார்

‘எப்படி இருக்கான் பாருங்க உங்க பேரன். ஸ்ரீனிவாசன்!!!’ அவனை அணைத்துக்கொண்டு அறிமுகப்படுத்தினான் அவருக்கு. ‘ஏன்பா உங்களுக்கு யாருமே இல்லைன்னு பொய் சொன்னீங்க??? அவன் கேட்கவே இல்லை அவரிடம்

‘பேரனா..’ வியப்பில் விழுந்து மீண்டு எழுந்தார் தாமோதரன்.

‘இதுவரைக்கும் இவனை நீங்க பார்த்திருகீங்களா???’

‘ம்ஹூம்..’ என்றவர் பார்வை மகளை அடைந்தது.

மனதை ஆட்க்கொண்ட உணர்ச்சி போராட்டத்தில் அவர் உடல் நடுங்க கண்களில் நீர் சேர்ந்தது. பல வருடங்களாக அவர்கள் சந்தித்தது இல்லை என்பதை புரிந்துக்கொள்ள

முடிந்தது அவனால். அவர்களுக்கு தனிமை கொடுத்துவிட்டு அங்கிருந்து அழகாய் விலகிக்கொண்டான் விவேக்.

சில நிமிடங்கள் கடக்க அங்கே பலவகை பாசப்போராட்டங்கள் அரங்கேறி முடிந்திருக்க நால்வரும் விவேக் அமர்ந்திருக்கும் கூடத்துக்கு வந்தனர்.

‘விவேக்..’ இது தாமோதரன். ‘ஹரிணிக்கு என்ன ஆச்சுன்னு கொஞ்சம் இவங்களுக்கு சொல்லுப்பா.’

‘கவனிக்காம ரன்வே விட்டு ரோட்டிலே லேன்ட் பண்ண போயிருக்கா. கிரௌண்ட் பண்ணிட்டாங்க ஹாசினி .’ சொன்னான் ஹாசினியிடம்.

‘போகட்டும் எப்படியோ போகட்டும்..’ கொதிப்புடன் வெடித்தாள் ஹாசினி.

‘பாவம்மா அவ.’ மெல்ல சொன்னார் தாமோதரன்.

‘என்னப்பா பாவம்??? கொலைக்காரி அவ. பெரிய கொலைக்காரி. விவேக்கோட அப்பா உயிருக்கு போராடிட்டு இருந்தப்போ அவரை கண்டுக்காம ரோட்டிலேயே விட்டுட்டு அவ ஃப்ரெண்ட்ஸோட கல்யாணத்துக்கு போயிட்டா. அவ நினைச்சிருந்தா விவேக் அப்பாவை காப்பாத்தி இருந்திருக்கலாம்..’ ஹாசினி படபடவென வெடிக்க அதிர்ந்து எழுந்தான் விவேக்.

‘ஹரிணியுமா??? அவளும் இருந்தாளா அங்கே???’ கண்களை இறுக மூடி உண்மைகளை உள்ளே அழுத்திக்கொண்டான் விவேக். தாமோதரன் முகத்திலும் கொஞ்சம் மாற்றம் வந்து போனது.

‘இனி நீங்க விவேக்குக்குத்தான் அப்பா. அவன் கூடவே இருங்கப்பா’ சொன்னாள் ஹாசினி. சில நொடி தயக்கத்துக்கு பின் தொடர்ந்தாள் அவள் ‘நீங்க இப்போ உயிரோட இல்லைன்னு அவகிட்டே சொல்லிட்டேன்பா..’

தாமோதரன், விவேக் இருவரிடமுமே உச்சகட்ட அதிர்ச்சி!!!

‘என்ன ஹாசினி நீங்க. பாவம் உங்கப்பா அவரை போய்..’ தாமோதரனின் முகத்தை பார்த்துக்கொண்டே விவேக் சற்றே திகைத்து போன குரலில் சொன்னான்.

‘தனது மகளின் வாயாலேயே இப்படி ஒரு வார்த்தையை கேட்பதற்கு எப்படி வலிக்கும் அந்த தந்தைக்கு’ நன்றாகவே புரிந்தது விவேக்குக்கு. எதுவும் பேசாமல் தலை தாழ்த்திக்கொண்டார் அந்த தந்தை.

‘அவ அனுபவிக்கணும் விவேக். தனிமைன்னா என்னன்னு புரியும். கண்டிப்பா உங்கப்பாவுக்கு அவ செஞ்ச தப்பு அவளுக்கு புரியும். காலம் பூரா குற்ற உணர்ச்சியிலே இருக்கணும் அவ.’

பெருமூச்சுடன் ஹாசினியின் முகம் பார்த்தான் விவேக் 'சுதர்ஷன் என்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட். அவனே காப்பத்தலை. மத்தவங்களை சொல்லி என்ன பண்ண??? எனக்கு அவரோட இருக்க கொடுத்து வைக்கலை. அவரை எப்பவும் பார்க்க கொடுத்து வைக்கலை அவ்வளவுதான்.'

'ஆனா.. அவர் உங்களை பார்த்திட்டு இருக்காரே என் பையன் மூலமா..' சின்ன புன்னகையுடன் ஹாசினி சொல்ல வியந்து போய் நிமிர்ந்தான் விவேக்.

'புரியலை..'

'உங்க அப்பாவோட கண்ணுதான் என் பையனுக்கு பொருத்தி இருக்கு விவேக்..'

'வாட்???' ஓடி சென்று ஸ்ரீனிவாசனின் அருகில் மண்டியிட்டு அவன் கண்களுக்குள் பார்த்தான் விவேக். நெகிழ்ச்சியில் வார்த்தைகள் வரவில்லை விவேக்குக்கு. ஸ்ரீனிவாசனை அணைத்துக்கொண்டு மாறி மாறி முத்தமிட்டான். தன்னோடு அப்படியே சேர்த்துக்கொண்டான்.

'டாக்டர் ஸ்ரீனிவாசன் எனக்கு குரு. காலேஜ் ப்ரோஃபசர். எனக்கு வாழ்க்கையிலே ரோல் மாடல் அதனாலேதான் என் பையனுக்கு ஸ்ரீனிவாசன்னு பேர் வெச்சேன் .உங்க அப்பா இறந்த போதுகூட நான் வந்திருந்தேன். ஆனா யாரையும் கவனிக்கற மன நிலையிலே நீங்க இல்லை. என் பையனுக்கு

பிறவியிலேயே பார்வை கிடையாது. நாங்க கண்ணுக்கு ட்ரை பண்ணிட்டு இருந்தோம். நீங்க உங்க அப்பா ஐஸ் டொனேட் பண்ணீங்க இல்லையா. உடனே எங்களுக்கு கிடைச்சது. அந்த டாக்டர் மூலமா இது உங்க அப்பாவோட கண்ணுன்னு எனக்கு தெரிய வந்தது...' ஹாசினி சொல்லிக்கொண்டே போக

இது எதுவுமே காதில் ஏறாதவனாக ஸ்ரீனிவாசனையே பார்த்திருந்தான் விவேக். அவன் விழிகளுக்குள் அப்பாவையே தேடிக்கொண்டிருந்தான் அவன்.

'என் அப்பா என்னை பார்க்கிறார்!!! என்னை பார்த்துக்கொண்டே இருக்கிறார்!!!'

'விவேக்..' அவனை கலைத்து எழுப்பினாள் ஹாசினி.

கண்கள் கலங்க நிமிர்ந்தான் விவேக் 'தேங்க்ஸ் ஹாசினி..'

'தேங்க்ஸ்ஆ??? நாங்க இல்ல உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லணும்..' என்றாள் அவள். 'அது எப்படியோ உங்களுக்கும் ஸ்ரீனிவாசனுக்கும் ஏன்னே தெரியாத ஃப்ரெண்ட்ஷிப். ஒரு பந்தம் அது உங்க அப்பாவோட கண்ணு பொருத்தினதுனாலேன்னு யாரவது சொன்னா நானே விழுந்து விழுந்து சிரிப்பேன். அது மெடிக்கலி அண்ட் ஸயின்டிஃபிகல்லி கண்டிப்பா உண்மை கிடையாது. இருந்தாலும் ஏதோ ஒரு பந்தம். அது ரொம்ப அழகா இருக்கு. வாழ்க்கை முழுசும் அது தொடரட்டும் நான் வேண்டிகிட்டே இருக்கேன்,..'

‘தேங்க்ஸ் ஒன்ஸ் அகைன் ஹாசினி...’ என்றபடி ஸ்ரீனிவாசனை தன்னோடு சேர்த்துக்கொண்டான் விவேக்.

அடுத்த சில மணி நேரங்கள் அங்கே மகிழ்ச்சியும் குதூகலமுமாய் கழிந்தன. கிளம்பும் முன் அப்பாவிடம் சென்றாள் ஹாசினி.

‘அப்பா.. இனிமே நீங்க விவேக் கூடவே இருங்க. அதுதான் நியாயம் புரியுதா. அவன் உங்களை ரொம்பவே நல்லா பார்த்துப்பான் .’ அப்பாவிடம் சொன்னாள் மகள்.

இரண்டு நாட்கள் கடந்திருந்தன

அன்று அந்த மாலில் ஏதோ சில பொருட்கள் வாங்கிக்கொண்டிருந்த போது கேட்டது அந்த குழந்தையின் அழுகுரல். தனது பெற்றவர்களை விட்டு வழி தவறி வந்துவிட்டது போலும். அள்ளிக்கொண்டான் அதை.

‘என்னாச்சுடா பாப்பா???’’ மூன்று நான்கு வயதுக்குள்தான் இருக்கும் அதற்கு.

‘எனக்கு எங்க அப்பாகிட்டே போகணும்..’

‘உங்க அப்பா எங்கே???’

‘தெரியலை எனக்கு எங்க அப்பாகிட்டே போகணும்..’

‘சரி இரு தேடுவோம்.. அவன் அதை தூக்கிக்கொண்டு நடக்க எனக்கு எங்க அப்பாகிட்டே போகணும்..’ அதையே சொல்லிக்கொண்டிருந்தது அது.

அந்த மாலில் அந்த குழந்தையை பற்றி அறிவிக்க செய்து, அதை பெற்றவர்களிடம் அவன் ஒப்படைக்க தாவி சென்று கட்டிக்கொண்டது அதன் தந்தையை.

‘எனக்கு எங்க அப்பாகிட்டே போகணும்..’ அவர்கள் வருவதற்குள் இருநூறு முறை சொல்லி இருக்குமா அந்த வார்த்தைகளை. அப்பாவின் தோள்களில் தொங்கிக்கொண்டு கண்ணீருடன் இவனை பார்த்து அந்த குழந்தை சிந்திய அந்த புன்னகை அவனுக்கு ஏதேதோ செய்திகளை சொல்லின.

‘நானும் எங்க அப்பாகிட்டேதான் இருக்கணும் சொல்லிக்கொண்டான் அவன்.

அவன் அந்த மாலை விட்டு வெளியே வர அதன் அருகே இருந்த அந்த ஹோட்டேலுக்குள் நுழைந்துக்கொண்டிருந்தாள் ஹரிணி. ஏதேதோ யோசனைகளுடன் சில நொடிகள் அவள் சென்ற திசையையே பார்த்திருந்தான் விவேக்.

வீட்டுக்கு வந்து சேர்ந்தான் விவேக்.

அங்கே டிவியில் அந்த தமிழ் செய்தி சேனலில் அந்த விவாதம். ஹரிணியின் விமானம் பற்றிய விவாதம். அவரவருக்கு தெரிந்த விதத்தில் கிழித்துக்கொண்டிருந்தனர் அந்த இரண்டு விமானிகளையும்.

அப்பாவின் முகத்தில் நிறையவே கலவர ரேகைகள். ‘அய்யோ என் மகளை எல்லாரும் என்ன செய்கிறார்களோ. எப்படி இருக்கிறாளோ???

‘அப்பா..’ அவர் அருகில் அமர்ந்தான் ‘ஹரிணிகிட்டே பேசணுமா உங்களுக்கு..’

‘ஆங்...’ சற்றே திகைப்புடன் நிமிர்ந்தார்.

‘உங்க பொண்ணுகிட்டே பேசணும்மானு கேட்டேன். என் நம்பர் பார்த்தா எடுக்க மாட்டா. நீங்க வேணும்னா லேண்ட் லைன்லேர்ந்து பேசுங்க. இந்த நம்பர் தெரியாது அவளுக்கு

‘நிஜமா பேசவா..’

‘அட பேசுங்க..’ அவன் கார்ட்லெஸ்சை எடுத்து அவரிடம் தர

என்ன தோன்றியதோ ‘வே.. வேண்டாம்.. அவ உனக்கு தப்பு பண்ணி இருக்கா.. வேண்டாம்... நான்.. நான் பேசலை..’ சொல்லிவிட்டு அவர் எழுந்து மெல்ல நடந்து செல்வதை பார்க்க பரிதாபமாக இருந்தது. அவனுக்கு.

உடலில் ஆங்காங்கே கட்டுக்கள். வலி, வேதனை அதனோடு மகள்கள் மீது தீராத பாசம்!!!’ அவனது மனம் மெதுவாய் ஒரு முடிவுக்கு வந்தது.

அன்று இரவு

ஊர் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிக்கொண்டிருக்க எங்கோ சென்று திரும்பிக்கொண்டிருந்தாள் ஹரிணி. பழைய ஹரிணி இல்லை அவள். நடையிலேயே நிறைய தளர்ச்சி வந்திருந்தது.

இதுவரை துணையாய் இருந்த எந்த நண்பர்களும் இவளோடு இப்போது பேசுவதில்லை. இவளாக அழைத்தாலும் இரண்டு நிமடங்களில் பேச்சை முடித்துக்கொள்கிறார்கள். இல்லை என்றால் அவள் செய்த தப்பையே சுற்றி சுற்றி வருகிறார்கள்..இப்போதுதான் வாழ்க்கை மெல்ல மெல்ல புரிகிறது'

'இரண்டு நாட்களில் மறுபடியும் விசாரணைக்கு அழைப்பார்கள் செல்ல வேண்டும்.' ஏதேதோ யோசனைகளுடன் அவள் நடந்துக்கொண்டிருக்க

'ஹரிணி..' அழைத்தது அந்த குரல்.

இருட்டில் துழாவிய அவளது விழிகளுக்கு தட்டுப்பட்டது விவேக்கின் முகம். காரில் சாய்ந்துக்கொண்டு கைகளை மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டு நின்றிருந்தான் விவேக். அவனது கூர்மையான பார்வை அவளை ஊடுருவியது. ஆனால் அதில் எந்த விதமான வெறுப்போ, கோபமோ இல்லை. எல்லாவற்றையும் கடந்து விட்டவன் போல் நின்றிருந்தான் அவன்

சடக்கென அவனருகில் வந்து நின்றாள் அவள். ஆனால் அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கும் தைரியம் நிச்சயமாக இல்லை அவளிடத்தில்.

'கார்லே ஏறு. உங்க அப்பா எங்க வீட்டிலேதான் இருக்கார்'

'எங்க அப்பாவா?? அவர்.......'

'அவருக்கு ஒண்ணுமில்லை. நல்லாதான் இருக்கார். உன்னை பார்க்கணும்னு தவிக்கிறார் வா..' அதற்கு மேல் அவள் முகத்தை கூட பார்க்காமல் திரும்பி காரில் ஏறி அமர்ந்துக்கொண்டான் அவன்.

சில நொடிகள் யோசனையுடன் நின்றவள் பின்னர் காரில் ஏறி அவனருகில் வந்து அமர்ந்துக்கொண்டாள்.. அவளது மனசாட்சி அவள் உயிர் கிழித்தது.

கார் நகர்ந்துக்கொண்டிருக்க

'விவேக்...' என்றாள் அவன் பக்கம் திரும்பி 'நான் நிறைய தப்பு..'

'ப்ளீஸ் ஹரிணி ... இந்த சாரி. மன்னிச்சிடு இதெல்லாம் அர்த்தமில்லாத வார்த்தைகள். இதை சொல்றவனுக்கும் பிரயோஜனம் இல்லை கேட்குறவனுக்கும் யூஸ் இல்லை. தயவு செய்து இதெல்லாம் சொல்லாதே. முடிஞ்சா இனிமே யாருக்கும் எந்த தப்பும் செய்யாம நடதுக்கோ அவ்வளவுதான். இதுக்கு மேலே உன்கிட்டே பேச எதுவும் இல்லை..'

பேச வார்த்தைகளே எழாமல் கூனி குறுகிப்போய் அமர்ந்திருந்தாள் ஹரிணி அவனது கூர் பார்வை சாலையில் பதிந்திருக்க சீறி பறந்துக்கொண்டிருந்தது கார்.

வீட்டை அடைந்திருந்தனர் சில நிமிடங்களில்.

‘அப்பா..’ வீட்டுக்குள் வந்தபடியே அழைத்தான் விவேக். ‘இந்தாங்க உங்க பொண்ணு..’

காதுகளையும், தனது கண்களையும் நம்ப முடியாமல் நின்றிருந்தார் தாமோதரன். ‘விவேக் என் மகளை அழைத்து வந்திருக்கிறானா???

ஓடி சென்று தந்தையை அணைத்துக்கொண்டாள் ஹரிணி. ‘அப்பா உங்களுக்கு ஒண்ணுமில்லையே..’. இது மகள்.

‘என்னமா??? டிவியிலே உன்னை பத்தி என்னென்னமோ சொல்றாங்க..’ இது தந்தை.

கோபத்தில் தனக்கு யாருமே இல்லை என்று சொன்னவர்தான். ஆனால் இன்று மகளை பார்த்ததும் இப்படி கரைந்து போய் நிற்கிறாரே. அவர் செய்த தப்புகளை எல்லாம் இத்தனை எளிதாகக மன்னித்து விட்டாரே??? வியப்புடன் யோசித்தபடியே அங்கிருந்து விலகினான் விவேக்.

ஆம்!!! அவர் ஹரிணியின் தந்தைதான். ஹரிணியின் தந்தையாக மட்டுமே இருக்கிறார். நன்றாக புரிந்தது அவனுக்கு.

நிமிடங்கள் கரைந்து ஓட 'விவேக்..' அழைத்தார் தாமோதரன்.

'சொல்லுங்கப்பா..' வந்தான் அவன்.

'ஹரிணி கிளம்பறாளாம்..'

'ஓ.. ஷுர் டேக் கேர்...' என்றான் அவள் முகம் பார்த்து.

'விவேக்... ' மெல்ல அழைத்தார் அப்பா 'வந்து அவ எப்படி ராத்திரி நேரத்திலே தனியா போவா. நான் போய் அவளை விட்டுட்டு காலையிலே வந்திடவா..' அவர் தயங்கி தயங்கி கேட்க தலை சாய்த்து புன்னகைத்தபடியே அவர் முகம் பார்த்தான் விவேக்.

'போயிட்டு வாங்க உங்க பொண்ணு கூட. இது உங்க வீடு நீங்க எப்போ வேணும்னாலும் வரலாம். என் நம்பர் இருக்கில்ல உங்ககிட்டே??? நீங்க எங்கே இருந்தாலும் ஒரு போன் பண்ணுங்க. நான் எப்பனாலும் உங்களை வந்து கூப்பிட்டுக்குவேன்' அவன் சொல்ல அவர் முகம் மலர்ந்த வித்ததில் நெகிழ்ந்து போனான் விவேக்.

'என் பை???'

'இருங்க வரேன். நானே உங்களை கார்லே டிராப் பண்றேன்..' என அவர் பையை எடுத்துக்கொண்டு வந்தான். 'இதிலே நான் வாங்கிக்கொடுத்த துணியெல்லாம் இருக்கு. நீங்க இனிமே பளிச்சுன்னு ட்ரெஸ் பண்ணிக்கணும் சரியா'

அவர்கள் இறங்க வேண்டிய இடத்தில் அவர்களை இறக்கிவிட்டான் விவேக்

‘ஹரிணி ஒரு சின்ன ரிக்வெஸ்ட் உங்க அப்பாவை இனிமே சமையல் வேலைக்கு விடாதே ப்ளீஸ்’

‘அய்யோ.. இல்லை இனிமே இல்லை.. அவள் பதற

அவர் கையெல்லாம் ரொம்ப சுரசுரன்னு இருக்கு. பாவம் கொஞ்சம் பார்த்துக்கோ. அவரை ஹாஸ்பிடல் கூட்டிட்டு போ. மருந்தெல்லாம் கரெக்டா சாப்பிட சொல்லு. டேக் கேர்.’

‘நான் சீக்கிரம் உன்கிட்டே வந்திடுவேன்..’ தாமோதரன் அவசரமாக சொல்ல

‘கண்டிப்பாபா. நான் வெயிட் பண்ணிட்டே இருப்பேன்..’ என்றான் விவேக் ஸ்ரீனிவாசன். அவர்கள் விடைபெற்று நகர்ந்தார்கள்.

‘அவரை நல்லபடியாக பார்த்துக்கொள்வாளா ஹரிணி??? கேள்வி பிறந்தது அவனுக்குள்ளே. பார்த்துக்கொள்வாள். அவள் சந்தித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலைகள் அவளை கொஞ்சம் கொஞ்சமாக திருத்திக்கொண்டிருக்கும் தோன்றியது அவனுக்கு. காரை கிளப்பிக்கொண்டு நகர்ந்தான்.

அடுத்த சில நிமிடங்களில் வீட்டுக்கு வந்திருந்தான் விவேக். அன்று உடைந்து நொறுங்கிய அப்பாவின் படத்திற்கு முன்னால் சென்று அமர்ந்தான். அவன் கண்களில் நீர் சேர்ந்தது. அன்று

அந்த மாலில் அப்பாவின் கை சேர்ந்து புன்னகைத்த அந்த குழந்தையின் பாவம் அவன் முகத்தில்.

‘நான் திரும்ப உங்ககிட்டேயே வந்திட்டேன்பா..’ என்றான் அவர் புகைப்படத்தை பார்த்து. ‘புரிஞ்சுதுபா எனக்கு. அப்பாங்கிறது உருவமில்லை ஒரு உணர்வு ஒரு பந்தம்னு புரிஞ்சது.

‘அன்னைக்கு சுதர்ஷன் வந்தப்போ நான் வெளியிலே ஓடி வந்து உட்கார்ந்துகிட்டு உங்ககிட்டே தானே புலம்பினேன். என் மனசிலே இருக்கிறது எல்லாம் அவர்கிட்டே பேசலையே. அதே மாதிரி அன்னைக்கு உங்க போட்டோ உடைஞ்சப்போ என் மனசு அவ்வளவு தவிச்சு போச்சு. போட்டோதானே, அதே உருவத்திலேதானே இவர் இருக்கார் இவரை பார்த்துக்கலாமேன்னு தோணலை எனக்கு. உங்க போட்டோவை சரி பண்ணி மாட்டினதுக்கு அப்புறம்தான் நிம்மதி வந்தது.

இதெல்லாம் யோசிச்சு பார்த்தப்போதான் புரிஞ்சதுப்பா நீங்க வேறெங்கேயும் இல்லை எனக்குள்ளேயே, என் உணர்விலேயே இருக்கீங்கன்னு!!! எனக்கு வழி காட்டிட்டே இருக்கீங்கனு!!! நான் தேவை இல்லாம வேறே யார் யார்கிட்டேயோ உங்களை தேடிட்டு இருக்கேன்னு!!!’ மனம் நிறைந்த பாவத்துடன் சொன்னான் விவேக்.

‘அவருக்கும் அதே நிலைதான் அவர் பொண்ணு இடத்திலே என்னை வெச்சு பார்க்க முடியாது அவராலே. அவ எத்தனை தப்பு செஞ்சிருந்தாலும் அவதான் அவருக்கு எல்லாம்’ . ஒரு ஆழ்ந்த மூச்சு அவனிடம்.

‘ஆனா நான் தப்பு செஞ்சா எங்கப்பா என்னை இப்படி எல்லாம் ஈசியா மன்னிசிட மாட்டர்னும் எனக்கு தெரியும். ஏன்னா நீங்க ஸ்ரீனிவாசன். அவர் தாமோதரன்!!!’ இல்லையாப்பா??? புன்னகைத்தான் மகன்.

‘நீங்க நீங்கதான்பா. என் அப்பா என் அப்பாதான். எங்க அப்பா இடத்தை வேறே யாராலையும் நிரப்ப முடியாதுபா ’ என்றான் அவன் கண்களில் பெருமை கூத்தாட. அழகான சிரிப்பு மாறாமல் புன்னகையுடன் புகைப்படத்திலிருந்து அவனையே பார்த்திருந்தார் அவன் அப்பா ஸ்ரீனிவாசன்!!!

‘ஆச்சுப்பா!!! நிறையவே பிரேக் எடுத்தாச்சு.. இப்போ மனசும் தெளிவா இருக்கு. நீங்க எனக்குள்ளேயே இருக்கீங்கபா. இனிமே உங்களை தேடி நான் கலங்க மாட்டேன். எந்த ரோஜாப்பூவும் என்னை ஒண்ணும் செய்யாது!!!’ அழகாய் சிரித்தான் விவேக்.

‘நாளையிலிருந்து பழையபடி.....

அடுத்த சில மணி நேரங்களில்

யாருக்கும், எதற்கும் கட்டுப்படாத ஒரு வேகத்தில் கிழக்கு கடற்கரை சாலையில் பறந்துக்கொண்டிருந்தது அந்த ஹோண்டா சிட்டி.!!! சென்னை நோக்கி சென்றுக்கொண்டிருந்தது அந்த கார்.!!! அதை செலுத்திக்கொண்டிருந்தான் நம் விவேக் ஸ்ரீனிவாசன்.

இரண்டு நாட்கள் கழிந்திருக்க அன்று காலை ஆறு மணிக்கு டெல்லியில் இருந்தான் நம் விவேக்.

அவனது வழக்கமான சீருடையில் நன்றாக ஷேவ் செய்யப்பட்ட முகத்தில் நேர்த்தியாக இருந்த அந்த மீசை, காற்றில் ஆடிக்கொண்டிருந்த கேசம், பளபளக்கும் ஷூக்கள் என கம்பீரமாய் காக்பிட்டில் அமர்ந்திருந்தான்.

அன்று டெல்லி விமான நிலையத்தின் ஓடு பாதை முழுவதும் பனி மூட்டம். சுத்தமாக ஓடு பாதையின் அடையாளமே தெரியாத நிலை. ஆனாலும் கிளம்பி ஆக வேண்டும்

‘திஸ் இஸ் யுவர் கேப்டன் விவேக் ஸ்ரீனிவாசன். ப்ளீஸ் ஃபாசன் யுவர் சீட் பெல்ட்ஸ் லேடீஸ் அண்ட் ஜென்டில்மென். இட்ஸ் டைம் ஃபார் டேக் ஆஃப்’ படு உற்சாகமாக அறிவித்தான் அவன்.

அவர்கள் பனியில் நகர்ந்து செல்வதற்காக வந்தது அந்த ஃபாலோ மீ கார்’ அந்த கார் நகர்ந்து செல்ல அதன் முகப்பு

விளக்குகளை பார்த்துக்கொண்டே இவன் விமானத்தை நகர்த்த வேண்டும். கண்களை மறைத்து மறைத்து விளையாடிக்கொண்டிருக்கும் பனிப்புகையினூடே மிக அழகாக வழிக்காட்டிக்கொண்டு செல்லும் அந்த காரை பின் தொடர்ந்தான் விவேக்.

‘ஆம்!!! என் அப்பாவும் இதே போலத்தானே!!! வருத்தமும், சந்தோஷமும் மாறி மாறி வரும் வாழ்கையில் என் அப்பா எனக்கு வழிக்காட்டிக்கொண்டே செல்கிறார்’ அவன் இதழ்களில் தன்னிச்சையாய் ஒரு பளீர் புன்னகை.

அடுத்த சில நிமிடங்களில் ஓடு பாதையில் வேகமெடுத்தது விமானம்.

'வி1..' அருகில் வேகத்தை கண்காணித்து கொண்டிருக்கும் துணை விமானியிடமிருந்து அவனுக்கு அறிவிப்பு வர… விமானம் இன்னும் கொஞ்சம் வேகமெடுக்க…. …

மேலே எழும்ப துவங்கியது விமானம். மேலே… மேலே… மேலே..

மகிழ்ச்சி!!! அவன் மனமெங்கிலும் புத்தம் புது சந்தோஷம்!!. மெல்ல மெல்ல விடியதுவங்கி இருந்தது வானம். வழக்கம் போல் மேகக்காதலிகளுடன் ஊடலும் கூடலுமாக பறந்துக்கொண்டிருந்தான் அவன்.

அப்போது அவனது கம்ப்யூட்டர் திரையில் தெரிந்தது அவர்களை நோக்கி வரும் இன்னொரு விமானம். டெல்லி நோக்கி சென்றுக்கொண்டிருந்தது அது. ஜன்னலின் வழியே அந்த விமானத்தை ஏனோ ஒரு முறை பார்த்தான் விவேக் ஸ்ரீனிவாசன்.

பொதுவாக வானத்தில் இரண்டு விமானங்கள் ஒன்றை ஒன்று கடப்பது கண் இமைக்கும் நேரத்தில் நடக்கும் ஒன்றுதான். சர்ரென்று ஒரு புயல் போல் அது அவனை கடந்து சென்றிருந்தது அது. தன்னையும் அறியாமல் புன்னகைத்துக்கொண்டான் அவன்.

அவனை கடந்து சென்ற அந்த விமானத்தில்தான் இருந்தாள் அவள். அவனுக்கானவள். இதயங்களை மயக்கி பின் அதை இயங்க வைக்கும் வித்தை கற்றவள். எத்தனையோ பேரின் வாழ்த்துக்களுக்கும், அன்பிற்கும் சொந்தக்காரி. எல்லார் மீதும் அன்பை பொழியும் குணம் இருக்கும் தேவதை.

ஜீன்சும், டி ஷர்டும், காதில் இருக்கும் ஹெட்போனில் இசைத்துக்கொண்டிருக்கும் இளையராஜாவும், கையில் ஒரு ஆங்கில நாவலுமாய் அந்த விமானத்தில் பயணித்துக்கொண்டிருந்தாள் அவள்

எல்லாம் அறிந்த அப்பா சந்திக்க வைக்க மாட்டரா என்ன??? இருவரையும். நான் உனக்காக பார்த்துவைத்த துணை

இதுதான் என சொல்ல மாட்டரா என்ன??? அதற்கான நேரம் வந்துக்கொண்டே இருக்கிறது!!. அது வரையில் தனது மேகக்காதலிகளை முத்தமிட்டுக்கொண்டே இருக்கட்டுமே நம் விவேக் ஸ்ரீனிவாசன்!!!.

# முற்றும்